அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM
Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com



தாய் வீடு
THAIVEEDU செப்ரெம்பர் 2008 HOME & LIVING



வீடு வாங்க, விற்க மற்றும் income tax, mortgage சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
HOMELIFE HIGHER STANDARDS
T: 416.264.0101
C: 416.568.4301
SELVA VETTYVEL
Broker of Record
HomeLife Future Realty Inc. Brokerage
262 Markham Road Scarborough, On M1J 3C5


# வாகனவிபத்தில் கொல்லப்படுபவர்களில் அதிகமானவர்கள் இளைய வயதினரே!

**இளையவயதினர் வாகனவிபத்தில் அதிகம் பாதிக்கப்படுவதால் அவர்களைப் பாது காக்கவும், நெறிமுறைப்படுத்தவும் அதே வேளை பொதுமக்களைப் பாதுகாக்கவும் என புதிய வாகன விதிமுறைகளை ஒன்டோரியோ அரசு அமுல்படுத்தியுள்ளது**

இளைய வயதினர் வாகனவிபத்தில் அதிகம் கொல்லப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகம் உள்ளதாகவும், அவதானமான வாகன ஓட்டத்தை உறுதிப்படுத்தவேண்டிய தேவையின் அவசியம் பற்றியும் அண்மையில் வெளியான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளைய வயதினரே (வயது 16-19) வாகன விபத்தில் அதிகமாக சிக்கிக் கொள்கின்றனர் என்றும், அத்தோடு வாகன விபத்தில் கொல்லப்படுபவர்களில் அதிகமானவர்கள் இந்த வயதினரே என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய வயதினருடன் ஒப்பிடும் போது இந்த 16-19 வயது வாகனம் ஓட்டிகள் கொல்லப்படுவது ஐந்து மடங்கு அதிகமாக உள்ளது என்றும் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

கனடாவில் வாகன ஓட்டிகள் கொல்லப்படுவதற்கான முதல் காரணமாக இருப்பது அவர்கள் மது அருந்தி விட்டு வானம்

3ம் பக்கம் பார்க்க...



ஒன்ராரியோவில் கோடை விடுமுறைக்குப் பின், கடந்த செவ்வாய்க்கிழமை (செப்டெம்பர் 2ந் திகதி) மீண்டும் பாடசாலை ஆரம்பிக்கப் பட்டபோது, ஸ்காபரோ பகுதியில் பாடசாலை நோக்கிச் செல்லும் கிரிதரன் கண்ணதாசன், கிரிஜா கண்ணதாசன்.


RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8

THE LAW OFFICE OF
GaryAnandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying · Selling · Investing PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI MORTGAGE CANADA

Insuring your life. Ensuring your trust.
Siva Kandiah
Managing General Agent, RBC
416·992·1259
ROYAL BROKERS Corporation
80 Nashdene Ave., Unit 826 Toronto ON M1V 5E4
Tel: 416·298·4722 Fax: 416·298·4664

WE BRING CANADA'S LEADING LENDERS TO YOU PMCI MORTGAGE CANADA INC.
Buying · Selling · Investing PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலத்திற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Markham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

முக்கிய குறிப்பு வீட்டு உரிமையாளர்களுக்கு
60 நாட்களில் அதிகூடிய விலையில் உங்கள் வீட்டை என்னால் விற்க முடியும் உங்கள் அனுசரணையுடன். தாமதிக்காது உடன் அழைத்தால்...
S.K. Bales CRA, MVA, CRES, FRI
Canadian Residential Appraiser, Real Estate Broker
416.801.3219 (Cell)
416.290.1200 (Bus), www.skbales.com
Century 21
Affiliate Realty Inc.


R&S AUTO SALES
HONDA - TOYOTA - GM MINI VANS ON THE SPOT FINANCING
சிறந்த சேவைக்கான பல விருதுகளைப் பெற்ற வாகன விற்பனை முகவர்
Radha
4362 Sheppard Ave. East
Scarborough, ON
M1S 1T6 Canada
Tel: 416.412.3838
Fax: 416.412.1174


Tel: 416-836-1946, 416-423-5057
40 Crockford Blvd., Scarborough, ON, M1R 3C3
24 hrs Service
SAM
Mobile Mechanic
K.S.TRUCK & CAR TRAILER REPAIR
All Automotive Repairs
Specializing in Mechanical, Body, Electrical Repairs & Wheel Spring


416.200.5470
ELECTRICAL - PLUMBING & DRAINAGE SERVICES
SANTHA
www.santha.ca
416-200-5470


வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்
CENTURY 21 SERVICES PLUS
5855, Taschereau blvd (office 207)
Brossard, Quebec
J4Z 1A5
sugumaran@sympatico.ca
SUGUMARAN SINNIAH
(Chartered real estate broker)
Office : (514) 299-3186
(450) 926-1881


வீடு வியாபார ஸ்தாபனம்
வாங்க விற்க
Your #1 Choice
Logan Manikavasagar
Broker
Direct : 416.708.9903
Century 21
Percy Fulton Ltd. Brokerage
2911 Kennedy Rd Toronto, Ontario M1V 1S8
Tel : 416.298.8200 (24Hr) Fax : 416.298.6602
Email : sales@loganhotproperties.com
Kalai Logan
Sales Representative
Direct : 416.697.9903
Buy or Sell Your Properties? Real Estate is My Job...Worry Free for you...


HIGHPOINT LASER
Brand Name Toners Cartridges for Copy Machines
Laser Printers Fax Machines.
brother EPSON DELL hp
LANIER LEXMARK Panasonic IBM
TOSHIBA NEC océ SAMSUNG
PitneyBowes XEROX
Tektronix muratec KYOCERA
SHARP Canon
100 IRONSIDE CRESENT, UNIT #10, TORONTO, ONT M1X 1M9
Tel: 416-297-9994 • Toll Free: 1.877.281-9997 • Fax: 416-297-6113
www.HighPointLaser.ca • email: Sales@HighPointLaser.ca
Lower Cost - 100% Guaranteed - Free Delivery 416-708-9903

## ஜனாதிபதி வேட்பாளர்

முழு உலகத்தின் கவனமும் நிகழவுள்ள அமெரிக்க அதிபர் தேர்தலின் மீது விழுந்துள்ளது. உலக நாடுகள் மட்டும் அல்ல பல விடுதலை அமைப்புகள் என்று எல்லாமே இந்த அதிபர் தேர்தலை மிக உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருக்கின்றன. அதற்குக் காரணம் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருக்கான நியமனத்தை பெற்றுக் கொண்ட 47 வயதான இல்லினொய்ஸ் செனட்டர் ஒபாமா.

முதலாவது கறுப்பின வேட்பாளர் அமெரிக்க ஜனாதிபதியாவாரா? கறுப்பினத்தவர் ஒருவர் ஜனாதிபதியாகினால் கறுப்பின மக்களின் அடிப்படை வாழ்க்கையில் பெருமாற்றம் ஏற்படுமா? இப்படி பல கேள்விகள் வெள்ளையரல்லாதோர் மத்தியில் இருக்கத்தான் செய்கின்றது.

அமெரிக்கா தனது படு தோல்வியான வெளிநாட்டுக் கொள்கைகளினால் உலகில் இன்று தனிமைப்பட்டும், உள்நாட்டில் பொருளாதார சீர் கேட்டுக்கு உள்ளாகியும் உள்ளது. புதிய அதிபரின் வருகையுடன் வெளிநாட்டுக் கொள்கையில் பாரிய மாறுதல் ஏற்படும் என்று உலகம் எதிர்பார்க்கின்றது.

'அமெரிக்கர்களின் கனவை நனவாக்க உழைப்பேன்" என்று சுமார் 84,000 மக்கள் மத்தியில் ஜனநாயகக் கட்சி வேட்பாளருக்கான நியமனத்தை ஏற்றுக்கொண்டு உரையாற்றுகையில் ஒபாமா உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

தொழிலாளர் வர்க்கத்தின் வரிகளைக் குறைத்தல், ஈராக் போரை முடிவுக்கு கொண்டு வருதல், பத்துவருடங்களுக்குள் அமெரிக்காவின் எரிபொருள் தேவைக்காக மத்திய கிழக்கு நாடுகளில் தங்கியிருப்பதை தவிர்த்தல், எல்லா அமெரிக்கர்களுக்கும் மருத்துவ உதவிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இன்ஸ்சூரன் திட்டத்தை கொண்டுவருதல் என்று ஒபாமாவின் திட்டங்கள் விரிகின்றன.

சராசரியாக நாற்பத்தியாறு மில்லியன் அமெரிக்கர்கள் எந்தவித மருத்துவ இன்சூரன்சும் இல்லாமல் உள்ளனர். இதில் எட்டுமில்லியன் குழந்தைகளும் உள்ளடங்குகின்றன.

தற்போது ஆட்சியில் உள்ள ஜோர்ச் புஸ்சின் Republican கட்சி, ஜனாதிபதி தேர்தலில் தமது கட்சிக்குப் போட்டி ஜனாதிபதி வேட்பாளராக ஹிலரி கிளின்டன் வருவதை விரும்பவில்லை. அதை விட ஒபாமா வருவதையே விரும்பினர். அதற்குக் காரணம் 'கறுப்பர் ஒருவர் அமெரிக்க ஜனாதிபதியாக வருவதை பெரும்பான்மை வெள்ளை அமெரிக்கர்கள் விரும்பமாட்டார்கள், எனவே ஒபாமாவை இலகுவாகத் தோற்கடிக்கலாம்' என்ற நம்பிக்கையே அதற்காக காரணம். அவர்கள் விரும்பியவாறு ஒபாமா வேட்பாளராகத் தெரிவாகியுள்ளார்.

இத்தோடு அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கைகளை தீர்மானிக்கும் அமெரிக்க உளவு நிறுவனங்கள் வெளிநாட்டுக் கொள்கைகளில் திடீரென்று மாற்றங்கள் ஏற்படுவதையும், அந்த மாற்றங்களை ஏற்படுத்த முனைகின்ற நபரையும் விட்டு வைக்குமா? என்ற கேள்வியும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இவை எல்லாவற்றையும் தாண்டி, 'வாஸிங்டனில் இருந்து மாற்றங்கள் வராது. வாஸிங்டனுக்குத் தான் மாற்றங்கள் செல்லவேண்டும்" என்ற ஒபாமாவின் முழக்கத்தை அமெரிக்கர்கள் ஏற்பார்களா?

III

# வாகனவிபத்தில் கொல்...

1ம் பக்கத் தொடர்ச்சி...

ஓடுவதே. இவ்வாறு மது அருந்தி விட்டு வாகனம் ஓடி விபத்தில் சிக்குபவர்களில் 28 வீதமானவர்கள் 16முதல் 24வயது உடையவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் மட்டுமல்ல அமெரிக்கா, அவுஸ்ரேலியாவிலும் இளவயதினரான வாகன சாரதிகளே மிக அதிகமாக அளவில் வாகன விபத்தில் கொல்லப்படுகின்றனர்.

கனடாவில் இளவயதினர், போதிய அனுபவம் இல்லாமல் வாகனம் ஓடுவது, வாகனம் ஓடும் போது கைதொலை பேசிகள் பாவிப்பது, மது அருந்தி விட்டு வாகனம் ஓடுவது, வேகமாக வாகனம் ஓடுவது, வாகன அனுமதிப்பத்திரம் பெறமுதலே வகனம் ஓடுவது, U Turn அடிப்பது போன்ற காரணங்களால் விபத்துக்குள்ளாகின்றனர். இதனால் இவர்கள் தொடர்பாக புதிய வாகன விதிகளை ஒன்டோரியோ அரசு அமுல்படுத்தியுள்ளது. இந்த விதிகள் இந்த வயதினரை பாதுகாக்கவும், அதன் மூலம் ஏனைய பொதுமக்களை பாதுகாக்கவும் என கொண்டுவரப்பட்டுள்ளன.

கைத்தொலைபேசி பாவித்துக் கொண்டு வாகனம் ஓட்டுவதால், வாகன விபத்து ஏற்படுவதற்கான சாத்தியம், நான்கு மடங்கு அதிகமானது என்று கண்டறியப்பட்டுள்ளது.

வாகன விபத்துகளில், வாகனத்தை வேகமாக ஓட்டுவதால் ஏற்படும் மரணம் 25 வீதமாக உள்ளது. இத்தகைய வேகமாக வாகனத்தை ஓட்டுவதால் ஏற்படுகின்ற மரணங்களில் எண்பது வீதமானவை (வாகனத்தில் இருப்பவர்கள் உட்பட) 16- 24க்கும் இடைப்பட்ட வயதினர் வாகனம் ஓட்டுவதால் ஏற்படுகின்றது.

வாகனத்தை வேகமாக ஓட்டுவதால் சாரதி தனது உயிருக்கு தீங்கு விளைவிப்தோடு, தனது வாகனத்தில் பயணம் செய்பவர்களின் உயிருக்கும், மற்றும் வீதியில் பயணித்துக் கொண்டு இருக்கும் ஏனைய பயணிகளின் உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்துகின்றார்.

தமது பிள்ளைகள் 16 வயது வந்ததும் காரோட்ட அனுமதிக்கின்ற பெற்றோர்களும், கார் ஓட்ட பழகுமாறு தமது பிள்ளைகளை நச்சரிக்கின்ற பெற்றோர்களும் இந்த புள்ளிவிபரங்களையும், செய்திகளையும், தகவல்களையும் சற்று கவனம் எடுத்து சீர்தூக்கிப் பார்க்கவேண்டியது அவசியம்.

■ ■ ■

**Publisher & Editor : P.J. Dilipkumar**
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், மாமூலன், கருணா, பொன்னையா விவேகானந்தன், ரதன், சுந்தர் சின்னத்தம்பி.

தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா, பிரியதர்சினி, மஞ்சுளா ராஜலிங்கம்.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி. மஞ்சுளா ராஜலிங்கம்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

தொடர்புகள் :
**For More Info : Editor**
**P.O.Box #63581**
**Woodside Squarew**
**1571 Sandhurast Circ.**
**Toronto, ON. M1V 1V0**

**Montréal** விநியோகம் : சுகுமாரன் சின்னையா
**1-514-299-3186**
**Ottawa** விநியோகம் : அலெக்ஸ் சிவசம்பு
**1-613 -276-7253**

**Tel : 416-646-3422, 416.400.6406**
**Fax : 416.849.0594**
**Web : www.thaiveedu.com**
**E-mail : info@thaiveedu.com**

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

**www.inayam.net**
உங்கள் நிகழ்வுகளை பார்ப்பதற்கும் பதிவதற்கும்
**416 400 6406**

## ஒரே நாளில் Saree Blouse

**Saree Blouse** ஒரே நாளில் **(Indian Cutting)** முழுமையாக வெட்டி தைத்துப் பழகுவதற்கு அழையுங்கள்.
**Mississauga, Scarborough** ஆகிய இரு இடங்களில் வகுப்புகள் நடைபெறுகின்றன. உங்கள் வீடுகளுக்கு அருகாமையிலே வந்தும் சொல்லித்தரப்படும்.
தொடர்புகளுக்கு
905 - 712 9721

**#1 TEAM @ PROPERTY/MAX REALTY INC.**



PROPERTY MAX
Realty Inc. Realtor
**Mohan Subramaniyam**
Broker of Record
**416.321.2300**

New Mortgage, Commercial Mortgage
New Immigrans, Ist, 2nd Mortgage
Re-Financing, New Home Buyers

**Search More Properties @**
**www.realestatebrokerofrecord.info**

WE BRING CANADA'S LEASING LENDER'S TO YOU
PMCI
PROPERTY MORTGAGE CANADA INC.

**PLEASE MENTION PROPERTY/MAX WHEN ENQUIRING ABOURT PROPERTIES!**

# கேந்திர முக்கியத்துவத்தினை உறுதிப்படுத்தும் வல்லரசுகளின் இராசதந்திர அணுகுமுறை!

**பிரிந்துவாழ விரும்பும் இனங்களால் உருவாக்கப்படும் தனி ஆக்க அரசுகளை அங்கீகரிப்பதும் அவற்றிற்குப் பாதுகாப்புக் கொடுப்பதுமாகும்.**

சிறிய அரசுகளும் புதிய அரசுகளும் வல்லரசுகளின் பிடிக்குள் அகப்பட்டுக்கொண்டுள்ளன என்ற நிதர்சன உண்மை ஆங்காங்கு காலத்திற்கு காலம் வெளியே தெரியத் தொடங்கியிருக்கிறது. வல்லரசுகளும் அவற்றின் நேசநாடுகளும் நேசக்கூட்டுக்களும் அணிகளாகப் பிரிந்து செயற்படும் பொழுது அரசியல், பொருளாதார அகதியாக விடப்படும் சிறியநாடுகளுக்குப் பாதுகாப்பும் இறையாண்மையும் தேவை என்பதற்காக அத்தகைய நாடுகள் மற்றொரு அணியையோ கூட்டையோ உருவாக்க முடிகிறது. அத்தகைய மூன்றாவது அணியானது பெயரளவிலே தொழிற்பட முடிகிறதேயொழிய வல்லரசுகளின் பிடியினுள் சிக்கித் தவித்துக் கொண்டுதானிருக்கிறது. நவீன அரசியல் ஒழுங்கில் மூன்றாவது கூட்டுக்களே அரசியற் சுழற்சியில் சிக்கத் தவிக்கும் நாடுகளாக இருந்து வருகின்றன. இந்நிலையில் சிறிய நாடுகளை உருவாக்குவதும் சிறிய நாடுகளை ஒன்றிணைப்பதுவும் வல்லரசுகள் தமது வலிமையினை உறுதிப்படுத்தும் உபாயமாகக் கொண்டு தொழிற்படுகின்றன. பொருளாதாரத்தில் மூன்றாம் உலக நாடுகளும் அரசியல் அணியில் அணிசேரா நாடுகளும் தான் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கும் நாடுகளாகவும், அரசியல் பொருளாதார ஒழுங்கின் அகதித்தன்மையினை அனுபவித்தும் வருகின்றனவாயும் மாறிவருகின்றன

- அ. கணபதிப்பிள்ளை -
kanapathipillai@thaiveedu.com

ஜோர்ஜியாவிலிருந்து பிரிந்து சென்ற இரு சிறு நாடுகளான தெற்கு ஒசாட்டியா, அக்காகியா ஆகிய இரண்டு பிரதேசங்களையும் ரஷ்யா அங்கீகரிக்கும் பொருட்டு ரஷ்யாவின் இரண்டு சபைகளும் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றமை கோக்காகிய மலைப்பிரதேசத்தில் ஏற்பட்ட பதட்டநிலையினைத் தணிப்பதன் பொருட்டுத்தான் என்று கூறப்பட்டாலும்கூட கோக்காசியப் பிரதேசத்தின் கேந்திரமுக்கியத்துவத்தினைப் பேணுகின்றதொரு நடவடிக்கையாகவே கொள்ள வேண்டும்.

ரஷ்யாவின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்றுருந்த மிக்கெயில் கோர்பேச்சேவின் ஆட்சிக்காலத்தில் சோவியத் ஒன்றியத்திலிருந்து பலதேசங்கள் வெளியேறித் தனித் தேசங்களாகத தங்களைப் பிரகடனப்படுத்திக் கொண்டன. ரஷ்யாவுக்குத் துணை நின்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் தங்கள் வார்சா ஒப்பந்தத்தை உடைத்துவிட்டு நேட்டோ என்ற அணியிற் தங்களை இணைத்துக்கொண்டன. இந்நிலையில் தான் ரஷ்யா தனது தெற்கு மேற்குக் கேந்திரங்களின் முக்கியத்துவத்தை இழக்கத்தொடங்கியது.

கிழக்கு ஐரோப்பிய பொதுவுடமை நாடுகளும் கூட்டுச் சேராநாடுகளும் புதிய அணியை நாடியது போன்று முதலாளித்துவம் என்ற புதிய பொருளாதாரக் கொள்கையினுள் தம்மை இணைத்துக்கொண்டதும் ரஷ்யா தனது கேந்திர பலத்தினை மீண்டும் இழக்கத்தொடங்கியது. ரஷ்யா தனது தடுப்பு வலையமாகப் பயன்படுத்தி வந்த யூகோஸ்லாவியா என்ற பெரிய அரசு சின்னாபின்னப்படுத்தப்பட்டமை நேட்டோ அணிக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் வெற்றியாக அமைந்தவிட்டபொழுதிலும் சேர்பியர்களையும் ரஷ்யாவின் பாதுகாப்பு ஆயுதங்களுடன் ரஷ்ய கேந்திர பாதுகாப்பை உறுதிப்படுத்தி வந்த சேபியாவையும் நேட்டோ நாடுகள் தாக்கியமை ரஷ்யாவின் அரசியல் நடாத்துதலின் தோல்வியாக அமைந்துவிட்டது.

> **இந்தியா எவ்வளவு தூரம் இழுத்துப்பிடித்தாலும் இலங்கை தன்னை வேறு ஒரு அணியில் இணைத்துக் கொள்ளவும் பொருளாதார அரசியல் இலாபத்தினைப் பெறவும் பாகிஸ்த்தான், ஈரான், சீனா என்று ஓடிக்கொண்டிருக்கின்றது. ஆதற்காக இந்தியா போடும் கட்டுப்பாடுகளையும் மீறிக்கொண்டேயிருக்கின்றது.**

தெற்கே ஆப்காணிஸ்த்தான், ஈரான், ஈராக், துருக்கி ஆகிய பிரதேசங்களில் போர்மேகம் சூழ்ந்திருந்த பொழுதில் தெற்கு வழி முக்கியத்துவம் குறைந்துவிட்டிருந்தது. கருங்கடலையும் கரிபியன் கடலையும் இணைக்கும் கோக்சஸ் மலைப்பிரதேசங்களில் குழப்பங்கள் தொடங்கியிருந்தன. ரஷ்யா வெளியுலகுடன் தொடர்பு கொள்ளும் பாதையான கருங்கடற்துறைமுகங்கள் ஜோர்ஜியாவிடமும் உக்ரேயினிடமும் கையளிக்கப்பட்டிருந்தது.

ரஷ்யா பிரதேச முக்கியத்துவத்தையும் கேந்திர முக்கியத்துவத்தையும் படிப்படியாக இழக்கின்ற பொழுது நேட்டோ என்ற வல்லரசுக் கூட்டும், ஐரோப்பிய ஒன்றியமும் வளர்ச்சியடைந்து கொண்டுபோனது. நேட்டோ நாடுகள் சேர்பியாவிலிருந்து அல்பேனியர்கள் பெரும்பான்மையினராக வாழும் கொசோவோவைப் பிரித்துத் தனி நாட்டங்கீகாரம் வழங்கியும் ஐ.நா வை (பாதுகாப்புச்சபையை) அழைத்து அங்கே நிறுத்தியிருந்தமையும் ரஷ்யாவைப் பொறுத்தவரையில் கேந்திரமுக்கியத்துவ இழப்பாகவே கொள்ளலாம். சேர்பிய - கொசோவோவை 192 நாடுகளில் 46 நாடுகள் அங்கீகரித்துள்ளன. ரஷ்யா, சீனா, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளும் அதனை அங்கீகரிக்கவில்லை. இந்நிலையில்தான் ரஷ்யா தென் ஒசாட்டியா அக்காசியா ஆகிய இரு அரசுகளையும் ஜோர்ஜியாவிடமிருந்து பிரித்து அங்கீகரித்தது.

இதனைப் பெரும்பாலான ஆசிய நாடுகள் அங்கீகரிக்கவில்லையாயினும் அது ரஷ்யாவுக்கு ஓர் ஆட்புல ஒன்றிணைப்பில் ஏற்பட்ட வெற்றியாகத்தான் கொள்ளலாம். இத்தகைய படிப்பினைகள் இலங்கைக்கும் பொருந்தி விடுமோ என்ற அச்சத்தில் இலங்கை வாயைத்திறக்கவில்லை. கொசோவோப் பிரச்சினையால் ஆசியாவிலேயே பிரிவுப்பிரச்சினைக்கு ஆதரவளிக்கும் தாய்வானும், பிரச்சினையில்லாத யப்பானும், தென்கொரியாவும் ஆப்காணிஸ்த்தானும் கொசோவோவை ஏற்றுக்கொண்ட நாடுகளாக மாறின. இதில் மறைமுகமாக அமெரிக்கச் செல்வாக்கு இருப்பது வெளிப்படையாகவே தெரிகிறது. அவைகூட தென் ஒசோட்டியா, அக்காசியா ஆகிய இந்த இரு நாடுகளையும் அங்கீகரிக்கவில்லை.

இந்தப் பின்னணியில் ஜோர்ஜியாவை இலங்கையுடன் ஒப்பிட்டு நோக்கும்போது தனி ஆக்க அரசுகளை ரஷ்யா அங்கீகரித்தமை சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்ளக் கூடியதா என்றும் அது வல்லரசுகளின் கேந்திர முக்கியத்துவத்தையும் ஆள்புல ஒருமைப்பட்டையும் எவ்விதம் பாதிக்கும் என்பதையும் நன்றாக விளங்கிக் கொள்ள முடியும்.

இலங்கை இந்து சமுத்திர கேந்திர முக்கியத்துவத்தினை அனுபவித்துவரும் நாடு. கொழும்பில் உள்ள விமானத்தளமும் திருகோணமலைக் கடற்படைத்தளமுடனான இயற்கைத்துறைமுகமும் இலங்கை ஒரு வல்லரசுகளின் கவர்ச்சிப்பிரதேசம் என்பதனைத் தெளிவுபடுத்தும். இதேபோன்று ஜோர்ஜியாவின் கருங்கடற்துறைமுகங்களும் கோக்கஸல் மலைப்பிரதேச எரிவாயுவளத்தையும் எண்ணெய்வளத்தையும் எடுத்துசெல்லும் தரைவழிக்குளாய்களையும் ஒருங்கே கொண்டுள்ள கஸ்பியன் கடற் துறைமுகங்களைக் கருங்கடல்துறைமுகங்களுடன் இணைக்கும் கேந்திர முக்கியத்துவம் பலவல்லரசுகளையும் ஈர்க்கும்படி அமைந்தது.

இலங்கை சுதந்திரத்தின் பின்பாகவும் பிரித்தானியாவின் ஒப்பந்த வல்லரசுப்பிடியில் இருந்ததினால் 1955ம் ஆண்டு வரையில் இலங்கை ஐ.நா உறுப்புரிமையினைப் பெறுவதனை ரஷ்யா தடுத்துவைத்திருந்தது. ஜோஜியா நேட்டோ அமைப்பினுள் போவதனையும் ரஷ்யா விரும்பவில்லை. அன்று இலங்கை பிரித்தானியாவின் ஒப்பந்தப்பிடியில் இருந்ததுபோல் இன்று இந்திய ஒப்பந்த எல்லைக்குள் இருக்கின்றது. இலங்கை இந்திய வல்லரசின் கோடியில் அமைந்திருக்கும் சிறியநாடு. ஜோர்ஜியா ரஷ்யாவின் கோடியில் உள்ள சிறியநாடு. பூகோள ஒழுங்கில் தென்னிந்தியாவில் தொங்கிக் கொண்டிருக்கும் ஒரு மாங்காய்போன்றது இலங்கை. இதேபோன்று ஜோர்ஜியாவும் ரஷ்யாவின் தென் எல்லையில் தொங்கிக்கொண்டிருக்கும் ஒரு சிறிய நாடு.

ஜோர்ஜியாவின் வடக்கே தான் தென் ஒசோட்டியாவும் அக்காசியாவும் அமைந்தி-

5ம் பக்கம் பார்க்க...

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

***E-mail:thaiveedu@gmail.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***



4ம் பக்கத் தொடர்ச்சி...

ருக்கின்றன. இலங்கையின் வடக்கே இந்தியாவின் தெற்காக தான் தனி ஆக்க அரசாக தமிழீழம் அமைந்திருக்கின்றது. ஜோர்ஜியாவிலிருந்து பிரிந்த இரண்டு பிரதேசங்களிலும் ரஷ்ய இனத்தைச்சேர்ந்தவர்கள் தான் அதிகமாக வாழுகின்றார்கள். அதேபோன்றே இலங்கையின் உள்ள தமிழீழத்தில் தமிழர்களும் இந்துக்களும் இந்தியாவின் கலாச்சாரத்துடன் இணைந்தவர்களே வாழ்ந்து வருகின்றார்கள். தென் ஒசேட்டியா சுமார் 3900 சதுரகிலோ.மீற்றரும் அக்காசியா 8432 சதுரக் கி.மீ பரப்பளவையும் கொண்டிருக்க, தமிழீழம் 19500 சதுர கி.மீ பரப்பளவினைக் கொண்டிருக்கின்றது. இரு நாடுகளிலுமுள்ள மூன்று தனியாக்க அரசுகளிலும் நிதி நிருவாகம், சட்ட ஆக்கம், நீதி பரிபாலனம் எல்லாமும் அப்பிரதேசங்களின் தனி ஆக்க அரசுகளால் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தியாவை ஒரு வல்லரசு என்று சொல்லி விட முடியாவிட்டாலும் கூட அதனை ஒரு பிராந்திய வல்லரசு என்று குறிப்பிடும் அளவுக்குக் அதன் செயற்பாடுகள் காணப்படுகின்றன. இந்தியா எவ்வளவு தூரம் இழுத்துப்பிடித்தாலும் இலங்கை தன்னை வேறு ஒரு அணியில் இணைத்துக் கொள்ள வும் பொருளாதார அரசியல் இலாபத்தினைப் பெறவும் பாகிஸ்த்தான், ஈரான், சீனா என்று ஓடிக்கொண்டிருக்கின்றது. ஆதற்காக இந்தியா போடும் கட்டுப்பாடுகளையும் மீறிக்கொண்டேயிருக்கின்றது. இனரீதியிலான தொடர்புகள் இந்தியாவின் வடக்கிலும் தெற்கிலும் இழையோடியிருந்தாலும் மதரீதியில் மாற்றுநாடுகளை மண்டியிடத் தயாராகி வருகிறது இலங்கை. ஜோர்ஜியாவில் ரஷ்யாவின் கம்யூனிச ஆதரவாளர்களிருந்த பொழுதிலும் அமெரிக்காவுடனும் நேட்டோ உறுப்பு நாடுகளுடனும் தன்னை இணைத்துக்கொண்டு ரஷ்யாவின் பிடியிலிருந்து முற்றாகத் தன்னை விடுபடமுயன்று கொண்டிருக்கின்றது.

இந்தியா 1971ம் ஆண்டு வங்களாதேசத்தின் உள்நாட்டு யுத்தத்தைப் பயன்படுத்தி அதனைப் பாக்கிஸ்த்தானிடமிருந்து பிரித்து தனியரசாக்கி அதனை அங்கீகரித்தது. தென் ஒசோட்டியா, அக்காசியா ஆகிய இரு பிரதேசங்களை 1991, 1992 ஆகிய வருடங்களில் தனிமைப்படுத்தித தனியரசாக்கி 1994ல் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டு ஜோர்ஜியாவில் தனது சமாதானப்படையினை அனுப்பி இருபகுதியையும் ரஷ்யா பாதுகாத்தது. இலங்கையில் 1983ல் நடந்த இனக்கலவரத்தையும் பயன்படுத்திக்கொண்ட இந்தியா இலங்கையின் பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டது. 1986ல் தனது சமாதானப்படையினை அனுப்பி வடக்கையும் கிழக்கையும் இணைத்து, தமிழரைக் காப்பதாக இந்தியா உறுதியளித்தது. ஜோர்ஜியா ஒப்பந்தத்தை மீறி இரு பிரதேசங்களையும் தனது கட்டுப்பாட்டுக்குட் கொண்டுவர படை முன்னெடுப்பு எடுத்த பொழுது ரஷ்யா தடுத்து நிறுத்தியது. ஜோர்ஜியப்படைகளை துரத்தி இரண்டு பிரதேசத்திலும் இருந்த தனி ஆக்க அரசுகளையும் சட்டப்படி தனி அரசுகளாக அங்கீகரித்துப் பனி யுத்தத்துக்குப் பயப்படாது தலைநிமிர்ந்து நிற்கின்றது.

இந்தியா செய்தது என்ன? இலங்கையில் அனுப்பிவைத்த சமாதானப்படையினை மீள வாங்கிக்கொண்டது. இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தத்தையும் மீறித் தமிழீழத்தையும் தாக்கியபொழுது அதனைத்தடுத்து நிறுத்த வில்லை. இந்தியப்படைகளை இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற அனுப்பியிருந்தாலும் தனது கேந்திர முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்தி இலங்கையினுள் வேறு வல்லரசுகள் வராதபடி பாதுகாப்பதில் மாத்திரம் கவனம் செலுத்துகிறது. தமிழீழ மக்களின் நலனில் அக்கறை காட்டவில்லை.


இந்நிலையில் இந்தியாவின் கடப்பாடு என்ன? ரஷ்யா செய்வதுபோல் பிரிந்து போன அரசினை அங்கீகரிக்கவேண்டும். இலங்கையில் வேறு நாடுகள் ஆதிக்கம் செலுத்துவதை நிறுத்தவேண்டும். இந்தியப் பாராளுமன்றத்திற்கு துணிவிருந்தால் ரஷ்யாப்பாராளுமன்றத்தின் இரு சபைகளும் ஏகமனதாகத் தீர்மானித்தது போல் இலங்கையினை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

■ ■ ■






# மனந்திறந்து சொல்லுங்கள்..


கே. எஸ். பாலச்சந்திரன்
ks@thaiveedu.com

எதையும் வெளிப்படையாகச் சொல்வது சிலரின் இயல்பாகவும், எதையுமே சொல்லாமல் மனதிற்குள் வைத்துக்கொள்வது இன்னும் சிலரின் பழக்கமாகவும் இருக்கிறது. இரண்டு பக்கத்திலும் அனுகூலங்களும், அனுகூலமற்ற தன்மைகளும் இருக்கவே செய்கின்றன.

எதையும் வெளிப்படையாகப்பேசுவது தற்போதைய வாழ்க்கை நெறிகளின்படி அப்பாவிக்குரிய குணாம்சமாக கருதப்படும் அளவிற்கு, நாங்கள் எல்லோரும் மனத்தளவில் ‘தீவுகளாக’ சுற்றிவர ‘ரகசியம்’ என்ற அரண்களை போட்டுக்கொண்டு வாழப்பழகியிருக்கிறோம்.

இந்த ‘அரண்கள்’ நண்பர்கள், உறவினர்களோடு மட்டுமல்ல, ஒரே குடும்பத்தின் அங்கத்தினரிடையே கூட போடப்படுகின்றன. சர்வாதிகார அரசின் செய்தி அறிக்கைகளைப்போல, குடும்ப அங்கத்தினர்களுக்கு கூட மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களே சொல்லப்படுகின்றன. அவர்களோடு பரிமாறப்படுகின்றன. தாயும், தகப்பனும் பிள்ளைகளின் முன்னால் சங்கேத மொழிகளில் பேசிக்கொள்கிறார்கள் என்றால், பிள்ளைகள் தாங்கள் அன்னியப்படுத்தப் படுவதாக நினைப்பார்கள் அல்லவா?

பிள்ளைகளுக்கு தங்கள் பிரச்சினைகள் தெரியக்கூடாது என்று நினைத்து அவற்றை அவர்களிடம் மறைக்கப்பார்ப்பது சரியானதல்ல. அப்பா, அம்மா எவ்வளவு சம்பாதிக்கிறார்கள் என்று அவர்களுக்கு தெரியத்தான் வேண்டும். அதற்காகப் படும் சிரமங்கள் அவர்களுக்கும் தெரியத்தான் வேண்டும். ‘எங்கள் கஸ்டங்கள் எங்களோடு போகட்டும். ஏன் அவர்களுக்கு சொல்லி அவர்களின் மனதைக் கஸ்டப்படுத்தவேண்டும்’ என்று நினைத்துக்கொண்டு கடன் பட்டாகிலும் மேலதிகமான செலவுகளை செய்யப் புறப்படுவது சிக்கல்களைத்தான் உருவாக்கும். அவை பூதாகாரமாக வளர்ந்து உங்களை எதிர்கொள்ளும் வேளையில் மனத்தளவில் உங்களை விட உங்கள் பிள்ளைகள்தான் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். அவர்கள் ஸ்திரமானதென்று நம்பிய வாழ்க்கைத்திட்டங்கள் கண்முன்னாலே சிதறிப்போகும்போது உங்களை வெறுக்கவும் செய்வார்கள்.

பொதுவாக புலம்பெயர்நாடுகளிலே, கல்வி முறையினாலோ, பழகும் சூழலினாலோ பிள்ளைகள் வாழ்க்கைபற்றிய ஓரளவு அறிவை, எதையும் துணிந்து கேட்கும் தன்மையை, அதை அலசிப்பார்க்கும் தன்மையை அனேகமாக இளம்வயதிலேயே பெறத்தான் செய்கிறார்கள். அவர்களை உடைந்துபோய் விடும் கண்ணாடிப் பொம்மைகள்போல நினைத்துக்கொள்ளத் தேவையில்லை. அவர்களோடு மனம்விட்டு நாங்கள் பேசிக்கொள்ள தடையாகவிருப்பது வேறொன்றுமல்ல, நாங்கள் பிறந்து, வளர்ந்த சூழ்நிலையிலிருந்து கொண்டுவந்த தற்பெருமை தான். எல்லாமுடிவுகளிலும், பெற்றோரின் தீர்ப்பே அறுதியானதும், இறுதியானதும் என்று பழக்கப்பட்டவர்கள் நாங்கள். நாங்கள் எதைச்செய்தாலும் பிள்ளைகளின் நன்மைக்காகத்தானே செய்கிறோம் என்று நினைத்துக்கொண்டு பலவற்றையும் செய்யத் தலைப்படுகிறோம். அவர்களின் அபிப்பிராயங்களை செவிமடுக்க நாங்கள் தயாரில்லை. இது தவறான போக்கு.

பிள்ளைகளோடு மனம்விட்டுப் பேசுங்கள். அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளவும் தயாராகவிருங்கள். அவர்கள் உங்கள் உயிரின் அங்கம் என்பதை உணரச்செய்யங்கள்.

ஒருநாளைக்கு ஒருதடவையாவது உங்கள் பிள்ளைகளிடமும், மனைவியிடமும் நீங்கள் அவர்களை மனமாரவிரும்புவதை, நேசிப்பதை சொல்லுங்கள்.

அவர்கள் செய்வதை மனந்திறந்து பாராட்டுங்கள். எதிலும் பிழைகண்டுபிடிப்பதையே வழக்கமாகக் கொள்ளாதீர்கள். தவறுகள் இழைக்கப்படும்போது சுட்டிக்காட்டமுனையும் உங்கள் அவசரம், நல்லதை பாராட்டுவதிலும் தெரியட்டும்.

> “ பிள்ளைகள், வாழ்க்கைபற்றிய அறிவை,
> எதையும் துணிந்து கேட்கும், அலசிப்பார்க்கும்
> தன்மையை
> இளம்வயதிலேயே பெறத்தான் செய்கிறார்கள்.
> அவர்களை உடைந்துபோய் விடும் கண்ணாடிப்
> பொம்மைகள்போல நினைத்துக்கொள்ளத்
> தேவையில்லை.
> அவர்களோடு மனம்விட்டு நாங்கள்
> பேசிக்கொள்ள தடையாகவிருப்பது
> நாங்கள் பிறந்து, வளர்ந்த சூழ்நிலையிலிருந்து
> கொண்டுவந்த தற்பெருமை தான். ”

வழக்கம்போல ஒரு சின்னக்கதை. ஒரு கணவன் தன் மனைவி வீட்டில் எதுவும் செய்யாமல் ‘ஹாயாக’ இருப்பதாகவும், தான் வேலையில் மாய்ந்து போவதாகவும் அடிக்கடி சொல்லிக்கொண்டு இருப்பான்.

ஒருநாள் வேலையிலிருந்து வரும்போது, வீட்டின் முன்னே அவனது பிள்ளைகள் அழுக்கான ஆடைகளுடன் மண்ணை அளைந்து விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். ஹோலுக்குள் அவர்கள் வளர்க்கும் நாய் மின்விசிறியை பக்கப்பாட்டில் புரட்டி, சோபாவை அழுக்காக்கி, குசினிக்குள் போனால், பாத்திரங்கள் கழுவப்படாமல் நிறைந்து வழிந்து, காட்சியளிக்கிறது. மனைவியைக் கோபத்தடன் தேடிக்கொண்டு போகிறார். லோண்டறி அறையிலே உடுப்புக்கள் அப்படியே மலையாக குவிந்து - இந்த இடத்தில் அவருக்கு கோபம் மாறி, பயம் வந்து விடுகிறது. மனைவிக்கு ஏதாவது நடந்து விட்டதோ என்ற பயம். படுக்கையறைக்கு வேகமாகப்போகிறார். அங்கே படுக்கையிலே சாய்ந்து கொண்டு, சாவகாசமாக புத்தகம் வாசித்துக்கொண்டு மனைவி இருக்கிறார்.

“என்னப்பா.. நடந்தது..?” ஆத்திரத்துடன் கேட்கிறார்.

மனைவி அமைதியாக சொல்கிறார். “நீ என்ன வீட்டில் செய்கிறாய் என்று ஒவ்வொரு நாளும் கேட்பீர்களே. அவற்றை இன்றைக்கு செய்யாமல் விட்டேன்.. அவ்வளவுதான்..”

இயந்திரம் போல ஒரு மனைவி அன்றாடம் செய்யும் வேலைகளை நாங்கள் வெகு சாதாரணமாக எடுத்துக்கொள்கிறோம். ஒரு பாராட்டு.. ஒரு நல்ல வார்த்தை.. எங்களிடமிருந்து வராது.

உங்கள் மனைவி, பிள்ளைகளை நல்ல வார்த்தை சொல்லி பாராட்டினால் என்ன குறைந்து விடப்போகிறது? எங்கள் ஊரில் சொல்லிக்கொள்வார்கள். “குட்டி நாய்க்கும், குழந்தைப்பிள்ளைக்கும் செல்லம் கொடுக்கக்கூடாது” என்று. இங்கு குட்டி நாய்களுக்கு இருக்கும் செல்வாக்கை வைத்துக் கொண்டு அந்தக்கூற்று பொருத்தமற்றது என்று புரிந்த கொள்ளலாம்.

எனவே “என் ராசாத்தி..” என்று ரகசியமாக வேனும் உங்கள் மனைவியை அழையுங்கள். “என் செல்லம்” என்று உங்கள் பிள்ளைகளை கூப்பிட்டுப் பாருங்கள். அவர்கள் தவறுகள் இழைத்த வேளைகளிலும், இந்த அடைமொழிகளை, பாரதி சொன்னது போல “வழக்கப் படுத்திக்கொள்ளுங்கள்”

நீங்கள் உண்மையென்று நம்புவதை, அது உங்கள் மதமாக இருந்தாலும் சரி, அரசியல் சித்தாந்தமாக இருந்தாலும் சரி, உங்கள் பிள்ளைகளோடு பகிர்ந்து கொள்ளுங்கள். அவ்வேளைகளில் அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு நேர்மையான பதில்களைச் சொல்லுங்கள்.

சிறு குழந்தைகளுக்கு கதைசொல்லி தூங்கவைப்பது வெறும் சடங்கு மாத்திரம் அல்ல. காலாகாலமாக அவர்கள் அதை நினைவு வைத்திருப்பார்கள். வளர்ந்த பிள்ளைகளோடும் படுக்கைக்கு போகமுன்னம் அளவளாவி கதைக்க அவகாசம் ஏற்படுத்திக்கொள்ளுங்கள். அவர்கள் அதை விரும்பாததுபோல காட்டிக்கொண்டாலும் அவர்கள் உள்ளத்தின் உள்ளே இந்த நினைவுகளை பவுத்திரமானதாக வைத்திருக்கத்தான் செய்வார்கள்.

உங்கள் பிள்ளைகள் உங்களுக்கு உதவி செய்ய வந்தால் அதை ஏற்றுக்கொள்ளுங்கள். சிறியவர்கள் அப்பா காரில் இருந்து பொருட்களை இறக்கும்போது உதவி செய்ய வருகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்களால் செய்யக்கூடியதை அவர்கள் செய்ய விடுங்கள். அப்பாவுக்கு “இந்த சேர்ட் அழகாக இருக்கிறதா?” என்று அவர்களிடம் கேளுங்கள். அவர்களின் அபிப்பிராயத்துக்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுக்கலாம். உண்மையிலேய எனக்கு விருப்பமில்லாவிடினும் என் பிள்ளை எனக்காக தெரிவு செய்ததை நான் ஏற்றுக் கொண்ட சந்தர்ப்பங்கள் அதிகம். எதை, எதையோ எவர், எவருக்காகவோ விட்டுக்கொடுக்கிறோமே? என் பிள்ளைக்காக ஏற்றுக்கொண்டு விட்டுப்போகிறேன்.

குடும்பமாக இருந்து சாப்பிடுங்கள் என்ற கருத்தை பலதடவை நீங்கள் கேட்டிருப்பீர்கள். ரீவியை நிறுத்திவிட்டு, நேரம் இருந்தால் மனம்விட்டுப் பேசி, கருத்துக்களை நிதானமாக பரிமாறிக்கொள்ளுங்கள்.

ஓய்வு கிடைக்கும்போது மகனுடன், மகளுடன் அல்லது மனைவியுடன் காலாற நடந்து போய்வாருங்கள். அவர்களோடு நேரடியாக கருத்துக்களை பரிமாறிக்கொள்ள அது நல்ல சந்தர்ப்பமாக இருக்கும்.

நான் முன்னர் சொன்னதுபோல உங்கள் வாழ்வின் இலட்சியமே உங்கள் பிள்ளைகள் தான் என்பதை அவர்கள் உணர வையுங்கள்.

குடும்பத்திற்கு வெளியே நாங்கள் மனம் திறந்து பேசுவதின் அனுகூலம், அனுகூலமற்ற தன்மை பற்றி அடுத்த இதழில் உங்களுக்கு அவகாசம் இருந்தால் பேசிக் கொள்வோமே...

■ ■ ■



# உங்களது வீட்டு பரிசோதனையில் சித்தி அடைவதற்கு அறிந்திருக்க வேண்டியவை


மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -
mahen@thaiveedu.com




### பழுதடைந்துள்ள குழாய்த் தொகுதி

உங்கள் வதிவிடத்தில் உள்ள குழாய்களின் தொகுதியில் பழுது ஏற்பட்டிருந்தால் குழாய்களில் இருந்து நீர் கசிவு ஏற்படுதல் குழாய்களில் அடைப்பு ஏற்படுதல் ஆகிய இருவழிகளில் அது வெளிக்காட்டலாம். மேலெழுந்தவாரியாக பார்வையிடுவதன் மூலம் நீர்க்கசிவை கண்டு பிடிக்கலாம். அதேநேரம் ஓர் வீட்டுப் பரிசோதகர் உங்களது வீட்டின் ஆக உயரத்தில் உள்ள குளியலறையின் சகல வடி குழாய்களையும் (Faucets) திறந்து விடுவதன் மூலம் நீரின் அழுத்தத்தை அளவிட முடியும். நீர் ஓடிக் கொண்டிருக்கும் சத்தத்தை கேட்கக்கூடியதாக இருந்தால், குழாய்களின் அளவு சிறியவை என அறிய முடியும். மூடிய வடி குழாய்களை மீண்டும் திறக்கும் போது வெளியேறுகின்ற தண்ணீர் அசுத்தமாக காணப்பட்டால் குழாய்களில் கறள் தன்மை ஏற்பட்டுள்ளதை அறியலாம். இதன் காரணமாக குடிநீரின் தரம் கடுமையாக பாதிக்கப் படலாம்.

### ஈரலிப்பான நிலக்கீழ் வதிவிடப் பகுதி

இந்த விதமான சூழ்நிலையில் ஓர் வீட்டுப் பரிசோதகர், தரைப்பகுதியில் இருந்து சில அங்குலங்கள் உயரத்தில் வெண்ணிறமான கனிப்பொருள் படிவு உள்ளதா எனவும், நிலக்கீழ் வதிவிடப் பகுதியின் தரையில் பொருட்களை பாதுகாப்பாக சேமித்துவைக்க முடியுமா எனவும் பரிசோதிப்பார். ஈரப்பதனுடைய தன்மை நிலவுமாயின் அதன் விளைவாக பூஞ்சண மணம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

உங்களது வீட்டின் நிகரப் பெறுமதி விலை என்னவாக இருக்கும் என்பதன் அடிப்படையில் நீங்கள் பொருத்தமான திருத்த வேலைகளை மேற்கொண்டு ஈரப்பதனை அகற்ற முடியும்.

### தேவைக்கு குறைவான மின்சார கம்பிகள் இணைப்பு

உங்களது வீட்டில் குறைந்தது 100 அம்பியர்கள் அளவிலான சேவைகள் இருக்க வேண்டும். அது தெளிவாக அடையாளமிடப் பட்டிருக்க வேண்டும். மின்சார கம்பிகள் பித்தளை அல்லது அலுமினியத்தினால் ஆக்கப்பட்டிருக்க வேண்டும். உங்கள் வீட்டில் உள்ள மின் இயக்க பாதைகள் தேவைக்கு குறைவாக உள்ளதா என்றும் தீ ஏற்படும் வாய்ப்பு உண்டா என்றும் கணிப்பீடு செய்வதற்காக வீட்டுப் பரிசோதகர் உங்கள் வதிவிடத்தில் உள்ள, மின்சார விநியோக இணைப்பு சொருகிகளை (Electrical Plugs) அவதானிப்பார்.

### வெப்பமாக்கும் தொகுதிகளும் குளிரூட்டும் தொகுதிகளும்

ஓர் வீட்டில் வெப்பமேற்றுதல் குறைவாக இருப்பதற்கு, தேவைக்குக் குறைவான குளிர் தடுப்பு, வெப்பத்தை ஏற்படுத்தும் தொகுதி நன்கு செயல்படாத நிலை, ஆகிய இரண்டுமே முக்கிய காரணமாகும்.

உங்களது உலை அடுப்பு (Furnace) அதன் சராசரி வாழ்க்கைக் காலமான 15-25 வருடங்களுக்கு மேற்பட்டதா என வீட்டுப் பரிசோதகர், அதனைப் பரிசோதித்து அதன் செயற்படும் திறனை உறுதிப்படுத்துவார். உங்கள் வீட்டில் வாயுவை வலிந்து செலுத்தும் அமைப்பு முறை (Forced air Gas System) இருக்குமானால் உங்கள் வீட்டில் உள்ள வெப்ப பரிமாற்று (Heat Exchanger) நன்கு பரிசோதிக்கப்படும். அவை பாதிப்படைந்திருந்தால் நீங்கள் ஓர் புதிய வெப்ப பரிமாற்றியை பொருத்த வேண்டும்.

### கூரையில் ஏற்படும் பிரச்சினைகள்

புயற்காற்று காரணமாக பொறிமுறைக்குரிய பாதிப்பு அல்லது Asphalt ஒட்டுக் கூரைகள் பழுதடைதல் போன்றவை ஏற்படலாம். அதன் காரணமாக நீர் ஒழுக்குகள் ஏற்படலாம். பீலிகளில் ஒழுக்கு ஏற்படுவதன் மூலம் வெளிப்புற சுவர்களினூடாக தண்ணீர் கீழே வடிவதனால் வீட்டின் வெளிப்புறத்தில் ஏற்படும் இந்த பிரச்சினை ஓர் பாரிய உட்புறப் பிரச்சினையாக மாறுகிறது.

### ஈரப்பதனுடைய முகட்டு இடைவெளிகள்

நிலக்கீழ் வதிவிட பகுதியில் ஏற்படும் ஈரப்பதனுடைய தன்மை
காற்றோட்டம் ஏற்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள்

மின்சார / வெப்ப தடை ஏற்படுத்துவதில் உள்ள பிரச்சினை அல்லது நீராவித் தடுப்புக்கள் என்பவையும் ஒன்றிணைந்து செயற்படுவதனால் வீட்டின் முகட்டுப் பகுதியில் நீர், ஈரலிப்பு பூஞ்சணம் என்பவை ஏற்படலாம். தன் விளைவாக கூரை, வீட்டின் கட்டமைப்பு, கட்டிடப் பொருட்கள் என்பவை அவற்றின் வழமையான பாவனைக் காலத்திற்கு முன்னதாக பழுதடையலாம் .

### மரம் உக்கி போதல்

கதவுச் சட்டம், கண்ணாடிச் சட்டம், மரத்தினால் ஆன வேலிகள் ஆகியவற்றில் இது ஏற்படுகிறது. இவைகள் சமீபத்தில் வர்ணம் தீட்டப்பட்டிருந்தால் வீட்டுப் பரிசோதகர் அதனை நுணுக்கமாக ஆராய முடியும்.

### செங்கற்கள் பதிப்பு

செங்கற்களை மீளப் பதித்தல் என்பது செலவு மிக்க திருத்த வேலை. ஆனால் இதைக் கவனிக்காமல் விட்டால் இதன் காரணமாக வீட்டினுள் தண்ணீர் உட்புகுந்து ஈரப்பதன் ஏற்படலாம். இதனால் செங்கற்கள் உடைந்து விழுந்து புகைபோக்கி அடைப்புக்கு உள்ளாகலாம் அல்லது புகைபோக்கி உடைந்து வீட்டின் கூரையின் மீது விழலாம்.

### பாதுகாப்பற்ற மின் இயக்க பாதை

வழமையாக சட்டப்படி அனுமதிக்கப்படுகின்ற அளவை விட அதிகமான அம்பியர்கள் அளவிலான மின்சாரம் பயன்படுத்தப்பட்டால் தீவிபத்து ஏற்படும் அபாயம் உண்டு. வீடுகளில் பொதுவாக 15 அம்பியர்கள் அளவுடைய மின் இயக்க பாதைகளே அமைக்கப்படுவது வழக்கம்.

### தேவையான அளவுக்குரிய பாதுகாப்பு அம்சங்கள்

நீங்கள் ஒரு பாதுகாப்பு சேவை நிறுவனத்திடமிருந்து பாதுகாப்பு அமைப்பை கொள்வனவு செய்திருக்கக் கூடினும், உங்களது வீட்டில் யன்னல் கண்ணாடிகள் வீட்டுக் கோடி (Patio) என்பவற்றில் சரியான பூட்டுக்கள் உள்ளனவா, கதவுகளில் Dead Butts அமைப்பு பொருத்தப்பட்டுள்ளதா, வீட்டின் ஒவ்வொரு அறையிலும் ஒவ்வொரு மட்டத்திலும் காபன் மொனக்சைட் (Co) வாயுவை கண்டறியும் கருவிகளும், புகை

14ம் பக்கம் பார்க்க...

## இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள்

செப்ரெம்பர் மாதக் குறிப்புகள்

- செப்டம்பர் 1ஆம் திகதி Labor day அன்று உல்லாசப் பிரயாணம் செல்வதன் மூலம் அல்லது BBQவுடன் கோடைகாலத்திற்கு விடை கொடுங்கள்.
- கோடைகாலத்தில் வெளியே அமர்வதற்குப் பயன்படுத்தும் தளபாடங்களை பாதுகாப்பான இடத்தில் பத்திரப்படுத்துங்கள்.
- கோடைகாலத்திற்குரிய ஆடைகளை பாதுகாப்பாக சேமித்து வையுங்கள்.
- லினன் (Linen) படுக்கை விரிப்புகளுக்குப் பதிலாக கம்பளி (Flannel) படுக்கை விரிப்புக்களை விரியுங்கள்.
- கனலடுப்பில் (Oven) வைத்துப் பயன்படுத்திய பாத்திரங்களை சுத்திகரியுங்கள். இவற்றை சுத்திகரிக்க முடியாவிடின், புதிய பாத்திரங்களைப் பயன்படுத்துங்கள்.
- சுத்தமான ஈரமான துணியால் துடைப்பதன் மூலம் உங்கள் சலவை இயந்திரத்தின் உட்பகுதியை சுத்தப்படுத்துங்கள். பின்னர் வெப்பமான நீரை இட்டு சிறிதளவு நேரத்திற்கு இயந்திரத்தை இயக்குங்கள். சில சலவை இயந்திரங்களிற்கு வெளிறச்செய்யும் தூள் (Bleaching powder) இட்டு தூய்மை செய்ய வேண்டியதாயிருக்கும்.
- துணிகளைக் காயவைக்கும் இயந்திரத்தின் துவாரங்களுள் துணிகளின் நூல் மற்றும் ஏனைய தடைகள் காணப்படுகின்றதா என்பதை அவதானித்து அகற்றுங்கள்.
- வெப்பமேற்றல், காற்றூட்டல், வளிசீராக்கல் (Heating, Ventilation and Air conditioning (HVAC) போன்றவற்றுக்காக பயன்படும் குழாய்களின் வடிகட்டியை உற்பத்தியாளரின்படி, சுத்திகரிப்பதன் மூலம், வளியில் காணப்படும் அழுக்குகள் வீட்டினுள் சுற்றோட்டத்திற்கு உட்படுவதைத் தடுக்க முடியும்.
- வீட்டின் உட்புற தளத்தின் பலகைகள் (Base boards), சுவர்கள், தளபாடங்கள் என்பவற்றின் தூசுகளை அகற்றுங்கள்.
- கதவுகளின் குமிழ்களை (knobs) மென்மையான தூய்மையாக்கி கொண்டு சுத்திகரியுங்கள்.
- இலையுதிர்காலத்திற்குரிய தாவரங்களை நடுவதற்கு உங்கள் தோட்டத்தைத் தயார்ப்படுத்துங்கள். தோட்ட மண்ணின் 3 தொடக்கம் 6 அங்குல மேற்பரப்பை கிளறி விடுங்கள். சிறிது காலத்திற்கு ஒவ்வொரு நாளும் நீர் விடுங்கள். அத்துடன் களைகள் காணப்பட்டால் அகற்றி விடுங்கள்.
- தாவரங்களுக்கு அதிகளவு நீர் விட வேண்டாம். அதிகளவில் நீர் விடும் போது நீர் தேங்கி நிற்க வழிவகுக்கும்.

தொகுப்பு: மகேன் சிங்கராசா


ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER
Everything Factory Direct Prices



Sales - Service - Installations

Custom Made

Wood & Vinyl Shutters: California Style Shutters, Plantation Style Shutters, Traditional Style Shutters, Arches
(We Do Any Colour Of Paint & Stain)

Blinds: Vertical Blinds, Venetian Blinds, Wood Blinds, Bamboo Shades, Roller Shades, And More

Draperies: Swags, Sheers, Valance, Curtains, And More

உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்



Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:
தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed

**Gnani & Judy Real Estate**
All Your Real Estate Needs



ஞானேந்திரன் நரசிங்கம்
Sales Representative
CELL: 416.937.8090



ஜூடி ஞானேந்திரன்
Sales Representative
CELL: 416.629.9797

OFFICE: 416.321.6969




## New Tridel Condo in Downtown

**Call for VIP promotion Sales**

Purchase a Tridel-built condo tower suite or loft in one of downtown Toronto's hottest locations in the Entertainment District.

If you buy, sell or lease in any residential or commercial properties from us.

**CHANCE TO WIN**



A Trip to Cuba



**CAPE CHIN**
$66K - $5K DOWN, VTB
8% - 10 YRS OPEN

- 25 acres, some clear land
- 10 minutes from Georgian Bay
- Build & Invest. It's a "WOW" LOT!
- PT LOT 11, CONCESSION 7, EBR – PT 6, NORTH BRUCE PENINSULA

| Markham | Scarborough | Markham | Gas Station For Sale | Scarborough | Scarborough | Oshawa | Oshawa |
|---|---|---|---|---|---|---|---|



**Markham – Middlefield & Denison**
- Demand Area Approximately 11 Years Old
- Well Maintained 3 Br Two Storey home
- Generously Sized Bedrooms
- Close to Transit, Temple, Mosque, Park & Schools

**$349,000**

**Scarborough – Brimley & Finch**
- Beautiful Detached 2-Storey Home In Quiet Family Neighbourhood
- High Demand Location, Close to all amenities
- Lots of Upgrades

**$335,000**

**Markham – Markham Rd & Steeles Ave**
- 4 Bedroom Detached Home.
- Finished Bsmt with 2 Br and 3Pc Wr.
- Luxuriously Upgraded And Dutch Clean.
- Close to Evevrything.

**$479,900**

**Gas Station For Sale**
- Self-Service Esso Gas Station With Convenience.
- Located In A High Traffic Junction.
- Volume 3 Million Litres. Store over $360,000 Per Year.

**$185,000**

**Scarborough – Kennedy & Ellesmere**
- Great Bungalow in Good Location
- Bsmt Finished with Washroom & Sep. Ent.
- Many Upgrades In House

**$349,000**

**Scarborough – Kennedy & Finch**
- Nice Bungalow In An Excellent Location.
- Lot size is 60' x 125' with lots of trees.
- Newer Wrooms, kitchen, Furnace and laminate floor.

EXCLUSIVE

**$379,900**

**Oshawa – Sports Bar**
- Fully equiped with 295 seats
- $900,000/Year sales
- 4600 Sft with Patio
- Financial Available

**$325,000**

**Oshawa – Strip Plaza**
- Fully leased plaza
- Net income $180,000
- 35,000 sft land with 10,000 sft building.

**$2.2 Million**

வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க

HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3
*EACH OFFICE IS INDEPENDENTLY OWNED AND OPERATED




MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE

- No Money Down Programs
- Credit பிரச்சினை உள்ளவர்கள் Credit இல்லாதவர்கள்
  Late Payment, Bankruptcy and R9's - No Problem
- புதிய குடிவரவாளர்களுக்கும், சுய தொழில் வாய்ப்புள்ளவர்களுக்கும் Mortgage ஒழுங்குகள் செய்து தரப்படும்
- New Mortgages, Refinances, Switches - (Switch for free) & Pre - Approval
- தமிழில் இலவச ஆலோசனைகள், கடைசி நிமிடக் கட்டணம் இல்லை
- Fast Approvals & Closings
- 45 வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டி வீதம் ஒழுங்கு செய்து தரப்படும்
- உங்களது வீட்டுக்கே வந்து Mortgage செய்து தரப்படும்
- உங்கள் திருப்தியே எங்கள் வெற்றி

# MORTGAGE
# MORTGAGE
# MORTGAGE

ராம் கிருஷ்
**RAM KRISH**
Senior Mortgage Consultant
The Mortgage Alliance company of Canada
Head Office: 2005 Sheppard Ave. E, Suite 200,
Toronto, ON M2J 5B4
Phone: 416.499.5454, Fax: 416.499.8366



**TEL: 416.526.4996**

NATIONAL BANK OF CANADA · BRIDGEWATER Financial services ltd. · FirstLine MORTGAGES · Scotiabank · FIRST NATIONAL · TD · cervus · BMO

digi Media Creations - 416.467.4952

# கர்ப்பப்பை உதிரப் பெருக்கு

## (Uterine Bleeding)



கந்தையா செந்தில்நாதன்
- Echo - Cardiogapher -
senthil@thaiveedu.com

சென்ற இதழில் மாதவிலக்குப் பற்றியும், கர்ப்பப்பையில் உருவாகும் கட்டிகள் சில வற்றையும் குறிப்பிட்டிருந்தேன். சாதாரண மாக மாதமொருமுறை ஏற்படும் மாதவிலக்கின் பொழுது அண்ணளவாக 75 மி.லீ. அல்லது 5 மேசைக் கரண்டி அளவு உதிரம் தொடர்ந்து 3 தொட்டு 5 நாட்கள் வரை வெளிச்செல்வது இயல்பானதாகும்.

கர்ப்பப்பை உதிரப்பெருக்கு என்று கூறும் பொழுது உதிரமானது மேற்கூறிய அளவிலும் பார்க்கக் கூடுதலாக இருக்கும். அத்துடன் தகுந்த கால இடைவெளியில் மாதவிலக்கு ஏற்படாது ஒழுங்கற்ற முறையில் உதிரப் பெருக்குக் காணப்படும். உதிரப் பெருக்கானது எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. பெண்களுக்குப் பெண்கள் வித்தியாசப்படும்.

குடும்ப வைத்தியரை நாடி அசாதாரண குருதிப்பெருக்குக்குரிய காரணத்தை அறிந்து கொள்வது மிகவும் நல்லது.

வைத்தியர் பின்வரும் கேள்விகளை உங்களிடம் கேட்கலாம்.

- பூப்பெய்திய நாள்
- மாதவிலக்கு ஏற்படும் ஒழுங்குமுறை (உ-ம்: மாதம் ஒருமுறை, 28 நாட்களிற்கு ஒரு தடவை)
- உதிரம் பெருகும் அளவு (எத்தனை துணிப்பட்டிகள் மாற்றினீர்கள் அல்லது எத்தனை மேசைக்கரண்டி அளவு உதிரம்)
- கர்ப்பந்தரித்திருந்தால் இறுதியாக மாதவிலக்கு ஏற்பட்ட நாள்.
- அபாயம் ஏற்படும் அளவிற்கு உதிரம் பெருகுகின்றதா?
- பாலியல் நோய்கள் பற்றிய தகவல்கள்.
- சடுதியாக ஏற்படுகின்ற உடல் நலிவு, நிறை இழப்பு.

### உதிரப் பெருக்கு அதிகமாயின் அதனால் ஏற்படும் பின்விளைவுகள் என்ன?

- குருதி அதிகளவு இழக்கப்படும் பொழுது இரத்தச்சோகை (Anemia) நோய் ஏற்படும்.
- அநேகமாக மனதில் ஒருவித தளர்வு ஏற்படும்.
- உடற் தசைகளில் சரணவாயுப் பிடிப்பு (Cramps) ஏற்படும்.
- உடலில் இரத்தம் குறைவாக இருப்பதனால் தலைச்சுற்று, மயக்கம் என்பன ஏற்படும்.

மிகவும் ஆபத்தைத்தரக்கூடிய அளவு ஏற்படும் உதிரப்பெருக்கிற்கு புற்றுநோயும் ஒரு காரணமாக அமையலாம் என்பதனால் காலம் தாழ்த்தாது வைத்திய உதவியை நாடவும்.

**புற்றுநோய் அல்லாத நோய்களினால் குருதிப்பெருக்கு ஏற்படுவதை முதலில் கவனிப்போம்.**

- நார்த்தன்மையான கட்டிகளினால் (Fibroids) ஏற்படும் குருதிப் பெருக்கு. (சென்ற இதழில் கவனித்தோம்).
- கர்ப்பப்பையின் உட்புறத்தில் உள்ள சுவரில், கருப்பையின் நடுக்குழியை நோக்கி புறந் தள்ளிக் கொண்டு நிற்கும் சிறு கட்டிகள் (Endometrial Polyps)

> **“ கர்ப்பப்பையின் உட்படையில் (உட்சுவரில்) ஏற்படும் புற்றுநோயின் பொழுதும் அதிக உதிரம் பெருகலாம். அநேகமாக 40 வயது தாண்டிய பெண்களுக்கு இவை ஏற்படும் பட்சத்தில் வைத்திய பரிசோதனை செய்து நோயைக் கண்டறிதல் அவசியமாகும். ”**


- கருத்தடை உபகரணங்கள் கர்ப்பப்பைக் குழியினுள் வைக்கப்படும் பொழுது அதன் அமைப்பிற்கு இசைய கர்ப்பப்பைச்சுவரை உறுத்தாத வகையில் வைக்கப்படும். சரியாக வைக்கப்படாத அல்லது கர்ப்பப்பையின் அமைப்பில் பிறழ்வுகள் இருந்தால் இவற்றின் அந்தங்கள் கர்ப்பப்பைச்சுவரை உறுத்தி உதிரப்பெருக்கை ஏற்படுத்தும். சில சமயங்களில் கர்ப்பப்பையில் துவாரமும் ஏற்படலாம். வைத்தியரை நாடி இவற்றை சீர் செய்து கொள்ளலாம். அல்லது முற்றாக அகற்றிய பின்பு வேறு கருத்தடை முறைகளைப் பின்பற்றலாம்.
- எமது கழுத்தின் முற்பகுதியில் தைரொயிட்டுச் சுரப்பியுண்டு, இச்சுரப்பி தைரொக்சின் என்ற ஹோர்மோனை சுரக்கின்றது. இச்சுரப்பின் குறைபாடும் அதிகளவு குருதிப் பெருக்கிற்குக் காரணமாகலாம்.
- SLE (Systemic Lupus Erythematosus) என்கின்ற தன்னினமறியாப் பிறபொருளெதிரிகளின் (Auto immune Disease) தாக்கத்தால் ஏற்படும் நோயும் ஒரு காரணமாகும்.
- குருதி உறையா நோய்.

மேற்கூறிய காரணிகளின் செயற்பாட்டைப் பொறுத்து உதிரப் பெருக்கின் அளவும், காலநேரமும் வேறுபடும்.

### அவதானிக்க வேண்டியவை யாது?

- உதிரம் பெருகிய காலம் (உ-ம் எத்தனை நாட்கள்)
- உதிரப் பெருக்கு தொடர்ந்து உள்ளதா அல்லது இடைவெளி விட்டு ஏற்படுகிறதா? (உ-ம் மாதம் 2 அல்லது 3 முறை)
- உதிரப் பெருக்கின் அளவு (குறைவா, கூடவா)
- மாதவிலக்கு ஏற்படும் ஒவ்வொரு சுற்றிலும் ஏற்படும் உதிரப் பெருக்கின் வேறுபாடு.
- உதிரம் தொடர்ந்து அடிக்கடி சாதுவாகப் படுதல். கர்ப்பப்பைக் கழுத்தில் ஏற்பட்டுள்ள சிதைவாக (Cervical Erosion) இருக்கலாம் அல்லது வேறு காரணங்களும் இருக்கலாம்.
- உதிரப் பெருக்குடன் வயிற்று வலி ஏற்படுகிறதா?
- கர்ப்பம் தங்கிய பொழுது ஏற்படும் உதிரப்பெருக்கு:- புதிதாக ஏற்படும் ஒழுங்கற்ற உதிரப்பெருக்கு கர்ப்பமுற்று இருப்பதைப் பறைசாற்றும் ஒரு தொடக்க அறிகுறியாகவும் இருக்கலாம். எனினும் உதிரப் பெருக்கு நிற்காமல் தொடருமாயின் வைத்திய ஆலோசனையை நாடவும்.

**கருப்பையின் மாதிரிப் படம்**




இடம் 1. கருப்பையின் வெளிப்புறத்தில் கட்டிகள் வளரலாம். இவை வயிற்றுப்பகுதியில் உள்ள உறுப்புக்களை அமுக்கி அதன் மூலம் குணங்குறிகள் ஏற்படலாம்.

இடம் 2. கருப்பையின் நடுத்தசையில் கட்டிகள் உருவானால் கருப்பை மிகவும் தடிப்பமடைந்து கனதியாக இருக்கும்.

இடம் 3. கருப்பையின் உட்புறத்தில் உருவாகும் கட்டிகள் கர்ப்பம் தங்குவதற்கு இடையூறாக இருந்து கர்ப்பச் சிதைவை ஏற்படுத்தலாம்.

எந்த இடமாக இருப்பினும் கட்டியின் பருமன் அதன் தொழிற்பாடு என்பனவற்றைப் பொறுத்து குணங்குறிகள் ஏற்படும். வைத்திய ஆலோசனையை நாடுவது நல்லது.

சில சமயங்களில் சிசுவிற்கு போசாக்கு ஊட்டும் தொப்புள் நாண் கர்ப்பப்பைக் கழுத்திற்கு அண்மையாக உட்பகுதியில் வேரூன்றி இருக்கலாம். அல்லது வேரூன்றிய முழுமையான பகுதியில் ஒரு பகுதி, கர்ப்பப்பையில் இருந்து பிரிவடைந்து இருக்கலாம். இவை கர்ப்ப நேரத்தில் சிசுவின் வளர்ச்சி மற்றும் பிரசவ நேரத்தில் சிசு வெளிவரும் பாதையில் தடை என்பவற்றையும் ஏற்படுத்தலாம். மகப்பேற்று நிபுணர்களின் கவனிப்பு இங்கு அவசியம் தேவைப்படுகின்றது.

## இதயம் மலர்கிறது - 5

### மாதவிலக்கின் பொழுது முட்டை வெளியேறுவதில் ஒழுங்கீனம்

மாதவிலக்குடன் ஒரு முட்டை வெளிவருதல் வேண்டும். அப்பொழுதுதான் சாதாரணமான மாதவிலக்கு ஏற்படுகின்றது என்று கூறலாம். அத்துடன் முட்டை வெளிவரும் நாளாகிய இரண்டு மாதவிடாய்களுக்கு நடுப்பட்ட நாளாகிய 14ம் நாள் (மாதவிடாய் 28 நாட்களுக்கொருமுறை ஏற்படுபவர்களுக்கு) யோனிச் சுரப்பு மிகவும் தடித்து, உடல் வெப்பநிலை சற்று அதிகரித்தும், மார்பகங்கள் தற்காலியமாக அதைத்தும், வயிற்று வலி, முதுகுவலி, மனதில் பாதிப்பு என்பனவற்றுடன் உடலில் நீர் தேங்கும் தன்மையும் ஏற்படும். இக்குணங்குறிகளில் ஒன்றோ, பலவோ இருப்பின் சாதாரண மாத விலக்கின் பொழுது முட்டை வெளியேறுகின்றது என்பதைக் காட்டும்.

பெண்ணின் சூலகத்தில் இருந்து முட்டையானது ஒழுங்காக வெளிவராவிட்டால் அப் பெண்ணிற்கு சில மாதங்களிற்கு மாதவிலக்கு ஏற்படாது விட்ட பின்பு, இருந்தாற்போல் ஒழுங்கற்ற முறையிலும், நீண்ட காலத்திற்கும் உதிரப் பெருக்கு நிகழ்வதை இதற்கு ஒரு அறிகுறியாக எடுக்கலாம். இதனை உறுதி செய்வதற்குத் தினமும் உடல் வெப்பநிலையைக் குறித்து வைத்தல் அவசியம். முட்டை வெளியேறும் நாள் உடல் வெப்பநிலை அதிகரித்துக் காணப்படும். அத்துடன் மாதவிடாய்ச் சுற்றுவட்டத்தின் 2வது பகுதியாகிய 14 நாட்களின் போது குருதியில் உள்ள புறொஜெஸ்ரெறோன் என்ற ஹோமோன் அளவு மிகவும் குறைவாகக் காணப்பட்டால் அது இன்னுமொரு சான்றாகும். சில சமயங்களில் கர்ப்பப்பையின் உட்பக்கத் சுவரில் திசுக்களை எடுத்து சோதிப்பதன் மூலமும் இதனைக் கண்டறிவார்கள்.

### மாதா மாதம் முட்டை வெளியேற்றும் மாத விலக்குச் சுற்றினைக் கொண்ட பெண்ணிற்கு அசாதாரண உதிரப் பெருக்கை ஏற்படுத்தும் காரணங்கள் என்ன?

சில பெண்களிற்கு சாதாரண அளவாகிய 75 மி.லீற்றர் அளவு குருதியிலும் பார்க்க சற்று கூடுதலாக வெளியாவது இயல்பானதே. எனினும் குருதியிழப்பால் ஏற்படும் விளைவுகளைத் தடுக்க வைத்திய ஆலோ-

13ம் பக்கம் பார்க்க...

முதலுதவி கற்பதற்கும் ஆலோசனைகளிற்கும்
Dr.Kandiah Senthilnathan
(Registered Medical Officer - SLMC)
Echo-cardiographer - Canada,
First Aid & CPR Instructor
(Certified in Canada)
647-801-9252, 416-502-9252

# எமக்கென்று ஒரு தனிக்குடில்

சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்



**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

## 416.438.1688

Fax: 416.438.1612
2250 Midland Ave., #3
(South of Sheppard)
Unit 3, Scarborough, ON M1P 4R9


RBC Financial Group

# HomeLife/GTA Realty Inc., Brokerage*

1711, McCowan Rd,#206, Scarborough, ON. Office:416.321.6969



**Buy Or Sell Any Properties Or Business With Me And Win This New BMW****



**Justin William**
Real Estate Broker
**Direct:416.803.7344**

## Business For Sale




- Profitable Business in a prime Scarborough Location.
- Lotto commission approx $ 1500/mth. Sales approx $ 6000/mth.
- Variety, Dollar store, laundry and Party Rentals. All in one Store.
- Basement With Separate Entrance can be rented for extra income.
- Daisy Mart name can be changed to your preferable store name.
- Very Low Rent for this area. $ 2800/Mth TMI included with rent.




- Excellent Variety Store in a busy plaza. Next to coffee shop.
- Lotto commission $ 1800/mth. Sales approx $6500/mth.
- High Traffic area. Surrounded by apartments.
- Reasonable rent $ 2800/mth.TMI included with rent.
- Perfect opportunity to own a established business for this price.
- Please call us for any further details....

This is not intend to solicit properties currently listed for sale

*Each office independently owned and operated ** Some conditions apply

# Home Insurance அவசியமான ஒன்றா?



கருணா கோபாலபிள்ளை
- வீடு விற்பனை முகவர் -
karunagopal@thaiveedu.com

கொளுத்தும் வெய்யிலில் நிழல்களின் அருமை போல, இழப்புக்கள், இன்னல்கள், அவலங்களுக்கிடையே மனிதம் வாழத்துடிக்கின்றது. இயந்திரமயமாக்கப்பட்ட வாழ்க்கை முறையில் இடைஇடையே தோன்றும் வசந்தம் இக்கோடைவிடுமுறைதான். அது கூட எம்மில் எத்தனை பேருக்கு ஓய்வு கொடுத்து கௌரவித்தது என்பது கேள்விக்குறியே. காத்திருப்பு என்பது இவ்விடுமுறையினைக் கூட விட்டுவைக்கவில்லை. நாம் அன்றாடம் எத்தனை விடயங்களுக்குத்தான் காத்திருப்பது? மீண்டும் பாடசாலைகள் ஆரம்பமாகவுள்ள இவ்வேளையில் எம் குட்டிச் சிறார்களின் சந்தோசம் இரட்டிப்பாகும். ‘Back to School’ கொள்வனவுகள், நண்பர்களை எதிர்பார்த்து அவர்களின் குதூகளிப்புக்கள் மத்தியில் இம்மாதத்திற்கான கேள்விகளை சற்று பார்ப்போம்.

### நானும் எனது நண்பியும் ஒரே பகுதியில் ஒரே மாதிரியான வீட்டினை சம பெறுமதியில் பெற்றுக்கொண்டோம். அவ்வாறிருக்க எம் இருவரது மாதாந்த Mortgage கட்டுப்பணம் வேறுபடுவதற்கு என்ன காரணம்?

நந்தினி வா.
Scarborough

இதற்கு பல காரணங்கள் உண்டு. நீங்கள் Mortgageஇனை பெற்றுக்கொள்கின்ற வேளைகளில், வேறுபட்ட கடன் வகைகளை நன்கு பரிசீலித்துப் பார்த்து உங்களுக்கு ஏற்ற முறையில் தெரிவு செய்தல் வேண்டும். அது மட்டுமன்றி உங்கள் வீட்டின் பெறுமதிக்கு ஏற்றாற்போல நீங்கள் செலுத்துகின்ற முதற்பணம், வட்டி விகிதம் போன்றவையும், நீங்கள் மீள செலுத்தும் கால அளவு உதாரணமாக 25வருடம் தொடக்கம் 35வருடம் மற்றும் மீள செலுத்தும் வகைமுறைகள் (மாதாந்தம், வாராந்தம், மாதமிருமுறை) போன்றவற்றை பொறுத்தும் இக்கட்டுப்பணம் வேறுபடலாம். பொதுவாக கால அளவுகள் அதிகரித்து செல்கின்ற வேளைகளில் வட்டி செலுத்தும் அளவும் அதிகரித்து காணப்படும்.

> “ வங்கிக் கடன் இன்றி நீங்கள் உங்கள் சொந்த பணத்தில் பெற்றுக்கொண்ட வீடாக இருப்பினும், Fire Insurance என்பது அவசியமானதே. நம்மில் சிலர் Home Insuranceஇனையும் Mortgage Insuranceஇனையும் வேறுபடுத்திப் பார்க்க தவறிவிடுகின்றோம். ”

இருப்பினும் சக்திக்கு ஏற்றாற்போல் மீள் செலுத்தும் தொகையினை நிர்ணயிப்பதும் மாதாந்தம் அவற்றினை சீரான முறையில் திரும்ப செலுத்துதலும் உங்கள் கடன் திறனை அதிகரிக்கும்.

### வீடு ஒன்றினை வாங்குவதற்கு முன்னர் நான் அதற்கு தகுதியானவனா என்பதனை எவ்வாறு தெரிந்துகொள்வது.

### வீடு ஒன்றினை வாங்குவதற்கு நான் தகுதியானவன் என்பதனை தெரிந்துகொண்ட பின்னர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் யாது?

ரஜீவன். க
Scarborough

முதலாவது கேள்விக்கு வருவோம்

இது மிகவும் சுலபம். கீழ்காணும் கேள்வியினை நீங்கள் உங்களிடமே கேட்டுப் பாருங்கள்.

- நான் ஓர் நிரந்தர தொழில்வாய்ப்பு உடையவரா?
- எனது வருட வருமானம் நிலையானதுடன் அதிகரித்தும் செல்கின்றதா? 2-3 வருடம் நான் வேலை செய்கின்றேனா?
- எனது Billகளை நான் ஒழுங்கான முறையில் மீள செலுத்துகின்றேனா?
- எனது கடன்கள் குறைத்திருப்பதுடன், எனது செலவீனங்கள் கட்டுப்பாடுடையதா?
- சேமிப்புத் தொகை அதிகரித்து வருகின்றதா? இப்போது சேமிப்பில் இருக்கும் பணம், எதிர்பார்க்கும் வீட்டின் விலையில் 5% மாவது தேறுமா?
- மாதாந்த mortgage payment செலுத்துவதற்கும் வீடு சார்பான இதர Paymentகள் செய்வதற்கும் என்னால் முடியுமா?

மேலே கூறிய கேள்விகளுக்கு தகுந்த பதில் கிடைப்பின், வீடு வாங்கும் எண்ணமும் இருப்பின் நீங்கள் தகுதியானவரே.

மற்றையது, உங்களுக்கு தேவையான முறையில் விருப்பத்திற்கேற்ப வீடு அமைத்து கொள்வதற்கு கீழ்காணும் விபரங்களை குறித்துக்கொண்டு ஓர் வீட்டு முகவரின் உதவியினை நாடலாம்.

- வசிக்க விரும்பும் பகுதி
- விலை மற்றும் கடன் அளவுகள் (அதி கூடிய விலை அளவு)
- பாடசாலைகள் அவசியமாயின் அவற்றின் தரம்
- வீட்டின் வயது (புதிது அல்லது பழையது)
- எவ்வாறான வீடு (தனி வீடு, Semi detached, town etc)
- திருத்த வேலைகளுக்காக நீங்கள் செலுத்தக்கூடிய பணத்தொகையின் அளவு
- பஸ் போக்குவரத்து அவசியமா?
- காணியின் அளவு மற்றும் வசதிகள்
- படுக்கை அறைகளின் / குளியல் அறைகளின் எண்ணிக்கை
- வீட்டின் அளவு (சதுர அடி)
- வீட்டுக்குள் நீங்கள் எதிர்பார்க்கும் வசதிகள் (தரை அமைப்புக்கள், A/C, சமையலறை, Family Room, நிலக்கீழ் அறை, etc)

மேற்கூறிய தரவுகள் பற்றிய குறிப்புக்கள் எடுத்தபின்னர் உங்கள் முகவருடன் ஏற்படுத்திக்கொள்ளும் முதல் சந்திப்பிலேயே அவற்றினை தெளிவு படுத்துங்கள். அவ்வாறு செய்கின்ற வேளைகளில் அவர்கள் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப வீட்டினை இலகுவாக பெற்றுத்தர முடியும்.

### நான் ஓர் Single parent (தனியாக குடியிருப்பவர்) நான் வீடு வாங்குவதற்கு ஏதாவது தடைகள் உண்டா?

உமா.வ
Ajax

எல்லோரையும் போலவே நீங்களும். நீங்கள் தாராளமாக ஓர் வீட்டின் சொத்தக்காரி ஆகலாம். உங்கள் வருமானம் மற்றும் மாதாந்தம் நீங்கள் வீட்டுக்காக செலவிடக் கூடிய தொகையினை பொறுத்து வீட்டின் விலையளவினை தீர்மானியுங்கள். பொதுவாக இருவர் சம்பாதிக்கும் வீடுகளின் குடும்ப வருமானமானது கடன் வழங்குனர்களால் சேர்த்துக் கணிப்பிடப்படும் அவ்வாறு செய்கின்ற வேளைகளில் நீங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய Mortgage அளவு சற்று அதிகரித்துக் காணப்படும். இருப்பினும் பலரது தனிப்பட்ட வருமானமானது இப்போது சில குடும்ப வருமானத்தை விட பன்மடங்கு அதிகரித்துக் காணப்படுகின்றது. இவ்வாறு இருக்கின்ற போது உங்களுக்கான எந்த தடைகளும் இல்லை.

### ‘Interest rate Protection’ என்றால் என்ன? அதனால் என்ன லாபம்?

சுந்தரி
Brampton

இது கடன் வழங்கு நிறுவனங்களால் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் இருக்கும் ஓர் வியாபார தந்திரம் அல்லது சலுகை என்றும் கூறலாம். அதாவது,

குறிப்பிட்ட மாத காலங்களுக்கு தற்போது நடைமுறையிலுள்ள வட்டி விகிதத்தினை உங்களுக்காக பொருத்தி வைத்தல் என்று கூறுவார்கள். இம்மாத அளவுகள் பொதுவாக 3-4 மாதங்கள் வரை காணப்படும். ஒருவர் வீடொன்றினை வாங்குவதற்காக செலவிடுகின்ற கால எல்லைக்குள் வட்டி விகிதம் அதிகரிக்குமாயின் இம்முறை மூலம் அவர்கள் பாதுகாக்கப்படுகின்றார்கள். இவ் Interest rate Protection இனை பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் வங்கிகளையோ அல்லது Mortgage முகவர்களையோ நாடலாம். நீங்கள் ஓர் குறிப்பிட்ட வங்கியில் அவ்வாறு செய்துவைப்பதனால் நிச்சயமாக அவர்களிடம் தான் கடன் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதில்லை. சமகாலத்திற்கு பொருத்தமான சலுகைகள் நிறைந்த எந்த கடன் வழங்குனரையும் தெரிவு செய்யும் தகைமை உங்களுக்கு உண்டு.

### Home Insurance அவசியமான ஒன்றா?

ரேவதி. வ
Markham

உங்கள் வீட்டின் பெயரில் யாராவது Mortgage வழங்கியிருந்தால் அவர்கள் அதனை அவசியமானதாகவே கருதுவார்கள்.

இவ்வகை காப்புறுதியினை Fire Insurance என்றும் அழைப்பார்கள். அதாவது உங்கள்

14ம் பக்கம் பார்க்க...

BALACHANDRAN LAW OFFICE

We specialize in:

> Business Law
Purchase, sale, business registration

> Family Law
Divorce, separation agreements

> Immigration Law
Sponsorship, refugee hearings, work permit

> Estate Law
Probates, estate planning

> Real Estate (Commercial/Residential)
Buying and selling property, mortgages

> Last Will, Power of Attorney, Affidavit, etc.



Balachandran Muthaiah, LL.B.
Barrister, Solicitor & Notary Public

சட்டம் சம்பந்தமான சகல தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகத்துடன்
தொடர்பு கொள்ளுங்கள்.
இலவச ஆரம்ப ஆலோசனை!

2401 Eglinton Ave. E.
Suite 300
Toronto, ON M1K 2M5

Tel.: 416 755 5544
Fax: 416 755 5594
Email: balalawoffice@gmail.com

(at southwest corner of Kennedy & Eglinton)

**Buy & Sell Residential & Commercial Properties**






*You can win!..*
*** Some terms and conditions apply*

Raj. A. Rasaratnam B.Com.
Sales Representative
**416-726-8055**
**416-299-8570**

HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
*Independently own and operated
1711 McCowan Rd., Suite #206,
Scarborough, ON. M1S 3Y3
Bus: (416) 321-6969
Fax: (416) 321-6963

*Buy or sell any property with my help and enter the draw!*
*Don't miss out on these wonderful prizes!*

Mortgage arrangement, Business incorporation and corporate tax preparation

**416-726-8055**

**குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி**



**RESP SPECIAL!**
இம்மாதம் RESP செய்பவர்களுக்கு
3 விசேட சலுகைகள் உண்டு!
- Start from $25

தனா
மாணிக்கவாசகர்
*Broker*

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
RBC Insurance
Canada Life
Manulife Financial

**Life Insurance**
**Critical Illness Insurance**

Home Equity Line of Credit
**Disability Insurance**
**Mortgage Insurance**

RRSP - Start from $25
Loan approval within 24hrs - Bad credit no problem
RESP - Start from $25
(20%-40% Government Grant + 15% Company Bonus)



INSURANCE SERVICE INC.
Cell: 416-728-5772
Business: 416-290-1200

# கர்ப்பப்பை உதிரப்...

9ம் பக்கத் தொடர்ச்சி...

சனை பெறுதல் நல்லது.

கர்ப்பப்பையின் உட்படையில் (உட்சுவரில்) ஏற்படும் புற்றுநோயின் பொழுதும் அதிக உதிரம் பெருகலாம். அநேகமாக 40 வயது தாண்டிய பெண்களில் இவை ஏற்படும் பட்சத்தில் வைத்திய பரிசோதனை செய்து நோயைக் கண்டறிதல் அவசியமாகும்.

சில பெண்களிற்கு எல்லா விதமான வைத்திய பரிசோதனைகளின் முடிவிலும் காரணத்தைக் கண்டறிய முடியாத அளவிற்கு உதிரப் பெருக்கு ஏற்படுகிறது. இதனை DYSFUNCTIONAL UTERINE BLEEDING என்று கூறுவார்கள். "தொழிற்பாடு அற்ற கர்ப்பப்பை உதிரப் பெருக்கு" என்று தமிழில் கூறலாம்.

கர்ப்பப்பை கட்டிகள் அவற்றின் பருமன், தங்கியுள்ள இடம் என்பனவற்றைப் பொறுத்து உதிரப்பெருக்கை ஏற்படுத்தலாம். கருப்பையின் உட்படையில் அல்லது குருதிக் குழாயின் அருகில் காணப்பட்டால் குருதிப் பெருக்கு அசாதாரணமாகக் காணப்படலாம்.

### கட்டியினால் ஏற்படும் குணங்குறிகள் பின்வருமாறு

- வயிற்றுப் பகுதியில் அமுக்கம்
- அடிவயிற்றில் வேதனை
- நேர்குடலை அமுக்கும் கட்டிகள் மலம் கழிக்கும் பொழுது வேதனையைத் தரலாம்.
- சிறுநீர்ப் பையை அமுக்கும் கட்டிகள் சிறுநீர் கழிவதில் தடங்கலை ஏற்படுத்தலாம்.

### ஏன் இக்கட்டிகள் உருவாகின்றன?

சரியான காரணங்கள் இன்னமும் சரிவரத் தெரியவில்லை. பாரம்பரியக் காரணிகள், குருதிக்கலன்களில் ஏற்பட்டுள்ள பிறழ்வுகள், அடிவயிற்றில் ஏற்படும் உடற் காயங்களும் அதற்கேற்ப திசுக்களில் ஏற்படும் மாற்றங்களும், உடற் திசுக்களின் கட்டுமானப் பணிகளின் போது வளர்ச்சிக்காரணிகளின் ஒழுங்கற்ற கட்டளைகளும் (கலங்கள் எவ்வளவு விரைவாகவும், எந்த அளவிற்குப் பெருக வேண்டும் போன்ற கட்டளை) இக் கட்டிகள் உருவாகுவதற்கு பங்களிக்கலாம் என்று கருதப்படுகின்றன.

### சிகிச்சை பெறாத பொழுது கட்டிகள் ஆபத்தை விளைவிக்குமா?

- தகுந்த பரிசோதனைகளின் பின்பு, பிரச்சினைகள் கொடுக்காத கட்டிகள் அப்படியே விடப்படலாம்.
- கட்டிகள் விரைவாகப் பருத்து வருகின்றனவா என்று கண்காணித்து வருதல் அவசியம். ஏனெனில் விரைவாக வளர்பவை புற்று நோய்க் கட்டிகளாக இருக்கலாம்.
- சில சமயங்களில் ஆபத்தற்ற பெரிய கட்டிகள் கூட அருகில் உள்ள உடல் உறுப்புக்களை அமுக்குவதால் சில தீங்குகள் ஏற்படலாம். இவை அகற்றப்படுதல் வேண்டும்.
- மிகவும் பெரிதாக வளர்ந்து விட்ட கட்டிகளை சத்திர சிகிச்சை மூலம் அகற்றுவது சிரமமாகவும், ஆபத்தானதாகவும் அமையலாம் என்பதால் நிலைமையைப் பொறுத்து கட்டிகளை தக்க சமயத்தில் அகற்றுவது நல்லது.
- கர்ப்பச் சிதைவுகளுக்குக் காரணமாக இருக்கும் கட்டிகள் அகற்றுவதன் மூலம் பெண்ணானவள் தாய்மைப் பேறு பெற்று குழந்தை பெறுவதற்கு வழி ஏற்படுத்தப்படுகின்றது.

### எப்படி கட்டிகளைக் கண்டு பிடிக்கலாம்?

- வைத்தியரினால் செய்யப்படும் இடுப்புப் பரிசோதனை.
- ULTRA SOUND பரிசோதனை இதன் மூலம் நார்த்தன்மையான கட்டிகளை (Fibroids) ஏனைய முளை போன்ற கட்டிகளில் (Ovarian Tumors) இருந்து பிரித்து அறிந்து கொள்ளலாம்.
- MRI, CT Scan என்பனவும் இதற்கு உதவும்.
- HYSTEROSALPINGOGRAM (HSG) என்ற பரிசோதனை இப்பரிசோதனையின் பொழுது திரவகம் ஒன்று கர்ப்பப்பைக் கழுத்தினூடாகக் கர்ப்பப்பை நோக்கிச் செலுத்தப்படும் பொழுது பல விதமான படங்கள் Ultra Sound மூலம் பதிவு செய்யப்படும். கர்ப்பப்பைக் குழியினுள் இத்திரவகத்தின் அமைப்பு எப்படி அமைகின்றது என்பதைக் கவனிப்பதன் மூலம் கர்ப்பப்பைக் குழியினுள் உட்சுவரில் அமைந்துள்ள கட்டிகளைக் கண்டறியலாம்.

### சிகிச்சைகள் எப்படி அமையும்?

#### மருந்துச் சிகிச்சை:

மருந்துகள் மூலம் கட்டிகளை சுருங்கச் செய்தல். இம்மருந்துகளிற் சில இயற்கையாகச் சூலகத்தினால் சுரக்கப்படும் ஈஸ்ரொஜன் என்கின்ற சுரப்பை தற்காலிகமாகத் தடுத்து நிறுத்துவதன் மூலம் கட்டிகளைச் சுருக்குகின்றன. ஆறுமாதகால அளவிற்குக் கொடுக்கப்படும் மருந்து கட்டிகளின், 50வீதமான பருமனைக் குறைக்கக்கூடியதாக இருக்கும்.

Morning After Pill என்ற கருத்தடை வில்லையும் நார்த்தன்மையான கட்டிகளைச் சுருக்கும். சம்பந்தப்பட்ட உதிரப் பெருக்கையும் இது குறைக்க வல்லது.

Androgenic Steroid hormone எனப்படும் DANAZOL என்ற மருந்தும் நார்த்தன்மையான கட்டிகளால் ஏற்படும் உதிரப் பெருக்கைக் குறைக்கப் பாவிக்கப்படுகின்றது. ஆனால், இது கட்டிகளின் பருமனைச் சுருக்க மாட்டாது.

மாதவிலக்கு நின்று விட்ட பெண்களிற்கு இயல்பாகவே கட்டிகள் சுருங்கிவிடுகின்றன. இதை வைத்தியரிடம் உறுதி செய்தல் வேண்டும். எலும்பு மென்மையாவதைத் தடுக்கப் பாவிக்கப்படும் RALOXIFENE என்கின்ற மருந்து வயதான பெண்களிடம் உள்ள கட்டிகளைச் சுருங்கச் செய்கின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது.

#### சத்திர சிகிச்சை:

Myomectomy: கர்ப்பப்பையில் உள்ள கட்டிகளை கண்டறிந்து அவற்றை மாத்திரம் அகற்றுதல். இச்சத்திர சிகிச்சை அடிவயிற்றை வெட்டித் திறந்து செய்வார்கள் அல்லது வயிற்றில் துளைகள் இட்டு அதன் மூலம் செய்வார்கள்.

Hysterectomy: கட்டிகள் உட்பட கர்ப்பப்பையையும் முற்று முழுதாகச் சத்திர சிகிச்சை மூலம் அகற்றுதல்.

கர்ப்பப்பைக்கட்டிகளில் லேசர் கதிர்களால் துளை செய்து அத்துளைகளினூடாக அதி குளிர் சாதனம் மூலம் அக்கட்டிகளை உறையச் செய்து விடுதல். இவை கட்டிகளை அந்த இடத்திலேயே அழித்துவிடும்.

கட்டிகளுக்குக் குருதி விநியோகிக்கும் கர்ப்பப்பை நாடிகளின் கிளைகளை, அவற்றினுள் சிறு மணிகள் அளவு Polyvinyl Alcohol என்கின்ற பதார்த்தத்தை சிறு குழாயினூடாகச் செலுத்தி அந்தக் குருதிக் குழாய்க் கிளையை அடைத்து விடுதல். குருதி விநியோகம் கிடைக்காத கட்டிகள் பட்டினியால் இறந்து விடும். இச் செய்முறையின் நீண்ட காலப் பிரதிபலிப்பு இன்னமும் தெரியாதாகையால் மருத்துவர்கள் இதனைச் சிபார்சு செய்வது மிகவும் குறைவு. இதற்குப் பதிலாக நேரடியாகவே அந்த இரத்தக் குழாயைச் சத்திர சிகிச்சை மூலம் அகற்றிவிடுவது நல்லது என்பதை வைத்தியர்கள் ஆராய்ந்து வருகிறார்கள். இதன் மூலம் Polyvinyl Alcohol என்ற பதார்த்தத்தால் வரக்கூடிய ஆபத்தைத் தவிர்க்கலாம் என்று கருதுகிறார்கள்.

(தொடரும்)

■ ■ ■




# உங்களது வீட்டுபரிசோதனையில்...

7ம் பக்கத் தொடர்ச்சி...

கண்டறியும் கருவிகளும் உள்ளனவா என வீட்டைப் பரிசோதிப்பவர் அவதானிப்பார்.

### கட்டமைப்பு அத்திவாரத்தில் ஏற்படும் பிரச்சினை

ஒரு வீட்டின் கட்டமைப்பின் நம்பகத்தன்மையும், தரமும், மிகவும் அவசியம். எனவே வீட்டை பரிசோதனை செய்பவர் வீட்டின் அடித்தளம் பற்றி நன்கு ஆராய்வார்.

### வளியை குளிரூட்டும் கருவியை பராமரித்தல் A/c Maintenance

ஓர் வீட்டின் மத்திய குளிரூட்டல் அமைப்பு இரு பகுதிகளைக் கொண்டது.

1. வெளிப்புறத்தில் - ஒரு காற்று அழுத்தி (Compressor) ஒடுக்கும் சுருள். ஓர் கற்றாடி என்பவற்றை கொண்டிருக்கும்.

2. உட்புறத்தில் - காற்றை ஆவியாக்கும் ஓர் சுருள், சூடான வளி உலையின் விநியோகக் குழாயினுள் பொருத்தப்பட்டிருக்கும்.

வீட்டினுள் உள்ள வெப்பம் இழுக்கப்பட்டு குளிரூட்டும் பொருளினால் குழாய்களினூடாக கொண்டு செல்லப்பட்டு வீட்டுக்கு வெளியே உள்ள ஒடுக்கும் சுருளுக்கு எடுத்து செல்லப்படுகிறது.

வெப்பமேற்றும் உலைகளைப் போலன்றி, குளிரூட்டல் கருவிகளை அடிக்கடி பராமரிப்பு செய்ய வேண்டியதில்லை எனினும் நன்கு பராமரிக்கப்பட்ட குளிரூட்டும் அமைப்புகள் வீட்டில் சிறந்த தன்மையுடைய குளிரூட்டும் தன்மையை ஏற்படுத்தும். அதனால் குறைவான செலவில் உங்கள் வீட்டைக் குளிரூட்ட முடியும். அதே சமயம் குளிரூட்டும் உபகரணம் நீண்ட காலம் பாவிக்கக் கூடியதாக அமையும்.

உங்கள் வீட்டில் பொருத்தப்பட்டுள்ள குளிரூட்டும் சாதனத்தை நன்கு பராமரிப்பது பற்றிய விபரங்களை உங்களுக்கு வழங்கப்பட்ட உரிமையாளர்களுக்கான வழிகாட்டி (Owner's Manual)யில் இருந்து அறியலாம்.

எனினும் சில முக்கியமான சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு இத்துறை சார்ந்த தொழில் நிபுணர்களை அழைக்க வேண்டும்.

### பாதுகாப்பான கைப்பிடிகள் Railings / Guards

வீடுகளைச் சூழ ஏற்படும் மரணங்களில் 40% வீதமானவை தற்செயலாக தவறி விழுவதனால் ஏற்படுகிறது என நோய்க் கட்டுப்பாடு மற்றும் காயங்களைத் தடுத்தலுக்கான நிறுவனம் (CDC) மதிப்பீடு செய்துள்ளது. அவசர சிகிச்சைக்காக செல்பவர்களில் 20 சதவீதமானோர் கீழே விழுந்து காயமடைந்தவர்கள் என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இவற்றுள் 50 சதவீதமானோர் வீடுகளில் படிகளில் தடக்கி விடுவதனால் கடுமையான காயங்களுக்கு உட்பட்டவர்களாகும்.

Railings. Guards ஆகியவை சரியாகப் பொருத்தப்பட்டிருந்தால் இவ்வகையான காயங்களை குறைக்க முடியும்.

**Railings:** படிகளில் ஏறும் போது இறுக்கமாக பற்றிப் பிடிப்பதற்கு Railings உதவுகின்றன.

**Guards:** படிக்கட்டுக்கள் அல்லது தளம் (Deck) அல்லது மொட்டை மாடி (Balcony) ஆகியவற்றில் இருந்து கீழே விழுந்து விடாமல் பாதுகாக்கின்றன.

■ ■ ■

# Home Insurance அவசியமான..

11ம் பக்கத் தொடர்ச்சி...

வீட்டிற்கு தீயினால் அல்லது நீரினால் மற்றும் ஏனைய எதிர்பாராத சேதங்கள் ஏற்படின், அதனை சீர்செய்து முன்னர்போல் அமைத்துக் கொள்வதற்கே இக் காப்புறுதியினை நாம் பெற்றுக்கொள்கின்றோம். நாம் ஆரம்பத்தில் பார்த்தது போல் Mortgage வழங்கும் நிறுவனங்கள் Fire Insurance இல்லாமல் உங்களுக்காக பணத்தினை வழங்க மாட்டார்கள். ஏனெனில் ஒரு வீட்டின் பெயரில் அடமானமாக வழங்கப்படுவதே Mortgage ஆகும். அவ்வாறு வழங்கப்படுகின்ற பணத்திற்கு சேதமின்றி பாதுகாப்பதற்காகவே இவ்வகை Fire Insuranceகள் துனைபோகின்றன. கடன் இன்றி நீங்கள் உங்கள் சொந்த பணத்தில் பெற்றுக்கொண்ட வீடாக இருப்பினும், Fire Insurance என்பது அவசியமானதாகவே கருதப்படுகின்றது.

நம்மில் சிலர் Home Insuranceஇனையும் Mortgage Insuranceஇனையும் வேறுபடுத்திப் பார்க்க தவறிவிடுகின்றோம். Mortgage Insurance என்பது ஓர் ஆயுட் காப்புறுதியின் வடிவமே. அதாவது Mortgage பெற்றுக் கொள்பவரின் பெயரில் Mortgageஇன் ஆயுட்காலத்துக்கு உட்பட்ட (Term) கால அளவுக்கு பெற்றுக்கொள்வதாகும்.

### வீடுகளுக்குள் mold பரவக் காணரம் யாது? Mold இனால் ஏற்படக்கூடிய பக்கவிளைவுகள் யாது?

ஜெயந்தன். ம
Pickering

பொதுவாககக் கூறின் Mold இல்லாத (100% Mold Free) வீடுகளே இல்லை எனலாம். வீட்டுக்குள் காற்றுப் புகக்கூடிய பகுதிகளில் இவ்வாறான Mold படிதல் ஏற்படுகின்றது. வளியிலுள்ள ஈரப்பதன் இதற்கு ஓர் முக்கிய காரணி. குளிர்கால மற்றும் கோடைக்காலங்களில் வீட்டுக்குள் ஈரப்பதன் சமநிலையில் பேணப்பட வேண்டும். அதற்காக வீட்டுக்குள் இயற்கை காற்றினை உட்புகவிடுதல் மிக அவசியம். குளிக்கும் போதும் சமையலறைகளில் வேலைகள் செய்யும் வேளைகளிலும் காற்றகற்றிகளை முடுக்கி விடுவது மட்டுமன்றி ஜன்னல்களை திறந்து வைத்திருத்தல் நன்று. சாதாரண Moldகளால் பெரிதும் பாதிப்புக்கள் ஏற்படுவதில்லை. மனிதரிலுள்ள நோயெதிர்ப்பு சக்திகளே அவற்றினை சீர் செய்யும். ஆஸ்துமா மற்றும் மூச்சுத் திணறுதல் போன்ற நோய்கள் சிலரை தாக்கலாம். மாறாக அளவுக்கு அதிகமாக Mold படிந்திருப்பின் அவற்றினை உடனடியாக சீர் செய்தல் வேண்டும். இதற்கான சோதனைகள் செய்வதற்கு பல நிறுவனங்கள் உண்டு. அவர்களின் உதவியுடன் காற்றின் தன்மைகளை அறிந்து செயற்படலாம்.

நன்றி வாசகர்களே, மீண்டும் உங்கள் கேள்விகளுக்கான பதில்களுடன் சந்திப்போம்.

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*


HOMELIFE FUTURE REALTY


Office: 416-264-0101
Fax: 416-261-1519
262 Markham Road
Toronto, Ontario
M1J 3C5

HOMELIFE HIGHER STANDARDS

*Dedicated to... Making Your Dream Home A Reality*

LOKAN SUNDARAM
Broker
416-450-3984
lokan.homelife@gmail.com







- 2 + 1 Bedrooms
- 2 Washrooms
- In High Demand
- Close to all Amenities




- 3 Bedrooms
- 3 Washrooms
- Upgraded Kitchen
- Less than 1 Yr. Old




- Commercial Unit
- 1243 Sq.Ft
- Finished Unit w/washrm & office
- Major Development in Progress




- 4 Bedrooms
- 2 Washrooms
- Renovated Kitchen
- Beautiful Neighbourhood




- 1 + 1 Bedrooms
- High-end Condo Unit
- Less Than a Year Old




- 2 Bedrooms
- 2 Washrooms
- Perfect for First Time Buyers

I'm here to get your mortgage smarter and faster.

உங்களுக்கு அதிக கடன் பளு இருந்தால் அனைத்தையும் குறைந்த ஒரு மாதக்கட்டணத்தில் கொண்டுவருவதுடன் உங்களுக்கு அதிக பணத்தையும் சேமிக்க உதவுவேன்.

- **Residential**
- **Industrial**
- **Commercial**

**1st, 2nd, 3rd Mortgages Upto 100%...**

**வங்கி வட்டி வீதத்தை விட குறைந்தளவு வட்டி வீதம்**

## NO FEE FOR RESIDENTIAL MORTGAGES

- Rate discount up to 3%
- Give me a call for free consultation
- Mortgages without no down payment

**We do the best for you**

நீங்கள் வங்குரோத்துக்கு போயிருந்தாலும் நிராகரிக்கப் பட மாட்டீர்கள். யாருமே நிராகரிக்கப் படமாட்டார்கள் அனைவரும் தகுதியானவர்கள். குறைந்த வட்டி வீதத்தில் ஈட்டுக்கடன் பெற்றுக்கொள்ளவும், கடன்கள் குறித்த இலவச ஆலோசனைகளுக்கும் அனைவரதும் நம்பிக்கைக்கு பாத்திரமான அகிலா செந்திலை அழையுங்கள்

When it comes to finding the Right Mortgage Solution to meet your needs, Please call **ME** befor making any **Decision!!!**

## Our interest rates starts from 0%

- First-time Buyers
- Renewal
- Refinancing
- Pre-Approval
- Self Employed
- Bankruptcies
- Poor Credit
- New Immigrants
- Debt. Consolidation
- Construction Loans

invis

**After Approval**

# Joy is yours
# Pride is ours





## அகிலா செந்தில்
## Akila Senthil, AMP

*Senior Mortgage Consultant,*
*Team Leader, Platinum Award Winner*
*A Challenging Prosperity Long Term Experienced Team Leader*

**Cell: 416.895.4321**


104-5770 Hurontario St., Mississauga, ON L5R 3G5
Fax: 905-283-3339, Web: www.mortgageprincess.ca, E-mail: akilasenthil@invis.ca
Head Office: Invis Inc., 100-480 University Ave., Toronto, ON M5G 1V2

mediherbs.ca

## சலரோகமா...?
## சலரோக உபாதைகளிலிருந்து நீங்குவதற்கான மூலிகைப் பானம்!

## உடலின் கெடுதியான மிகைக் கொழுப்பைக் குறைத்து உடல் தென்பை பேணுவதற்கு!




**டயபீனா** தினமும் அருந்தக்கூடிய மூலிகை ஆரோக்கிய பானம். இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குழுக்கோசினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. விறைப்புத்தன்மை, பாதங்களில் சுளுக்கு, அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வியாதிகளை படிப்படியாக நீக்கிவிடக் கூடியது. டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.

**க்லூட்டியலா** பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஊமைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக்கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லூட்டியா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழிவகுக்கிறது.

Amazon Health Care

BBB

SABONA

**Tel: 416 264 8787**
**www.amazonhealthcare.ca**
**2602, Eglinton Ave East. (Midland/Eglinton)**

JayaCS•416 275 0070


வீடு வியாபார நிலையம் வாங்க விற்க...
வீடு வாங்க விற்க அல்லது
அது சம்பந்தமான
விபரங்களுக்கும் குறைந்த
வட்டி விகிதத்தில் மோட்கேஜ்
செய்யவும் நட்புடன்
அழையுங்கள்....
$179,900
Brimley / Finch
$419,000
Countryside / Sunny Meadow
4 Bedrooms 3 Washroom
Separate Entrance
$125,000
Warden/ Eglinton
Sale of Business
Automotive
$244,900
Hurontario/Strathave
2 Bedrooms 2 Washroom
$114,000
Neilson & Tapscode
2 Bedrooms 2 Washroom
$399,000
Kingston Rd & Chapman
4 + 1 Bedrooms 4 Washroom
$382,900
Islington & Rutherford
3 Bedrooms 4 Washroom
Finished Basement
$325,000
McCowan & Kinston
3+1 Bedrooms 3 Washroom
$388,900
Jane / Lawrence
4 Bedrooms 3 Washroom
Finished W/O Basement
Sep Entrance
$255,000
McLevin & Swells
3+1 Bedrooms 4 Washroom
Finished Basement
$349,900
Whites RD / Finch
3 Bedrooms 4 Washroom
Finished Basement
$422,900
Middlefield & 14th Ave
4+2 Bedrooms 4 Washroom
Finished Basement
$379,900
Rosebank & finch
4 Bedrooms 4 Washroom
Ravi Logarajah B.Sc
Tharsi Rajenthiram B.B.A
*Sales Representative
Call : 416-843-7474
HOME LIFE
HIGHER STANDARDS
HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
*Independently Owned and Operated, Realtor
BUS: 416-298-3200 / FAX: 416-298-3440


For all your Real Estate Investment Needs...
வீடு வாங்க, விற்க
முழு நேர வீடு
விற்பனை பிரதிநிதி....
KARU'S ROYAL TEAM
Top 10 TEAM Across CANADA
Bus: 416-284-4751
(24 Hrs.Pager)
ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
A Full Time Real Estate Agent
ASHOK RAGUPATHY B.COM
Sales Representative
Cell: 647-401-9203
E-Mail: ashokragupathy@yahoo.ca
14th Avenue/9th Line
5 Bedrooms, 4 Washrooms, Stunning Green Park Model Home 3350 Approx Sq Ft, 55 Thousand In Total Upgrades. All Done By Builder
$569,900 For Sale
Keele/Finch
3 Bedrooms, 2 Washrooms, Budget! Freshly Painted, Spacious 3 Bedroom. Very Clean. Good Size Bedrooms, In Good Condition
$175,000 For Sale
Humberwood/Rexdale
3+1 Bedrooms, 3 Washrooms, Just Like A Model Home* A Must See! Approx $75,000 In Upgrades, Gorgeous Detached 2 Storey Home
$329,000 For Sale
Heartlake/Sandalwood
3+1 Bedrooms, 4 Washrooms, Ideal Detached Home For First Time Buyers. Finished Basement With Separate Entrance Through Garage
$349,900 For Sale
Mavis/Dundas
3+1 Bedrooms, 4 Washrooms, Fabulous Detached Central Mississauga Home. Freshly Painted, Bright Modern Kitchen With Backsplash
$399,000 For Sale
9th Line/14th Line
4 Bedrooms, 3 Washrooms, Excellent Box Grove Neighbourhood, 2712 Sq. Ft, Less Than 1 Yr New Arista Home *Dble Entry W/Porch
$519,900 For Sale
Middlefield/Finch
2+1 Bedrooms, 2 Washrooms, Well Maintained 816 Sq Ft Unit, Facing The Gta Square, 2 Full Washrooms And A Large Balcony.
$204,900 For Sale
9th Line/Hooverpark
4 Bedrooms, 3 Washrooms, Gorgeous,Unique & Popular Mattamy Built (Town Gate) Home On Premium Lot With Panoramic View Of Park
$465,000 For Sale
Mccowan/Denison
4+2 Bedrooms, 4 Washrooms, Gorgeous Premium Lot! Main Floor Laundry, New Roof, 2 Bedroom Basement Apartment With Separate Entrance.
$429,000 For Sale
880 Ellesmere Road, Suite 203, Toronto, M1P 2W6

# மீள்பாவனைப் பொருட்களும் நடைமுறைகளும்

## Recycling Items and Procedures

கடந்த மாதக் கட்டுரையில் குறிப்பிட்டது போல் ரொறொன்றோ மாநகரசபை 2008ம் ஆண்டளவில் 60 வீதமான கழிவுப் பொருட்களையும், 2010ம் ஆண்டளவில் 70 வீத மான கழிவுப் பொருட்களையும் தொலைவில் அமைந்துள்ள நிரவற் புலத்திற்கு செல்லாது திசை திருப்பும் நோக்குடன் பல புதிய திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது.

அந்த வகையில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த சாம்பல் நிற, நீல நிற மீள் பாவனைப் பொருட்களுக்கான பெட்டிகள் இடைநிறுத்தப்பட்டு இவ்வாண்டு பெப்ரவரி மாதம் முதல் நீல நிற கொள்கலன்கள் நகரம் நகரமாக நடைமுறைக்குக் கொண்டுவரப் படுகின்றது.

இத்தகைய நீலநிறக் கொள்கலன்களின் அறிமுகத்தால் அழகாக வடிவமைக்கப்பட்டிருக்கும் வீட்டு முற்றங்களை அலங்கோலப்படுத்திவிட்டார், அவற்றை வைத்தெடுக்க வீடுகளில் இடமில்லை என்ற பல குற்றச்சாட்டுக்கள் மாநாகர முதல்வரை நோக்கி வைக்கப்பட்ட போதும் அத்திட்டத்தில் எந்தவித மாற்றங்களும் ஏற்படப் போவதாகத் தெரியவில்லை.

ரொறன்ரோ மாநகர வாசிகள் அனைவரும் தமது கழிவுப் பொருட்களை மீள்பாவனைக்கு இட்டுவைக்க வேண்டும் என்பது சட்டம். மாநகரத்தின் திட்டப்படி மீள்பாவனைக்கு இட்டு வைக்கவேண்டியவை என்று வரையறுக்கப்பட்ட கழிவுப் பொருட்களைக் குப்பை யுடன் சேர்க்காது தகுந்த முறைப்படி வெளி யே இட்டு வைத்து, அவற்றை அப்புறப்படுத்துவதற்கு வகைசெய்வது மாநகர வாசிகள், கட்டட முகாமையாளர்கள், கண்காணிப்பாளர்கள், உடைமையாளர்கள் அனைவர்க்கும் உரிய பொறுப்பாகும்.

மீள்பாவனைக்குரிய பொருட்களை இனிமேல் (போத்தில்கள், பேணிகள் போன்ற) கொள் கல வகைகள், தாள் வகைகள் என்று வகைப்படுத்தத் தேவையில்லை. தற்பொழுது தாள், கொள்கலவகைகளை ஒன்றாக இட முடிகிறது. வெவ்வேறு மீள்பாவனைப் பொருட்கூறுகளைப் ஒரு வகைப்படுத்தற் களத்தில் பொறிமுறை கொண்டு வகைப்படுத்த முடிகிறது. மீள்பாவனைப் பொருட்களைச் சேகரிப்பதற்குத் தேவைப்படும் சுமையூர்திகளின் எண்ணிக்கையையும், செலவுகளையும், சூழல் கெடுவதையும் குறைப்பதற்கு இது உதவுகிறது. வீட்டு உரி மையாளர்கள் மட்டுமன்றி பற்பல வசிப்பகங் களைக் கொண்ட கட்டிட உரிமையாளர்கள் உள்ளிட்ட சகலரும் இமமாநகரத்தின் மீள் பாவனைப் பொருட் சேகரிப்பு நிகழ்முறையில் முழுமையாகப் பங்குபற்றி மாநகர உபவிதிக்கு அமைந்தொழுகுதலை வேண்டும். மாநகர உபவிதிக்கு அமைந்தொழுகுவதன் மூலம், மீள்பாவனை தொடர்பாக சுற்றுச்சூழல்

### வீடும் விடியலும் - 31

அமைச்சு இயற்றிய சட்டத்துக்கும் அமைந்தொழுகுவது உறுதிப்படுத்தப் படுகிறது.

மேலதிகத் தகவல்களுக்கு கீழ் வரும் திண்மக் கழிவு கையாள்கைப் பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்:

| | |
|---|---|
| **ஸ்காபறோ** | **416-396-5205** |
| **ரோறன்ரோ, யோர்க், ஈஸ்ட் யோர்க், எற்றோபிக்கோ** | **416-392-7738** |
| **நோர்த் யோர்க்** | **416-396-7366** |

நீலநிறக் கொள்கலன்களை மத்திய, பெரிய,











அதிபெரிய என்று 3 அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம். இவை முற்றிலும் இலவசம். உங்கள் வீட்டில் இருக்கக்கூடிய கழிவுப் பொருட்களின் அளவுகளை வைத்து அதற்கேற்ற அளவில் கொள்கலன்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஏற்கனவே பெறப்பட்ட கொள்கலன்களின் அளவில் திருப்தி இல்லை என்றால் அல்லது பழுதடைந்துவிட்டால் மேல் தரப்பட்ட தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவற்றை பிரதியீடு செய்ய முடியும்.

இவற்றின் அமைப்பிக்கு ஏற்ப சகலவிதமான மீள்பாவனைப் பொருட்களையும் ஒன்றாகவே இதனுள் போட்டுவிடலாம் என்பது பாவனையாளருக்குக் கிடைக்கும் ஒரு அனுகூலமாகும். தற்போது இக்கொள்கலனில் இருக்கும் பொருட்களையும் அதேவேளை நிலத்தில் உரிய முறைப்பட்டி கட்டி வைக்கும் பொருட்களையும் நகரச் சுத்திகரிப்பாளர்கள் எடுத்தாலும் காலப்போக்கில் இக்கொள்கலன்களில் இருக்கும் பொருட்கள் மட்டுமே அகற்றப்பட இருக்கிறது என்பதையும் கருத்தில் கொள்ளவும். காலம் தொலைவில் இல்லை.

இதில் பொருத்தப்பட்டிருக்கும் இரும்புக் கம்பியின் உதவியுடன் முற்றிலும் இயந்திரமயமாக்கப்பட்ட தொழில்நுட்பமே நகரசபையின் திட்டமாகும். எனவே அதற்கேற்ற விதத்தில் வீட்டுரிமையாளர்களும் இவற்றைக் கையாள வேண்டியது அவசியம். குறிப்பாக வெளியில் வைக்கும் போது அவற்றின் கை பிடியும் சில்லும் வீட்டு வாசலை நோக்கியபடி இருக்கும் வண்ணம் வைக்க வேண்டியது அவசியமாகும்.

இக்கொள்கலன்களில் உள்ள இரும்புப்

வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -
vela@thaiveedu.com



பிடிக்கு மேலாக உள்ள Bar code மூலமாக இக்கொள்கலன் எந்த வீட்டிற்குச் சொந்தமானது என்ற தகவல்களை நகரசபையால் கண்டுகொள்ள முடியும் என்றாலும் பல அசௌகரியங்களைத் தவிர்க்கும் பொருட்டு ஒவ்வொரு வீட்டுரிமையாளரும் தமது வீட்டிலக்கத்தை அழியாத போனா கொண்டு எழுதிவிடுமாறு வேண்டப்படுகிறார்கள்.

குறிப்பு : பச்சை, நீல, கறுப்பு நிறக் கொள்கலன்கள் யாவும் நகரசபையால் குறிப்பிட்ட வீடுகளுக்காக வழங்கப்பட்டவை. ஒவ்வொருவரும் வீடு மாறும் போது அவற்றையும் எடுத்துச் செல்லாது உரிய வீட்டில் விட்டு விட்டுப் போக வேண்டியது மிக அவசியம்.

### நீலநிறக் கொள்கலன்களைப் பயன்படுத்தும் விதம்


**நீலநிறக் கொள்கலன்களில்**

18ம் பக்கம் பார்க்க...

வீடு வாங்க விற்க

உங்கள் வருமானத்திற்கேற்ப எவ்வகையான வீடு வாங்குவதென அறிந்து
கொள்ள முதல் முறை வீடு வாங்குபவர்களின் சலுகைகள் பற்றி
அறிந்துகொள்ள இன்றே எங்களுடன் தொடர்புகொள்ளுங்கள்





Prudential Properties Plus Brokerage
**Bus: 416.962.8113**
**Fax: 416.962.4615, Res:** 416 964 5955
552 Parliament Street, Toronto, ON, M4x 1P6

**Alfred Soosaipillai**
Broker

# மீள்பாவனைப் பொருட்களும்...

17ம் பக்கத் தொடர்ச்சி...

### போடக்கூடியவை

மீள்பாவனைக்கு இடத்தக்க பொருட்களைக் கலந்து வைக்கவும். கலந்து வைக்கப்படும் மீள்பாவனைப் பொருட்களைப் பிரித்துப் படிமுறையிடும் தொழினுட்ப வசதி படைத்த மாநகரமாய் ரொறன்ரோ தற்பொழுது விளங்குகிறது. அதாவது கொள்கலங்களை-யும் தாள் வகைகளையும் இனிமேல் நீங்கள் கலந்து வைக்கலாம்.

சிறிய, பெரிய பிளாஸ்திக் உணவுக் கலம், மூடி வகைகள். சிறிய, பெரிய பிளாஸ்திக் குடுவை வகைகள் எச்சமிச்சத்தை அகற்றிக் கழுவி வைக்கவும்.

பால், பழச்சாறுக் கடதாசிக் குடுவை வகை-கள். வெற்றுத் தீந்தைக் கலம், அமுக்க கல வகைகள். மூடியை அப்புறப்படுத்தவும். உலோகப் பேணி வகைகள். எச்சமிச்சத்தை அகற்றிக் கழுவி வைக்கவும். மூடியை உள்ளே இட்டு அமுக்கவும்.

கண்ணாடிக் கலம், போத்தில் வகைகள். மூடியை அப்புறப்படுத்தவும்.

வன் அலுமினியத் தட்டு, சிற்றுண்டித் தட்டு வகைகள். பானப் பெட்டி வகைகள். உறிஞ்சு குழலை அப்புறப்படுத்தவும். **(மீள்பாவ-னைப் பொருட்களை எச்சமிச்சத்தை அகற்றிக் கழுவிய பின்னர் வைக்கு-மாறு வேண்டப்படுகிறார்கள்.)**

வீட்டுத் தாள் வகைகள். விளம்பரக் கடிதம், எழுதுவதற்குரிய தாள், கணினித் தாள், துண்டுப் பிரசுரம், கடித உறை வகைகள். அன்பளிப்பு பொதிவுத் தாள், அட்டை வகை கள். குஞ்சங்களையும் முடிச்சுகளையும் அகற்றவும்.

முட்டைப் பெட்டி, கடதாசிச் சுருள், பை வகைகள்.

கடதாசிப் பெட்டி வகைகள். கடதாசி அட்-டைப் பெட்டி, தானியச் சிற்றுண்டிப் பெட்டி, மெல்லிழைத்தாள், சலவைத்தூள் பெட்டி வகைகள்.

செய்தித்தாள், தொலைபேசி விபரக்கொத்து வகைகள்.

சஞ்சிகை, விபரக்கோவை, நூல் வகைகள்.

மடிப்புவிழுந்த கடதாசி அட்டை வகைகள். சுத்தமான, மெழுகிடாத, சப்பைக் கட்டுகள். ஆகக்கூடிய அளவீடு: 60X60X30 செ.மீ. (2'X2'X1'). **(பிளாஸ்திக் பைகளைப் பயன்படுத்தலாகாது.)**

### நீலநிறக் கொள்கலனில் போடக்கூடாதவை

**கண்ணாடி வகைகள்:** கண்ணாடிக் குவளை, ஏதனம், கிண்ணம், பளிங்கு, யன்னல் கண்-ணாடி, மின் குமிழ், சாயற் கண்ணாடி, சமையற்கலம், கண்ணாடிச் சமையற்கலம், ஒப்பனைக் கல வகைகள்.

**பிளாஸ்திக் வகைகள்:** பொம்மை, ஒப்ப னைக் கலம், நிரவுபசைக் கோது, பொலிஸ் தறீன் அல்லது ஸ்டைறபோம் குடுவை, ஏதன வகைகள், வாகன எண்ணெய்க் கலம், பை, வாங்கிச் செல்லும் உணவுக் கொள்கலம், ஏதன வகைகள், வாகன எண்ணெய்க் கலம், பை, வாங்கிச் செல்லும் உணவுக் கொள் கலம், வெதுப்பக பிளாஸ்திக் அச்சுத் தட்டு வகைகள்.

**உலோக வகைகள்:** மேலங்கி தூக்கி, சமையற்கலம், பற்றெரி வகைகள்.

**அலுமினிய வகைகள்:** அலுமினியத் தாள், பொதியுறை, பை வகைகள் (உருளைக் கிழங்குப் பொரியல் பை போன்றவை).

**இழை வகைகள்:** மெல்லிழை, மெழுகு-தாள், அன்பளிப்பு பொதியிழை, மெழுகிட்ட கடதாசி அட்டை வகைகள்.

■ ■ ■

Tutoring

Grade 1- 7 : English, Math, Science & Social Studies
Grade 8- 10: English & Math

அஞ்ஜலீன் ஜீவா திசைராஜா
B.A (Hons),M.Sc,Ph.D

(647) 291 1357
(Kennedy & Ellesmere அருகாமையில்)

Home Inspection
Vela Subramaniam
Certified Home Inspector
Optimal Home Inspection Services
Tel:416-786-0760
416-299-0700
E-Mail:vela.ohis@gmail.com
Web:www.ohis.ca





Buying or Selling Homes
Selling Commission , As Low As 1%
Call Nada
Cell: 416 – 616 – 8751
Bus: 416 – 293 – 5093
Nada.G.Nadarajah B.V.Sc
Sales Representative
HomeLife Metro Realty
Inc. Brokerage
Platinum Award Winner
Ontario Emerald Club Member




McCOWAN/MAJOR MAC
Detached/2-Storey
4 Bedrooms - 3 Washrooms
2 Yrs. Old | 2947 sq. ft





NEILSON/SHEPPARD
Condo. Apt
2 Bedrooms - 1 Washrooms
FOR LEASE




McCOWAN/FINCH
Condo Apartment
2 Bedrooms - 2 Washrooms




MARKHAM/FINCH
Commercial Condo.
1440 Sq. Ft




KENNEDY/401
Condo. Apartment
3 Bedrooms - 2 Washrooms
Open Balcony




McCOWAN/FINCH
Condo Apartment
1 Bedrooms - 1 Washrooms
Open Balcony

NEW LISTING



MIDLAND/EGLINTON
Sale of Business
Beauty Salon




DON MILLS/OVERLEA
Condo Townhouse
2-Storey
4 Bedroom - 2 Washrooms

# வீடு வியாபார நிலையம் வாங்க விற்க



புத்தம்புது வாகனத்தை வெல்லுங்கள் WIN



$329.900

Kipling & Steeles
3 Bedrooms 3 Washroom

$448.900

Western & Rutherford
3 Bedrooms 3 Washroom
All Wood Floor

$319.888


Sheppard & Markham
3 Bedrooms 4 Washroom
Finised Basement


*Some conditions may apply

ULTRAMAR GAS STATION WITH 5 BEDROOM HOUSE & GARAGE
$499.000

GAS STATION WITH CONV. + LOTTO 649 + WAREHOUSE +GARAGE WEST END OF TORONTO
$845.000

$162.500

Weston & Sheppard
2 Bedrooms 2 Washroom

$339.900


Torbram / Boviard
4 Bedrooms 3 Washroom
Hardwood Floor

மேலும் பல வீடுகளும்,
விற்பனை நிலையங்களும்
விற்பனைக்குண்டு.

நம்பிக்கை நேர்மை நட்பான சேவைக்கும் அழையுங்கள்

Win a brand New TOYOTA - fj - CRUISER

Century 21
Affiliate Realty Inc.
Brokerage
208 - 80 Corporate Drive, Toronto, Ontario M1H 3G5
Bus: 416-290-1200
Fax: 416-290-1900

## சத்தி மருதப்பா
Sales Representative
(முழுநேர வீடு விற்பனை முகவர்)

# 416-816-1500

"இளமையில் சோம்பேறி
முதுமையில் வறுமை"

brightsun print - 416-845-6565



## நிம்மதியான வாழ்வுக்கு நிரந்தரத்தீர்வு காப்புறுதி ஒன்றே...

ஆமாம் உங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமான ஒரு காப்புறுதி நிறுவனத்தில்
உங்கள் குடும்பத்திற்குரிய அனைத்துக் காப்புறுதி ஒப்பந்தங்களையும்
ஒழுங்காக அமைத்துத் தருவதே எனது சேவை....

## சியாமளா ரட்ணசபாபதி

RBC

Manulife Financial

Canada Life

COMMUNITY
FINANCIAL SERVICE GROUP INC.
2100 Ellesmere Road, Unit 105, Scarborough, Ontario M1H 3B7



# LIFE INSURANCE

## Shiamala Ratnasabapathy
Life Insurance Broker

# Dir : 416.414.2374

# இளமையின் இரகசியம்

விஞ்ஞான வளர்ச்சி காரணமாக மனித வாழ்க்கையின் எதிர்பார்ப்பு நீண்டு கொண்டே செல்கிறது. சில தசாப்தங்கள் சராசரி ஆயுள் வயதுடன் இடைவேளையில் மனித வாழ்க்கையின் ஆயுள் எதிர்பார்ப்பு அதீத வளர்ச்சியடைந்துள்ளது. ஆனால், கூடிய காலம் வாழ்ந்தாலும் அவர்களுக்கு நரை திரை வருவது குறித்த காலத்தில் வரத்தான் செய்கிறது.

இவற்றை மறைக்க மனிதன் பெரும்பாடு படுகிறான். விஞ்ஞானமும் அவனுக்கு பலப்பல பூச்சுக்களை கொடுத்து நரை திரையை மறைக்க உதவுகிறது. காதோரம் வெள்ளை மயிரை மறைத்தாலும் கதைமுடிவை மாற்ற முடியாதல்லவா?

வயது முதிர்ந்தபோதும் நரைதிரை வராத ஒரு தமிழ்ப் புலவர் கதையை இங்கு உங்களுடன் பகிரலாம் என்று நினைக்கிறேன்.

பாண்டிய நாட்டில் பிசிர் என்ற ஊரைச் சார்ந்த ஒரு பெரும் புலவர் பிசிராந்தையார். இவர் உறையூரிலிருந்து அரசாட்சி செய்த கோப்பெரும் சோழனுடைய சிறந்த குணநலங்களை கேள்வியுற்று அவர்மேல் பெரு நட்புவைத்தார். அதேபோல் கோப்பெரும் சோழனும் பிசிராந்தையர் நற்குணம் கேள்வியுற்று அவர்பால் தன்மனதில் நட்பு கொண்டார். இவ்வளவு நட்புள்ளம் கொண்டபோதும் ஒருவரை ஒருவர் நேராக காணவில்லை. வள்ளுவர் கூறிய

'புணர்ச்சி பழகுதல் வேண்டா"
வுணர்ச்சிதா னட்பாங் கிழமை தரும்"

என்ற வாக்கிற்கு இசைய பெருநட்பு பூண்டு தத்தம் பெயரைக் குறிப்பிடுகையில் தமது நண்பர் பெயரை சேர்த்துக் கூறும் அளவிற்கு சிறந்து இருந்தனர்.

அக்கால வழக்கப்படி மன்னன் கோப்பெரும் சோழன் வடக்கிருக்கப் புறப்பட்டவேளை பல சான்றோர் அவனுடன் சேர்ந்து வடக்கிருந்தனர். அவ்வேளை மன்னர் தனது நண்பர் பிசிராந்தையாரை காணாமல் உயிர் இழக்க வேண்டுமே என அவரை காண விருப்புக் கொண்டார். இருவரும் ஒத்த உணர்வுடையவராதலால் தன்னை அறியாமல் பிசிராந்தையாரும் மன்னரை காண பெரும் விருப்புக் கொண்டு தன் பாண்டிய நாட்டின் பிசிர் எனும் ஊரிலிருந்து புறப்பட்டு சோழ நாட்டின் உறையூருக்கு செல்வாராயினார்.



ஆனால் பிசிராந்தையார் உறையூர் சேரு முன்னர் வடக்கிருந்த சோழன் உயிர் துறந்தானாயினான். அக்கால வழக்குப்படி நடுகல்லும் நடப்பட்டுவிட்டது. பிசிராந்தையார் பெரும் மனவேதனையடைந்தார். சற்று மனம் தெளிந்த நிலையில் கோப்பெருஞ் சோழன் குணநலச் சிறப்புகள் பற்றி பேசி பகிர்ந்துகொண்டிருக்கும் வேளையில் அங்கிருந்த ஒருவர் பிசிராந்தையாரைப் பார்த்து 'ஐயா உம்மைப்பற்றி நெடுங்காலமாக கேள்விப்பட்டுள்ளோம். அங்ஙனமாகையால் உமக்கு வயதும் அதிகமாகவே உள்ளதாயிருக்க வேண்டும். ஆனால் இன்னும் உமக்கு நரையின்றி இளமையுடன் தோன்றுவதன் இரகசியம் என்ன? எனும் வினாவை எழுப்பினார். அதற்கு பதில் கூறிய பிசிராந்தையாரும்.

'ஐயா நரை திரைக்கு காரணம் முதுமை மட்டுமன்று. மனக்கவலையே. எனக்கோ கவலை கிடையாது. இப்படி கவலை இல்லாமைக்கு காரணம் எனது வீட்டிலோ, ஊரிலோ அல்லது நாட்டிலோ கவலை ஏற்படுவதற்கான காரணங்கள் இல்லை. ஏன் என்றால் எனது வீட்டில் மனைவி மக்கள் அறிவு நிரம்பியவர்கள். எனது ஏவலாலர் என் குறிப்பறிந்து செயல்படுபவர். மேலும் எனது ஊரிலோ நற்குணமிக்க சான்றோர் மிக்கவே உள்ளனர். மேலும் நாட்டு மன்னனோ அறம் அன்றி வேறு ஒன்றுமே செய்யான்" என கூறி அதைக் கூறும் புறநானூறு பாடல் 191 இனை பாடினார்.

'யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு
நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும்
வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கு மதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே'

விளக்கம்; யாண்டு பலவாக - உமக்கு நடந்த ஆண்டுகள் பலவாயிருக்க, நரை-

## குமார் புனிதவேல் பக்கம்

kpunithavel@thaiveedu.com

யில வாகுதல் யாங்காகியர் என - எப்படி நரை இல்லாது இருக்கின்றீர் என்று, வினவுதி ராயின் - கேட்பீர்கள் என்றால், என் மாண்ட மனைவியொரு மக்களும் நிரம்பினர் - என்னுடைய சிறந்த குணங்களையுடைய மனைவியுடனே பிள்ளைகளும் அறிவு நிறைய உடையவர், யான் கண்டனையர் என் இளையரும் - யான் எண்ணிய விடயத்தை காழாய் உணர்ந்து என்னுடைய வேலையாட்கள் செய்வார்கள், வேந்தனும் அவ்வை செய்யான் - என் அரசனும் முறையல்லாதன செய்யாமல் காப்பவன், அதன் தலை - அதற்கு மேலாக, யான் வாழும் ஊர் நான் வாழுகின்ற ஊரிலே ஆன்று அடங்கி அவிந்த கொள்கை நல்ல குணங்களால் அமைந்து பணிய வேண்டியவரிடம் பணிந்து ஐம்புலன்களையும் அடக்கிய, சான்றோர் பலர் ஊராதலால் என்கிறார்.

எனவே இளமைத்தோற்றத்திற்கு எமது மனைவி பிள்ளைகள் அறிவுடையவராயும், சேவகர்கள் சொல்லுமுன்னே குறிப்பறிந்து செய்பவராயும், நல்ல தர்மமான அரசும், சான்றோர் உடைய நாடுமே அவசியம் என்கிறார். இவை அனைத்தும் இருக்குமாகில் வாழ்க்கை அழுத்தம் இல்லாது அமைதியான ஓடைபோல் ஓடும். ஆக மொத்தம் எம்மைச் சுற்றியவர்கள் நல்லவராயும் வல்லவராயும் பார்த்துக் கொண்டால் என்றும் இளமையாக இருக்கலாம்.

■ ■ ■

LIFE INSURANCE • RESP • ACCOUNTING & TAX



- ஆயுட்காப்புறுதி
  10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்தி முடிக்கலாம்
- வயோதிபர்களுக்கான காப்புறுதி
  மருத்துவ பரிசோதனை எதுவும் இல்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
  காப்புறுதித் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது கட்டிய பணம் முழுவதும் திரும்பப் பெறலாம்.
- குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்
  20% அரச மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15% சலுகையும் வழங்கப்படும்.
- ஈட்டுக்கடன் காப்புறுதி
  Mortgage Insurance

Apex Creations • 416-297-0707



வசந்த் விநாயகமூர்த்தி
காப்புறுதி முகவர்
647-885-3012

ACCOUNTING & TAX
Queen & Jameson
10 MacDonell Ave.
Pharamcy & Finch
2525 Pharmacy Ave.

LILAND INSURANCE INC.
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
759 Warden Ave. Toronto, ON. M1L 4B5 Tel : 416-759-5453 ext. 362


# வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...

## Elaguppllai (Mike) Srinathan B.Sc

**Sales Representative**

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**




**Markham/Eglinton**



**$269,000**
Detached Bungalowe, Bed rooms 3, Washrooms 2, Large Detached Garage Outstanding Bungalow .

**Kennedy / Steeles**



**$285,000**
Link 2 story, Bed rooms 3, Washrooms 2,Very Well Maintained, Driveway Can Park 2 Cars, Close To Ttc,

**Derry/Ninth Line**



**$298,000**
Semi Detached 2 story, Bed rooms3, Washrooms 2, A Few Years Old, Single Car Garage And Long Driveway

**Medowvale/Sheppard**



**$299,000**
Town house 3 Story, Bedrooms 3 +1, Washrooms 2 Ideal For First Time Buyers. Only 3 Months Old. Ready To Move In Condition.

**Chingacousy/Sandalwood**



**$304,900**
Detached 2 Story, Bedrooms 3+1, Washrooms 4, All Brick Detached Home,Basement Finished With Separate Entrance,

**Markham/Denison**



**$309,000**
Link 2 story, , Bedrooms 3, Washrooms 3 , Close To All Amenities, Schools, Public Transportation, Shopping And Hwy's

**Brimley/ Denison**



**$325,000**
Link 2 Story, Bed rooms 3, Washrooms 2, Demanded Location; Lots Of Upgrades; Excellent Condition; Ceramics In Foyer

**Mccowan / Denison**



**$348,000**
Link 2 Story, Bed rooms 3, Washrooms 3, Enclosed Front Porch W/ Ceramic Tiles Flooring, Double Driveway

**Staines/Steeles**



**$349,000**
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 2 3 Bedroom Home In Highly Demand Desirable Neighbourhood.Close To School,

**Passmore/Markham**




**$354,900**
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 2, Walk To Ttc, Park, School. Close To Temple, Mosque, Church, And Shopping.

**Brimley/Steeles**




**$363,000**
Link 2Story, Bedrooms 4, Washrooms 3, All Brick Home With Double Car Garage And 4 Car Driveway. Close To Bus,School,Parks

**Markham/Elson**



**$364,900**
Detached 2 Storys, Bed rooms 3+1, Washrooms 3, Finished Basement With A Bedroom And 3 Pc Washroom

**Denison St And Mccowan Road**



**$389,900**
Link 2 Story, Bedrooms 3+1, Washrooms 4, Fully Fenced Yard, Vacant, Available Immediately, No Sidewalk Can Park 5 Cars,

**Bur Oak Ave/Markham Rd**



**$395,000**
Detached 2 Story, Bed rooms 4, Washrooms 3 High Demand Location Close To Schools, Park, & Go Station.

**Middlefield/HighglenRd**



**$415,000**
Link 2 Story, Bedrooms 4+1, Washrooms 3, Well Maintained Home, Approx 2130 Sq Ft,Close To Hwy 407, All Schools

**Markham Rd/Denison**




**$415,000**
Link 2 Story, Bedrooms 3+1, Washrooms 4, Large & Bright Eat-In Kitchen. Hardwood On Main Floor. Steps To School, Park, Transit,

**Sheppard/Meadowvale**



**$424,900**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, Main Flr Throughout Oak Hardwood,Double Dr Main Entrance,Large Front Porch,

**Ninth Line/14th Avenue**




**$437,000**
Detached 2 Story, Bedrooms 34+2, Washrooms3, Upgraded Kitchen Cabinets & Vent Hood, Stainless Steel Appliances,

**Brimley & 14th**



**$645,000**
Detached 2 Story, Bed rooms 4+2, Washrooms Executive Home W/3 Car Garage In Prestigious Neighbourhood

**Steels & Markham**



**$669,700**
Detached 2 Story, Bed rooms 4, Washrooms 4Up Graded Like Millionaire Mansion, Aprx:3900Sq

**Mccowan/401**



**$179,900**
Condo Apt , Bed rooms 1+1, Washrooms 1Near Scarborough Town Centre /Ttc /401/ SubwayNear1/Subway

**Sale Of Business**



**$390,000 for sale**
Sale Of Business Without Property, **Gas Stations**, New Look Petro Canada Located On A Busy Hwy 89, Near Honda Plant,,

**Sale Of Business**



**$549,000 other**
Sale Of Business Without Property, **Gas Stations**. Self Service New Esso Gas Station With Convenience Store,

RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# வரி இல்லாத சேமிப்புக் கணக்கு



**கல்யாணி நாதன்**
நிதி திட்டமிடல் ஆலோசகர்
kalyany@thaiveedu.com

பல கணிப்புகள் கனடாவில் மக்கள் பெரும் கடன்காரர்களாக மாறுவதை சுட்டிக்காட்டியுள்ளது. இப்படி நாட்டில் கடன் பளு கூடுவது அதன் வளர்ச்சியை பாதிக்கும் என்பதை உணர்ந்த அரசாங்கம் சேமிப்பினை ஊக்குவிப்பதற்காக வரியில்லாத சேமிப்புக் கணக்கை (Tax – Free Savings Account [TFSA]) அறிமுகப்படுதியுள்ளார்கள். இது 2008ம் ஆண்டு மாசி மாதம் 26ம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டாலும் 2009ம் ஆண்டில் தொடங்கியே செயல்முறைப்படுத்தப்படும்.

பல விடயங்களில் TFSA, RRSP இனை ஒத்ததாயுள்ளது என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். அதாவது RRSP இனைப்போலவே இந்த இருப்பிலும் வருடம் ஒன்றுக்கு குறிப்பிட்ட தொகையைதான் வைக்கலாம். ஆனால் இதில் வைக்கப்படும் தொகைக்கு வரி விலக்கு தரப்படமாட்டாது.

அடுத்த முக்கிய விடயம் என்னவென்றால் RRSPஇல் இருந்து பணத்தை மீள்பெறும் வேளையில் அது இட்ட பணத்துக்கும், பெற்ற வட்டிக்கும் வரி கட்ட வேண்டும். ஆனால், TFSAஇல் பணத்தை மீள் பெறும் வேளையில் வரி அறவிடப்பட மாட்டாது.

## பணம் வைப்பதும் மீள் பெறுவதும்

2009ம் ஆண்டின் பின் 18 வயதுக்கு கூடிய வரும் கனடாவில் வதிப்பவருமான ஒருவர் வருடம் ஒன்றுக்கு TFSAஇல் 35,000 சேமிக்கலாம். ஏதாவது ஒருவருடம் முழுமையான $5000 சேமிக்க முடியாதவிடத்து அடுத்த வருடம் அந்த வித்தியாசத்தையும் சேர்த்து சேமிக்கலாம். வேண்டிய போது சேமித்த தொகையிலிருந்து வேண்டிய தொகையை TFSAஇலிருந்து மீள் பெற முடியும். இதனால் ஒருவிதமான வரி செலுத்துதல் இல்லை என்பதுடன் அத் தொகையை மீண்டும் சேமிப்பில் போடலாம்.

இதை விளங்கிக் கொள்வதற்கு ஒரு உதாரணத்தை கவனிப்போம். நீங்கள் 2009ம் ஆண்டு $3000 மட்டுமே TFSAஇல் சேமிக்கவைத்தால், 2010ம் ஆண்டு நீங்கள் சேமிக்கும் தொகை $7000ஆக இருக்கலாம் ($5000, 2010 ஆண்டுக்குரியது, $2000 2009இல் பாவிக்காதது) இப்படி சில வருடங்களுக்குப் பின், உதாரணத்திற்கு 2020ம் ஆண்டு நீங்கள் TFSA இலிருந்து $40,000 எடுத்து ஒரு செலவு செய்தீர்கள் என்றால் அந்த தொகைக்கு வரி கட்டுவதில்லை என்பதுடன் நீங்கள் TFSAஇற்கு $40,000 சேமிக்க இடமுண்டு. இதற்கு காரணம் நீங்கள் வெளியே எடுத்த தொகையை திருப்பிப் போட அனுமதி உண்டு. இது உங்கள் வருடாந்த தொகையை ஒருவிதத்திலும் வேறுபடுத்தாது.

பொதுவாக TFSA இளைப்பாருதல் சேமிப்பு (RRSP) போலவே நெறிப்படுத்தப்படும். உங்கள் பெயரில் உங்கள் சமூக காப்புறுதி எண் (Social Insurance Name) உடன் ஒரு கணக்கு ஆரம்பிக்கப்பட்டு நெறிப்படுத்தப்படும்.

அக்கணக்கில் இருந்து மீள் பெறும் பணத்தை எப்படி பாவிப்பது என்பதில் ஒரு வித நிபந்தனையும் கிடையாது. RRSP இனைப்போலவே குறிப்பிட்ட வரைப்படுத்தப்பட்ட கணக்குகளில் வைக்கப்படல் வேண்டும் என்பதுடன் குறிப்பிட்ட தொகைக்கு மேலதிகமாக முதலீடு செய்யின் அதற்கு அபராதம் அறவிடப்படும்.

ஒருவர் தனது TFSAஇல் தனது கணவன் / மனைவி கொடுத்த தொகையை முதலீடு செய்யலாம். இதனால் மற்றவர் செய்ய அனுமதிக்கப்பட்ட தொகையில் தாக்கம் ஏதும் ஏற்படாது.

மேலும் ஒரு பயனுள்ள விடயம் ஒருவர் மரணிக்கும் போது அவர் சேமித்து வைத்திருந்த தொகை அவர் கணவன் அல்லது மனைவிக்கு வரி ஏதும் அறவிடப்படாது மாற்றப்படும். சில வேளைகளில் விவாகரத்து நடைபெறும் வேளையில் இச்சேமிப்பு ஒருவரிடமிருந்து மற்றவருக்கு மாற்றும் வசதியுண்டு. இவ்வேளையிலும் வரியேதும் அறவிடப்பட மாட்டாது.

வயோதிப காலத்தில் இதிலிருந்து (TFSA) பெறப்படும் பணம் உங்கள் வரவாகக் கொள்ளப்படாமையால் இது முதியோருக்கு வழங்கப்படும் சலுகைகள், வரவுகளில் எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

எந்த விதத்தில் நோக்கினாலும் TFSA உங்களுக்கு பயனுள்ள விடயமாகும். ஆனால், எப்போதும் RRSPஇற்கு கூடியளவு பணத்தை முதலீடு செய்துவிட்டு எஞ்சியதை TFSAஇல் இடுவது சிறப்பு.

■ ■ ■

**மொழிபெயர்ப்பு**

தமிழ், ஆங்கிலம்
மொழிபெயத்து, தட்டச்சு செய்து கொடுக்கப்படும்

**ஜீவா**
**(647) 291 1357**
(Kennedy & Ellesmereக்கு அருகாமையில்)



# Unique Financial & Business Solutions Inc.

One Stop for all Your Financial Needs

We Offer
- FREE Mortgage Consultation
- Residential & Commercial
- Business Loan & Personal Loan
- Real Property Marketing
- Life Insurance
- All Accounting and Bookkeeping services

## COMMERCIAL MORTGAGE

*All Services Under One Roof*

*Call One Place For Your...*
*Mortgage Financing....Insurance...Real Estate Needs*

*Unique financial & business solutions*



**Kannan K.**
*Mortgage Business Development Manager*
**(416) 854-6183**

**Theepan L.**
*Real Estate Sales Representative*
**(416) 830-2700**

**Hariharan N.**
*Insurance/R.E.S.P Insurance Broker*
**(416) 856-4276**

**Raj T**
*Mortgage Specialist*
**(416) 831-2550**

Finder Financial Services Ltd.

Home Life Future Realty Inc.
262 Markham Road, Scarborough


**GTA Square: 5215 Finch Avenue, Suite 257, Scarborough (Middlefield & Finch)**
**Tel: (416) 754-8327 · Fax: (416) 754-8328 · Toll Free: 1 (877) 554-8327 · www.ufbsi.ca**


வளமான வாழ்விற்கு வதிவிடம் வாங்கிட......
Pickering
Daisy Mart Located In A Good Area. Lots Of Potential For Growth. Good For Owner Operator. Low Rent. Extras: Renovated Store
$59,000 Plus Stock
Thickson/Dryden
4 Bedrooms, 3 Washrooms, Stunning Tastefully Upgraded Home In An Excellent Location Close To All Amenities. All Brick Home
$399,900 For Sale
14th Avenue/9th Line
5 Bedrooms, 4 Washrooms, Stunning Green Park Model Home 3350 Approx Sq Ft, 55 Thousand In Total Upgrades. All Done By Builder
$569,900 For Sale
Keele/Finch
3 Bedrooms, 2 Washrooms, Budget! Freshly Painted, Spacious 3 Bedroom. Very Clean. Good Size Bedrooms, In Good Condition
$175,000 For Sale
Humberwood/Rexdale
3+1 Bedrooms, 3 Washrooms, Just Like A Model Home* A Must See! Approx $75,000 In Upgrades, Gorgeous Detached 2 Storey Home
$329,000 For Sale
Derry/Goreway
3+2 Bedrooms, 3 Washrooms, Good Location. Close To Ttc, Hwy 427 & Shopping. Finished 2 Bedroom Walk-Out Basement Apt.
$315,000 For Sale
Fathertobin/Mountainash
5 Bedrooms, 4 Washrooms, Approx. 3340 Sq.Ft Home Less Than 2 Yrs In A Highly Desirable Location. Double Door Entry
$549,900 For Sale
Heartlake/Sandalwood
3+1 Bedrooms, 4 Washrooms, Ideal Detached Home For First Time Buyers. Finished Basement With Separate Entrance Through Garage
$349,900 For Sale
Mavis/Dundas
3+1 Bedrooms, 4 Washrooms, Fabulous Detached Central Mississauga Home. Freshly Painted, Bright Modern Kitchen With Backsplash
$399,000 For Sale
9th Line/14th Line
4 Bedrooms, 3 Washrooms, Excellent Box Grove Neighbourhood, 2712 Sq. Ft, Less Than 1 Yr New Arista Home *Dble Entry W/Porch
$519,900 For Sale
Finch/Staines
4+1 Bedrooms, 4 Washrooms, Just Like A Model Home* A Must See! Approx $75,000 In Upgrades* Gorgeous Detached 2 Storey
$464,900 For Sale
Morningside/Finch
3+2 Bedrooms, 3 Washrooms, All Brick Home, Close To Schools, 401, Shopping, Ttc, University, College, Library, Medical Clinics
$279,900 For Sale
Middlefield/Finch
2+1 Bedrooms, 2 Washrooms, Well Maintained 816 Sq Ft Unit, Facing The Gta Square, 2 Full Washrooms And A Large Balcony.
$204,900 For Sale
9th Line/Hooverpark
4 Bedrooms, 3 Washrooms, Gorgeous,Unique & Popular Mattamy Built (Town Gate) Home On Premium Lot With Panoramic View Of Park
$465,000 For Sale
Mccowan/Denison
4+2 Bedrooms, 4 Washrooms, Gorgeous Premium Lot! Main Floor Laundry, New Roof, 2 Bedroom Basement Apartment With Separate Entrance.
$429,000 For Sale
TORONTO, SCARBOROUGH ,MARKHAM , MISSISSAUGA, BRAMPTON , AJAX ஆகிய இடங்களில்
புத்தம் புதிய Condos, வீடுகள், வியாபார நிலையங்கள் விற்பனைக்கு உண்டு
ரஞ்சன் பிரான்சிஸ்
416-816-1220
ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
RANJAN FRANCIS XAVIER
Sales Representative
DIR: 416-816-1220

## அழகிய பூஞ்செடிகள்

# டைசென்றா (Dicentra)

## Family Fumariaceae : dye-SEN-truh : Bleeding Heart



சந்திரசேகரி
segari@thaiveedu.com

### அறிமுகம்

டைசென்றா (Dicentra – Bleeding heart) எனும் இனம், நிழலான இடத்தை விரும்பும் ஒரு நீண்ட காலம் வாழும் தடிப்பான செடிவகையாகும். இச்செடி ஆரம்பத்தில் (Papaveraceae) எனும் குடும்பத்தைச் சார்ந்தது, இப்போது (Fumariaceae) எனும் குடும்பத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. வீட்டுத் தோட்டங்களில் பல நூற்றாண்டுகளாக வளர்க்கப்படுபவை. இது, பூர்வீகமாக, யப்பான் நாட்டைச்





சார்ந்த செடியாகும். இலைகள் பச்சை நிறமாகவும் ஆழமான பிரிவுகளையுடையதாகவும் நன்கு கவர்ச்சியானவையாகவும் அடர்த்தியாகப் பரவியிருக்கும். இச்செடி, நன்கு நிழலை விரும்புகின்றபோதிலும், பெரிய செடிகள் முழுமையான சூரியஒளியினை நாடுகின்றன. குளிர்மையான இடங்களில் நிலமானது ஈரத்தன்மையினைப் பரவலாக வைத்துக்கொள்வதால், செடியானது முழுமையான சூரியஒளியினையே ஈர்க்கின்றது. நன்கு நீரானது வடியக்கூடிய, ஈரத்தன்மை வாய்ந்த நிலம், 5-6 pH திறன் கொண்டும் காணப்படவேண்டும். இதன் இணையற்ற பூக்கள், இளஞ் சிவப்புநிறமான இதயங்களின் நுனிகள் குருதியைச் சொட்டுச் சொட்டாக விடுவது போன்று காட்சியளிப்பதால், "bleeding hearts" என அழைக்கப்படுகின்றன. இதோடு, இதற்கு Mary's heart, Golden eardrops, Dutchman's breeches, என வேறு பெயர்களும் உண்டு. பூக்கள், காற்று நிரம்பியவாறு வட்டமான சோடி சோணைகளைக் கொண்டு காட்சியளிக்கும். சிவப்பு, இளஞ்சிவப்பு, வெள்ளை நிறங்களில் பூக்கள் காணப்படும். இது, இதயத்துடிப்பை குறைப்பதற்கும் குருதி அழுக்கத்தைக் கட்டுப்படுத்தவும் பயன் படுத்தும் செடியெனவும் கருதப்படுகின்றது.

### பழமையான இனங்கள்

150 இனங்களையுடைய டைசென்றா காணப்பட்டபோதிலும், ஓரிரு இனங்கள் மட்டும் அமெரிக்கா, கனடா ஐரோப்பா போன்ற நாடுகளில் இப்போது நன்கு வளர்க்கப்படுகின்றன. சாதாரணமாகக் காணப்படுவது (Dicentra spectabilis) எனப்படும் பழமையான இனமாகும். செடியானது மொத்தமான தண்டுக்கிழங்குகளில் இருந்து வளருகின்றன. ஒரு இனமானது, இளஞ் சிவப்பு நிறப்பூக்கள், வெள்ளை நிறப்பூக்கள் கொண்டவையாகப் பழமையான ஆரம்ப நிலைச் செடிகளையுடையதாகக் காணப்படுகிறது. இரண்டாவதாக, (Dicentra exima - fringed bleeding heart, Dicentra Formosa - wild bleeding heart) கலப்பு இனங்களாக, இளஞ்சிவப்பு நிறப் பூக்கள், சிவப்பு நிறப் பூக்கள், வெள்ளை நிறப்புக்கள் கொண்டவை, பின்னைய வகையாகும். இவை 12-18 அங். உயரமாக வளர்ந்து வெப்ப காலம் முழுவதும் பூக்களைத் தோற்றுவிக்கும்.

### ஏனைய சில இனங்கள்

Dicentra cucullaria (Dutchman's breeches) வட அமெரிக்கா, நொவாஸ்கோசியா, தென் கியூபெக் ஆகிய இடங்களில் காணப்படும் இனமாகும். இலைகளின் தண்டுகளும் பூக்களின் தண்டுகளும் செடியின் நிலக்கீழ் தண்டிலிருந்து வெளியாகி வளர்கின்றன. Dicentra chrysantha ( Golden ear drops) அமரிக்காவில் கலிபோர்னியாவில் கூடுதலாகக் காணப்படும். மணமுள்ள கடும் மஞ்சள் நிறப் பூக்களையுடையவை. Dicentra uniflora ( Western bleeding heart) ஒரு மூலிகைச் செடியாக பல்லுக் கொதி, கடுமையான நோ போன்றவற்றிற்கு பயன்படும். இவை, தென் அமெரிக்கா மலைப் பிரதேசங்களில் கூடுதலாக வளர்கின்றன.

### வளர்ச்சியின் கவனம்

இந்த செழிப்பானதும் பழமையானதுமான டைசென்றா இனத்தை ஒவ்வொருவரும் விரும்பி வளர்க்கின்றபோதிலும் இச் செடியினது பூக்கும் காலத்தினை எல்லோரும் மறந்துவிடுவதுண்டு. இளவேனில்கால ஆரம்பத்திலேயே அழகிய பூக்கள் காணப்படும், மிகவிரைவில் பூக்கும், காலம் தாமதமாகி மந்தமாகிவிடும். இலையுதிர்காலம் அல்லது இளவேனீர்க்காலம், வேர்களைப் பிரித்து, அல்லது இளம் முளைகளை வேறாக்கி அநேக செடிகளாக அதிகரிக்கலாம். மென்மையான வேர்களாக இருப்பதால் வேர்களைப் பிரிக்கும்போது கவனம் எடுத்தல் வேண்டும். சாதாரணமாக வித்துக்களிலிருந்தும் விருத்தி செய்யப்படுகின்றன. வளர்ச்சிக்கு சராசரி நடுத்தர ஈரத்தன்மை போதுமானது. நல்லதரமான பசளை, நீர் வடியும் நிலம் செடிவளர்ச்சிக்கு உகந்தது. செடிகளுக்கு செடி 2 அடி தூரம் இருக்க வேண்டும். வரிசையில் வைக்கும்போது 3 அடி தூரத்தைக் கவனிக்கவும். பசளை 5-10-5 உபயோகிக்கலாம். செடியானது 2 வருட காலத்தில் நன்கு முதிர்ச்சியடைந்து 2-3 அடி நீளமாக வளரக்கூடியவை. இவை சாடிகளிலும் வளர்க்கப்படுகின்றன.

இச்செடிகள் நீண்ட காலம் நிலைத்து வாழக்கூடியதாக இருக்கின்றமையால், காலப்போக்கில் மிக நெருக்கமாக இருப்பதை அவதானிக்கலாம். இவ்வேளை இளவேனிற்காலத்தில் இவற்றை வேறுபடுத்தி, நிலையாக இருக்கும் முதிர்ந்த, அழுகிய தண்டுகளை நீக்கிவிடவேண்டும். கூடுதலாகப்பசளை செடியைச் சுற்றி, இளவேனிற் கால ஆரம்பத்திலேயே சேர்த்துவிடவேண்டும். தொடர்ச்சியான மழை இருப்பதோ அல்லது கூடுதலான நீர் விடுவதோ அவசியம் இல்லை. ஏனெனில் இவ்வேளைகளில் கிழங்குகள் அழுகிவிட நேரிடும். செடிகள், இளவேனிற்கால ஆரம்ப நாட்களிலேயே நன்கு கொத்தாகப் பூக்களை விட்டு அழகு படுத்தும். பூக்கள் ஒருமாதமளவில் நிலைத்து இருக்க வாய்ப்பு உண்டு. Aphids, slugs, snails போன்ற உயிரினங்களின் தாக்கங்களை ஏற்கக்கூடியதாக இலைகள் பாதிப்படைகின்றன. பின்னர், செடிகள் உறங்கு நிலையில் இருக்கின்றவேளையிலும், இலைகள் நன்கு பச்சையாக இருக்கும். செடிகளில் பூக்களை அகற்றாமல் விடும்போது ஓடுகளையுடைய சிறிய காய்கள் விருத்தியாகின்றன. முற்றிய காய்களிலிருந்து வித்துக்கள் நிலத்தில் விழுந்து இளவேனிற் காலத்தில் முளைக்கின்றன.

**- வீட்டுத் தோட்டம் - 8**

குருதியைச் சொரிகின்ற மாதிரி அழகிய பூக்கள்

இச்சிறிய தாவரங்களை வேறுபடுத்தி பசளையிட்ட இடங்களில் நட்டுவிடலாம். வெப்பகாலத்தில், சிறிது சிறிதாக இலைகள் பழுத்து வரும்போது, தண்டுகளை நிலத்திலிருந்து 6அங் விட்டு வெட்டிவிட வேண்டும். இச்செடியினை விரும்பி எல்லோரும் பாத்திகளின் கரையோரங்களில் நடுவார்கள். வருடாவருடம் செடிகள் நெருக்கமாக பச்சைநிற இலைகளைக் கொண்டு செழித்து வளர்கின்றன.

■ ■ ■

## Family Moraceae
## பலாமரம்

**(Botanical Name:Artocarpus heterophyllus) (Eng.Name:Jackfruit Tree)**



பலாமரம், மொறாசியே (Moraceae) குடும்பத்தைச் சார்ந்தது. இலங்கை, இந்தியா, பங்களதேஸ், மலேசியா, பிலிப்பைன்ஸ், தைலாந்து, கம்போடியா, வியற்னாம் நாடுகளில் வளர்க்கப்படுகின்றன. இம்மரத்திலிருந்து பெறப்படும் பெரிய பழமானது உலகில் அதிசிறந்த உணவு வகையாகக் கருதப்படுகிறது. இம்மரம் 30-60 அடிவரை உயரமாக வளரும். சிறிய பலமான பூக்களையுடைய குருத்துக்கள் தண்டிலிருந்தும், பெரிய கிளைகளிலிருந்தும் வெளியாகின்றன. ஆண் பூக்கள், பெண் பூக்கள் காணப்படும். பலாக்காய் 8அங். தொடக்கம் 3 அடி வரை நீளமாயிருக்கும், 10-100 இறாத்தல் நிறையுடையதாயிருக்கும். பழுத்த பழம் அநேக சதைப்பற்றுள்ள சுளைகளைக் கொண்டிருக்கும். மிகவும் ருசியானவை. வித்துக்கள் மெல்லிய வெள்ளைநிறத் தோலினால் மூடப்பட்டிருக்கும். பலாப்பழம், இலங்கை, தென்இந்தியாவில் மிகவும் பிரபல்லியமான உணவாகக் கருதப்படுகினறது. வெப்ப காலத்தில் போதிய நீர் அவசியம். வித்துக்களிலிருந்து மரத்தை உண்டாக்கலாம். வருடத்தில் சிறந்த அறுவடையாக ஏறக்குறைய 100-150 பெரிய பலாக்காய்கள் கிடைக்கும். மரப்பலகைகள்; கட்டில், கதிரை, மேசை, கதவு, வீட்டுநிலைகள், போன்ற வற்றிற்கு பயன்படும். பார்லி, இந்தோநேசியா போன்ற நாடுகளில் பெரிய அரண்மனைகள் கட்டுவதற்குப் பலா மரத்தினைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். சமையலில். காய்களின் சுளைகள், சிறிதாக வெட்டப்பட்டு அவித்து இலேசாக உப்புப் போட்டு உணவாகப் பயன்படுத்துவர். வித்துக்கள் பலவித ருசிகளையுடையவை. இதில் புரதம், கல்சியம், பொசுபரஸ், பொற்றாசியம், சோடியம், கூடுதலான கனிச்சத்துக்கள், விற்றமின் சீ காணப்படுகின்றன. இலைகள் ஆடு, மாடு போன்ற பிராணிகளுக்கு உணவாகின்றன. இலைகள் சேர்த்து இணைத்து சிறியதட்டுகளாக உணவு பரிமாற பயன்படுத்தப்படும். மரத்தின் பால் ஒட்டும் தன்மையுள்ளது.

# வீட்டுச் சந்தையின் தோற்றம்

S.K. பாலேஸ்
- வீடு விற்பனை முகவர் -
skbales@thaiveedu.com



## ஒன்ராறியோ– (வெளித் தோற்றம்)

ஒன்ராறியோவின் நிலையான பொருளாதாரத் தோற்றம் வீடுகளுக்கு உரிய தேவையை அதிகரிக்கச் செய்துள்ளது. புதிய வீடுகள் கட்டும் பணி சரித்திரச் சராசரி அளவை விட அதிகரித்து 69,150, 67,150 என முறையே 2008ஆம், 2009ஆம் ஆண்டுகளில் இருக்கும். அதே நேரம் ஒன்ராறியோவில் தற்போதுள்ள வீட்டுச் சந்தை ஒரு சாதனை மட்டத்தை அடைந்திருக்கும். தனிவீடுகளின் அதிகரித்த விலையும், மீள் விற்பனைக்கு வரும் பலவித வீடுகளும், வீட்டு மனைக-ளின் தட்டுப்பாடும் வீட்டு நிர்மாண வேலை யைத் தற்போதுள்ள வீட்டுச் சந்தையில் இயக்கும் காரணிகளாகும்.

ஒன்ராறியோவின் பொருளாதார வளர்ச்சி கனடாவின் சராசரி வளர்ச்சியைவிடப் பின் தங்கியிருக்கும். இந்த வருடம் ஒன்ராறியோ வின் பொருளாதாரம் 1.8 வீதத்திற்கு இறங்கி 2009இல் 2.4 வீதத்துக்கு உயரும். வளர்ச்சி கடந்த பத்தாண்டுகளாக உள்ள 3.5 வீதத் தை விடக் குறைவாக இருக்கும். ஒன்ராறி-யோவின் உற்பத்தித்துறை முக்கியமாக வாகன உற்பத்தி, வாகன உதிரிப் பாகங்கள் மற்றும் வனத்துறை ஆகியனவும், அமெரிக்-காவின் பொருளாதார வளர்ச்சிக் குறைப்பும் கனடாவின் டொலரின் மதிப்பு அதிகரிப்பும் 2008ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஒன்ராறி-யோவின் பொருளாதார வளர்ச்சியில் தாக் கத்தை ஏற்படுத்தும்.

வேலை இழப்பு உற்பத்தித் துறையில் தொடரும்போது, அதில் ஒரு பகுதியினர் நுகர்வோர் சேவை துறைகளினால் வேலைக்-கமர்த்தப்படுகிறார்கள். குறைந்த வட்டி வீதம், வாடிக்கையாளரின் நம்பிக்கை, அதிகரித்து வரும் மக்கள் வருமானமும் நுகர்வோர் செலவு செய்யும் நிலைமையை ஏற்படுத்தும். மாகாணம் முழுவதும் வளர்ச்சி தோன்றும்.

மேற்கு, மற்றும் மத்திய கனடாவுக்கிடை-யில் உள்ள பொருளாதார இடைவெளி குறையும். இதிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் ஒன்ராறியோ வாசிகளின் எண்-ணிக்கை படிப்படியாகக் குறைவடையும் என்று அறியலாம். ஒன்ராறியோவின் சனத்-தொகை வளர்ச்சி சர்வதேசக் குடிவரவைப் பொறுத்துள்ளது. கனடாவின் பிற பகுதி-களுடன் ஒப்பிடும்போது ஒன்ராறியோவின் சர்வதேசக் குடிவரவு அண்மையில் வீழ்ச்சி கண்டுள்ளது.

## விபரம்

தனி வீட்டுக் கட்டிடம் குறைந்து 34,400 அலகுடனும் 30,900 அலகுடனும் 2008ஆம், 2009ஆம் ஆண்டுகளில் முறையே காணப் படும் நாற்பதைத் தாண்டிய சனத்தொகை அதிகமாக உள்ளது. அதிலும் விலை உயர்ந்த வீடுகளை விரும்பாத மக்களாகவும் இருந்தனர்.

பல வீடுகள் கொண்ட அலகுகள் 2008இல் 34,750 ஆகவும், 2009இல் 36,250 ஆகவும் உயரும். பல வீடுகள் கொண்ட கட்டிடங்க-ளும், தொடர்மாடிக் குடியிருப்புகளும் நகர வீடுகளுமே அதிகம் தோன்ற வாய்ப்பு உண்டு.

## மீள் விற்பனை

2007இல் நல்ல விற்பனைக்குப் பிறகு ஒன்ராறியோவில் வீட்டு விற்பனை வீழ்ச்சி யடைந்து 208,000 குடியிருப்புகள் 2008இலும் 201,000 குடியிருப்புகள் 2009இலும் இருக் கும்.

மோட்கேஜ்க்கான செலவு அதிகமாவதால் வீட்டு விற்பனையை குறைக்கவே செய்யும்.

ஒன்ராறியோவில் சராசரி விலை 2008இல் 6.2 வீதத்தாலும் 2009இல் 2.9 வீதத்தாலும் உயரும். விலை உயர்வு பணவீக்க அள-வுக்கு மேல் போகும்.

## மாகாண முக்கிய விடயங்கள்

தொடர்மாடிக் குடியிருப்புகளின் வெற்றிட வீதம் ஒன்ராறியோவின் பல பாகங்களிலும் வேறுபட்டது. ஒன்ராறியோவின் நகரப்பகுதி களில் 2007இல் முந்திய ஆண்டில் இருந்தது போன்றோ அல்லது முந்திய அளவிலும் குறைவாகவே இருந்தது. சராசரி வாடகை யை விட இறுக்கமான வாடகைக்கு குறிப் பிடத்தக்க உதாரணம் சட்பெறி, கல்ப்/ (Sudbury, Greater Sudbury and Guelph)

Greater Sudburyயுடைய வாடகைச் சந்தை-யும் உரிமையாளர் சந்தையும் கனடாவில் மிக இறுக்கமானவை. அவை இன்று இலாப-மடைகின்றன. காரணம் சுரங்கத் தொழில் வளர்ச்சியும், பொருட்களின் விலை உயர்வும். இவை இரண்டும் தொழில் வாய்ப்பையும், குடிவரவாளரின் எண்ணிக்கையையும் அதி-கரிக்கிறது. இதே நேரம் வாடகையின் அளவு மாகாணச் சராசரியை விட பின்வரும் இடங் களில் அதிகமாக இருந்தது. Windsor, St. Catherines, Niagara and Thunder Bay.

இந்த இடங்களில் கனடாவின் டொலரின் பெறுமதி அதிகரிப்பும், அமெரிக்கப் பொருளா-தாரத்தின் மந்தப் போக்கும் உள்ளூர் வியாபாரத்தையும், வீட்டுச் சந்தையையும் பாதித்தது.

Toronto, Ottawa, London ஆகிய நகரங்கள் பலவித பொருளாதாரத்தைக் கொண்டிருந்த படியால் 2007இல் வாடகை வீதத்தில் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. ஒன்ராறியோவின் வாடகைச் சந்தை வெற்றிட வீதம் 2008, 2009இல் எந்தப் பாதிப்பும் ஏற்படாது.

## கியூபெக் (Quebec)

2007ஆம் ஆண்டு கியூபெக்கில் வீடு வாங்கு வது சுலபமாக இருந்த அத்தனை காரணங்-களும் அப்படியே இருப்பதால் 2008இல் 46,500 வீடு கட்டுமானமும், 2009இல் 45,000 வீடு கட்டுமானமுமாகும். கியூபெக்கின் பொருளாதாரம் உள்ளூர் வர்த்தகத்தாலும், மேலதிக வருமானத்தாலும் வலுவுடையதா-கும். மேலும் கனடாவின் டொலரின் பெறு மதியின் அதிகரிப்பும் தொழில் முதலீட்டுக்கு வாய்ப்பளிக்கும். மேலும் மாகாண அரசின் அபிவிருத்தி வேலைகளும் ஆரம்பிக்கப்பட உள்ளதால் பொருளாதாரம் இன்னும் வலுவடையும்.

இவ் வருடம் பலயீனமாயிருப்பது ஏற்றுமதித் துறைதான். கனடாவின் நாணய மதிப்பு உயர்வும் வெளிநாடுகளின் ஏற்றுமதிப் போட்டிகளும், ஏற்றுமதித் துறையைத் திணறடிக்கும். உற்பத்தித் துறையைப் பொறுத்தளவில் இது உண்மை. இதனால் இன்னும் இரண்டு வருடங்களில் GDP 2%தாலும், வேலை வாய்ப்பு 1%தாலும் 2008, 2009ஆம் ஆண்டுகளில் வளர வாய்ப்புண்டு.

வட்டிவீதம் உயரலாம் என எதிர்பார்க்கப்-படும்போது தற்போதுள்ள குறைந்த வட்டி வீதமும், வளர்ந்து வரும் நிதி வசதிகளும் வீடு வாங்குவதை ஊக்குவிக்கவும், வீடு வாங்கும் எண்ணத்திலுள்ளவர்களை சற்று முன்னே வாங்கவும் செய்யும்.

மாகாணத்தின் பொருளாதாரம் பலமாக இருப்பதாலும், மாகாண அரசு குடிவரவா-ளரின் எண்ணிக்கையை அதிகரிக்க உள்ள-தாலும் வீடுகளுக்கு கிராக்கி தொடர்ந்தும் இருக்கும். அதேநேரம் சனத்தொகை காலம் செல்லச் செல்ல வயோதிபராகிற-படியால், வயோதிபர் இல்லங்கள், கொண்-டோக்கள், ஓய்வு தொடர் மாடிக் கட்டிடங்-களுக்கும் கிராக்கி ஏற்படலாம்.

■ ■ ■




Law Office
T. JEGATHEESAN
(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும்
ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.
தி. ஜெகதீசன்
(Barrister, Solicitor and Notary Public (on)
Off: 416 • 266 • 6154
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677
2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3

Knowledge Experience Results

# ராஜீவ் கோணேஸ்வரன்


Broker



24Hr Real Estate Agent

416.568.1078



**Morningside/Mclevin**
3+1 Bedrooms, 3 Washrooms, Detached 2-Storey
**$239,900**



**Whitby, Ontario**
Sale of Business, Establish & Profittable Excl. Tobacco Convenience Storee
**$54,900**



**Mccowan/Eglinton**
2+1 Bedrooms, 1 Washrooms, Condo Apartment
**$134,900**




**Mccowan/Finch**
2 Bedrooms, 2 Washrooms, Condo apartment
**$224,900**



**Old Finch/Morningside**
3 Bedrooms, 3 Washrooms, Semi-Detached
**$279,900**



**Ajax, Ontario**
Sale Of Business, Well Known Franchise, Suitable For Many Family Members
**$325,000**



**Midland & Lawrence**
3+2 Bedrooms, 3 Washrooms, Detached Bungalow
**$344,900**



**Mclevin/Tapscott**
4 Bedrooms, 3 Washrooms, Link 2-Storey
**$369,900**



**Meadowvale/Sheppard**
4+1 Bedrooms, 3 Washrooms, Detached 2-Storey
**$415,000**



**Meadowvale/Sheppard**
4 Bedrooms, 4 Washrooms, Detached 2-Storey
**$431,900**

LEADING AGENT OF RE/MAX


**Executive Realty Inc. (1996) Brokerage,**
1225 Kennedy Road, Suite 200, Toronto, ON M1P 4Y1 Tel: 416.285.8555

*some condition apply
*not intended to solicit buyer and seller currently
*transactions completed where either buyer or seller represented.

# தீராத் தலைவலிக்கு தீர்வு என்ன?

**மருத்துவக் கேள்வி - பதில்**

இராஜசேகர் ஆத்தியப்பன்
rajasegar@thaiveedu.com



**வல்லாரைக்கு வேறு பெயர் உண்டா?**

சரஸ்வதி மூலிகை என்ற சிறப்புப் பெயர் உண்டு.

**எனது காலில் நரம்பு ஒன்று வளைந்து வளைந்து காணப்படுகின்றது. இதனால் பிரச்சினை யொன்றும் இல்லை என்று நண்பர்கள் சொல்கின்றனர். தங்கள் அறிவுரை என்ன?**

'அரும்பு கோணிடில் அதன் மணம் குன்றுமோ
கரும்பு கோணிடில் கட்டியும் பாகுமாம்
இரும்பு கோணிடில் யானையும் வெல்லலாம்
நரம்பு கோணிடில் நாமென்ன செய்வது?

முல்லை அரும்பு கோணி வளர்ந்தால் வாசனை உண்டு. கரும்பு கோணலானால் அது பாகாய் ஆவது உறுதி இரும்பு கோணலாக மாறினால் யானையை அடக்கும் அங்குசமாக மாறும். ஆனால், நரம்பு கோணலானால் அதன் விளைவுகள் உடலைச் சிதைக்கும்.

**எனக்கு முகமெல்லாம் பருக்கள். எனது முகம் அழகாய்த் தோன்ற உங்கள் ஆலோசனை என்ன?**

திராட்சைப் பழத்துடன் ஆட்டுக் கொழுப்பைச் சேர்த்து அரைத்து பருக்கள் மீது தடவினால், பருக்கள் மறையும்.

பச்சை மஞ்சள் கிழங்கை நல்லெண்ணெய் சேர்த்து அரைத்து பருக்கள் மீது தடவினால் பருக்கள் மறையும்.

செம்பருத்தி இலை, பச்சைப் பயறு, இரண்டையும் சம அளவில் எடுத்து விழுதாக அரைத்து முகப் பூச்சு செய்தால் முகம் ஜொலிக்கும்.

வறட்சியான தோல் உள்ளவர்கள் புளிப்புச் சுவை உள்ள உணவுகளைத் தவிர்க்க வேண்டும். வெண்டை, கேரட் இரண்டையும் தேங்காய்ப் பாலில் அரைத்து முகப்பூச்சு செய்தால் வறட்சி மாறும்.

**என்னுடைய தீராதத் தலைவலிக்கு தீர்வு என்ன?**

உங்கள் தலைவலிக்கான காரணம் என்ன என்று முதலில் தெரிய வேண்டும்.

- தீவிரமான மன உளைச்சல்
- பாக்கு, புகையிலை, போதைப்பொருள் பழக்கம்
- இரத்தக் கொதிப்பு
- தீவிர சிந்தனை, எளிதில் உணர்ச்சிவசப்படுதல், உணவுப் பொருட்களின் ஒவ்வாமை.
- அதிகப் பசி
- மலச்சிக்கல்.
- சிறு நீரகத்தில் கல், பித்தப்பையில் கல், அஜீரணம்
- ஒழுங்கற்ற மாத விலக்கு
- நரம்பு வியாதிகள்

காரணமே இல்லாமல் கூட தலைவலி வரலாம்.

மஞ்சள் 10 கிராம், மரமஞ்சள் 10 கிராம், சுக்கு, திப்பிலி, மிளகு, கடல் நுரை, வெங்காயம், சிலுப்பைக்கட்டி எல்லாவற்றையும் தலா 10 கிராம் எடுத்து அனைத்தையும் நசுக்கி அரை லீட்டர் நல்லெண்ணெயில் போட்டு காய்ச்சி இறக்கவும். இதில் இருந்து தினமும் சில துளிகளை மூக்கில் உறிஞ்சினால், அனைத்து விதமான தலைவலிகளும் தீரும்.

பூண்டு, முருங்கைப் பட்டை சாறு சம அளவில் எடுத்து 2 அல்லது 3 துளிகளை இடது பக்கத் தலைவலிக்கு வலது பக்க மூக்கிலும் வலது பக்கத் தலைவலிக்கு இடது பக்க மூக்கிலும் உறிஞ்சினால் தலைவலி உடனே நிற்கும்.

முருங்கை (அ) பொன்னாங்கண்ணி கீரையுடன் மிளகு, சீரகம், பூண்டு, பெருங்காயம், செத்தல் மிளகாய் இவற்றைச் சேர்த்து சூப் வைத்துச் சாப்பிட்டால் நாள்பட்ட தலைவலி உடனே தீரும்.

**டாக்டர் எனக்கு வயது 43. நெஞ்சு எரிச்சல் இருக்கின்றது. ஏன் இப்படி என்று புரியவில்லை. இப்பொழுது எனது மகனும் இந்தப் பிரச்சினையால் அவதிப்படுகின்றான்.**

நமது உடலில் உணவுக் குழாய் என்பது ஒரு மண் புழுவைப் போல் நெகிழும் தன்மை கொண்டது. இது உணவை கொஞ்சம் கொஞ்சமாக வயிற்றுக்குள் கொண்டு போய்ச் சேர்க்கின்றது. உணவுக் குழாயின் அடிப்பகுதிதான் கட்டுப்பாட்டுக் கேந்திரம். வாயில் சுரக்கும் எச்சிலும் (Alkaline) இரைப்பையில் உருவாகும். ஹைட்ரோ குளோரிக் அமிலமும் (Acid) இந்தக் கட்டுப்பாட்டுப் பகுதியில் சண்டையிடுகின்றன. இந்த சண்டையில் அமிலம் வெற்றி பெற்றால் உணவுக் குழாயில் புண் ஏற்படுகின்றது.

இயற்கை, தானாகவே இந்தப் புண்களை ஆற வைக்கும் சக்தி படைத்தது. சில வேளைகளில் இந்தப் புண் ஆறாமல் புற்றுநோயாக மாறவும் வாய்ப்பு உண்டு. உலகில் அதிகமாகக் காணப்படும் புற்றுநோய்களில், உணவுக் குழாய் புற்றுநோயும் ஒன்று பொதுவாக ஆண்களுக்குத்தான் இந்த வகை நோய் அதிகமாக வருகின்றது.

உணவுக் குழாயின் தசைகள் இறுகித் தளர்ந்து வேலை செய்பவை. இந்தத் தசைகளில் ஏற்படும் 'தசை அசைவுப் பிரச்சினை' (Motility Disorder) மிகவும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. இந்தப் பிரச்சினை இருப்பவர்களைச் சோதித்துப் பார்த்தால், இரண்டு நாட்களுக்கு முன் சாப்பிட்ட உணவின் சில பகுதி செரிமானம் அகாமல் குழாயின் கடைசிப் பகுதியில் தங்கியிருப்பது தெரியும். மேலும் அடிப்பகுதி இறுகி உணவு செல்ல முடியாமல் இருக்கும்.


நெஞ்சு எரிச்சல் ஏன் ஏற்படுகின்றது என்று பார்ப்போம். ஒரு வழிப் பாதையாகச் செயல்பட வேண்டிய உணவுக் குழாயின் 'வால்வு' கடமை தவறி, அமிலத்தை மேலே செல்ல அனுமதிப்பதுதான். மேலே வரும் அமிலம் நெஞ்சு எரிச்சலை ஏற்படுத்தி, உட்பக்கச் சுவர்களில் புண்களை உண்டாக்கும். இந்த நிலையில் சாப்பிட்டாலும், சாப்பிடா விட்டாலும் உபாதைதான். வாயிலும், உள் நாக்கிலும் உபாதை தான். வாயிலும் உள் நாக்கிலும் கூட புண் உண்டாகும். அழகான குரல் மாறிப்போகும். நுரையீரலில் நோய் தொற்றை ஏற்படுத்தி ஆஸ்துமா போன்ற பிரச்சினைகளையும் தோற்றுவிக்கலாம்.

இரைப்பையில் சுரக்கும் அமிலம் இரைப்பையைத் தாக்க இயலாதவாறு அதன் உட்புறச் சுவர்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆனால், இங்கு சுரக்கும் அமிலம் மேலே உணவுக் குழாயினுள் வரும்போது தான் ஆபத்து. தொடர்ந்து இது போன்ற பிரச்சினைகளால் பாதிக்கப்படும் உணவுக் குழாய், இரைப்பைச் சுவர்களைப் போல் தனது செல்களையும் மாற்றிக் கொள்ள முயற்சிக்கும். இதற்கு Metaplasia என்று பெயர். உணவுக்குழாயின் இந்த சுய முயற்சி புற்று நோயாக மாறுகின்றது. (Aden carcinoma) அதனால் நெஞ்சு எரிச்சல்தானே என்று சாதாரணமாக எடுத்துக் கொள்ளாமல் உடனடியாக மருத்துவரை அணுகி சிகிச்சை பெறுவது நல்லது.

■ ■ ■

Arthritis

முழங்கால், தோல்பட்டை, கைவிரல்களில்
திருகு வலியா? விரைவில் குணமடையலாம்
Blood pressure - Hyper Tension
அமைதியான ஆட்கொல்லி
SILINT KILLER
இரத்த அழுத்தமா
நல்ல சுகமடைய இயற்கை மூலிகை மருத்துவம்



canada 416 - 995 -0416
India -91-9362728808

ASTHMA - ALLERGY

Wising - Cough
Breathing trouble
- Easy cure-



WONDER HERBAL REMEDIES
For Consultation
Dr. Raj
Canada : 416 9950 416
India : 91 93627 28808


கூவத்தொடங்கும் குயில்
Koovaththodangum Kuyil
Selvi Aranya Babu
(Disciple of Guru Selvi Aathirai Sivapalan)
Gaanamirutham Academy of Fine Arts
On Saturday the 20th of September 2008 at
Yorkwood Library Theatre
1785 Finch Ave. West, Toronto, Canada
647-886-5090


Move up to The Best
August 29, 2008
PICKERING
2 yrs Old
Brock and Hwy 2
Pickering's Prestigious 'Watermark' Community, 'Brookfield' Built, 3Br Town Home with 3 Washrooms, 1544 Sq.Ft of Comfort in a quiet, Residential Complex, Close To 401,Shopping & Schools. Extra $6000 Worth Prime Lot Backing Onto Ravine. Nature at your Backyard. Private & Quiet. Good Neighborhood. Child Safe Street. Less Than Two Years New. Stainless Steel Fridge, Stove, Built-In Dish Washer, Cvac, Elfs, Dryer, Washer, Blinds, Fenced In Backyard Backing Onto Ravine, Extra Deep Lot, Granite Counter Top, Upgraded Kitchen Cabinets W/Glass Inserts, Marble Sink in MBR, Quality Faucets & Tiles. Condo Fee is only $46.78 .
Asking Only $269,900
SCARBOROUGH
Basement Apt
Brimley and Lawrence
Large 3 B/R Bungalow with L-Shape Living and Dining Room. Newer Windows, New Furnace, Walk Out To Deck off Bedroom. Enclosed Car Port With Storage Room. Huge 2 Br. Bsmt. Apt With Separate Entrance. Close To School/TTC, Few Minutes to Subway. Very Clean House. This is A Very Spacious House. Good Location. Very Quiet Street.
2 Fridges,2 Stoves,Washer, Dryer, All Electrical Light Fixtures, All Window Coverings.
Lucky # 5
Asking Only $320,000
BRAMPTON
0% Down
Sandlewood and Edenbrook
Absolutely Gorgeous, 4 B/R, 3 W/R Open Concept Living & Family Room, Formal Dining Room & Separate Great Room With 13' High Ceiling & W/O To Balcony. Close to Transit, Schools, Shopping, New Recreation Centre, GO Train, Etc. New Gleaming Hardwood on Main Floor. Cac, Air Cleaner. High End Stainless Steel Appliances (negotiable) 4 Parking on Driveway. Lots of Sunlight., Lucky Number 42
Asking Only $399,900
VAUGHAN
REDUCED
Dufferin & Rutherford
Excellent Price, Priced For Quick Sale. 4 Bedroom Fully Detached All Brick Remington Built Home In Excellent Location. Top Quality Hardwood Floors and Oak Stairs.
Double Garage and Double Door Entry Close To 407 and Highway 7.No Sidewalk.
Interlocking Walkway.
Includes Fridge, Stove, Built-In Dishwasher,
Washer, Dryer, Cvac, Garage Door Opener,
Water Filter Purifier. Lucky # 5
Asking Only $459,900
AJAX
Must Sell!
Westney and Rossland
Sought After Nottingham Location! Tribute's built! Private 'Morland' Enclave! Immaculate, Spacious & Open Floor Plan! Soaring 16' Cathedral Ceiling Overlooks Open Staircase To Upper Level!Upgraded Strip Hardwood Flooring! Huge Family Room With Gas Fireplace Overlooks Private, Premium Fully Fenced Landscaped Lot! Flagstone And Interlock Pathways. Deck.
4 Bedrooms with 3 Washrooms, Master B/R with Separate Shower and Oval Jacuzzi Jet Tub! R/I Central Vac. ! Alarm System! Central Air! Gas Fireplace!
Asking Only $379,800
KEN KIRUPA
Sales Representative
416homes.ca
416homes.ca sells more homes in 905
RE/MAX
Outstanding Agents
Outstanding Results.
Office: 416-491-4002
Direct: 416-294-9322
Re/Max Crossroads Realty Inc, Brokerage



வீடு, வியாபாரம் வாங்க, விற்க....
20 வருடங்களாக இத்துறையில் முன்னணியில்
அனுபவம்! அறிவு!! திறமை!!! பொறுமை!!!
KARU'S ROYAL TEAM
Top 10 TEAM in CANADA
THE CHAIRMAN'S CLUB
NATIONAL Award Winner 2003-2007
Top 1% in Canada
Karu Kandiah FRI.CRES.,
Real Estate Broker
REAL ESTATE துறையில் ஈடுபட்டு வெற்றி காணவிரும்புகிறீர்களா? அழையுங்கள்.....
DETACHED HOUSE FOR CONDO PRICE
Asking $279,900
Open House Sat 2 - 4 pm
Morningside / Sewells
· 3+1 Bedrooms
· 4 Washrooms
· Good Opportunity for Investor
· Detached Home W/ Double Garage
· Walk To Public & Catholic Highschool, Ttc, & Shopping
· Master Bedroom W/ 2 Pc Hardwood Main Floor
AN ABSOLUTE MUST SEE!!
Asking $243,900
Sheppard Av E. & Neilson
· 3 Bedrooms
· 2 Washrooms
· Beautiful Premium (ExtraLarge) Corner Lot (65' Back & 42'Front) With Inground Pool And Great New Deck
· Updated Modern Kitchen '06 With All New Stainless Steel Appliances '06
Pickering
Daisy Mart Located In A Good Area. Lots Of Potential For Growth. Good For Owner Operator. Low Rent. Extras: Renovated Store
$59,000 Plus Stock
Thickson/Dryden
4 Bedrooms, 3 Washrooms, Stunning Tastefully Upgraded Home In An Excellent Location Close To All Amenities. All Brick Home
$399,900 For Sale
14th Avenue/9th Line
5 Bedrooms, 4 Washrooms, Stunning Green Park Model Home 3350 Approx Sq Ft, 55 Thousand In Total Upgrades. All Done By Builder
$569,900 For Sale
Keele/Finch
3 Bedrooms, 2 Washrooms, Budget! Freshly Painted, Spacious 3 Bedroom. Very Clean. Good Size Bedrooms, In Good Condition
$175,000 For Sale
Humberwood/Rexdale
3+1 Bedrooms, 3 Washrooms, Just Like A Model Home* A Must See! Approx $75,000 In Upgrades, Gorgeous Detached 2 Storey Home
$329,000 For Sale
Derry/Goreway
3+2 Bedrooms, 3 Washrooms, Good Location. Close To Ttc, Hwy 427 & Shopping. Finished 2 Bedroom Walk-Out Basement Apt.
$315,000 For Sale
Fathertobin/Mountainash
5 Bedrooms, 4 Washrooms, Approx. 3340 Sq.Ft Home Less Than 2 Yrs In A Highly Desirable Location. Double Door Entry
$549,900 For Sale
Heartlake/Sandalwood
3+1 Bedrooms, 4 Washrooms, Ideal Detached Home For First Time Buyers. Finished Basement With Separate Entrance Through Garage
$349,900 For Sale
Mavis/Dundas
3+1 Bedrooms, 4 Washrooms, Fabulous Detached Central Mississauga Home. Freshly Painted, Bright Modern Kitchen With Backsplash
$399,000 For Sale
9th Line/14th Line
4 Bedrooms, 3 Washrooms, Excellent Box Grove Neighbourhood, 2712 Sq. Ft, Less Than 1 Yr New Arista Home *Dble Entry W/Porch
$519,900 For Sale
Finch/Staines
4+1 Bedrooms, 4 Washrooms, Just Like A Model Home* A Must See! Approx $75,000 In Upgrades* Gorgeous Detached 2 Storey
$464,900 For Sale
Morningside/Finch
3+2 Bedrooms, 3 Washrooms, All Brick Home, Close To Schools, 401, Shopping, Ttc, University, College, Library, Medical Clinics
$279,900 For Sale
Middlefield/Finch
2+1 Bedrooms, 2 Washrooms, Well Maintained 816 Sq Ft Unit, Facing The Gta Square, 2 Full Washrooms And A Large Balcony.
$204,900 For Sale
9th Line/Hooverpark
4 Bedrooms, 3 Washrooms, Gorgeous,Unique & Popular Mattamy Built (Town Gate) Home On Premium Lot With Panoramic View Of Park
$465,000 For Sale
Mccowan/Denison
4+2 Bedrooms, 4 Washrooms, Gorgeous Premium Lot! Main Floor Laundry, New Roof, 2 Bedroom Basement Apartment With Separate Entrance.
$429,000 For Sale
ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
DIR: 416 284 5555
Bus: 416-284-4751(24 Hrs)
Toll Free: 1-888-766-4456
E-Mail: karusroyalteam@yahoo.ca
Visit: www.royalteamonline.com
880 Ellesmere Rd, Suite 203, Toronto

## காசுமேலே காசுவரும் நேரமிது

# பங்குச்சந்தை காஸினோவா என்ன?



பெரி
முத்துராமன்
- நிதித்துறை ஆலோசகர் -
muthuraman@thaiveedu.com

என்னிடம் வந்த வாடிக்கையாளர் ஒருவர் என்னிடம் நூறு ஆயிரம் டாலர்கள் உள்ளன. நான் எதில் லாபகரமாக முதலீடு செய்யலாம் என்றார். வங்கி வட்டியைவிட ஐந்தாண்டு கால முடிவில் பொதுவில் அதிகம் வருவாய் தரக் கூடியவை மியுச்சுவல் பங்குகளே. அவற்றில் முதலீடு செய்யுங்கள் என்றேன். மியுச்சுவல் பண்டுகள். பங்குச்சந்தையில் அல்லவா பணத்தை முதலீடு செய்யுகின்றன. பங்குச்சந்தை காஸினோவைப் போன்றது இல்லையா என்றார். அவருக்கு அளித்த விளக்கத்தின் சுருக்கம் இதோ!

பங்குச்சந்தையில் பணம் போடுபவர்களை இருவகையாகக் கூறலாம். குறுகிய காலத்தில் லாபம் சம்பாதிக்க விளைவோர் ஒரு வகை. இவர்களை ஆங்கிலத்தில் Speculators என்பார்கள்.

தொலைநோக்கில் - ஐந்து வருடங்களும் அதற்கு மேலும்.
பொதுவில் - சேமிக்க விளைவோர் மற்றொரு வகை.

குறுகிய காலத்தில் அனுபவம் இன்றி பங்குச் சந்தையில் லாபம் சம்பாதிக்க முற்படுவோருக்கே பங்குச்சந்தை காசினோவாகத் தோன்றுகின்றது.

ஏற்ற - இறக்கங்கள் சந்தையில் இயல்பானவை. குறிப்பாக கடந்த ஓராண்டில் சந்தையில் ஏற்ற இறக்கங்கள் மிக அதிகமாகவே இருந்து வந்துள்ளன. சாதாரணமாக பங்குச் சந்தையில் ஏற்ற இறக்கங்கள் ஓரேநாளில் 2 அல்லது 3 சதவீதம் என்பது அபூர்வமாக நிகழக்கூடியது. ஆனால் கடந்த ஓராண்டில் சர்வ சாதாரணமாக பல தினங்களில் 2 அல்லது 3 சதவீத ஏற்ற இறக்கங்கள் ஒரே நாளில் நிகழ்ந்துள்ளன. மேலும் ஓராண்டுக்கு முன் டொரோண்டோ பங்குச் சந்தை 13 200 புள்ளிகளில் இருந்தது. ஏறத்தாழ தற்சமயம் அதே நிலையில்தான் டொரோண்டோ பங்குச்சந்தை உள்ளது. அப்படியானால் ஓராண்டில் டொரோண்டோ பங்குச்சந்தையில் வளர்ச்சி இல்லையா? என்பது கேட்கத்தோன்றும். வளர்ச்சி இருந்தது. டொரோண்டோ பங்குச்சந்தை சில வாரங்களுக்கு முன்னர் 15000 புள்ளிகளைத் தொட்டது. ஆனால் இதை ஒரு நேர்கோடாக வரைய முடியாது. அல்லது இந்த வளர்ச்சி ஒரே நேர்கோட்டில் அமையவில்லை. ஆங்கில எழுத்தான 'M'ஐப் போன்றும் 'W' ஐப் போன்றும் பல ஏற்ற இறக்கங்களைக் கொண்டதாகவே உள்ளது. குறுகிய காலத்தில் சந்தையில் லாபம் சந்திக்க விளைபவரே தினசரி ஏற்ற இறக்கங்களைக் கண்காணிக்க வேண்டும். தொலை நோக்கில் சேமிக்க விளைபவர் இத்தகைய தினசரி ஏற்ற இறக்கங்களைப் பார்க்கத்தேவையில்லை.

கடந்த 50 வருடங்களில் 13 முறை பங்குச் சந்தை இறங்குமுகமாகவும், 14 முறை ஏறு முகமாகவும் இருந்துள்ளது. இறங்குமுகமாக இருந்த சந்தையின் சராசரி கால அளவு 11 மாதங்கள் ஏறுமுகமாக இருந்த சந்தையின் கால அளவோ 32 மாதங்கள். ஏறத்தாழ மூன்று மடங்கு அதிகம். இறங்குமுகத்தில் சந்தையின் சராசரி வீழ்ச்சி 26 சதவீதம். ஏறுமுகத்தில் சந்தையின் சராசரி விலை ஏற்றம் 78 சதவீதம். ஏறத்தாழ மூன்று மடங்கு அதிகம். சந்தையின் ஏற்ற இறக்கங்களைத் துல்லியமாகக் கணித்தவர் இதுவரை யாருமில்லை. இனியும் யாரும் இருக்கப்போவதில்லை. நீங்கள் குறுகிய காலத்தில் லாபம் சம்பாதிக்க வேண்டும் என்றால் இணையதளம் மூலம் நீங்களே வாங்கி விற்கலாம். லாபமும் அடையலாம். நட்டமும் அடையலாம்.

நீங்கள் தகுந்த ஆலோசகரின் உதவியின்றி முதலீடு செய்யும் போது பேராசை, பயம் போன்றவற்றிக்கு ஆளாகி பெருத்த லாபத்திற்கு மாறாக, பெருத்த நட்டத்தையே சந்திக்க நேரிடலாம். குறிப்பாக அனுபவம் இன்றி செயற்படும்போது இது நிச்சயம் நிகழ்கின்றது. மாறாக, தகுந்த ஆலோசகர்களின் உதவியுடன் நீண்ட காலத்திற்கு என்று முதலீடு செய்யும்போது குறுகிய காலத்தில் விரலுக்கு ஏற்ற நட்டமோ அல்லது சற்றே அதிகமான லாபமோ வரலாம். ஆனால் ஐந்தாண்டுகளும் அதற்கு மேலும் முதலீடு செய்து காத்திருந்தால் பொதுவில் வங்கி வட்டிகளைவிட கூடுதலான வருவாயே கிடைக்கும். மேலும் மாதந்தோறும் ஒரு தொகையைத் தொடர்ந்து சந்தையில் சேமித்து வருவதும் ஒரு சிறந்த யுத்தியாகும்.

மாதந்தோறும் தொடர்ந்து சேமிக்கும்போது நீங்கள் வாங்கும் விலைகள் சராசரியில் கூடுதலும் இன்றி குறைவானதும் இன்றி மத்திமமாக இருக்கக் காணலாம். ஏனென்றால் ஒரு மாதம் கூடுதல் விலையில் வாங்கியிருப்பீர்கள். இன்னொருமாதம் குறைந்த விலையில் வாங்கியிருப்பீர்கள். இப்போது சராசரி விலையைப் பார்த்தால் இரண்டிற்கும் இடைப்பட்டதாக கூடுதலும் இன்றி குறை வானதுமின்றி இருக்கக்காணலாம். ஐந்தாண்டுகளுக்குப் பிறகு இத்தகைய முதலீட்டின் விற்கும் விலையைப்பார்த்தால் வங்கி வட்டிகளைவிடக் கூடுதலாக இருக்கக்காணலாம்.

பேராசை பெருநட்டத்திற்கும் வழிவகுக்கும். திட்டமிட்ட நீண்டகால முதலீடு செல்வப் பெருக்கத்திற்கு வழி வகுக்கும். பங்குச் சந்தையை காசினோவாகப் பயன்படுத்த வேண்டுமா அல்லது வளர்ச்சிக்கும் பயன்படுத்த வேண்டுமா என்பதை நீங்கள் தான் முடிவு செய்து கொள்ளவேண்டும்.

சந்தையில் நூற்றுக்கணக்கான பங்குகள் உள்ளன. மியுச்சுவல் பண்டுகளோ இன்னும் ஏராளம். இவற்றில் அனுபவம் இன்றி தானே முதலீடு செய்யத் தலைப்படுவது பலருக்கும் துன்பத்தையே தரக்காண்கிறோம். தகுந்த ஆலோசகரின் உதவியுடன் முதலீடு செய்வது என்பது குருடன் கோலின் துணையுடன் நடப்பததற்குச் சமம். ஆலோசகரின் உதவியுடன் முதலீடு செய்யும் போதும் லாப நட்டங்கள் வரவே செய்யும். ஆனால் தகுந்த ஆலோசகரை நாடும் போது நட்டங்கள் விரலுக்கு ஏற்றதாகவும், லாபங்கள் வங்கி வட்டியை விட சற்றே அதிகமாகவும் இருக்கக் காணலாம்.

■ ■ ■


பெரி. முத்துராமன்
நிதித்துறை ஆலோசகர்

நிதித்துறை ஆலோசனைகளுடன்
கூடிய சேவை

**Perrii Muthuraman**
MBA, M.COMM, PFP
Financial Advisor
Scotiabank
Direct Line:
**416 439 3040 X:2010**

DIRECT
416-277-1453

FREE MARKET EVALUATION
PRE- APPROVAL


$145,990
Scarborough
3-bedroom
fully laminate floor
w/o to balcony


$169,500
Scarborough
2-bedroom
Corner unit
Appx 1250 sq ft


$214,900
Warden/St.Claire
2+1- bedroom
Close to TTC


$287,900
Scarborough
Detached house
3+1 bedroom
Clost to 401 & schools


$364,900
Denison /Markham
Detached House
3 bedroom
Fully hardwood floor


$379,900
Mississauga
Semi-Detached House
3 bedroom, close to Hospital
Full hardwood floor


$419,000
16th/Mccowan
Detached House
4 bedroom
Hardwood floor


$425,000
Steeles/Stains
Detached House
4 bedroom
Demand location


$459,200
Pickering
4+1 bedroom
Fully new hardwood floor
Clost to pickering town centre

HOMELIFE HIGHER STANDARDS



THAVARAJ
LOGASUNDARAM
SALES REPRESENTATIVE

HOMELIFE FUTURE REALTY INC.
262 MARKHAM ROAD, SCARBOROUGH, ON, M1J 3C5 TEL: 416-264-0101 FAX: 416-261-1519
EMAIL: THAVARAJL@YAHOO.CA
*Independently Owned and Operated, Realtor
Higher Standards Agents... Higher Results

# இந்திய சந்தை முதலீட்டாளர்களுக்கு கவர்ச்சி

மாறன் செல்லையா
- நிதி திட்டமிடல் ஆலோசகர் -
maran@thaiveedu.com



இந்தியாவின் பங்குச் சந்தையைப் பற்றியும் இந்தியாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி பற்றியும் பலமுறை எழுதியிருந்தும் அங்கு எப்படி முதலிடுவது என்று எழுதவில்லை. அதற்கான முயற்சிதான் இந்தக் கட்டுரை.

இந்தியாவின் பங்குச் சந்தை நிலவரங்களை ஆய்ந்த Levi Folk என்ற ஆய்வாளர் இந்திய சந்தையின் விலைகள் மிகக் கவர்ச்சிகர-மாக இருப்பதாகவும் ஒரு நீண்ட காலத்திற்கு மேல் நோக்கிச் செல்லக்கூடியதான ஒரு சூழல் அங்கு தெரிவதாகவும் குறிப்பிட்டுள்-ளார். அண்மைக் காலங்களில் சுட்டிகளில் நடந்த திருத்தங்கள் காரணமாக வீழ்ச்சி-யைக் கண்ட சுட்டிகள் இந்தியாவின் பொருளாதார ஆரோக்கியம் காரணமாக மேல்நோக்கிய பயணத்தை இனிவரும் காலங்களில் ஆரம்பிக்கும்.

April 2007ல் இந்தியச் சந்தை சூடுபிடிக்கிறது என கூறி அங்கு ஒரு சரிவு காத்திருக்கிறது என திரு. Folk எழுதியதைத் தொடர்ந்து வந்த மாதங்களில் பங்குச் சந்தை சுட்டி-களில் திருத்தம் காணப்பட்டது. அத்துடன் பணவீக்கம் அதிகரித்து வட்டி வீதங்களும் அதிகரிக்கப்பட்டு வங்கிகளுக்கு சில கட்டுப் பாடுகளும் அறிவிக்கப்பட்டது. இந்த பண வீக்கமும், வட்டி வீதங்களும் இந்தியாவின் வளர்ச்சியை கட்டுப்படுத்தியது. இதனால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி குறையும் என்று எதிர்பார்த்த போதும் இந்த அதிகரிப்புக்களினால் சூடான இந்திய பொருளாதார வளர்ச்சி குறைவு சற்று மெத்தனமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்தகால பங்குச் சந்தை திருத்தங்களுடன் ஒரு பொருளாதாரச் சரிவும் இந்தியாவில் ஏற்பட்டிருந்தது. 1997 – 1998 ஆகிய நாணய சிக்கல், 2001 – 2002இல் ஏற்பட்ட உலக தொழில்நுட்ப நிறுவனங்களில் ஏற்பட்ட பிரச்சினை போன்றவற்றால் இந்திய GDP 4%மாகக் குறைந்தது. இந்த இரு சந்தர்ப்பங் களிலும் நிறுவனங்களின் லாபம் எதிர்மறை-யாக இருந்தது.

ஆனால், கதை இம்முறை வித்தியாசமாக இருப்பதாகத் தெரிகிறது. பொருளாதாரம் மெத்தனமடைந்தாலும் வளர்ச்சி வீதம் ஆரோக்கியமாகவே இருக்கிறது. இந்தப் பொருளாதார மெத்தனத்திற்கான காரணம் வேறு. கடந்த காலங்களில் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தது. இன்று இந்தியா பல விதங்களிலும் தாக்கங்களுக்கு ஆயத்தமாக இருக்கிறது. இன்று மெத்தனமான வளர்ச்-சியை விட அதிகம் சூடாகிவிடும் என்பதே ஆய்வாளர்களின் பிரச்சினையாக உள்ளது.

The Reserve Bank of India தனது வட்டி வீதங்களை 9%ஆக உயர்கின்றது. இது பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவாகும். கடந்த July மாதம் பொருளாதார வளர்ச்சி 12% ஆகும். Reserve Bank வளர்ச்சியைக் கட்டுப்பாட்டுள் வைத்திருக்க மிகவும் அவ-தானமாக உள்ளது.

தற்போதைய நிலையில் பணவீக்கம் குறைந்து ஒரு ஆரோக்கியமான நிலை ஏற்படும். இந்தியாவிற்கு 2008இல் 8% வளர்ச்-சியை IMF எதிர்வு கூறியுள்ளது. அத்துடன் Bombay சந்தை சுட்டி 2008இல் 17% 2009 இல் 20% உயரும் என பல ஆய்வாளர்க-ளும் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய பொருளாதார வளர்ச்சியைப் பார்க்கும் போது இந்திய Bombay சந்தைச் சுட்டி மிகக் கவர்ச்சிகரமான நிலையில் இருக்கிறது. சதையில் Price/Earning எண்கள் மிகக் குறைவாக உள்ளன. இந்த எண்கள் சந்தையில் இனிமேல் ஆரோக்கியமாக மேலே செல்லும் என்பதற்கு ஒரு காட்டி-யாகும்.

இந்திய பொருளாதாரம் ஒரு முதிர்ச்சி நிலையை நோக்கிச் செல்லும் போது கடந்த கால அதிர்ச்சிகளை தாங்கிக் கொள்ளக் கூடிய ஸ்திரத் தன்மையை நோக்கி வளர்ச்சியடைகின்றது. பணவீக்கம் போன்றவற்றைக் கட்டுப்பாட்டுள் வைத்திருந்து இந்திய அரசு எடுக்கும் முயற்சிகள் ஆரோக்கியமானவையாகும்.

இந்த நிலையில் இந்தியாவில் முதலிடுவ-தற்கு இலகுவான வழிகளாக கனடிய நிறுவனமாக Excel India Fund நீண்ட கால வளர்ச்சியை மனதில் கொண்டு ஆரோக்கி-யமான இந்திய நிறுவனங்களில் முதலிட்டு வருகிறது. இந்த நிறுவனங்களில் முதலிட மிக அடிப்படையான ஆராய்ச்சிகளைச் செய்து எந்த நிறுவனங்களில் எப்படி முதலிடுவது என தீர்மானிக்கும். பல சந்தர்ப்பங்களில் இந்திய நிறுவனங்களால் விநியோகிக்கப்படும் கடன் பத்திரங்களிலும் இவர்கள் முதலிடுவது உண்டு. இந்த Excel Fund நிறுவனம் பல முதலீட்டாளர்களுக்கும் வசதியாக பல வித்தியாசமான முதலீடுகளை உருவாக்கி உள்ளார்கள். முதலிட விரும்பு வோர் ஒரு நல்ல ஆய்வுக்குப் பிறகு தங்களது நிலவரம், எப்போது பணத்தை எடுக்க வேண்டும். என்பவற்றை ஆய்ந்து முடிவு எடுக்க வேண்டும். இந்த வகையான முதலீடுகள் ஒரு நீண்ட கால முதலீடுகளா-கும். அடுத்த ஆண்டு வீடு வாங்குவதற்கோ அல்லது ஒரு குறுகியகாலத்தில் இலாப-மடையவோ இப்பேர்பட்ட முதலீடுகள் உதவாது.

5 தொடக்கம் 8 ஆண்டுகள் வரை பொறுமை-யாக இருக்கக்கூடிய நிலையிலேயே இந்த முதலீடுகளை செய்ய முடியும்.

இந்தியாவைப் பற்றி எம்மவருக்கு பல கருத்துக்கள் இருக்கலாம். ஆனால் அங்கு பலரும் முதலிட்டு பணம் பண்ணி வருகிறார் கள் என்பதில் இரு கருத்துக்கள் இருக்க முடியாது..

■ ■ ■

YOU ARE THE LEADER
OREA Trained Real Estate Leader
"Your Satisfaction Is My Success..."



Neilson/Mclevin



High View / Whites
(Finished Basement w/ Pool)



Neilson / Tapsscott



MANGA ARUNASALAM
Real Estate Broker
Commercial & Residential
HomeLife Metro Realty Inc. Brokerage
Independently Owned & Operated
5200 Finch Avenue East, Suite 206
Scarborough, ON M1S 4Z4

HOMELIFE
HIGHER STANDARDS

Selling Commision From 1%
New & Powersale Homes Also Available

CELL: (416) 816 8775 TEL: (416) 293 5093
RES: (905) 944 9604 FAX: (416) 293 5237

உங்கள் குழந்தைகளின் உறுதியான எதிர்காலத்திற்கான முதலீடு




HERITAGE EDUCATION FUNDS

Save towards your child's post-secondary education and find out how the government can help you pay for it.

- With a Heritage Education Funds RESP How much can you comfortably save?
- Want to start building your child's future today?
- 40 years of RESP expertise helping families from coast to coast.
- Start Early, Invest often, Stay invested.
- Start saving now and plan for your child's future possibilities.

We are also hiring sales representatives that are self motivated and are capable of building their own business.

HERITAGE Educational Foundation

Thaya Balan
(Agency Director)
416.831.4725



digi



அமைதியான வாழ்க்கைக்கு ஓர் அருமையான தீர்வு காப்புறுதி

Life Insurance • Critical Insurance • Long Term Coverage • Disability Insurance
Final Expenses • Dental & Hospital Expenses • Travel Insurance

All your Insurance Needs

digi



Thaya Balan
Licensed Insurance Broker

Dir: 416.831.4725
Morning Star Financial Service
5050 Dufferin St., Suite 218, Toronto, ON M3H 5T5
Tel: 416.661.9155 ext. 340

INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
MEDAVIE BLUE CROSS
TRANSAMERICA REINSURANCE
Canada Life
Manulife Financial
RBC Insurance

# Shan Thayaparan



Sales Repesentative

**To Sell or Buy Call**

## "Shan's Home Team"

**Dir: 416.567.7675 / Bus: 416.321.6969**

**Web:www.shan123.com E-mail: shan123@rogers.com**

"FREE MARKET EVALUATION"
"FLEXIBLE COMMISSION"

Your peace of mind is our goal.....

**HomeLife GTA Realty Inc. Brokerage**

206 - 1711 McCowan Rd., Scarborough, ON. M1SS 3Y3

Not Intended to solicit properties currently listed for sale or buyers under contract






## Looking for.......

> Mortgages
> Refinancing
> 2nd Mortgages
> Business Loans

**Call 416-826-7426**

**Your call will be answered**




**Call Now**
**416-826-7426**

## Are you a Landlord?
## Looking for good tenants?
## Don't worry...............

We will help you to find good tenants.
We Do...
> MLS Listing of your property
> Credit, Reference & Employment Check
> Post dated Cheques for a year
> Your Peace of Mind for a One month Rent.

# பயங்கர மனநோயாளிகள் (Psychopath)

- சிவா சுப்ரா -
sivasubra@thaiveedu.com

"I wanted to be most prolific killer in Canadian history" - நீதிபதியிடமே தன்னுடைய குரூரமான கனவினை வெளிப்படுத்தியவன் தான் Ferrier. ஒரு போதும் குணப்படுத்த முடியாத மனநோயாளியான இந்த Ferrier (31) பதினேழு வருடங்களுக்குப் பின்னர் கனடாச் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டான்.

"நான் மூன்று கொலைகளைச் செய்துள்ளேன். ஆனால் ஒரு போதும் அதற்காக மாட்டிக் கொள்ளவில்லை" Ferrier உளவியல் நிபுணர் ஒருவரிடம் குறிப்பிட்டுள்ளான். இது அவன் தொடர்பான பத்திரங்களில் குறிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான பாலியல் பலாத்காரங்கள், உட்பட 60க்கும் மேற்பட்ட குற்றச் செயல்களுக்காக நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட இவன் Warkworth Prison in Campbellford வில் இருந்தே விடுவிக்கப்பட்டான். இதே சமயம் 'குணப்படுத்த முடியாத மனநோயாளி' என்று சிறைச்சாலை மருத்துவரால் சித்திரிக்கப்பட்ட இவன் குறித்து பொதுமக்களுக்கு Peel Regional பொலிசார் எச்சரிக்கைகளை விடுத்தனர்.

விடுலைக்குப் பின்னர் Brampton பகுதியிலேயே தான் வாழப்போவதாக Ferrier தெரிவித்ததைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் பெரும் அச்சமும் பீதியும் அடைந்தனர்.

"இது பயங்கரம்! இவனை விடுலை செய்து விட்டார்கள் என்று என்னால் நம்பமுடியாமல் உள்ளது. எப்படி இவனை பொதுமக்களுடன் வாழ அனுமதித்தார்கள்?" என்று ஒரு பெண்மணி தன்னுடைய பயத்தை வெளிப்படுத்தினார்.

"எனக்கு மூன்று இளம் குழந்தைகள் உள்ளன. என்ன சொல்வது என்றே எனக்குத் தெரியவில்லை. நான் நினைக்கின்றேன் இவனை இன்னம் நீண்ட காலத்திற்கு சிறையிலேயே வைத்திருக்கலாம்" என்று இன்னொரு பெண் பீதியோடு கூறினார்.

> **"*Psychopath*கள் உங்கள் நண்பராக இருக்கலாம்.**
> **உங்கள் மேலதிகாரியாகவும் இருக்கலாம்.**
> **காதலனாகவோ காதலியாகவோ இருக்கலாம்.**
> **அல்லது கணவராக, அரசியல்வாதியாக,**
> **கடவுளின் பெயர் சொல்லி**
> **சித்து வித்தை காட்டும்**
> **மகானாகக்கூட இருக்கலாம்."**

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல "விடுலையாகினால் அவன் என்னைக் கொன்றுவிடுவான்" என்று Ferrierயினை பெற்ற தாய் பயத்தில் கதி கலங்கி அலறினாள்.

விடுதலைக்குப் பின்னர் Brampton ஹொட்டல் ஒன்றில் தங்குவதற்குச் சென்ற Ferrierக்கு அனுமதி மறுக்கப்பட்டது. கிறடிட் காட், மற்றும் அடையாளத்தை உறுதி செய்வதற் கான ஆதாரங்களும் அவனிடம் இல்லை என்று காரணம் சொல்லப்பட்டது.

இரவு பத்து மணிக்குப் பிறகு தங்குவதற்கு இடம் எதுவும் இல்லாத நிலையில் Peel 22 Division பொலிஸ் நிலையத்தில் Ferrier தஞ்சம் அடைந்தான்.

இதே சமயம் தொலைக்காட்சி நிருபர் ஒருவருக்குக் கொலைப் பயமுறுத்தல் விடுத்ததாக Ferrier மறுநாள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டான். முதல் நாள் அவனை நிபந்தனைகளுடன் விடுதலை செய்த அதே நீதிபதியால் மறுபடியும் இரண்டு வருடச் சிறைத் தண்டனை அவனுக்கு விதிக்கப்பட்டது.

அப்பாடா ஒரு வழியாக இந்தச் சிக்கல் இப்போதைக்கு தீர்ந்தது என்று பெருமூச்சு விடாதீர்கள். கனடாவில் மாத்திரம் 300,000 Psychopath இருக்கின்றனர் இது எம்மாத்திரம். வட அமெரிக்காவில் இரண்டு மில்லியன் Psychopath உள்ளனர்.

இந்த psychopath கள் உங்கள் நண்பராக இருக்கலாம். உங்கள் மேலதிகாரியாகவும் இருக்கலாம். காதலனாகவோ காதலியாகவோ இருக்கலாம். அல்லது உங்கள் குடும்பவைத்தியராக, உங்கள் கணவராக, அரசியல்வாதியாக, கடவுளின் பெயர் சொல்லி சித்து வித்தை காட்டும் மகானாக, பெரும் தொழில் அதிபராகக் கூட இருக்கலாம்.

### எப்படி இவர்களை அடையாளம் காணுவது?

சாதாரணமாக இவர்களை அடையாளம் காணமுடியாது. அதி வசீகரமானவர்கள் (superficial charm). பார்த்த மாத்திரத்தில் மற்றவர்களை தம் பக்கம் கவர்ந்து இழுத்து விடும் ஏதோ ஒன்று இவர்களிடம் எப்போதும் இருக்கும். புத்திசாலிகள். வார்த்தைகள் எந்தவிதமான தடையும் இல்லாமல் அலை அலையாக வந்து விழும்.

இவர்கள் பேசுவதை வாய்பிளந்து கேட்டுக் கொண்டே இருக்கலாம். பொய் பேசுவது தண்ணீர் பட்டபாடு. Lie detector இவர்களைக் கண்டால் பயந்து ஓடிப்போய் விடும். மிக நேர்த்தியாக பொய் சொல்வதில் தேர்ச்சி பெற்றவர்கள். பாவம் இவர்கள் உண்மையை பேசுவதுவதற்கு மட்டும் சரியாகக் கஸ்டப்படுவார்கள்.

தொடர் கொலைகள், பெரும் கிரிமினல் குற்றங்களுடன் தொடர்பு படுத்தி எப்போதாவது பத்திரிகைகளில் இவர்களின் பெயர் வரும் போது இவர்களைப் பற்றித் தெரிந்து கொள்வீர்கள். ஒரு Psychopath உடன் தொடர்பாக இருந்திருக்கின்றீர்களோ என்று அப்போதாக நிச்சயம் உங்களுக்கு திகைப்பாக இருக்கும். அதிகமான White - collar கிரிமினல்கள் எல்லாரும் Psychopathகளே ஆகும்.

உங்கள் ஆறுதலுக்காக ஒன்றைச் சொல்லாம். உண்மையில் பெரும்பான்மையான Psychopathகளால் ஆபத்து எதுவும் இல்லை. விரல் விட்டு எண்ணக் கூடிய சிறிய எண்ணிக்கையானவர்களே ஆபத்தானவர்கள். Psychopath எல்லாரும் கொலைகாரர்களும் இல்லை. ஆனால் தமக்கு தேவை என்று கருதும் போது கொலையும் செய்யத் தயங்க மாட்டார்கள்.

ஒவ்வொரு Psychopathக்கும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய தனிப் பண்பும் இருக்கும். Psychopathகளின் முக்கியமான பிரச்சனை அவர்களின் மூளையிலேயே இருக்கின்றது.

மூளையில் ஒன்றல்ல பல குறைபாடுகள் இவர்களுக்கு இருக்கும். சமூக கட்டுப்பாடுகள், கோட்பாடுகள், சட்டங்கள் ஒரு விளையாட்டாகவே இவர்களுக்கு இருக்கும். எப்போதுமே இதை மீறிக்கொண்டிருப்பார்கள். ஒரு வார்த்தையில் சொல்லுவதாயின் இவர்கள் மிக 'அபாயகரமான பேர்வழிகள்'.

தமது இலட்சியங்களுக்கு எதிராக குறுக்கே இருக்கக் கூடிய எதையும் விட்டுவைக்க மாட்டார்கள். ஆனால் இவர்களில் பெரும்பாலானோர் சிறைகளுக்குள் இல்லை. ஏன் என்றால் இவர்கள் புத்திசாலிகள். திட்டமிட்டுக் காரியங்களைச் சாதிப்பதில் வல்லவர்கள். குளிர்சாதனப் பெட்டிக்குள் தான் கொலை செய்த மனிதத் தலைகளை அழகாக அடுக்கி அழகு பார்த்துக் கொண்டே பொலிஸ்மா அதிபருடன் வெகு கூலாக 'பியர்' அருந்தக் கூடிய மனவலிமையும், செல்வாக்கும் இருக்கக் கூடியவர்கள். அடிக்கடி பொலிசாரிடம் மாட்டிக்கொள்கின்ற Psychopathகளும் இருக்கத்தான் செய்கின்றார்கள். இதற்குக் காரணம் இவர்களுக்கு கொஞ்சம் 'அறிவு' குறைவு என்பதே.

"நெருப்பு" என்று ஒரு குரல் கேட்கும் போது உங்களுக்கு 'திகீர்' என்று இருக்கும். "தண்ணீர்" என்று சொல்லும் போது 'குளிர்ச்சியாக' இருக்கும். ஆனால் Psychopathகளுக்கு இந்த விடயத்தில் பெரும் சிக்கல் இருக்கின்றது. 'நெருப்பு', 'தண்ணீர்', 'பூ', 'இரத்தம்'. 'மரணம்' என்ற எந்த சொற்களுக்கும் இவர்களின் மூளையில் வித்தியாசம் தெரியாது. கோரமாக இறந்து கிடக்கின்ற ஒரு உடலைப் பார்த்துக் கொண்டு ஐஸ்கிறீமை சுவைத்துச் சாப்பிடக் கூடிய மனநிலை இவர்களுக்கு உள்ளது என்றால் புரிந்து கொள்ளுங்கள் இவர்களைப் பற்றி.

தாம் செய்கின்ற தவறுகளுக்காக இவர்கள் என்றுமே மனம் வருந்துவதில்லை. குற்ற உணர்வு என்றால் என்ன என்று இவர்களுக்குத் தெரியாது. இதற்கும் மேலாக வெட்கம், அவமானம் போன்ற உணர்ச்சிகளும் இவர்

36ம் பக்கம் பார்க்க...


## சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில் முழுநேர நெறியான சேவை

"சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி"

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 9000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 90க்கும் மேலான துரித காப்புறுதி இழப்பீடுகள்.
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors) .
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services).
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்.
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்.
  - பிரபல எழுத்தாளர்கள்.
  - வைத்தியர்கள்.
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 275,000 வரை காப்புறுதி

## - சக்திவேல் -

தொலைபேசி: 416.706.3530, 905.428.9299, 905.763.8912
Fax: 905.428.9307 Email: george14@sympatico.ca

மன்னிக்கவும்!
வாகனக் காப்புறுதி (Car Insurance), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!

# பயங்கர மன...

35ம் பக்கத் தொடர்ச்சி...

களுக்குக் கிடையவே கிடையாது. கட்டுப்பாடுகள் இவர்களுக்குப் பிடிக்கவே பிடிக்காது. குழப்பங்கள் ஏதாவது நடந்தால் மிகவும் ஆசையோடு இரசித்துப் பார்ப்பார்கள்.

தன்னைச் சூழ உள்ளவர்களும் மனிதர்கள் தானே என்ற எண்ணம் இவர்களுக்கு ஒரு போதும் தோன்றுவதே இல்லை. மனிதர் களைப் பார்க்கின்ற போதேல்லாம் அது தமக்குக் கிடைத்துள்ள ‘வாய்ப்புக்கள்’ என்றே இவர்களுக்குத் தோன்றும். மற்றவர்களுடைய உரிமை பற்றி இவர்கள் ஒரு நாளும், ஒரு போதும் சிந்திப்பதே கிடையாது. மற்ற மனிதர்களின் உணர்ச்சிகளைப் பற்றிய எந்த வித கவலையும் இவர்களுக்குக் கிடையாது. இவை எல்லாவற்றுக்கும் காரணம் இவர்களின் மூளையில் இதற்குரிய System விருத்தி அடையாததே என்று சொல்லப்படுகின்றது.

நீண்ட கால நட்புகள், நெருங்கிய உறவுகள் என்பது இவர்களுக்கு இருக்கவே முடியாது. நீண்ட காலத்திற்கு ஒரே வேலையையும் செய்வது இவர்களுக்கு கடினமாய் இருக்கும். புதிய நபர்களால் நன்மை அதிகம் என்று கருதினால் உங்களை கைவிட்டு அடுத்த இடத்திற்கு தாவி விடுவார்கள்.

அன்பு என்றால் என்ன என்று இவர்களுக்குப் புரியாது. குழந்தைகளுக்குக் கூட அன்பைக் கொடுக்க முடியாதவர்கள் (ஆனால் அன்பைச் சொரிவது போல மிக அழகாக நடிப்பார்கள்). ஆதனால் இவர்களுக்கும் உண்மையான அன்பு கிடைப்பது வெகு அரிது.

மதத் தலைவர்களாக பல Psychopathகள் இருக்கின்றார்கள். தம் வழி தொடர்பவர்கள் ஏதாவது காரியத்தில் வெற்றியடையாமல் போனால் அதை ஒரு பெரும் குற்றமாக உணரும்படி செய்து விடுவார்கள்.

தன்னைப் பின் தொடர்பவர்களின் விசுவாசத்தில் இவர்களுக்கு எப்போதும் சந்தேகமே இருக்கும். பின் தொடர்பவர்களின் விசுவாசத்தை அடிக்கடி பரிசோதித்துப் பார்த்துக் கொண்டே இருப்பார்கள். அது கடுமையான, இரக்கமற்ற, கரடுமுரடான வழிகளாக இருக்கும்.

கடுமையான சட்டங்கள், தண்டனைகளை தனது சீடர்களுக்கு வழங்குவது இவர்களுக்கு பெரும் சந்தோசமான காரியம். வார்த்தைகளால் கீறுவது மட்டுமல்ல கத்தியால் கீறுவதும் இவர்களுக்கு பெரும் கிளர்ச்சியை உண்டு பண்ணக் கூடிய விருப்பமான விடயமாகும்.

தமது திட்டத்திற்கு மாறாக ஏதாவது பிழைகள் நடந்து விட்டால் அதற்குக் காரணம் தான் என்று ஒருபோதும் இந்த Psychopathகள் நினைக்கவே மாட்டார்கள். ‘இந்த விடயம் பிழைத்ததற்குக் காரணம் மற்றவர்களே’ என்று எப்போதும் குற்றம் சாட்டுவார்கள்.

முறையின்றி கண்டபடி பால் உறவு கொள்கின்ற விருப்பமும், பாலியல் வன்முறைகள் செய்வதிலும் பெரும் விருப்பம் இவர்களுக்கு இருக்கும். ஆனால் தன்னை வழிபடுபவர்களுக்கு காதல், பாலியல் தொடர்பாக கட்டுப்பாடுகளையும் வகுத்திருப்பார்கள்.

இவர்களின் இளமைப்பராயம் எப்படி இருந்திருக்கும்? என்று கேள்வி எழலாம்.

சிறு வயதிலேயே ‘வலி’க்குப் பயப்பட்டிருக்க மாட்டார்கள். சிலர் சிறு பராயத்தில் சிறிய விலங்குகளை சித்திரவதை செய்து இன்பம் அனுபவித்து இருப்பார்கள். பாடசாலைக்கு அடிக்கடி ‘கட்’ அடித்திருப்பார்கள். வீட்டை விட்டு ஓடிப்போயும் இருப்பார்கள். மது அருந்தல், புகைத்தல் பழக்கங்கள் மிக இள வயதிலேயே இவர்களுக்குத் தொற்றி இருக்கும். இவர்களுக்குத் தண்டனை வழங்கியே பெற்றோர்கள் களைத்துப்போய் ‘இனி இவன் / இவள் திருந்த மாட்டான்(ள்)’ என்று கைவிட்டு விடுவார்கள்.

இதுவே இவர்கள் தொடர்ந்தும் தமது வழியில் தொடர்ந்து செல்லக் காரணமாக அமைந்து விட்டிருக்கும்.

ஒரு கனேடிய தொலைக்காட்சியின் Psychopath தொடர்பான நிகழ்சியின் போது பேட்டி அளித்துக் கொண்டிருந்து மனவியல் நிபுணரிடம் ஒரு கேள்வி முன்வைக்கப்பட்டது.

“கனடாவின் பிரதமராக ஒரு Psychopath ஆல் வரமுடியுமா” என்பதுதான் அந்த சிக்கலான கேள்வி. மில்லியன் கணக்கான கனேடிய மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது அவருடைய பதில்.

எந்த வித தயக்கமும் இல்லாமல் அந்த மனவியல் நிபுணர் அளித்த அந்த அதிர்ச்சியான பதில் “ஆம் கனடாவின் பிரதமராக ஒரு Psychopathஆல் வரமுடியும்”.

கனடாவில் வரமுடியும் என்றால் இலங்கை எம்மாத்திரம் என்று நீங்கள் யோசிப்பது சரிதான்.

■ ■ ■

## பொதுக் கூட்டம்

**“இலங்கை அரசியலில் ஒரு திருப்பு முனை ஏற்படுத்திய யூலை 1883**
**25 வருடங்கள் கடந்தும் தேசிய இனப்பிரச்சனைக்கு**
**தீர்வு காணப்படவில்லை”**

**Rev. Dr. Lois Wilson**
ex-Canadian Senator and former President of the World Council of Churches;
**Mr. Mano Ganesan**
Member of Parliament from Sri Lanka;
**Dr. Vickramabahu Karunarathne**
Leader, NSSP (New Equal Society Party);
**Prof. A.R.M. Imtiyaz**
Temple University in Philadelphia, Pennsylvania;
**Prof. R. Cheran**
University of Windsor;
**Mr. Khaled Mouammar,**
President, Canadian Arab Federation.

**Sunday 14, 2008**

**4:00 - 7:00 pm**
**Ontario Federation of Labour Auditorium**
**15 Gervais Drive**
**Donmills and Eglinton**
**416-253-9947**



# உங்கள் வீட்டுக்கடன்
# வியாபாரக்கடனிற்கு என்னை அழையுங்கள்

**MORTGAGE**

**1st & 2nd Mortgages**

**New Immigrants / Self Employed / 0% Down**

**Refinance / Equity Line of Credit / Renewal**

| MORTGAGE RATES | |
|---|---|
| Variable | Prime - 1.00% |
| Fixed | Call me |

**BUSINESS**

**Commercial Mortgage**

**Business Loan upto One Million**

**Line of Credit / Personal Line of Credit**

Apex Creations - 416-297-0707



**Kethes Sivasubramaniyam**

Mortgage Consultant

**Cell : 416.873.5780**

ViaFinancial Services Inc.

Our Office : 5200 Finch Ave. E, Suite 304, Scarborough, ON. M1S 4Z5

RBC BMO Bank of Montreal TD Canada Trust Scotiabank

# வருமானவரிச்சேவையில் பலவருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால் நம்பிக்கையான சேவை

**KETVAR**

**TAX & ACCOUNTING**

304-5200 Finch Ave.E, (Middlefield & Finch)
Toronto. ON M1S 4Z5
**Tel : 416-548-8005** Fax : 416-548-8006
Email : ketvar@gmail.com

- Personal Tax
- Small Business Tax
- E-File Services
- Arrange RRSP
- Maximum Refund
- Tax Saving Advice



# ஆபத்தான சாரதியா நீங்கள்?

**செந்தூரன் புனிதவேல்**
- காப்புறுதி முகவர் -

நாம் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் ஆபத்தான சாரதியாக இருந்திருப்போம். எங்கள் கவனத்தை திசைதிருப்ப சில சமயங்களில் C.D. மாற்றுவதற்கு, வாகனத்தில் இருந்து குழந்தை அழுவது, அவசரம் இப்படி பல காரணங்கள் இடம் கொடுப்பதுடன் இன்றைய நவீன மயப்படுத்தப்பட் வாகனங்களும் பாதைகளும் கூட காரணமாகின்றது. முன் எப்போதுமில்லாமல் வேகமாக வாகனத்தை செலுத்துவதால் இப்படி எல்லாம் நடக்கிறது.

கனடாவில் ஒவ்வொரு நாளும் ஏழுபோருக்கும் அதிகமானவர்கள் வாகனவிபத்துகளில் உயிர் இழக்கிறார்கள். இது வன்முறையால் ஏற்படும் மரணங்களிலும் ஐந்து மடங்கு அதிகமாகும். ஆனால் கொலைகள் தாம் பத்திரிகை தலையங்கங்களில் காணப்படுகின்றது. ஆபத்தான விதத்தில் வாகன விபத்துகள் ஏற்படும் வேளைகளில் அவை முதல்பக்க செய்தியாக வருவதில்லை. இதில் வேதனைக்குரிய விடயம் என்ன வென்றால் இந்த மரணத்தை ஏற்படுத்திய சாரதியோ அல்லது மரணித்தவரோ விரும்பவில்லை என்பதுடன் இது தவிர்க்கப்படக் கூடிய ஒன்று.

> “கனடாவில் ஒவ்வொரு நாளும் ஏழுபோருக்கும் அதிகமானவர்கள் வாகனவிபத்துகளில் உயிர் இழக்கிறார்கள். இது வன்முறையால் ஏற்படும் மரணங்களிலும் ஐந்து மடங்கு அதிகமாகும்.”

எவ்வளவு பிரசங்கம் செய்தாலும் இதை மக்கள் உணருவதாகத் தெரியவில்லை.

வேகத்தைக் குறைத்து வேதனையை தவிர்த்துக்கொள்ளுங்கள்.

அண்மையில் பிரிடிஷ் கொலம்பியா காப்புறுதி அமைப்பு (அரசாங்கம் நடத்துவது) இளைஞர்கள் சம்பந்தப்பட்ட மரண விபத்துகளில் 60 விழுக்காடு வேக மிகுதியால் ஏற்பட்டது என கணித்துள்ளார்கள்.

வாழ வேண்டிய இளைஞர்கள் இப்படி மரணிக்க வேண்டுமா?, சில விபத்துகள் 60 கி.மீட்டர் வேகத்தில் செலுத்தவேண்டிய பாதையில் 150 கி.மீட்டர் வேகத்தில் செலுத்தி விபத்துக்குள்ளாகி இறந்துள்ளார்கள். இது தேவைதானா என்று சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் பொலீஸ் டிக்கட்டிற்கு பயந்து மெதுவாக ஓட்டுவதிலும் ஒரு முட்டாளின் பிணமாக மாறாதிருப்பதற்கு சற்று வேகத்தை குறைத்து செலுத்தலாமல்லவா.

### யமன் வந்த செல்போன்

ரிச்சட் ஸ்குவி என்பவர் சாதாரணமாக எல்லா கனேடியர்களும் செய்வதைத்தான் செய்தார். அவரும் அவர் இரண்டுவயது மகளும் சில வருடங்களுக்கு முன் புகை வண்டியில் அடிபட்டு இறந்தார்கள்.

ஸ்குவி செல்போனில் கதைத்தவண்ணம் புகைவண்டி கடவையை நோக்கி பிக்கரிங்கில் செலுத்திக்கொண்டிருந்தார். அங்கு சிவப்பு விளக்கு எரிவதையோ, மணி அடிப்பதையோ அவர் கவனிக்கவில்லை. அவர் அவதானம் முழுவதும் சம்பாஷணையில் இருந்தது. மெதுவாக வந்துகொண்டிருந்த CP ரெயில் ‘கூட்ஸ் வண்டி’ அவர் வாகனத்தை இடித்து பலநூறு அடிக்கு அப்பால் கொண்டு செலுத்தி நின்றது. மரணப் பரிசோதனை வைத்தியர் ஒண்டாரியோ மானில அரசாங்கத்திற்கு வாகனம் செலுத்துகையில் செல்போன் பாவிப்பதை தடை செய்யும் சட்டத்தை கொண்டுவருமாறு சிபாரிசு செய்தார். அந்த அதிகாரி செல் போன்கள், வானொலிகேட்பது அல்லது சக பயணியுடன் கதைப்பதிலும் கூடிய கவனக்குறைவை ஏற்படுத்தும் என்று அவதானித்துள்ளார்.

பலர் செல்போன் கதைப்பதும் அருகில் உள்ளவருடன் கதைப்பதும் ஒரே அளவு கவனக்குறைவை ஏற்படுத்துகிறது என்று வாதிடுகிறார்கள். ஆனால் வைத்திய அதிகாரி குறிப்பிடுகையில் பல சந்தர்ப்பங்களில் சகபயணி கவனத்தை சற்று திருப்பினாலும் பல சந்தர்ப்பங்களில் ஆபத்துகளை சுட்டிக்காட்டி விபத்துகளை தவிர்த்துக்கொள்ள உதவியுள்ளார்கள் என்று தெரிவித்துள்ளார்.

இன்று கனடாவில் செல்போன் பாவிப்பு பெருமளவில் கூடியுள்ளது. முன்பு ஓர் இருவர் பாவிக்கையில் வீதியில் ஓர் இரு முட்டாள்கள் தான் வாகனம் செலுத்தினபடியால் மற்றைய சாரதிகள் முட்டாள்களை அனுசரித்து செல்ல முடிந்தது. ஆனால் எண்ணிக்கை பெருமளவில் கூடியுள்ளதால் சட்டமூலம் இந்த ஆபத்தை தவிர்க்க வேண்டியுள்ளது.

சில வருடங்களுக்கு முன் அலாஸ்காவில் விபத்தை ஏற்படுத்திய சாரதிக்கு கொலை வழக்கு பதியப்பட்டது. DVDஇல் படம் பார்த்துக்கொண்டு செலுத்தியுள்ளார்.

தற்போது மினிவான்கள், போன்றவற்றில் தொழிற்சாலையில் செய்யப்படும் வேளையில் DVD படச் சாதனமும் வீடியோ விளையாட்டுகளும் பூட்டப்படுகிறது. இவை பயண சலிப்படைந்த பிள்ளைகளும், பராமரித்து களைத்துப்போன பெற்றோருக்கும் பெரும் வரவேற்கப்படுவதொன்றாகியது. ஆனால் இதில் பிரச்சினை என்னவென்றால் சில சமயங்களில் பின்னால் இருந்த DVDகள் முன்னால் தாவிவிடுவதே.

வாகனத்தைச் செலுத்துவது ஒரு பெறுப்பான வேலை. செலுத்துவதில் முழு அவதானமாயிருப்பதவசியம். பல வேலைகள் செய்ய முற்படுவதால் விபத்துகள் ஏற்படுகின்றன. சாரதிகளிடம் செய்த கணிப்புப்படி 80 வீதமானவர்கள் வேறு வேலைகள் செய்ததை ஒப்புக்கொண்டுள்ளார்கள். அதேவேளை 90% மானவர்கள் மற்றவர்கள் வாசிப்பதை சாப்பிடுவதை, செல்போனில் விவாதிப்பதை அவதானித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்கள். மேலும் 84% விகிதமானவர்கள் தாம் அவசரப்பட்டு (aggressive drive) வாகனத்தை செலுத்தியுள்ளதாயும் அதற்கு காரணமாக 74% விகிதமானவர்கள் இயலாமையையும் சலிப்பையும் தெரிவித்துள்ளார்கள். பலர் மேக்கப் போடுவது, சேவ் எடுப்பது, இப்படியே பட்டியலை நீட்டிக்கொண்டே போகலாம்!.

2002ம் ஆண்டு ஒரு அமெரிக்க காப்புறுதி அமைப்பு வாகனங்களில் உண்ணப்படும் உணவுகளினாலும் விபத்தேற்பட்ட பட்டியலை பிரசுரித்திருந்தது. இதில் காப்பி முதலிடத்தையும் அடுத்து உஷ்ணமான சூப்பும் இடம் பெற்றுள்ளது. நல்ல காலம் அவர்கள் டொரண்டோவை கேட்கவில்லை அல்லாவிட்டால் சிக்கன் புரியாணியும் கூட வந்திருக்கும்! எங்களில் எத்தனை பேர் வேலைக்கு போகும் வழியில் Tim Hortons இல் கோப்பி எடுப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளோம். ஒரு கணிப்பின்படி 57% சாரதிகள் உண்பதாகவும் அதில் 20% சாரதிகள் சந்தர்ப்பத்தில் காலால் Steering இனை பிடித்துள்ளதாயும் தெரிவித்துள்ளனர்.

### வாகனம் செலுத்த தகுதி?

எட்மன்டனில் ஒரு சுவையான விபத்து. ஒரு பெண், மோட்டார் சைக்கிளில் வந்தவரை அடித்துவிட்டு ஓடிவிட்டார். துரத்திப் பிடித்த போது அவர் சிரித்துக்கொண்டு பாடினாராம். தான் நாயுடன் கதைப்பதாக கூறியுள்ளார். அவரை வீடியோ டேப்பில் எடுத்து வழக்கு மன்றத்தில் காட்டியபோது அவர் தான் இறைவனுடன் தொலைபேசி கதைத்ததாக கூறியுள்ளார். பொலிஸ் அதிகாரி இங்கு உம்மை ஏன் கொண்டுவந்துள்ளோம் தெரியுமா? என்று கேட்டதற்கு “நான் ஒரு கதைக்கும் நாய் அது உங்களுக்கு பகிடியாயுள்ளது” என்றார்.



நீதிபதி தண்டனை வழங்குகையில் அவர் அன்றைய தினம் போதைவஸ்து பாவிக்கா விட்டாலும் அவர் போதை வஸ்துவின் தாக்கத்தில் இருந்துள்ளார் என குறிப்பிட்டுள்ளார்.

இன்று பாதைகளில் பல மூளை பாதிக்கப்பட்டவர்கள் வாகனம் செலுத்துகிறார்கள். நீங்கள் தான் கவனமாக வாகனத்தை செலுத்தவேண்டும். உங்கள் குடும்பத்துக்கு நீங்கள் மிக்க அவசியம்.

■ ■ ■

**Tution Classes**

(at McCowan and Dennison)

From JK to Grade 8

* Math * English
* Science * Art
* Homework Help (Any Subject)
* Preparation for the Next Grade
* Computer Subjects




1 to 1 or Group classes

Please call 905-554-2496

# வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க



**Baskaran Sinnadurai**
Commercial & Residential Sales Representative
**416-880-8585**

**Home Life**
GTA Realty Inc., Brokerage*
206 - 1711 McCowan Road
Scarborough, ON. M1S 3YS
Bus: 416-321-6969
Fax: 416-321-6963


Convenience
weekly sales $12000,plus loto commission,
asking only 119,000


Convenience
weekly sales $11000- $3000 ,plus loto,Canada postal service,prolator courier, grey hound bus tickets.
Asking 149,9000


**Conin laundry :**
Very Busy Well Establish & Unattended, Coin Laundromat In High Density residential asking only $229,000.00


Industrial warehouse
10,000sq feet
$1250000


Store W/Apt/Office , Excellent Business Opportunity: 3 Newly Reno'd Apts,Variety Store & 'Cash' Store.All Rented Except convenience store asking only $379,000.00


Corner Location In The Town Main Street,Adjacent To Golf Course, Best Farmland In The Area. Asking
**$1,680,000**


Industrial Building In Scarborough
asking **$2,925,000**

# வீடு வாங்க விற்க



**Shanthy Vinay**
Sales Representative
**416-939-2288**


**Vana Shan**
Sales Representative
**416-833-2925**


**Home Life**
GTA Realty Inc., Brokerage*
206 - 1711 McCowan Road
Scarborough, ON. M1S 3YS
Bus: 416-321-6969
Fax: 416-321-6963


**Mahendran Muthukumaru**
Sales Representative
**416 3021994**


Warden/Finch
2 Bed Room 1 Washroom
**$149,000 For Sale**


Kingston/Valley Farm
2 Bedroom 1 Washroom
Excellent Location
**$299,900 For Sale**
Fabulous Investment Opportunity
Call for More Info


Lawrence/Warden
3 +1 Bedroom 2Washroom
Finished Sep Entrance
**$317,900 For Sale**


Kennedy/Eglinton
3+2 Bedroom 2Washroom
2 Kitchen
Apartment Sep Entrance
**$339,000 For Sale**


Ellesmere/Meadowvale
4+1 Bedroom 4 Washroom
Finished / Close to school
**$439,700 For Sale**


Albion/401
3+2 Bedroom 2 Washroom
2 Kitchen / Finished
**$349,900 For Sale**

# RCM பற்றிய ஒரு பார்வை...

## (Royal Conservatory of Music)

V. அஜித்
- இசையமைப்பாளர் -
ajith@thaiveedu.com



தாய்வீடு வாசகர்களுக்கு என் அன்பான வணக்கம். இசை சம்பந்தமான பல வித்தியாசமான தகவல்களை அவ்வப்போது வழங்கிவருகின்றேன். குறிப்பாக இசையமைப்பது மற்றும் இசையைக் கற்றுக் கொடுப்பது போன்ற விடயங்களில் ஆர்வமுள்ள வாசகர்களை மையமாக வைத்தே இந்த இசை சம்மந்தமான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

முக்கியமாக நமது பிள்ளைகளின் இசை சம்பந்தப்பட்ட எதிர்காலத்தை எப்படி அமைக்கலாம் என்பதைப்பற்றியும் சற்று சிந்திப்போம். அந்த வகையில் இம்முறை முக்கியமான விடயமான RCM என்பதைப் பற்றி தகவல் தருவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். RCM என்பது கனடாவில் வாழும் நமது பிள்ளைகளின் கலைத்துறையை சர்வதேச அளவில் வெளிக்கொண்டு வரும் ஒரு மிகப்பெரிய இசைக்கல்லூரியாகும். RCM பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்கள் சர்வதேச அளவிலும் தமது இசைப்பயணத்தை தொடரமுடியும். இன்னும் சொல்லப்போனால் RCM என்பது உலக அங்கீகாரம் பெற்ற ஒரு தலைசிறந்த இசைக்கல்லூரியாகும்.

1886 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த RCM (Royal Conservatory of Music) ஆனது மிகப்பெரியதும் பழமை வாய்ந்ததும் தனித்துவமானதுமாகும். ஒவ்வொரு வருடமும் 5 லட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் இந்த இசைக்கல்லூரியால் நன்மை அடைகின்றனர். கனடாவின் எல்லா மாகாணங்களிலும் RCM நிறுவனங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. வருடம் ஒன்றிற்கு மூன்று தடவைகள் நடைபெறும் பரீட்சையானது வட அமெரிக்காவில் 300க்கும் அதிகமான இடங்களில் நடைபெற்று வருகின்றது.

இரண்டு வகையான பரீட்சைகள் நடைபெறுகின்றன, ஒன்று Theory Exam மற்றையது Practical Exam. முதலாம் தரத்திலிருந்து நான்காம் தரம் வரையுள்ள மாணவர்கள் Practical Exam மாத்திரம் சித்தி அடைந்தால் போதுமானது. ஐந்தாம் தரத்திலிருந்து Diploma Level வரை Practical Exam மற்றும் Theory Exam சித்தியடைந்தால் மட்டுமே மாணவர்கள் அதற்கான சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியும். கிட்டத்தட்ட 300க்கும் அதிகமான இசை வல்லுனர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஈடுபாட்டுடன் இப்பரீட்சைகள் வருடா வருடம் நடைபெற்று வருகின்றன. முதலாம் தரத்திலிருந்து பதினொராம் தரம் வரை சித்தியடையும் மாணவர்கள் இறுதியாக Diploma of RCM பெற்றுக்கொள்ள முடியும். அதன் பின் அவர்கள் ஆசிரியார்க்குரிய தகுதியையும் அடையலாம்.

The Royal Conservatory Of Music

இந்த Conservatoryகள் ஐரோப்பிய நாடுகளில் மிகப்பிரபல்யமடைந்துள்ளன. இங்கிலாந்து, பிரானஸ், இத்தாலி போன்ற நாடுகளில் சிம்பொனி இசைக்கு மிகவும் நல்ல வரவேற்பு உள்ளது. இசையில் தேர்ச்சி பெற்ற சிறந்த கலைஞர்களை உருவாக்க Conservatoryகள் ஒரு பாலமாக உள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. ஒரு சிம்பொனி Orchestraவில் இசைக்கருவியை வாசிப்பது என்பது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல. முறைப்படி இசையைக்கற்று அதை பிரபல்யமான ஒரு Conservatoryயில் தேர்ச்சி பெறுவதன் மூலமே அதற்குரிய தகுதியை அடைய முடியும். சிம்பொனி இசை என்பது ஒரு மேற்கத்திய இசைப்பாணி மட்டுமே என்பது நாம்மில் பலரின் கருத்து. ஆனால் தற்போது வெளிவரும் தமிழ் திரைப்படங்களில் பின்னணி இசையாகவும், பாடல்களாகவும் இந்த சிம்பொனி இசையை நாம் கேட்கின்றோம். ஆசிய நாடுகளிலுள்ள இசையமைப்பாளர்கள் முக்கியமாக இந்தியாவிலுள்ள மிகப்பெரிய இசையமைப்பாளர்கள் அடிக்கடி ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளுக்கு செல்வதற்க்கான காரணமும் இதுபோன்ற Conservatoryகளினுடைய தேவையே.

தற்பொழுது இந்தியாவில் இசைப்புயல் A.R. Rahman பற்றிய ஒரு பரபரப்பான செய்தி பல பத்திரிகைகளில் வெளி வந்துள்ளதை நாம் யாவரும் அறிவோம். இது அவருடைய சொந்த முயற்சியில் உருவாகும் KM Conservatoryஐப்பற்றியதாகும். வெளிநாடுகளில் எத்தனையோ பிரபல்யம் வாய்ந்த Conservatoryகள் இருப்பதைப்போல் இந்தியாவிலும் ஒரு Conservatory இருக்க வேண்டும் என்பதுதான் அவருடைய ஆசை. சிம்பொனி இசையை தனது இசையமைப்பில் சேர்ப்பதற்காகதான் அடிக்கடி வெளிநாடு செல்வதை தவிர்க்கும் நோக்குடனேயே அவர் இந்த முயற்சியில் இறங்கியுள்ளார். அதற்காக எத்தனையோ லட்சம் ரூபாவை இசைப்புயல் A.R. Rahman அவர்கள் செலவு செய்யத் திட்டமிட்டுள்ளார். இந்த முயற்சி கைகூடினால் இந்தியாவிலும் பல சிம்பொனி Orchestraகளை உருவாக்கலாம் என்றும் அவர் உறுதியளித்துள்ளார். வெளிநாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சிறந்த ஆசிரியர்கள் இந்தியாவுக்கு வரவழைக்கப்பட்டு மாணவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. ஒருவர் இசையை முறையாகக் கற்றுக் கொள்வதற்கும் சர்வதேச அளவில் திறமையை வெளிக்கொண்டு வருவதற்கும் இது போன்ற Conservatoryகள் மிகவும் முக்கியம் என்பதையும் இசைப்புயல் அவர்கள் மிகவும் விளக்கமாக கூறியுள்ளார். ஆகவே கனடாவில் வாழும் நாம் இங்குள்ள வசதகளை நன்றாகப் பயன்படுத்தி நமது பிள்ளைகளுக்கு முறையாக இசையை கற்றுக் கொடுத்தால் அவர்களுடைய எதிர்காலம் நிட்சயமாக வளமாக அமையும்.

■ ■ ■

TAMIL STAR RADIO

NewMarket முதல் Buffalo வரையும்
Kitchener முதல் Cobourg வரையும்
துல்லியமாக வானலையிலும் இணையம் மூலம் உலகெங்கிலும்

TAMILSTAR
No Limits

168 மணி நேர தமிழ் வானொலி

வாரம் 168 மணி நேரமும் தமிழ் ஒலிக்கிறது

Tel: 416.438.STAR (7827)
Fax: 416.438.7855
www.tamilstar.fm
info@tamilstar.fm

சிரிக்க, சிந்திக்க, சினக்க....

885 Progress ave., Suite 316,
Scarborough, ON M1H 3G3

# முகவரி காட்டும் முகவர்களாய் நாங்கள், வீடு வாங்க விற்க அழையுங்கள்



HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/Future Realty Inc., Brokerage***

262 Markham Road, Scarborough, Ontario M1J 3C5

**Bus.: 416.264.0101 Fax : 416.261.1519**

*Independently Owned and Operated, REALTOR

Not Intended to Solicit Currently Listed Properties or Buyers Under Contract.

**www.realhouse.ca**



## Thamil Suberamaniam (Selvan)

Sales Representative

**Direct : 416.358.6200**

Email : thamilrealtor@gmail.com

## Mugunthan Nadarajah

Sales Representative

**Direct : 416.276.8025**

Email : homelifemugunthan@gmail.com

**Hwy7 & 9th Line**



**$394,900**

**3 Bedrooms, 3 Washroom**

Very Demand Location!!...
New House
2 Bedrooms,
Kitchen, Living & Washroom..
Close To 407, School & Go Train
& Amenities, Parks Around the Corner.

**Kennedy & Denison**



**$464,900**

**4+2 Bedrooms, 5 Washroom**

Entrance to Garage from inside, Landsxaping W/Rock Gdn. 4 Car Pking Drwy, Interlock Wkwy & Patio Stone All Around the house.

**Markham & 14th Ave.**



**$479,900**

**4 Bedrooms, 3 Washroom**

Ultra High Ceiling in Basement
Fully Fenced Yard
Close to Shopping
School & Park.

**McCowan & 16th**



**$439,000**

**4 Bedrooms, 3 Washroom**

High Demand Location!!...
Close to GO and York Transit Schools,
Markville Shopping Center

**9th Lane & 16th Ave**



**$439,900**

**4 Bedrooms, 3 Washroom**

Great Neighbourhood,
Very Clean & Bright, Big Deck,
Granite Counter Top,
Close to School,
Park & Shoppings

**Midland & Eglinton E**



**$87,000**

**1 Bedrooms, 1 Washroom**

Attention First Time Buyers
Don't Miss Out On This Fabulous Opportunity, 24 Hrs Ttc
Close To School & Shopping.
Seller Will Paint And Change The Carpet To Laminate
All Blinds, Fridge, Stove.
Seller Prefer Quick Closing.

**Morningside & Ellesmer**



**$109,000**

**2+1 Bedrooms, 2 Washroom**

Closes To U Of T (Scarb Campus)
& Centennial College, Shopping,
Hospital And Hwy 401.
This Is Like Town House
On The Main Floor(Ground).

**Mcvean & Castlemore**



**$369,900**

**3 Bedrooms, 3 Washroom**

Very Good Location
Very Bright & Spacious Rooms,
Great Size Kitchen,
Close to School, Park & Shopping

**Markham & Nashdene**




**Commercial & Office Condo for Very Good Price**

**உங்களுடையது**

**அழையுங்கள்**

Apex Creations - 416-297-0707

**Make the Right Move, at the Right Time, with the Right Professional**

# ஒரு விடுமுறை யாவருக்கும் தேவை

ராகுலன்
- Accountant -
ragulan@thaiveedu.com



வழமையான கோடைக்கால விடுமுறை காலம் ஒரு முடிவுக்கு வந்துகொண்டிருக்கும் போது விடுமுறை என்பதையே தவிர்த்து வரும் எவரும் இரு முறை யோசிக்க வேண்டும்.

கிட்டத்தட்ட அரைவாசி (46%) சிறிய வர்த்தக உரிமையாளர்கள் தமது வர்த்தகத்திலிருந்து விடுமுறை எடுக்கத் தயங்குகிறார்கள் என ஒரு புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது. ஒரு முக்கிய சந்தர்ப்பத்தை அல்லது ஒரு வாடிக்கையாளரைத் தவறவிட்டுவிடுவோமோ என்ற பயமே இதற்குக் காரணமாகும். இந்த விடயத்தில் உதவ எந்த தொழில்நுட்பங்களும் இல்லை.

The Healthy CEO என்ற புத்தகத்தை எழுதிய கலாநிதி Larry Owhauser என்பவர் நீங்கள் பொழுது போக்கி ஆனந்தமாக இருப்பதை தவிர்ப்பது எப்படி உங்கள் உள, உடல் ஆரோக்கியத்தை பாதிக்கிறது என்பதை பலரும் உணர்ந்து கொள்ளவில்லை என்கிறார்.

இந்த உடல் நலம் பற்றிய செய்தி தெளிவாக தெரிந்திருந்தும் பல தொழில் அதிபர்களும் அதைப் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. ஆனால், கலாநிதி Larry அவர்கள் கூறுகையில் உங்கள் Computerஐ சுவரில் இருந்து மின்சக்தியை கழற்றுங்கள் அல்லாவிட்டால் பிற்காலத்தில் உங்கள் உடல் நலத்தில் பாதிப்பு ஏற்படுவதாக காண்பீர்கள். உங்கள் மனதும் உடலைப் போன்றதே. அளவுக்கு அதிகமான அழுத்தத்தால் பாதிக்கப்படும் போது அது ஈடாடி விடுகிறது.

ஒரு வர்த்தகத்தை நிர்வகிப்பது மிக கடுமையானது. உங்கள் வாழ்வின் ஒரு பகுதியை எடுத்து விடும் என்று கூறும் Crystal Daller என்பார் இது சொந்த வாழ்வைப் பாதிக்காமல் பாவித்துக்கொள்ள வேண்டும் என்கிறார்.

இந்த விடுமுறைகளை எடுக்க முடியாத வர்த்தகர்களைப் போலல்லாது Ms. Crystal அவர்கள் வருடாந்தம் விடுமுறையை எடுக்கத் தவறுவதில்லை. இதற்கெல்லாம் ஒரு சிறிய திட்டமிடல்தான் தேவை எனக் கூறும் Ms. Crystal வர்த்தகங்கள் கவிழ்ந்து விடாமல் எல்லாம் நன்கு நடக்க ஒழுங்குகளை செய்து வைத்து விட முடியும் என்கிறார். தற்போதைய தொழில்நுட்பம் காரணமாக விடுமுறையில் நிற்கும் போதும் email பார்க்கவும், தொலைபேசியை பாவிக்கவும் செய்வர். ஆனால் ஒரு நாளைக்கு ஒரு முறை மட்டுமே என்று ஒழுங்கு செய்வது நல்லது.



நீங்கள் இல்லாத போது உங்கள் இடத்திற்கு ஒருவரை பொறுப்பாக நியமிப்பது நல்லது. இது உங்கள் மற்றைய அலுவலர்கள் யாரிடம் உத்தரவைப் பெறுவது என்று தெளிவாக்கும். அத்துடன் வாடிக்கையாளர்களும் சேவை இடைநிறுத்தல் இல்லாது தொடரும் என்பது தெரியும்.

இருவாரங்களுக்கு ஒதுங்கியிருப்பது கடினம் என்று நினைத்தால் அதை நீங்கள் சில தினங்களாகக் குறைக்கலாம். ஆனால் நீண்ட விடுமுறைகளால் பிரயோசனங்கள் அதிகம். உங்கள் மனம் வர்த்தகத்திலிருந்து விலகி ஒருநிலைப்பட சில தினங்கள் எடுக்கும் என்பது ஆராய்ச்சிகளின் முடிவு. அத்துடன் நீங்கள் ஆரம்பித்து அதன் வெற்றிக்காக கடுமையாக உழைத்த ஒன்று என்றால் சில தினங்கள் விலகி இருப்பது உங்களிடையே ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்தும்.

சிலர் இந்த வர்த்தகத்தில் உரிமையாளர் இவர் என்ற ஒரு மயக்கத்தினால் வீடு, வாசல், நண்பர்களை மறந்து விடுவர். எனது நண்பர்கள் சிலர் குளிக்கும் போது கூட Black Berry பார்ப்பது உண்டு. இவர்களுக்காகவே இந்தக் கட்டுரை. இவர்கள் வேலை, வர்த்தகம் என்ற போதையில் மயங்கி இருக்கிறார்கள்.


இந்த வர்த்தக உரிமையாளர்கள் மட்டுமல்லாது வேலை செய்வோரும் ஒழுங்காக விடுமுறை எடுப்பதில்லை. கடந்த வருடம் கனடிய உழைக்கும் வர்க்கம் 6.3 million dollar பெறுமதியான விடுமுறை நாட்களை தமது வேலை செய்யும் ஸ்தாபனங்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். இது 41 Million நாட்களாகும்.

தற்போது கனடியர்கள் வேலையிலிருந்து நீங்கி விடுமுறை எடுப்பதை தவிர்த்து வருகிறார்கள். சராசரியாக ஒவ்வொருவரும் 2.3 நாட்களை தங்கள் நிறுவனத்திற்கு வழங்குகிறார்கள். விடுமுறை எடுக்க எனக்கு நேரமில்லை என்பவர்கள் வேலைக்கும் வாழ்வுக்குமான சமநிலையைப் பற்றிய தெளிவை இழந்துவிட்டார்கள் என்பதே அர்த்தமாகும்.

விடுமுறைக்கும் பொழுதுபோக்கிற்கும் என கனடியரிடையே எடுக்கப்பட்ட புள்ளிவிபரமே இப்படியானால் எமது மக்களிடையே இந்தப் பிரச்சினை பாரிய பிரச்சினையாகும். எனவே விடுமுறை என்பதன் முக்கியத்துவத்தையும் குடும்ப வாழ்வுக்கும் குடும்பத்தினருக்கும் கொடுக்க வேண்டிய நேரத்தின் பெறுமதி பற்றியும் இவற்றைத் தவிர்ப்பதால் வரக்கூடிய பிரச்சினைகள் பற்றியும் அறிந்து கொள்வது முக்கியமாகும்.

■ ■ ■

Special of this Month
Condo for Sale
(Midland & Eglinton)
Seller will paint your color and change Carpet to Laminate.
Most convenience Location in Scarborough.



921 Midland Ave
One bedroom
Don't Miss Out.

•Schools & Park
•24 Hrs TTC at your Door
•One car Parking
•And More...

416-399-8093



HomeLife/ Future Realty Inc., Brokerage
262 Markham Road, Scarborough, ON M1J 3C5
Tel: 416.264.0101 Cell: 416.399.8093
Fax: 416.261.1519 nvpiraba@hotmail.com

No need Elevator
Why are you renting, when you can own!

PIRABAA NALLATHAMBY
Sales Representative

எண்ணித்துணிக கருமம் துணிந்த பின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

உங்கள் கடன் பிரச்சினைகளை
தீர்க்கும் போது
அதனால் உருவாகும் நன்மை தீமைகளை
சரியாக அறிந்துள்ளீர்களா?

நீங்கள் எடுக்கும் நடவடிக்கையால்

- எதிர்காலத்தில் உங்கள் பிள்ளைகளின் கல்விக்கோ, அவர்களின் தொழில்துறைக்கோ பாதிப்புக்கள் வருமென எண்ணுகிறீர்களா?
- நீங்கள் ஒரு புதிய வேலைக்கு செல்லும்போதோ அல்லது வேறு வேலைக்கு மாறும்போதோ பிரச்சினைகள் வருமென்று எண்ணுகிறீர்களா?
- எதிர்காலத்தில் ஸ்பொன்சர் செய்யும் போது ஏதாவது பிரச்சினைகள் வருமென எண்ணுகிறீர்களா?
- உங்கள் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுமென எண்ணுகிறீர்களா?

இவைபோன்ற பல கேள்விகளுக்கு சரியான பதில்களை அறிந்துகொள்ள
இத்துறையில் பலவருட கால அனுபவமுள்ள
பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்களின் கடன் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்த

Having Difficulty
Repaying
Your Student Loan?
New Rule Changes
Can Help

CRCanada
அழையுங்கள்
சங்கர் அல்லது கிறிஸ்

உங்களுக்குத் தெரியுமா?
நீங்கள் கட்டவேண்டிய கடன் தொகையிலிருந்து 15%-20%த்தை மட்டும்
தவணை முறையில் கட்டிமுடிக்கலாம்.



T.SHANKAR
Director

CRCanada
Credit Reform Canada
*Judgement in your favour!*
885 Progress Ave, Unit - 202, Scarborough.
CRCanada 416-264-1010

# Your life.
# Your career.
# *Your call.*

If you're looking for a career that offers the potential for financial success and have the drive, discipline, energy, and self-confidence to run your own business, then consider becoming a Sun Life Financial advisor. Contact us to learn more about this rewarding career opportunity.



**Chandran Rasalingam**
Sales Manager
Bus 416-412-0401 ext 305
Cell 416-909-0400
Fax 416-412-1438
gnanachandran.rasalingam@sunlife.com

2075 Kennedy Road, Suite 1300
Scarborough ON M1T 3V3

**Sun Life Financial**

Sun Life Financial advisors are contracted with Sun Life Financial Distributors (Canada) Inc., registered in Quebec as a financial services firm.
© Sun Life Assurance Company of Canada, 2008.


To get the key
for the future!!!
வீடு வாங்க விற்க, வியாபார நிலையங்களில் முதலீடுகள் செய்ய...
Karuna Gopalapillai
Broker
Office: 416.321.2228
Direct: 416.830.8520
RE/MAX
RE/MAX Vision Realty Inc., Brokerage
1-2210 Markham Road
Toronto, ON M1B 5V6
Ajax
Detached
Tauntan/Harwood
4 Bedroom, 3 Washroom
$385,000
Ajax
Detached
Audley/Rossland
4 Bedroom, 3 Washroom
$389,000
Ajax
Detached
Salem/Rossland
4+1 Bedroom, 4 Washroom
$389,900
Ajax
Detached
Taunton & Salem
4 Bedroom, 4 Washroom
$393,000
Ajax
Detached
Rossland/Audley
4 Bedroom, 3 Washroom
$394,000
Brampton
Detached
Hwy 10/ Sandlewood
3 Bedroom, 3 Washroom
$309,900
Southgate
Detached
0.24 Acres Lot, Septic System
One & Half Storey
$24,900
Ajax
Detached
Ravenscroft/Rossland
4 Bedroom, 3 Washroom
$359,900
Markham
Detached
Markham/14th Ave.
4 Bedroom, 3 Washroom
$479,900
Markham
Detached
Denison/Markham
4+1 Bedroom, 4 Washroom
$479,900
E & OE


Centum Vision Mortgage Inc.
☑ Residential Mortgage
☑ Commercial Mortgage
☑ Equity Loan & Line of Credit
416.830.8520
2929 Lawrence Avenue East, Suite 203
Scarborough, ON M1P 2S9
WANTED
New & Experience Agents
WE PROVIDE:
☑ Training
☑ Support
☑ Better Split
☑ Convenient Locations
☑ Franchise Opportunities*
(*only for Brokers)


www.Uproperties.ca
ROYAL LEPAGE
Credit Valley Real Estate
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKERAGE
Bus: (905) 793 - 5000
Fax: (905) 793 - 5020
Uthayan Nadarajah
Broker
Buy or Sell with me and get
Free Gas Card for One year
(Limitation Apply)
Call me @: 416-727-9945
- Residencial/Commercial/Invetments
- Hotels/Motels for sale
- Waterfront cottage properties from $ 89,000
- High Return Investment Properties Available
THE INSTITUTE for LUXURY HOME MARKETING
MEMBER
A MEMBER OF
Commercial Division
Toronto Real Estate Board
www.trebcommercial.com
#106 - 44 Peel Centre Drive
Brampton, ON L6T 4B5

# தான் பயிலாத கவசதாரிகள்


தேவகாந்தன்
devakanthan@thaiveedu.com

கடந்த நூற்றாண்டில் நிகழ்ந்த உலக மகா யுத்தங்கள் இரண்டும் முடிவுற்ற காலங்கள், சமூக அக்றையுள்ள படைப்பாளிகள், சிந்தனையாளர்கள் மீது பல்வேறு பாதிப்புக் களை ஏற்படுத்திவிட்டு மறைந்துபோயிருந்தன. ஏர்னெஸ்ட் ஹேமிங்வே, வேர்ஜீனியா வூல்·ஃப் போன்றோர் தற்கொலையே செய்து கொண்டார்கள். உலகமளாவி விரிந்திருந்த மனஅவலத்தின் பதியப்பட்டுள்ள சாட்சியங்கள் மட்டுமே இவை. பதியப்படாத அவலங்கள் இன்னும் எத்தனை எத்தனையோவாக இருந்திருக்க முடியும்.

அந்த அளவுக்கு படைப்பு இயலில் மனமீடுபட்டிருந்தவர்களும் சாதாரண மக்ளைப்போல தம் கையறுநிலைக் காலங்களில் இவ்வாறுதான் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பது யோசிக்க சற்று வியப்பாக இருக்கலாம் நமக்கு. ஆனால், தம் உலகமளாவ விரிந்துள்ள எதிர்பார்ப்புக்களும் மனித சமுதாயம் மீதான அக்கறைகளும் தம் கண்முன்னால் சரிந்துகொண்டிருப்பதைக் காணச் சகிக்க முடியாத இவர்களால் இப்படித்தான் நடந்து கொள்ள முடிந்திருக்கிறது.


அரசுகள் ஒன்றைச் சொல்லிக்கொண்டு வேறொன்றைச் செய்துகொண்டிருந்தன. சுதந்திரம் என்பது தமக்கானது மட்டுமே என்பதான அர்த்தமாக குறுக்கிக்காணப்பட்டது. அழிவுகளில் தமக்கு மட்டுமானவையே கணக்கிலெடுத்துக்கொள்ளப்பட்டன. விரிந்து கொண்டிருந்த செய்தித்துறையைத் தம் கட்டுப்பாட்டில் கொண்டிருந்த அல்லது தமக்கு ஆதரவானவர்களாகக் கொண்டிருந்த இவர்களால் இப்படி வெகு இலகுவாக தம் ஆதிக்கப் போரினை, சுதந்திரத்துக்கானது அல்லது நாஜிகளுக்கெதிரானது என்பதாகப் பரப்புரை செய்ய முடிந்தது. அதைக் கண்டு வெகுண்டெழும் தனிமனித மனங்கள் இந் நிலையில் உடைந்துபோவது தவிர்க்கப்பட முடியாததுதான்.

ஆனால் நம்மைச் சுற்றி பன்மடங்கு அதிக மான கொடுமைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கும் இன்றைய நிலையிலும் இவ்வாறு நடந்துவிடுமென்று பெரிதாக எதிர்பார்க்க முடியாது. நுகர் கலாச்சாரம், ஏகபோக முதலாளித்துவம் வளரவும் வாழவுமான சகல தந்திரோபாயங்களுடனும் கூடிய கருத்தாக்கத்தை முன்வைத்திருக்கிறது. முன்கூட்டிய ஒரு நிகழ்ச்சிநிரலின் அடிப்படையில் அரசியல் நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் வனப்பில் உண்மை பொய்யாகவும், பொய் மெய்யாகவுமோ, நல்லது கெட்டதாகவும், கெட்டது நல்லதாகவுமோ மறுதலையான தோற்றங்களைக் காட்டிக்கொண்டிருக்கின்றன. தமது இயற்கை வளங்களைக் காக்கின்ற முயற்சிகளும், தம் தேசத்து கனிம எண்ணெய் வளங்களையும் தமக்கானது என்று கொள்ளும் போக்குகளும், சுதந்திரத்துக்கான விடுதலைக்கான போராட்டங்களும் இவ்வாறுதான் பயங்கரவாதமாகக் கட்டமைக்கப்பட்டு உலா விடப்பட்டிருக்கிறது. அதற்கு ஆதரவான குரல்கள் எழுவதை நுகர்பொருட் கலாச்சாரத்தின் அடிப்படையில் நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

ஈராக்கிற்கு எதிரான ஐக்கிய அமெரிக்காவின் யுத்தம், உண்மையில் பயங்கரவாதத்திற்கெதிரான ஒரு பயங்கரவாதம் தவிர வேறல்ல. இதைப் புரிந்துகொள்வதற்கு தம் தகவல் கிரகிப்பை முதலாளித்துவ தொலைக் காட்சி, வானொலி, தினசரிப் பத்திரிகைகளில் கொண்டிருப்பவர்களால் நிச்சயமாக முடியாது. நிகழ்வின் உண்மையென்பது சொல்லப்படுவதற்கு மறுபக்கத்தில் இருக்கிறது என்ற தர்க்கம் இதைப் புரிய மிக அவசியம்.

9|11 சம்பவத்தை எவ்வாறு நாம் விளங்கிக் கொண்டிருக்கிறோம்? பயங்கரவாதிகளின் ஜனநாயகம்மீதான தாக்குதலாகவன்றி வேறெதுவாக?

பயங்கரவாதம் என்பது மனித சமுதாயத்தின்மீது பயங்கரத்தையே விளைவிக்கின்றது என்பது மறுக்கமுடியாத உண்மையே. இது அதன் புறம் மட்டுமே. அதற்கு ஓர் அகமும்



இருக்கிறது. இந்த அகம்தான் செய்தியின் மறுபக்கம். ‘Terrorism is the war of poor and the war is the terrorism of rich’ என்ற பெயர்பெற்ற வார்த்தையின் உண்மை இங்கே கண்டடையப்படக்கூடும்.

தொழிலாளர் வேலைநிறுத்தங்கள் என்பது கடந்த நூற்றாண்டுச் சம்பவங்களாகிவிட்டன. அத்தியாவசிய சேவைகள் என்ற முறைப்படுத்தலில் இந்த வேலைநிறுத்தத்தின் முடிவை நிகழ்த்தியிருக்கின்றன அரசுகள். போக்குவரத்துச் சேவையை அத்தியாவசிய சேவையாக்குவதா இல்லையா என்ற விவாதம் இப்போது ரொறன்ரோவில் நடந்து கொண்டிருக்கிறது.

வேலைநிறுத்த உரிமையென்பது திட்டமிடப்பட்ட சட்டவாக்கத்தில் உருவானதில்லை. அமெரிக்க நிலக்கரி, ரயில்வே, எண்ணைக் கிணறுகள் தோண்டும் தொழிலாளிகளால் உயிரும் இரத்தமும் தசையும் சிந்திச் சுவீகரிக்கப்பெற்ற உரிமை. உலகநாடுகள் பலவற்றிலும் முறையாகத்தான் பயன்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் இன்று பல்வேறு நாடுகளில் இந்த உரிமையில்லை தொழிலாளருக்கு. ரிரிசி தொழிற்சங்கங்களுக்கும் நிர்வாகிகளுக்கும் இடையே நடைபெற்ற அண்மைய ஒரு கூட்டத்தின்போது, தொழிலாளரின் வேலைநிறுத்த உரிமையை அங்கீகரிக்கும் வகையில் போக்குவரத்துச் சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்துவதை ஒப்புக் கொள்ளப் போவதில்லையென நிர்வாகம் தொழிற்சங்கங்களுக்கு உத்தரவாதம் அளித்திருக்கிறதான தகவல் மனச் சமாதானத்தைத் தருகிறது. ஆனாலும் பல்வேறு நாடுகள் இந்த உரிமையை விழுங்கி ஏப்பம் விட்டு விட்டன. அப்படியானால் இது குறித்து எழும் ஆவேசங்கள் எப்படியாகச் சென்று முடிவடையும் என்பதை நாம் யோசித்துப் பார்க்கவேண்டும்.

1973இல் நிர்மாணமான அந்த வர்த்தக இரட்டை மாடிக் கட்டிடங்கள் குறியீடுபூர்வமானவை. உலக அதிகார மய்யத்தின் குறியீடுகள் அவை. அதனால்தான் இரட்டைக் கோபுரத் தகர்வினைப்பற்றி ஒருமுறை கூற வந்தபோது சிந்தனையாளர் ழான் போத்ரியா, ‘வரலாற்றினதும் அதிகாரத்தினதும் விளையாட்டு அனைத்தும் இந்த நிகழ்வினால் பாதிக்கப்பட்டுவிட்டது. ஆய்வின் சூழலும் அதன் விதிகளும்கூட இந்த ஒற்றை நிகழ்வினால் பாதிக்கப்பட்டுவிட்டன’ என்று கூறினார்.

அப்படியானால் இந்த இரட்டை மாடிக் கட்டிடங்களின் அழிவில் ஒரு முக்கியத்துவம் இருக்கிறது.

கடல் மட்டத்திலிருந்து 1300 அடிகளுக்கு மேலான உயரமாக வளர்ந்து வானைத் தொட்டுக்கொண்டிருந்த கட்டிடங்கள் இவை. ஒரு சதுரமான அடித்தளத்திலிருந்தது அவற்றின் நிர்மாணம். ஒன்றெயொன்று பார்த்தபடி இக் கட்டிடங்கள். ஒன்றையொன்று பிரதியெடுத்ததுபோலவும் இருந்தன இவை. இவை கட்டிமுடிக்கப்பெற்றதும் நியூயார்க் நகரின் அமைப்பே மாறிவிட்டதாக ஒரு கட்டிடக் கலை நிபுணர் கூறினார். ஆம், அதுவரையிருந்த நகரின் அமைப்பை முழுமையாக மாற்றிய வடிவங்கள்தாம் இவை. கண்ணாடியாலும் இரும்பினாலும் சீமெந்தினாலும் அமைந்து உயர்ந்தெழுந்த ராக்பெல்லர் கட்டிடங்களும் நியூயார்க் நகரில் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் இந்த இரட்டைக் கோபுரங்கள் முகப்புகள் அற்றவை. அதாவது முகங்கள் அற்றவை. அதனால் தான் ஏகபோகத்தினதும், போட்டியின்மையினதும் குறியீடுகளாக இவைகளால் நிமிர்ந்து நிற்க முடிந்திருந்தது. இந்த இரட்டைக் கூர்ங்கோபுரங்கள் குருட்டுத்தனமானவை என்று குறிப்பிடுகிறார் போத்ரியா. தம்மளவில் மூடிக்கொண்டவை. உலகத்தை நோக்கித் திறக்காதவை.

அதனால்தான் இவை தாக்குதற் குறிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தன.

இந்த விளக்கங்களெல்லாம் நமக்கு இல்லை. ஆனாலும் நாம் நினைக்கிறோம், நாம் அனைத்தையும் தெரிந்துகொண்டிருப்பதாக.

நம் அறிவு நுகர்பொருட் கலாச்சாரத்தினால் கட்டப்பட்டிருக்கிறது. அதனால்தான் செய்தியின் அடியினாக, சொல்லப்பட்டதை நம்பும் பிராணியாக நாம் வளர்க்கப்பட்டிருக்கிறோம். அந்த விசுவாசத்துக்காகவே சில எலும்புத் துண்டுகள், சிலவேளை சிறிய அளவான இறைச்சியுடன் வீசப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதனால்தான் படைப்பாளிகள், சிந்தனாவாதிகள் போன்றோர் நம் தலைமுறையில் தற்கொலை செய்யப்போவதில்லை அல்லது செய்வதில்லையென்று சொன்னேன்.

பாரத யுத்தம் பத்து நாட்கள் நடைபெற்றது. முதல் பத்து நாளில் பீஸ்மர் உயிரோடிருக்கும் வரை தான் சண்டைசெய்ய மாட்டேன் எனக் கூறி கர்ணன் யுத்தத்திற்குச் செல்ல வில்லை. பீஸ்ம மரணத்தின் பின் கர்ணனுக்கும் துரோணருக்கும் ஏற்பட்ட வாக்குவாதத்தில் துரோணர் யுத்தம் செய்யாது விட்டுவிடுகிறார் சில நாட்கள். ஆனால் தான் பலமிழந்து நிற்பதாகக் கூறி அவரை யுத்தம் செய்ய வரும்படி துரியோதனன் இரந்து கேட்டதற்காய் அவனைப் பாதுகாக்க தன் மார்புக் கவசம் போதும் எனவும், அதை எத்தகைய சிறந்த வில்லாளியாலும் பிளக்க முடியாது எனவும் கூறி தன் கவசத்தைக் கொடுத்துவிடுகிறார் துரோணர். துரியோதனன் அதை அணிந்துகொண்டு போய் யுத்தம் செய்து அன்றைய பொழுதுக்கு உயிரோடு திரும்புவதாகக் கதை.

இந்தப் பகுதிக் கதை கூறும் அத்தியாயம் வியாச முனியின் மகாபாரதத்துப்படியான ராஜகோபாலாச்சாரியின் பாரதக் கதையில் ‘தான் பயிலாத கவச தராணம்’ எனப் பெயர் பெற்றிருக்கும். பெண்ணியம், தலித்தியம், மார்க்சியம், பின்நவீனத்துவமெல்லாம் மிக உன்னதமான கருத்தாக்கங்கள். தம் சமூக விருத்தியை மட்டுமன்றி, உலக மாந்தர் அனைவருக்குமான சுதந்திரத்தையும் சுபீட்சத்தையும் யாசித்துக்கொண்டிருப்பவை. நடைமுறையியலிலிருந்து விலகி, புதிய நடைமுறைகள் படைக்க முனைபவை. ஆனால் இவற்றின் பெயர்கள் இன்று சிலரின் முகத்திரைகளாகி விட்டிருக்கின்றன. தேசிய இன விடுதலைகளுக்கும், நிரந்தர சமாதானங்களுக்கும் எதிராகத் தம் குரலைக் காட்ட முனைந்திருப்பது எனக்கு இந்த பாரதக் கதையினையே ஞாபகப்படுத்துகிறது. இதை ‘பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று’ என்றும் சொல்லலாம்தான்.

இப்படியான நடைமுறையாளர் இருக்கிற இடத்தில் நமக்கு முந்திய காலத்துச் சிந்தனையாளர்களுக்கு சமூக அவலங்களாலும், அரசுகளின் வல்லாதிக்கங்களாலும் ஏற்பட்டதுபோன்ற தற்கொலைகள், தற்கொலை முயற்சிகள், மனச் சிதைவுகள் வருமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

நிச்சயமாக எனக்கில்லை.

■ ■ ■

FOR ALL MORTGAGE NEEDS



Rajmogan Selliah
Mortgage Consultant

Canada Trust Scotiabank

2929 Lawrence Ave. East, Suite 203,
Scarborough, ON M1P 2S8
Head Office: 701 Evans Ave., Suite 600, Toronto, ON M9C 1A3
rajmoganselliah@invis.ca

Dir: 416.569.3200
Bus: 416.430.0111, Fax: 416.430.0222

# யாகாவாராயினும் வலுவளம் காக்க...



சிவாஜினி பாலராஜன்
sivajini@thaiveedu.com

கனடிய நாட்டில் மட்டுமல்ல உலகெங்கிலும் தற்போது மிகவும் முக்கியமாகப் பேசப்படும் விடயம்: வலுவளமும் சூழல் பாதுகாப்பும். ஒவ்வொரு வீட்டிலும் தெரிந்தோ தெரியாமலோ பெருமளவு மின்வளம் ஒவ்வொரு நாளும் வீணாகிப் போகிறது. இவ்வாறு வீணாகிப் போகும் மின்சாரத்திற்கு எங்கள் கவனயீனம் மட்டும் காரணமல்ல. எங்கள் கண்ணுக்கும் அறிவுக்கும் புலப்படாது வலுவள வேதாளங்களும் (vampire energy) ஒரு காரணமே. வீட்டினுள் பல இடங்களில் பச்சை, சிவப்பு, மஞ்சள், நீலம் என்று பல நிறங்களில் மின்மினிப் பூச்சிகள் போல் வெளிச்சங்கள் தெரிந்து கொண்டே இருக்கின்றன. இவையெல்லாம் என்ன? இவைதான் எங்களுக்குத் தேவையான, ஆனால் மின்வள இணைப்புத் துண்டிக்கப்படாத வீட்டுத் தொலைபேசியின் அல்லது செல்லிடத் தொலைபேசியின் மின்னூட்டி (charger), அலறித் துயிலெழுப்பும் மணிக்கூடு (alarm clock) போன்றவை. இவை மின்வளத்தை விரயமாக்குகின்றனவா என்று கேட்டால் அக் கேள்விக்குப் பதில் ஆம். இவையே வலுவள வேதாளங்கள்!

வலுவள வேதாளங்களைவிட மிகவும் பாரதூரமான விரயங்களைத் தரக்கூடியவை எங்கள் வீடுகளில் இருக்கும் வினைத்திறன் (efficiency ) குறைந்த துணி தோய்க்கும் இயந்திரம், துணி உலர்த்தும் இயந்திரம், குளிர்பதனி (refrigerator), உறைபதனி (freezer), சரியான முறையில் காப்புறை (insulation) இடப்படாத வெளிப்புற - உட்புறக் கூரைகளுக்கு இடைப்பட்ட வெளி (attic), காற்றுக் கசியும் கதவிடுக்குகள் போன்றவை. இப்படி வலுவளம் இழக்கப்படுவதற்கும் எங்கள் பணப்பை மெலிந்து போவதற்கும் காரணங்கள் கூடிக் கொண்டு போகின்றன. இவற்றை எவ்வாறு நாங்கள் இனம் காணப் போகிறோம்? முற்றாக ஒழிக்க முடியாவிடினும் எவ்வாறு குறைக்கப் போகின்றோம்?

| | |
|---|---|
| Cordless Phone Base Station ($3.18) | 28.9 |
| LCD Monitor ($2.51) | 22.8 |
| Computer ($34.21) | 311.0 |
| Laptop ($15.90) | 144.5 |
| Laser Printer ($12.43) | 113.0 |
| Plasma TV ($159.76) | 1,452.4 |
| VCR ($10.12) | 92.0 |
| DVD Player ($8.67) | 78.8 |
| Game Console ($25.73) | 233.9 |

## வலுவள வேதாளங்கள்

மின்வளத்தில் இயங்கும் பொருட்கள் பாவனையில் இல்லாதபோது அதாவது உறங்கு நிலையில் (standby mode) இருக்கும்போது மின்வளத்தைப் பாவிப்பது அல்லது உறிஞ்சுவது "phantom energy use" அல்லது "vampire energy use," எனக் கூறப்படும். இவ்வாறு மின்வளம் கொண்டு இயங்கும் பொருட்கள் மின்வள வேதாளங்கள் (power vampires) எனப்படும். இம்முறையில் உறிஞ்சப்படும் வலு குறைவென்று நாங்கள் நினைத்துக் கொண்டிருப்போம். ஆனால் இவ்வாறான பல உபகரணங்கள் மின்வளத்தை உறிஞ்சுமாயின், அவை அனைத்தும் உறிஞ்சும் மின்வளத்துக்கு நாம் செலவழிக்கும் பணம் ஒரு மிகப் பெரிய தொகையாகிவிடும்.

> "வீட்டு மின் நுகர்வைக் குறைப்பதால், அல்லது தேவையற்ற மின் விரயத்தை தவிர்ப்பதால் எங்கள் பணம் மீதப்படும். எங்கள் வளவு, சூழல், உடல்நலம் பேணப்படும். சமூகத்தின் நலன் விரும்பியாக வாழ்ந்து, எங்கள் இளைய சமுதாயத்திற்கும் இவற்றை நாம் அறிவுறுத்துவோம்"

முன் எப்போதும் இல்லாதவாறு பல்வேறு நாட்டு மக்களும், நாடுகளும் சூழலையும் வளிமண்டலத்தையும் காக்கும் பொருட்டு தற்போது வலுவள பாவனையில் மிகவும் அக்கறை காட்டி வருகின்றன. இவ்வாறு அனைவரும் எடுக்கும் முயற்சியால் ஓரளவிற்கு நாங்கள் பயன் பெற்றாலும், எங்களை அறியாமல் பல இடங்களில் வலுவள வேதாளங்கள் நாளாந்தம், நிமிடத்திற்கு நிமிடம் கண்ணுக்குத் தெரியாமல் வலுவளத்தை உறிஞ்சிக் கொண்டிருக்கின்றன.

சாதாரணமாக ஒரு கனடியக் குடும்பம் ஆகக் குறைந்தது 1600 டொலர்களை ஒரு வருடத்திற்கு மின் கட்டணமாகச் செலுத்துகின்றது. துரதிஷ்டவசமாக அதைவிட அதிக வலுவளம் விரயமாகுவதாக ஒன்ராரியோ மின்சார திணைக்களத்தின் கருத்துக் கணிப்பீடு குறிப்பிடுகின்றது.

## எவ்விதமான பொருட்களை வலு வள வேதாளங்கள் பீடித்துள்ளன?

வலுவளப் பாவனையையும் மின்வவலுக் கட்டணத்தைக் குறைக்கும் வழியினையும் நாம் கருத்திற்கொண்டு, மின்வலு கொண்டு இயங்கும் தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப் பெட்டி வகைகளை நாம் நிறுத்தி வைப்பதுண்டு. அதன் ஆளியைத்தான் (switch) நிறுத்துகிறோம். முற்றாக இணைப்பைத் துண்டிப்பதில்லை. ஆதலால் மின்வலு விரயம் தொடர்கிறது! அதாவது இவை உறங்கு நிலையில் வைக்கப்படுகின்றன. இவற்றினுள் இருக்கும் அக மணிக்கூட்டு உணரிகள் (internal clock sensors), தொலை இயக்கி உணரிகள் (remote control sensors), பற்றெரி மீள்-மின்னூட்டிகள் (battery re-chargers) போன்றவை மின்வலுவை உறிஞ்சிய வண்ணமே இருக்கும். இத்தகைய உறங்குநிலை உபகரணங்கள் உறிஞ்சும் மின்வலுவின் அளவு, அவற்றின் வினைத்திறனில் (efficiency) தங்கியுள்ளது. சில தயாரிப்புகள் மிகவும் அதிக மின்வலுவையும், சில தயாரிப்புகள் மிகவும் குறைந்த மின்வலுவையும் உறிஞ்சக் கூடியன.

உறங்குநிலை உபகரணங்கள்: செல்பேசி (cell phone), மின்னிணைப்பற்ற தொலைபேசி (cordless phone), கணினி (computer), கணினி முகப்பு (computer monitor) தொலைக்காட்சிப் பெட்டி (TV), மின்ம ஒளி வட்டு (DVD), ஒளி வட்டுப் பதியி (VCR), ஒளிபரப்புவடப் பெட்டி (cable box), தொலைநகற் பொறி (fax machine), அச்சிடு பொறி (printer), ஒளிப் பிரதிப் பொறி (photo copier), மின்னிணைப்பற்ற இலத்திரனியல் கருவிகள் (cordless electronic tools), செல்கைப்பேசி (walkie-talkie) வகைகள்.

உறங்கு நிலை உபகரணங்கள் உறிஞ்சும் மின்வலுவின் அளவினைக் கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது:

| உபகரணம் | மின்வலு விரயம் |
|---|---|
| cordless phones | 66% |
| TVs | 25% |
| VCRs | 30% |
| DVD players | 75% |
| Radios | 90% |

Source: EnergyStar.gov

அனைத்து நாட்டு வலுவள முகமையகம் (International Energy Agency) மேற்கொண்ட கணிப்பின்படி கனடாவில் ஆண்டுதோறும் உறங்கு நிலை உபகரணங்கள் உறிஞ்சும் மின்வலு: 200 - 400 terra watts!

இலத்திரனியல் உபகரணம் ஒவ்வொன்றும் (தனித்தனியாக) 10 - 15 watts மின்வலுவை உட்கொள்ளும். இலத்திரனியல் உபகரணங்கள் அனைத்தும் மொத்தத்தில் பெருமளவு மின்வலுவை அபகரிக்க வல்லவை. இவ்வாறு ஒரு வீட்டிலேயே பெருமளவு மின்வலு வீணாக்கப்படுமாயின், முழு நாட்டிலும் வீணாக்கப்படும் மின்வலுவின் அளவை நாம் கற்பனை செய்து பார்க்கலாம். இது வீட்டின் பொருளாதாரத்துக்கு மட்டுமல்ல, நாட்டின் பொருளாதாரத்திற்கும் பேரிழப்பாகும்.

உறங்குநிலை உபகரணங்களால் வேறு ஆபத்துக்களும் உண்டு: முக்கியமாக, தீ பற்ற வாய்ப்புண்டு. ஈரப்பதன், இடி மின்னல் மிகுந்த நாட்களில், பழைய இலத்திரனியல் உபகரணங்கள் உறங்குநிலையில் இருக்கும் வேளைகளில் தீப்பிடிக்க வாய்ப்புண்டு. இவ்வாறு தீப்பிடித்து, உற்பத்தியாளரால் மீளக் கோரப்பட்ட பொருட்களுள் Sony நிறுவனத்தின் மடிக் கணினிப் பற்றெரி (laptop computer battery) அடங்கும். உறங்குநிலையில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டி போன்ற பொருட்கள் காபனீரொட்சைட்டை உற்பத்தி செய்வதால், காபனீரொட்சைட் வீட்டைப் பீடிக்க வாய்ப்புண்டு.

சாதாரண தொலைக்காட்சிப் பெட்டிகளைவிட, துலக்கம் மிகுந்த தொலைக்காட்சிப் பெட்டிகள் (High Definition TV sets) இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிக மின்வலுவை உட்கொள்ளும். சாதாரண தொலைக்காட்சியில் படம் பார்ப்பவரை விட துலக்கம் மிகுந்த தொலைக்காட்சிப் பெட்டியில் படம் பார்ப்பவர் 10 ஆண்டுக் காலப்பகுதியில் 500 டொலர்களை மேலதிகமாகச் செலுத்துவதாக இயற்கை வள பரிபாலன சபை தெரிவிக்கிறது.

பெருகி வரும் வலுவள நுகர்வைக் குறைக்கு முகமாகவும், சூழலைப் பாதுகாக்கு முகமாகவும் eco ENERGY Retrofit program என்று ஒரு புதிய வழிமுறையினை கனடிய அரசு ஒழுங்கு செய்துள்ளது. அதன்மூலம் மக்களுக்கு ஒரு சிறு தொகையினை அது வழங்கி வருகின்றது. இதன் மூலம் ஆகக் குறைந்தது $5,000 வரை பெற்றுக் கொள்ள வழி இருக்கிறது.

வீட்டு மின்வலு நுகர்வைக் குறைப்பதில் கனடிய மத்திய அரசு இரண்டு உதவித் தொகைகளை வழங்கும்.

### வீட்டில் மின்வலு இழப்பை தவிர்ப்பதற்கு வழங்கப்படும் தொகைகள்

| | |
|---|---|
| Up to $600 | for roof and attic insulation |
| Up to $1,500 | for exterior wall insulation |
| Up to $1,000 | for basement insulation |
| Up to $800 | for crawlspace insulation |
| Up to $300 | for air sealing your home |
| $30 | for each replacement window and door |

### இலத்திரனியல் உபகரணங்களை மாற்றீடு செய்வதற்கு வழங்கப்படும் தொகைகள்

| | |
|---|---|
| $500 | for high-efficiency furnaces |
| $200 | for upgrading your Air Conditioner |
| $300 | for high-efficiency hot water heaters |
| $200 | for instantaneous hot water heaters |
| $600 | for high-efficiency boilers |
| $300 | for heat recovery ventilators or HRV |
| $500 | for solar-powered hot water systems |
| $400 | for air-source heat pumps, which |

55ம் பக்கம் பார்க்க...

S.P ELECTRONICS & COMPUTERS

அனைத்துத் தமிழ் வானொலிகளும் புதிதாக வாங்குவதற்கும், திருத்திக் கொள்வதற்கும்

416 264 6400

2641 Eglinton Ave. Scarborough
(Brimley & Eglinton)

# CENTUM

## Rapid Mortgages Inc.

**Licensed by the Financial Services Commission of Ontario # 10158**

**New/Re-Finance/Switch Mortgages Welcome**

Break your Current High Rate! Even with penalties you might SAVE BIG! Free Analysis to see if you can SAVE! Call Now!

**5 Year FIXED Rate : 4.93%**

***" NO PENALTY "*** 5 year Fully open Variable

Rate: **4.00%**

All Offers are LIMITED TIME ONLY ACT NOW, good credit rating and income required to qualify

*Want to become a mortgage agent? Rapid 5 day course starting next month!! Send your resume to: joincentum@gmail.com*

---

CENTUM Rapid Mortgages Inc.

Financial Services Commission of Ontario Brokerage License # 10156

211-80 Nashdene Rd, TOR, ON, M1V 5E4

WWW.CENTUM.CA/RAPIDMORTGAGES

Call ***Thaya PK Kandiah*** BAS, ABR®

**Principal Mortgage Broker**

Financial Services Commission of Ontario Broker License # M08001083

Cell: **416.716.8707** Bus: **416.644.3555**

Interest rates are subject to change without notice. Qualification based on individual credit worthiness and income. Some other conditions may apply, call for details. Qualified deals must close within 30 Days of initial application.

FREE

இலவசம்
இலவசம்
இலவசம்
இலவசம்

# தகவல் 2009

THAKAVAL BUSINESS DIRECTORY 2009

**2009 தகவல் வர்த்தகக் கைநூலில் உங்கள் விளம்பரங்கள் முற்றிலும் இலவசமாக இடம்பெற இன்றே தொடர்புகொள்ளுங்கள்.**



உங்கள் வர்த்தக விளம்பரங்கள் குறைந்த செலவில் பல வடிவங்களில் வெளிவர அழைங்கள்.

Four Ways to Browse Your Ad

- Regular Directory
- Pocket Size Directory
- Website
- PDA (Personal Digital Assistant)


**FREE Advertisement Size: 11cm x 5.5cm**

FULL PAGE:
- Color: $300
- B/W: $150
- Both: $400
- 2 Color & 2 B/W = $750

Thakaval Business Directory
230-55 Nugget Ave.
Scarborough ON
M1S 3L1

Tel: 416-361-0482
Fax: 416-361-0482
info@thakaval.ca
www.thakaval.ca

இறுதி திகதி:
OCTOBER 31, 2008



# எல்லாந் தெரிந்தவரே எழுத்தாளர்



வி. கந்தவனம்
kanthavanam@thaiveedu.com

எழுத்தாளருக்குக் கல்வியும் கேள்வியும் வேண்டும். கல்வி கேள்விக்கு எல்லையும் இல்லை, அறிவுக்கு முடிவும் இல்லை.

எழுத்தாளர், தொடர்ந்து படித்துக் கொண்டே இருத்தல் வேண்டும். ஆயினும், புத்தகப் பூச்சியாய் மாறலாகாது. புத்தக அறிவு மட்டுமே உள்ள ஒருவர் புத்தகங்களைப் பார்த்தே எழுதிக் கொண்டிருப்பர். புதுமைகள் எதையும் அவரிடமிருந்து எதிர்பார்க்க முடியாது,

அறிவு, நாளாந்தம் வளர்ந்து கொண்டே இருக்கிறது. வளரும் அறிவோடு எழுத்தாளரும் வளர வேண்டும். முக்கியமாக நடைமுறைச் செய்திகள், சம்பவங்கள், பிரச்சனைகள் பற்றிய அறிவில் எழுத்தாளர் வல்லவராக இருத்தல் வேண்டும். நவீன இலக்கியப் போக்கையும் அவர் அறிந்திருத்தல் வேண்டும்.

எழுத்தாளர்கள் பலர், இன்னமும் வழக்கமான பொருளாதார ஏற்றத்தாழ்வு, சாதி வேறுபாடு, சீதனக் கொடுமை போன்ற மலிவான பிரச்சனைகளைச் சுற்றியே வட்டமிடுகின்றனர். காரணம், இவற்றுக்கு அப்பால் செல்லும் ஆற்றல் இவர்களுக்கு இல்லை.

ஆற்றலும் இல்லை என்று சொல்லிவிட முடியாது. பாரம்பரியச் சமுதாயச் சீர்கேடுகள் ஆற்றல் மிக்க எழுத்தாளர்களின் பார்வையைக் கட்டுப்படுத்துகின்றன. அதனால், விளையாட்டு வீரன், விஞ்ஞானி போன்றவர்களை மையமாகக் கொண்டு, அவர்களின் பிரச்சனைகளை விவரிக்கும் படைப்புக்கள் தமிழில் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றன. அதுபோலவே, மருத்துவத்துறை, கணினித்துறை பற்றி எழுத வல்லவர்களும் அரிதாகவே காணப் படுகின்றனர்.

எழுத்தாளர்கள் புதுப் புதுப் பொருள்களைக் கையாளும் அளவுக்கு தமது அறிவுப் பரப்பை விரிவாக்க வேண்டிய காலம் இ∴து என்பதனை உணர்தல் வேண்டும்.

எனினும், இக்காலத்தில் ஒரு சில தமிழ் எழுத்தாளர்கள் புதுப்புதுத் துறைகளிலும் தங்கள் கைவண்ணத்தைக் காட்டத் தொடங்கி இருப்பது கவனிக்கத்தக்கது. ஆனந்த விகடன் பத்திரிகையில் சுஜாதா எழுதிய ஆ என்ற தொடர்கதை புதுமையாக அமைந்ததற்குரிய காரணம், கணினி, உளவியல், மறுபிறப்பு, மருத்துவம் ஆகிய துறைகளில் வேண்டிய அறிவை அவர் பெற்று, அதனைச் சிறப்புறத் தனது கதைக்குப் பிரயோகித்தமையேயாகும்.

வெறும் அறிவே, ஒருவரை வெற்றிபெறும் எழுத்தாளராக ஆக்கமாட்டாது. நூலறிவை வாழ்க்கையுடன் கலக்கிக் குடிக்க வேண்டும் என்கிறார், பெயர் பெற்ற ஆங்கில எழுத்தாளர் வேர்ஜீனியா வூல்வ் (1882-1941). வாழ்க்கை அநுவப அறிவு இலக்கிய கர்த்தாவுக்கு இன்றியமையாதது.

எழுத்தாளர், மனிதனைப் பற்றி மனிதனுக்கு எழுதுகின்றவர். அதனால், மனித வாழ்க்கையின் ஆழ, நீள, அகலங்களை அவர் நன்கு அறிய வேண்டியவர் ஆகின்றார். மனித வாழ்க்கை எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடியதன்று. அது புதிர் மிகுந்தது. புதுமை நிறைந்தது. அதனைப் புரிந்து கொள்வதற்கு இணையற்ற விவேகம் வேண்டும். புறக்கண்களுடன் அகக்கண்ணும் வேண்டும்.

அறிவு, அநுபவம், விவேகம் ஆகியவற்றுடன் எழுத்தாளருக்கு இன்னுமொரு தகைமை இருத்தல் அவசியம்.

கற்பனைத் திறன்.

## கற்பனை வளம்

எழுத்தாளர் தாம் சொல்லவரும் பொருளை, படிப்பவர் சுவைக்கக் கூடிய வகையில், எழுதுதல் வேண்டும். இ∴து ஒரு பெரிய கலை; சமையற்கலையை ஒத்த நற்கலை.

உண்ண இருக்கும் காய்கறி வகையைத் துடைத்துக் கழுவி, துண்டு துண்டாக அளவுற வெட்டி, கழிவுகள் நீக்கி, அடுப்பில் வைத்து, தாளிதம் பண்ணி, சரக்கு வகை சேர்த்து, உப்பையும் புளியையும் இட்டு, பதத்துக்குச் சமைத்துப் பசியாதவர்க்கும் பசியுண்டாக்கும் பாங்கினில் வழங்குபவன் சமையற் கலைஞன்.

சமைக்கத் தகுந்ததையும் உண்ணத் தகுந்ததையுமே சமையற் கலைஞன் தெரிவு செய்வான். சொல்லத் தக்கதையும் சுவைக்கத் தக்கதையுமே எழுத்தாளரும் தெரிவு செய்தல் வேண்டும். தெரிவு செய்த உரிப் பொருளைத் தெளிவுபடுத்துதற்கு வேண்டிய பாத்திரங்கள், சம்பவங்கள், களங்கள் போன்றவற்றைப் பொருத்தமுற அமைப்பதற்கு உதவுவது கற்பனைத் திறனாகும். ஆதனால் எழுத்தாளருக்கு இத்திறன் இன்றியமையாததாகின்றது.

"Imagination is more important than knowledge"; அறிவிலும் கற்பனை முக்கியமானது - இதனைச் சொன்னவர் அறிவியலிற் பிறந்து, அறிவியலில் வளர்ந்து, அறிவியலை வளர்த்த, அமெரிக்க அறிவியல் மேதை அல்பேட் ஐயின்ஸ்ரீன் அவர்கள்.

கற்பனை, வாழ்க்கையை வளம்பெறச் செய்கின்றது. சின்னக் குழந்தைகள் முதல் பெரியவர் கள் வரை, கற்பனை உலகில் இடையிடை சஞ்சரிப்பது இயற்கை.

கற்பனை பலவகை:

ஒன்றைக் கொண்டு மிகுதியை ஊகித்து அறிதல்.
இ∴து இப்படி இருந்தால் இன்னும் நன்றாக இருக்குமென நினைத்தல்.
உரிய பொருளுக்கு உகந்த உதாரணந் தேடல்: உவமைகள் காணல்.
முன்பு கண்டதை அல்லது கேட்டதை மனத்தில் வரைதல்.
உள்ளதைக் காணாதவிடத்தும் கண்டதுபோல நம்புதல்.
ஒன்றை இன்னொன்றாகப் பாவனை பண்ணுதல்.
இல்லாததை உள்ளது போல எண்ணுதல்.

கற்பனை, அற்புதமான ஒரு சக்தி. ஒரு நொடியில் உலகத்தை வலம் வரவோ ஒப்பற்ற ஓர் இராச்சியத்தை ஆளவோ கற்பனையால் முடியும். இந்தச் சக்தியால் மக்களைக் கவரவல்லவர், எழுத்துலக மன்னர் ஆகலாம்.

எனினும் அதீத கற்பனைகளுக்கும் அண்டப் புளுகுகளுக்கும் இக்காலத்தில் அதிக வரவேற்பு இல்லை என்பதனை மனதிற்கொள்ள வேண்டும். படைப்பை அழகு செய்வதற்குப் போதுமான கற்பனையே தற்காலத்திற் பெரிதும் வேண்டப்படுகின்றது.

உண்மை வாதக்காரரும் (realists), இயற்கை வாதக்காரரும் (naturalists) கலைத்துறையில் கண்மூடித்தனமான கற்பனையை எதிர்க்கின்றனர்.

உண்மை வாதம், உள்ளதை உள்ளவாறு சொல்ல வேண்டும் என்கின்றது. குப்பை கூழம், துன்பம், அசிங்கம், வசதியீனங்கள் போன்றவற்றையும் இழிவு வழக்கெனத் தள்ளாது, அவற்றையும் எடுத்துச் சொல்ல வேண்டும் என்கின்றது. அதீத உணர்ச்சிகளுக்கும் மரபு வாதங்களுக்கும் இக்கொள்கையில் இடமில்லை.

இயற்கை வாதம், எல்லாவற்றையும் இயல்பாக, இயற்கையாக எடுத்துக்காட்ட வேண்டுமென வலியுறுத்துகின்றது. இயற்கை நியதிகளே எல்லா நிகழ்வுகளுக்கும் காரணம் என்பது இதன் வாதம். கலைப் படைப்பிற் செயற்கைத் தன்மையை இது முற்றாகத் தூற்றுகின்றது.

இவ்விரு கோட்பாடுகளுக்கும் அடிப்படையில் அதிக வேறுபாடில்லை.

இத்தகைய கோட்பாடுகளாலோ வேறெந்தச் சித்தாந்தங்களாலோ, மனிதன் கற்பனை செய்வதைத் தடுத்து நிறுத்த முடியாது. ஆனாலும், அவனது கற்பனை, சமுதாயத்துக்குப் பயன்படும் வகையில், காரண காரியத்துடன் அமைதல் வேண்டும். கற்பனை உலகில் அவன் சதாவாழினும், சமுதாயத்துக்குப் பயன்தரும் வகையில் அவனது ஆக்கங்கள் அமையின் மக்கள் அவற்றைப் போற்றவே செய்வர்.

## எழுத்தாளர் கடமை

எழுத்தாளர், வெறும் கற்பனை உலகிற் சஞ்சரிப்பவரா? நடைமுறை வாழ்க்கைக்கும் அவருக்கும் வெகு தூரமா? ஊருக்கல்லோ உபதேசம், உனக்கல்லவே! என்பவரா?

இல்லை, இல்லவே இல்லை. அவர், மக்களை நேசிப்பவர்; மக்களின் நல்வாழ்வுக்கு உழைப்பவர்; சமுதாய முன்னேற்றத்துக்கு அச்சாணி போன்றவர்.

எழுத்தாளர் தனது சமுதாயப் பாரம்பரியத்தின் பாதுகாவலர்.

இன்றைய சூழ்நிலையில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர், தமது இனத்துக்குப் பெருந்தொண்டு செய்யக் கடமைப்பட்டுள்ளனர். புலம்பெயர்ந்து உலகத்தின் பல பாகங்களிலும் குடியேறியிருக்கும் ஈழத்துத் தமிழ் மக்கள் மத்தியில் கலாச்சார மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. புகுந்த நாடுகளின் நாகரிகங்கள் நம்மவரின் பாரம்பரிய மரபுகளை விழுங்கிவரும் சகுனங்கள் தலைகாட்டத் தொடங்கியுள்ளன. இதனைச் சாதாரண மக்கள் உணர மாட்டார்கள். உணர்த்தும் பொறுப்பு எழுத்தாளருக்கும் பிற அறிஞருக்கும் உரியது.

மேலும், புகுந்த நாடுகளில் தமிழ் மொழியைப் படிப்பதால் ஆகும் பயன் என்ன என்ற வாதத்தையும் எழுப்புகின்றனர். தாய்மொழியைப் பயன்கருதி யாரும் படிப்பதில்லை. தாய் மொழியைப் பேசுவதும் படிப்பதும் ஓர் ஒப்பற்ற உரிமை; பிறப்புரிமை தமிழ் மொழியின் மேன்மையை எடுத்துச் சொன்னாற்றான், அதனை வளர்க்க வேண்டும் என்கின்ற ஆர்வமும் மக்கள் மத்தியில் ஏற்படும். இவ்விடயத்தில் தமிழ் மக்களை வழிபடுத்துவது எழுத்தாளருடைய தலையாய பணியாகின்றது.

அத்துடன், புதுமைகளை விதைத்து அறுவடை செய்யும் உழவராகவும் எழுத்தாளர் விளங்குகின்றார். அவரது அறுவடைகள் மொழி வளர்ச்சியையும் சமுதாய முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவல்லன.

புதுமை என்ற பெயரிற் சில எழுத்தாளர்கள் இரவற் சரக்குகளை இறக்குமதி செய்கின்றனர். சமுதாயத்துக்கு ஒவ்வாத கருத்துக்களை விதைக்க முயல்கின்றனர். தமது இனத்தின். தனித்துவத்தைப் பங்கப்படுத்தும் புதுமைகளை எந்தச் சமுதாயமும் ஏற்றுக்கொள்வதில்லை.

முதலாம் இரண்டாம் உலகப் போர்களுக்கும், இன்று பல நாடுகளில் நடைபெறும் சண்டைகளுக்கும் அடிப்படைக் காரணம் இனத் தனித்துவத்தைப் பேணும் ஆர்வமேயாகும். இத்தகைய ஆர்வத்துக்கு இனவெறி, சமயப்பூசல், வகுப்பு வாதம், உரிமைப் போர், எல்லைப் பிரச்சனை என்று வெவ்வேறான பெயர்கள் சூட்டப்படினும், இனத்துவத்தைக் கட்டிக்காக்க வேண்டும் என்னும் இலட்சியமே மூலகாரணமாகும். எழுத்தாளர்களும் இதனை நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இல்லையென்றால் இறக்குமதி செய்யலாம்; இருக்கிறதெனின் இரவல் ஏன்?

எழுத்தாளர், ஒரு சமூக வைத்தியருமாம். சமூக ஊழல்களைக் குத்திக் காட்டியும், ஒவ்வாத பழக்க வழக்கங்களால் வரக்கூடிய தீமைகளை எடுத்துக் காட்டியும், மக்களை நல்வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு, எழுத்தாளனுக்கு உண்டு.

அடக்கு முறைகளை ஒழிக்கவும் மனித உரிமையைக் காக்கவும் நீதியைப் பேணவும் அறத்தை நிலைநாட்டவும் எழுத்தாளர்கள் தமது பேனாக்களைப் பயன்படுத்தி வந்த வரலாறுகள் ஏராளம்.

சங்கத் தமிழ்ப் புலவர்கள் போர்செய்த மன்னர்களைச் சமாதானப்படுத்தியும், மன்னர்கள் நீதிநெறி தவறிய காலத்து அஞ்சாது அவர்களுக்கு அறிவுரை வழங்கியும், அரசியலை நெறிப்படுத்திப் பாங்கைப் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

எழுத்தாளர் எழுதுவது, எல்லோரும் இன்புற்றிருக்கவேயாம்.

■ ■ ■

# குளிர்கால ஆடைகள், அணிகள்

சிந்தியுங்கள்! காலநிலை மாற்றங்களுக்கேற்ப பொருத்தமான ஆடைகளை அணிவதால் சுகமான வித்தியாசங்களை உங்களால் மனப்பூர்வமாக உணர முடிந்திருக்கிறதா? குளிர்கால சுகானுபவத்தைத்தான் கூறிக்கொண்டிருக்கின்றேன்.

அது பனிச் சறுக்கல் விளையாட்டாக இருக்கட்டும். அன்றேல் வீட்டு முன்னே ஒய்யாரமாய்க் குவிந்திருக்கும் வெண்பனியைச் செதுக்கி உருங்வகள் செய்வதாகக் கூட இருக்கட்டும். நாம் குளிருக்குப் பொருத்தமாய் அவைகளைத் தேர்ந்தெடுத்து நம்முடம்பில் படரவிட்டுக்கொண்டால் பிறகு குளிர்தான் நம்மை என்ன செய்துவிட முடியும்?

ஆய்வாளர்களின் கூற்றுப்படி, சின்னச்சின்ன வரைமுறைகளை நாம் கடைப்பிடித்தாலே பெரிய மாற்றங்களை உருவாக்கலாம் என்பது நூற்றுக்கு நூறு உண்மை.

ஆடைகளை விற்கும் கடைகளில் போய் நின்றுகொண்டு, சிறு குழந்தைகள் குளிரைத் தாங்கக்கூடிய வகையிலான ஆடைகளைத் தெரிவு செய்வதென்பது இலகுவான காரியமல்ல. ஆனால், இனியசெய்தி என்னவெனில் காலப்போக்கில் விதவிதமான துணிகளில் பலவகையான ஆடைத் தெரிவுகள் மிகவும் விருத்தியுடன் வெளிவருவதுதான். இம்மாதிரியான உடைகள் மனித சரீரத்தை மிதமான வெப்பம் மிதக்கும் உடலாக மாற்றுவதால் ஏற்படும் சுகம் மட்டுமன்றி, கஸ்டமின்றி மூச்சை இழுத்துவிடவும் இலகுவாக இருக்கும். மற்றையதோர் முக்கிய விடயமானது, இம்மாதிரி ஆடைகளுக்குள் தண்ணீர் ஊடுருவிச் செல்ல வழியே இல்லை.

குளிர் காலத்தில் உங்களை இரண்டு ரொட்டித் துண்டுகளுக்குள் வைத்துக் கடிக்கும் சிற்றுண்டியாய் ஆடைகளுக்குள் புகுத்திக் கொள்ளுங்கள். உங்கள் புருவம் உயர்வதை உணரமுடிகிறது. தப்பான அர்த்தமில்லை. ஒன்றன்மேல் ஒன்றாக இரண்டு அல்லது கூடிய எண்ணிக்கையில் ஆடைகளை அணிந்து கொள்ளுங்கள் என்று சொல்ல வந்தேன். இதிலுள்ள பெரிய இலாபம் என்னவெனில், குளிரின் அளவைப் பொறுத்து, தேவையைப் பொறுத்து, ஒன்றிரண்டை தற்காலிகமாக கழற்றி வைக்கலாம் அல்லவா? குளிர் குறைந்தால் அல்லது நீங்கள் ஒரு விடயத்தில் ஈடுபடும் பரிணாமத்தைப் பொறுத்து, ஆடை விடயத்தை நீங்களே தீர்மானிக்கலாம். பொதுவாக மூன்று அடுக்காக ஆடைகளை அணிவதால் சரியான உடல் வெம்மையை நீங்கள் உங்களுக்குள்ளேயே உற்பத்தி செய்யலாம்.



முதன் முதலில் அணியும் ஆடையானது, உங்கள் உடலில் நேரடியாக படரக்கூடியதாகும். உடலின் சதையுடன் நேரடியாய் மோதும் உடை இதுதான். இம்மாதிரி உள் அங்கிகளை குளிர்காலங்களில் முடிந்த அளவுக்கு நீளமாக அணிந்துகொள்ளப் பழக வேண்டும். அசௌகரியம்தான். ஆனால், ஆரோக்கியமான முடிவு. இவற்றை மிகவும் இறுக்கமாக அணியக்கூடாது. அணிந்தால் உடலிலுள்ள இயற்கையான ஈரப்பதமானது, நொடியில் உறிஞ்சப்பட்டுவிடும். பட்டினால் நெய்யப்பட்ட ஆடைகளாய் இருத்தல் நன்று. இவை உடம்பின் ஈரத்தை மெதுவே உறிஞ்சி ஈர ஆவியாய் தம்முள்ளேயே வைத்துக் கொள்ளும்.

இரண்டாவதாக அணியப்பட்ட ஆடையானது, கம்பளியால் நெய்யப்பட்டிருத்தல் நன்று. கம்பளி ஆடைகள் சூட்டை தமக்குள் வைத்திருந்து, குளிரை அறவே வெளியேற்றக் கூடியவை. காற்றுப் புக வசதியாய் கம்பளி ஆடைகள் அழகாக நெய்யப்பட்டிருக்கும். ஆனால், இம்மாதிரியான ஆடைகள் இறுக்கமாகவும், பாரமானதாகவும் இருந்தால் காற்றுப் புகுதல் தடைப்படும். அது உடம்புக்கு நல்லதல்ல. சில நெசவு ஆடைகள் மேலே ஈரம் பட்டாலும் உடனே உலர்ந்து விடக் கூடிய நன்மையை உடையவை. அம்மாதிரி உடைகளை குளிர் காலங்களில் அணிவது மிகவும் நன்மை பயக்கும். பருத்தியால் நெய்யப்பட்ட ஆடைகள் குளிர் காலத்துக்கு உகந்தவை அல்ல. பருத்தித்

53ம் பக்கம் பார்க்க...



துணிகளில் துவாலைகள் செய்வதின் காரணம் என்ன தெரியுமா? அவை ஈரத்தை அபரிமிதமாக உறிஞ்சக்கூடியவை. இவ்வகை உடையை பனி கடுமையாக கொட்டும் காலங்களில் அணிந்தால் விளைவு என்ன என்பதை சொல்லாமலே புரிந்துகொள்ளலாம். சட்டென்று ஈரத்தை உள்வாங்கிவிடுமே! விளைவு உடலில் ஈரம் பட்டுக்கொண்டிருப்பது மட்டுமன்றி, காற்றும் கடுமையாக வீசினால் உடல் கடுமையான குளிரை அனுபவிக்க வேண்டிய கொடுமைக்கு உள்ளாவிடும். கால் சட்டை, காலுறை, மேல் அடை இவைகளில் எந்தவித உடையையேனும் பருத்தியினால் செய்த துணிகளில் நெய்யப்பட்டிருந்தால் குளிர் காலங்களில் இவற்றை அணிவதைத் தவிர்த்துவிடுங்கள். மூன்றாவதாக, மேலாடைதான் உங்களை மிகுதியாக பாதுகாப்பதில் முக்கியமான பங்கு வகிக்கின்றது. இவற்றில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவெனில், இது வெண்பனி கொட்டும்போது, நீரை அல்லது ஈரத்தை உள்வாங்கினாலும் விரைவில் அவற்றை நீராவியாய் சூடேற்றி வெளியேற்றக்கூடிய தன்மையுடன் செயல்படக் கூடியதாக இருக்க வேண்டும். இது இறுக்கமாய் உடலோடு ஒட்டி இருக்கக்கூடாது. உடம்பில் பொருத்தமில்லாத ஆடைகளை அணிவதன் மூலம் ஈரம் பட்டுவிட்டாலோ பிறகு மறு ஆடை ஒன்றை மாற்றும்வரை அந்த ஈரத்தை முறியடிக்க எந்த வழியுமே கிடையாது. இதை மனதில் இறுக்கமாக நிலைநிறுத்திக் கொள்ளுங்கள்.

உடலின் அறுபது சதவிகித சூடானது, தலையில் உள்ள துவாரங்கள் மூலம் வெளியேறக்கூடியது. இதனாலேயே குளிர் காலங்களில் தலைக்கு குல்லாய், தொப்பி முதலியவற்றை அணிந்து தலையைப் பத்திரப் படுத்தக் கொள்ள வேண்டும். கடைகளில் விதவிதமான வடிவங்களில் நிறங்களில் அளவுகளில் அழகான தொப்பிகள், குல்லாக்கள் போன்றவற்றை வாங்கலாம். இவைகள் பெரும்பாலும் கம்பளிகளாலேயே நெய்யப்பட்டிருக்கும். இவை தலையை அரிக்காதவாறு இருக்கும் மூலப் பொருட்களால் செய்யப்பட்டிருப்பதால் தலையைப் பேணிப் பாதுகாப்பதோடு, தலையையும் குளிரில்லாது மிதமான வெப்பத்தில் தழுவச் செய்யும். கடும் குளிர்காலங்களிலோ மூக்கும் கண்களும் மட்டுமே தெரியக்கூடிய மாதிரியான தலைக் குல்லாய்களை அணிதல் மிகவும் பலனைத் தரும்.

அடுத்த பாதுகாப்பான உறையானது, கண்களில் அணியும் குளிர் கண்ணாடிளாகும். இவை, கண்களைக் கூசச் செய்யும் வெய்யில் இருந்து பார்வையைப் பாதுகாப்பதுடன் மாத்திரம் தன் கடமை முடிந்ததென்ற இருந்துவிடுவதில்லை. இவை நம் கண்களை கடுமையான சூரியக் கதிர் வீச்சுக்களினின்றும் பாதுகாக்கின்றன. வெண்பனி உறைந்து கிடக்கும்போது, சூரியக் கதிர்கள் பட்டுத் தெறிக்கும் பிம்பமானது, சாதாரண ஒளிக் கதிர்களை விட மிகவும் சக்திவாய்ந்ததாகும். இவை கண்களைத் தாக்கும்போது, கண்கள் கூடுதல் பாதிப்பை அடைய வாய்ப்புகள் அதிகமாக இருக்கும். மிகவும் வெயில் கடமையாக எரிக்கும் நாட்களிலும், பனி கடுமையாகக் கொட்டும் காலங்களிலும் கண்களைப் பாதுகாக்க குளிர்க் கண்ணாடி அணிதல் மிகவும் இன்றியமையாததாகும். ‘‘நூறு சதவிகித சூரியக் கதிரிலிருந்து பாதுகாப்பானது’ என்ற குறிப்புடன் விற்கப்படும் கண்ணாடிகளைத் தெரிந்தெடுத்து அணிவது கண்களுக்கு நல்ல பலனைத் தரும். கண்ணாடிகள் நம் முகத்துக்கு அளவானதாகவும் பொருத்தமானதாகவும் இருத்தல் மிக முக்கியம். மூக்கின் மேல் அழகாக அந்தக் கண்ணாடி உட்கார்ந்திருக்க வேண்டும். இம்மாதிரிக் கண்ணாடிகள் புருவங்களுக்கு மேலே உயர்ந்தும், கன்னக் கதுப்புக்களின் கீழேயும் படர்ந்திருக்க வேண்டும். ஆனால், கன்னக் கதுப்புக்களுடன் கூடிய மூக்கில் இடைவெளி அமையுமாற்போல் இருக்கக் கூடிய கண்ணாடிகளைத் தேர்ந்தெடுங்கள்.

கைகளில் அணியும் கையுறைகள், கம்பளி நூலினால் பின்னப்பட்டிருப்பின் மிகவும் நல்லது. mitten என்பது ஒருவித கையுறை. ஆனால், இதன் வடிவமைப்பு சற்று வித்தியாசமானதாய் இருக்கும். அதாவது, கட்டை விரலைப் பொருத்தக்கூடிய பகுதி இதில் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால், மற்றைய நான்கு விரல்களும் ஒரு இடத்திலேயே பொருந்துவதுபோல் அமைக்கப்பட்டிருக்கும். நான்கு விரல்கள் ஒரு பகுதியிலும் கட்டை விரல் தனியாகவும் நுழையுமாறு இவ்வகை கையுறைகள் அமையப்பெற்றிருக்கும். Gloves எனப்படும் கையுறைகளில், ஐந்து விரல்களும் தனித்தனியே நுழையக் கூடிய மாதிரியாக அமையப்பட்டிருக்கும். சிறு குழந்தைகளுக்கு முதற்கூறிய கையுறைகள் மிகவும் பொருத்தமானதாக இருக்கும். ஏனெனில் இரண்டாவது வகையை விட முதலாவது கையுறை குளிரை மேலதிகமாகத் தாங்கக் கூடியது. நீங்கள் எவ்வித காரியத்தில் குளிர் காலங்களில் வெளியேபோய் ஈடுபடப்போகின்றீர்கள் என்பதைப் பொறுத்து, இவ்விரண்டில் எது பொருத்தமானதோ அந்த வகைக் கையுறைகளைத் தேர்ந்தெடுத்து அணிவது நல்லது. இறுக்கமான கையுறைகளை வாங்கவோ அணியதோ செய்யாதீர்கள்.

காற்று உட்புக வசதியாக விரல் நகங்களுக்கு மேல் இடைவெளிவிட்டு, கையுறைகளை அணிந்துகொள்ளுங்கள்.

காலுறைகள் அணியும்போது, சிலர் ஒன்றுக்கு இரண்டாகக் கால்களில் அணிவதைக் காணலாம். அப்படி அணியவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், இரண்டு மூன்று என்று காலுறைகள் அணிவதன் மூலம் நீங்கள் கால்களில் தவழும் இரத்த ஓட்டத்தை உங்களை அறியாமலே தடைப்படுத்துகின்றீர்கள். காலுறைகள் பலவித நெசவுத்துணி வகையறாக்களைக் கொண்டு தைக்கப்படுகின்றன. இவற்றில் நீளமான காலுறைகளை அணிந்தால் மிதமிஞ்சிய குளிர் உடலுக்குள் ஊடுருவி இரத்த நாளங்களைப் புடைக்காதவாறு பாதுகாக்கலாம்.

■ ■ ■


# வேலைக்கு ஆட்கள் தேவை

**Danforth & Pharmacy** பகுதியில் இயங்கிவரும்
**Pizza** நிறுவனம் ஒன்றில் வேலை செய்வதற்கு
ஆட்கள் தேவை



**416.875.6869**





Est. 1991
**Computek College**
BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY



# PSW, ECA
*Evening classes Starting on*
Sep 2 ( 5 - 9 PM)

**இலவச பயிற்சி நெறிகள் பயில விரும்புகின்றீர்களா?
நீங்களும் தகுதியுடையவராகலாம்!**

வேலையிழந்து தற்போது **Unemployment (EI)** பெற்றுக்கொண்டிருப்பவராக அல்லது,
**Unemployment (EI)** முடிந்து 3 ஆண்டுகளுக்கு மேற்படாதவராக அல்லது,
**Maternity Leave** முடிந்து 5 ஆண்டுகளுக்கு மேற்படாதவராக இருந்தால்,

**அரசநிதியுதவிபெற்று (HRDC), பயிற்சி நெறிகள் பயிலுவதற்கு வேண்டிய விபரங்களைப் பெறத் தொடர்பு கொள்ளுங்கள்.**

நீங்கள் அண்மையில் குடியேறியவராக **(New immigrant)** இருந்தால் அல்லது
**Welfare** பெற்றுக் கொண்டிருப்பவராக இருந்தால் அல்லது
**Underpaid / Part-time /** நிலையான உத்தியோகத்தில் இல்லாதிருந்தால்,

**நிதியுதவி பெற்று பயிற்சி நெறிகளைத் தொடரக்கூடிய வாய்ப்புக்களுண்டு. மேலதிக விபரங்கட்குத் தொடர்புகொள்ளவும்.**

Exam Prep
**CANADIAN SECURITY COURSES ( CSC )**
**Volume 1 & 2**

*Weekend & Evening Courses*
A+ (O/S, Computer Assembly & Troubleshooting), VB, Java, C++, Visual C#, .Net,
QA , AccPac, Quick books, Simply Accounting, MS Office, MCP, MCSE, CCNA, Photoshop & Dreamweaver

Diploma Courses
PERSONAL SUPPORT WORKER ( PSW )
EARLY CHILDCARE ASSISTANT ( ECA
COMPUTERIZED ACCOUNTING
MEDICAL OFFICE ADMIN ( MOA )
BUSINESS ADMINISTRATION
NETWORK ENGINEERING

**Kennedy / Sheppard**
(North-East Corner)
**Tel: 416-321-9911**
2347, Kennedy Road, Suite 301
Scarborough, ON., M1T 3T8

**Kennedy / Eglinton**
(N/W Corner, Above Library)
**Tel : 416-285-9941**
2390 Eglinton Ave East, Suite 248
Scarborough ON M1K 2P5

**www.computek.edu**

crc

# NEW LIFE FRESH START

**கடன் பிச்சனை தீர்ந்து புதிய வாழ்வு திரும்பும் அரிய சந்தர்ப்பம்**



Reduce Your debts upto 85%

**கடன் 75%குறைய நடவடிக்கை**

Tel:416-264-1272

Stop all Interest on your debts

**கடனுக்காக விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்**

Stop collection calls, legal action & garnishments

**கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புக்கள்**
**சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்**

Tel:416-264-1272

Protect all your asstes

**உங்கள் சொத்துக்கள் பாதுகாக்கப்படும்**

Make one monthly payment to all of your creditors

**மாதாந்த ரீதியில் எல்லாகடனையும் தீர்க்க வசதி செய்தல்**

Give you a solution with out bankruptcy

Tel:416-264-1272

**பாங்ரப்சிக்கு செல்லாமல் தீர்வு காண ஏற்பாடு செய்யப்படும்**

55 Town Centre Court, Suite 700, Scarborough, Ont M1P 4X4

Tel:416-264-1272

**Tel: 416-264-1272 Fax: 416-332-0914**

Email: suren@crc4u.com Web:www.crc4u.com



crc

Credit Recovery Canada

Suren Sornalingam
President and CEO

# யாகாவாரயினும் வலுவளம்...

48ம் பக்கத் தொடர்ச்சி...

double as Air Conditioners

$3,500 for geothermal heat pumps, which are energy-efficient heating and cooling systems

அரச உதவித்தொகைக்கு நீங்கள் தகுதியுடையவராக வேண்டின், உங்கள் வீட்டைத் திருத்துமுன் வலுவள ஆய்வு (energy audit) செய்ய வேண்டும். அதற்கு வலுவள மதியுரைஞர்களை (Energy Advisors) நீங்கள் நாடவேண்டும். இவர்கள் அரச அங்கீகாரம் பெற்றவர்கள். கட்டடக் கலையில் பயிற்சி பெற்றவர்கள். அவர்கள் உங்கள் வீட்டைப் பார்வையிட்டு சான்றிதழ் வழங்குவர்.

**அவர்களுடைய தொலைபேசி இலக்கம்: 1-877-732-9888**

மேலதிக விபரங்களுக்கு பின்வரும் இணையத்தளத்தை நாடவும்:

**http://www.homeperformance.com/en/library/grants_rebates.html**

ஒன்ராரியோ அரசு "குளுமை பேணுவீர்" (Keep Cool) என்னும் ஓர் அமைப்பை உருவாக்கியுள்ளது. பழைய குளிரூட்டிகளை (air conditioner) அகற்றி புதிய குளிரூட்டிகளை இடுமாறு மக்களை அது ஊக்குவிக்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளாக இவ்வமைப்பின் உதவியால் ரொரன்ரோவில் 18,000 பழைய குளிரூட்டிகள் அகற்றப் பட்டுள்ளன. 2007ம் ஆண்டு மாத்திரம் 6,000 குளிரூட்டிகள் அகற்றப்பட்டுள்ளன. இதனால் கடந்த ஆண்டு மின்வலு நுகர்வு கிட்டத்தட்ட 1350 மெகாவற்சினால் குறைந்து இருந்தது. மின்நுகர்வு மிகுந்த வேளைகளில் கிட்டத்தட்ட 50,000 வீடுகளுக்கு மின் வலு வழங்கப் போதுமானதாகும்!

அரசின் உதவியுடன் Home Depotவில் கொடை அட்டை (gift card) வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அதாவது மே மாதம் 31ம் திகதியிலிருந்து ஜுன் மாதம் 15ம் திகதிவரை பழைய குளிரூட்டி ஒன்றை ரொரன்ரோவிலுள்ள Home Depot எதிலும் ஒப்படைப்பவருக்கு 25 டொலர் வழங்கப்பட்டது.

## வலுவள விரயத்தை தடுக்கும் முறைகள்

பாவியாதபோது தொலைக் காட்சிப் பெட்டி, கணினி ஆகியவற்றின் மின்னிணைப்புகளைத் துண்டித்து விடவேண்டும். அதாவது முற்றாக சுவர்க் குழியிலிருந்து கழற்றி விட வேண்டும்.

பெரும்பாலான வீடுகளில் இரண்டு, மூன்று தொலைக்காட்சிப் பெட்டிகள் உண்டு. சில சமயம் ஒரே வீட்டில் ஒரே தொலைக்காட்சி நிகழ்ச்சியை இரு வேறு இடங்களில் இருந்து பார்ப்பார்கள். இதனைத் தவிர்க்கலாம்.
கணினிக்கு இரு ஆளிகள் உண்டு. முன் பக்க ஆளி கணினியை உறங்கு நிலைக்கு கொண்டு செல்லும். ஆகவே கணினியின் பின்புற ஆளியை அணைக்க வேண்டும்.

Screen Saver மின்வலுவை உறிஞ்சும். கணினிப் பாவனையை இடைநிறுத்தும் வேளைகளில் Screen Saver-ஐ விடுத்து, Sleep Mode-ஐ பயன்படுத்த வேண்டும். அதைவிட முகப்பை நிறுத்துவது சாலவும் நன்று.

incandescent bulb-ஐ விடுத்து compact fluorescent lights (CFL)-ஐப் பாவிக்கலாம். இவை சாதாரண incandescent bulbs விட CFL வகைகள் 50 – 80% குறைவான மின் வலுவையே உட்கொள்ளும். ஆவை சூழலுக்கும் கெடுதி விளைவிக்க மாட்டா. Incandescent bulb என்பது தோமஸ் ஆல்வா எடிசனினால் கண்டுபிடிக்கப்பட்டது. தங்குதன் என்னும் உலோகம் சூடேறும் போது கிடைக்கும் வெளிச்சமே அது. இவ்வாறான மின் குமிழ்கள் வெளிச்சத்துடன் சேர்த்து வெப்பத்தையும் வெளிவிடும். கூடுதலான மின்வலுவை உட்கொள்ளும். தங்குதன் உலோக இழை 1000 மணித்தியாலத்திற்கு தாக்குப் பிடிக்கக் கூடியது. இவை சாதாரணமாக 60W, 75W 100W அளவுகளில் வருகின்றன. CFL மின் குமிழ்களில் ஒரு மின்வாய் (electrode) உண்டு. குமிழினுள் ஆர்கன் (Argon) அல்லது பாதரசம் (Mercury), ஆவி (vapour) அடைக்கப்பட்டிருக்கும். இதனால் இக்குமிழ்கள் வெப்பத்தை வெளிவிடுவதில்லை. அத்துடன் இவை கிட்டத்தட்ட 10,000 மணித்தியாலங்களுக்குத் தாக்குப் பிடிக்கக் கூடியவை.

வலுவள உடுக்குறி ஒட்டி (energy star sticker) கொண்ட இலத்திரனியல் உபகரணங்களை நாடவும். வலுவள உடுக்குறி இணையத்தளம் பொதுமக்களுக்கு உதவு முகமாக உருவாக்கப்பட்டுள்ளது. அதில் உபகரணங்கள் பாகுபடுத்தப்பட்டுள்ளன. எவ்வகையான உபகரணங்களை நீங்கள் தெரிவுசெய்ய வேண்டும் என்பது அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

**http://www.energystar.gov/**

சமைகலம் (cooker), சலவைப் பொறி (washing machine), உலர்த்தி (dryer) போன்றவற்றை வாங்கும் போது உரு இலக்கத்தை (model number) கவனிக்கவும். எடுத்துக்காட்டாக, 1234AG அல்லது 1234BG அல்லது 1234CG என்று பொறிக்கப் பட்டிருந்தால், அவற்றின் வலுவள வினைத் திறன் ஒரே அளவாகத்தான் இருக்கும். சில செயல்முறைகள் வேறுபடலாம்.

வீட்டின் வெப்பநிலைநிறுத்தியை (thermostat) குளிர் காலத்தில் குறைத்தும், கோடை காலத்தில் கூட்டியும் வைத்துக் கொள்வது நல்லது.

கழுவுபொறி (dish washer) கொண்டு பாத்திரங்களைக் கழுவினாலும், மின்வலுவைப் பயன்படுத்தமாமல், அவற்றை வெறுமனே உலர விடலாம்.

தொலைக்காட்சிப் பெட்டி, மின்ம ஒளி வட்டு, கணினி போன்றவற்றை smart stripe power strips எனப்படும் இணைப்புக்களை பாவித்து மின்னுடன் இணைத்துக் கொள்ளவேண்டும். இலத்திரனியல் உபகரணம் பாவனையில் இல்லாதபோது இவை தாமாகவே மின் இணைப்பைத் துண்டிக்கக் கூடியன.

வெந்நீராக்கியின் வெப்பநிலைநிறுத்தியை 120F வரை குறைத்து வைத்திருக்கவும்.

Kill-a-Watt and Wattson என்னும் உபகரணத்தை பாவித்து உங்கள் இலத்திரனியல் உபகரணங்களில் எவை அதிக மின்வலுவை உறிஞ்சுகின்றன என்று கண்டுபிடிக்கலாம்.

வீட்டு மின் நுகர்வைக் குறைப்பதால், அல்லது தேவையற்ற மின் விரயத்தை தவிர்ப்பதால் எங்கள் பணம் மீதப்படும். எங்கள் வளவு, சூழல், உடல்நலம் பேணப் படும். சமூகத்தின் நலன் விரும்பியாக வாழ்ந்து, எங்கள் இளைய சமுதாயத்திற் கும் இவற்றை நாம் அறிவுறுத்துவோம்.

நாட்டையும் வீட்டையும் இயன்றவரை காப்போம்!

### Standby Power (Watts)

| | |
|---|---|
| **Audio** | |
| Portable Player | 7.5 |
| Compact System | 25 |
| Component System | 15.0 |
| DVD Player | 12.0 |
| Radio, Clock | 3.5 |
| **Battery** | |
| Batter Charger | 1.5 |
| Lawnmower | 20.0 |
| Power Tool | 3.5 |
| Vaccum cleaner | 2.5 |
| **Home** | |
| Garage Door Opener | 4.0 |
| Security System | 22.0 |
| **Kitchen** | |
| Bread Maker | 2.0 |
| Microwave Oven | 6.0 |
| Rice Cooker | 2.5 |
| **Office** | |
| Computer | 4.0 |
| Printer, Ink/Bubble Jet | 5.5 |
| Phone/Fax/Copier | 2.0 |
| Cable Box | 23.0 |
| **Set-Top** | |
| Cable Box | 23.0 |
| Internet Terminal | 19.0 |
| Satellite System | 19.0 |
| Video Game | 2.0 |
| **Telephone** | |
| Answering Machine | 5.4 |
| Cordless Phone | 5.0 |
| **TV/VCR** | |
| Television | 22.0 |
| TV/VCR | 19.0 |
| VCR | 12.5 |
| **White** | |
| Range | 13.0 |

■ ■ ■

KESAVAN LAW OFFICE
இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும்
சந்திக்கலாம்
• Real Estate
• Business Law
• Immigration Law
• Family Law
• Last Wills
• Power of Attorney
• Affidavits

சட்டம் சம்பந்தமான சகல
தேவைகளுக்கும்
கேசவன் சட்ட நிறுவனம்
THANGAVEL M. KESAVAN
(Barrister & Solicitor)
Tel: 416-754-9843
Fax: 416-754-2362
5200 Finch Ave. East, Unit 302,
Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
Web: www.lawyers.com/kesavanlaw
E-Mail: kesavanlawoffice@bellnet.ca

கனடாவில்
TTR TORONTO TAMIL RADIO
கீதவாணி
உலகமெங்கும்
உலக தமிழ் வானொலி


# எரியூட்டியுடனான HRVஇன் பராமரிப்பு



தரன் ரட்ணம்
tharan@thaiveedu.com

முதலில் HRV (Heat recovery ventilator) என்றால் என்ன என்பதைப் பார்ப்போம்.

கனடாவில் நாம் வாழும் வீடுகள், வளியடைக்கப்பட்ட வீடுகள் ஆகும். எனவே வீட்டினுள் வளி உள் வாங்கப்படுவதும், உள்ளிருக்கும் வளி வெளியேற்றப்படுவதும் கட்டுப் படுத்தப்படுகின்றது. இதனால் வெப்ப




இழப்புக் குறைக்கப்படுவதோடு ஈரப்பதனால் வீட்டின் அமைப்பு பாதிக்கப்படுவதும் குறைக்கப்படுகின்றது. இப்படிப்பட்ட வீட்டினுள் உள்ள பழுதடைந்த வளி வெளியேற்றப்படுவதோடு சுத்தமான வளி உள்வாங்கப் படுதல் அவசியமாகின்றது. இதனைச் சிரமமான முறையில் செய்வதற்குப் பயன் படுத்தப்படுகின்ற சாதனமே HRV ஆகும். இது பொதுவாக எரியூட்டியுடன் சேர்ந்தே காணப்படும்.

HRV-யானது பழுதடைந்தால் உடனடியாக அதற்கென தேர்ச்சி பெற்ற ஒருவரை அழைத்து அதற்குரிய திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் (தயவு செய்து இதில் மட்டும் காசு மிச்சப்படுத்த வேண்டாம்).

நீங்கள் உங்கள் வீட்டில் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வாழ்வதற்கு HRV-யானது உதவுவதோடு உங்கள் எரிவாயுக் கட்டணத்தையும் குறைக்க உதவும். ஆனால் இதனை HRV உங்கள் உதவியின்றி செய்யாது. HRV-யானது சிறப்பான முறையில் இயங்குவதற்கு ஏழு படி முறைகளைக் கொண்ட பராமரிப்பைச் செய்தால் போதுமானது ஆகும்.

HRV-இனைச் சிறப்பாக இயங்கவைக்க ஏழு படி முறைகளைக் கொண்ட பராமரிப்பு

ஆரம்பிப்பதற்கு முன் HRV இற்கான மின் இணைப்பு துண்டிக்க.

1: வடிகட்டியினை சுத்தப்படுத்துக அல்லது மாற்றுக. HRV யுடனான வடிகட்டிகளை மூன்று மாதத்திற்கு ஒரு முறை சுத்தப்படுத்துக. சில வடிகட்டிகளை சுத்தப்படுத்த முடியாது அப்படிப்பட்ட வடிகட்டிகளை மாற்றுக. கழுவக்கூடிய வடிகட்டிகளை முதலில் vacuum cleaner-இனால் சுத்தப்படுத்திய பின்னர் சவர்க்காரத்தினால் கழுவுக.

அழுக்கான வடிகட்டியினால் காற்றோட்டத் தன்மை குறைக்கப்படுவதோடு, காற்றோட்ட சமநிலைத்தன்மையும் பாதிக்கப்படுகின்றது. இதனால் HRV-யானது பழுதடையவும் சந்தர்ப்பங்களுண்டு.

வடிகட்டியினைச் சுத்தப்படுத்தும் பொழுது அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வடிகட்டிக்கு அருகில் இருக்கும் உள்பகுதிகளையும் சுத்தப்படுத்திக் கொள்ளவும். HRV யானது எரியூட்டியுடனே அநேகமாகக் காணப்படுவதனால் எரியூட்டியின் வடிகட்டியினையும் விசிறியினையும் ஒழுங்கான முறையில் பராமரிக்க.

2: வெளியில் காணப்படும் காற்று உள்வாங்கும், வெளியேற்றும் வழிகளைச் சுத்தப்படுத்துக.

வெளியில் காணப்படும் காற்று உள்வாங்கும், வெளியேற்றும் வழிகள் ஏதேனும் புல், பற்றைகள், இலைகள் அல்லது வேறு ஏதேனும் பொருட்களினால் தடைப்பட்டுள்ளனவா என்பதை அடிக்கடி பரிசோதிக்க வேண்டும். குளிர்காலத்தில் இவ் வழிகள் பனியினால் அல்லது உறைபனியினால் தடைப்பட்டுள்ளனவா எனப்பார்த்து அவற்றை அகற்றி விடுதல் வேண்டும்.

இலையுதிர் காலத்திலும், குளிர் காலத்திலும் இவ்வழிகளை அடிக்கடி பார்த்து ஏதாவது தடைகள் இருப்பின் அவற்றை அகற்றி விடுதல் வேண்டும்.

3: வெப்பத்தை இடம் மாற்றும் பகுதியின் உட்பகுதியைச் சுத்தப்படுத்துக.

வெப்பத்தை இடம் மாற்றும் பகுதியின் உட்பகுதியை இரண்டு வருடத்திற்கு ஒரு முறை பரிசோதித்து தேவையேற்படின் சுத்தப் படுத்துக. HRV யின் owner's manual இனை வாசித்த பின்னர் இப்பகுதியைச் சுத்தப் படுத்துக. முதலில் உட்பகுதியை vacuum cleaner இனால் சுத்தப்படுத்திய பின்னர் அதனை சவர்க்காரத்தினாலும் தண்ணீரினாலும் கழுவுக. இதனால் உட்பகுதியில் உருவாகும் அழுக்குகள் குறைக்கப்படும். மேலும் இப்பகுதியை குளிர்காலத்தில் பரிசோதிப்பதனால் அதனுள் உறைபனியை இல்லாமல் செய்யும் பகுதி சரியாக இயங்குகின்றதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

4: கழிவு நீராவி அகற்றும் பகுதியை பரிசோதிக்க

இரண்டு வருடத்திற்கு ஒரு முறை கழிவு நீராவி அகற்றும் பகுதியைப் பரிசோதிக்க, அத்துடன் அதனுடனான பிளாஸ்டிக் குழாயினூடாக நீராவி தடையின்றி ஒடக்கூடியதாகவும் உள்ளனவா என்பதைப் பரிசோதிக்க. இதனை நீங்கள் பின்வருமாறு சோதிக்கலாம்: இரண்டு லீட்டர் சுத்தமான சூடான நீரினை HRVயின் அடிப்பாகத்திலிருந்து வரும் பிளாஸ்டிக் குழாயினுள் செலுத்தி அது தடையின்றிச் செல்லுகின்றதா எனப்பரிசோதிக்க. அவ்வாறு இல்லாமல் நீரானது திரும்பி வந்தால் கழிவு நீராவி அகற்றும் பகுதியைச் சுத்தப்படுத்துக. அத்துடன் கழிவு நீராவியினைச் சேகரிக்கும் பாத்திரத்தையும் சுத்தப் படுத்துக.

5: விசிறியினைப் பரிசோதிக்க.

காற்றை உண்டாக்கும் விசிறியின் பிளேட்டில் அழுக்குகள் காணப்படுகின்றதா என்பதை அடிக்கடி பரிசோதித்து அழுக்குகள் காணப்படின் அவற்றை vacuum cleaner-இனால் அல்லது brush-இனால் சுத்தப்படுத்துக. பொது வாக புதிய HRV யானது வழுக்கும் எண்ணெய் போடாமல் தொடர்ச்சியாக இயங்கும் ஆனால் பழைய HRV-க்களுக்கு சிறிது வழுக்கும் எண்ணெய் அடிக்கடி விடுதல் அவசியமாகும். Owner's manual இனைப்பார்த்து அதில் கூறப்பட்டுள்ளவாறு இதனைச் செய்யவும்.

6: கம்பித்தடுப்புகளைச் சுத்தப்படுத்துக அத்துடன் காற்றுக் குழாய்களைப் பரிசோதிக்க.

வெப்பம் வெளியேற்றப்படும். குளிர் காற்று உள்வாங்கப்படும் துவாரங்களை மூடி இருக்கும் கம்பித்தடுப்புகளை அகற்றி அதனுடனான காற்றுக் குழாய்களின் உட்பகுதியை vacuum cleaner இனால் சுத்தப்படுத்துக. தேவை ஏற்படின் டக் கிளின் செய்க.


குறைந்தது ஒரு வருடத்திற்கு ஒரு முறையேனும் HRVஇற்கு உட்செல்லும், வெளியே செல்லும் காற்றுக் குழாய்களை பரிசோதிக்க.

காற்றுக் குழாய்களில் (duct) துவாரங்கள் அல்லது வெடிப்புகள் ஏதாவது உள்ளனவா எனப்பார்த்து அவற்றை foil duct tape இனால் அடைத்து விடுக. இல்லாவிடின் ஈரப்பதன், நீர் தரையில் கொட்டுதல் போன்ற பிரச்சனைகள் உருவாகும்.

7: ஒவ்வொரு வருடத்திற்குமான பராமரிப்பை ஒழுங்கு படுத்துக.

Owners manual இனை வாசித்து உங்களால் ஒவ்வொரு வருடத்திற்குமான பராமரிப்பைச் செய்ய முடியுமெனின் நீங்களே ஒவ்வொரு வருடத்திற்குமான பராமரிப்பைச் செய்யலாம். அல்லாவிடின் இதற்கென தேர்ச்சி பெற்ற ஸ்தாபனத்தினை அணுகி ஒவ்வொரு வருடத்திற்குமான பராமரிப்பை ஒழுங்கு படுத்துக.

இன்று சக்தி வினைத்திறனையுடைய வீடுகளில் தொடர்ச்சியான வளி யோட்டமானது முக்கியமானதாகும். வளியடைக்கப்பட்ட R-2000 வீடுகள் என அழைக்கப்படும் சக்தி வினைத்திறனுடைய வீடுகளில் தொடர்ச்சியான வளியோட்டம் எவ்வாறு முக்கியமானதாகக் கருதப்படுகின்றதோ அவ்வாறே தொடர்ச்சியான வளியோட்டம் புதிதாகக் கட்டப்படும் வீடுகளிலும், பெரிய வீட்டுத் திருத்த வேலைகளின் போதும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. வீட்டினுள் தொடர்ச்சியான வளியோட்டத்தை ஏற்படுத்த இன்று பொதுவாகப் பயன்படுத்தப்படும் இயக்கவியல் பகுதி HRV (Heat recovery ventilator) ஆகும்.




HRV-யானது வீட்டினுள் உள்ள மாசு

58ம் பக்கம் பார்க்க...

GP TELECOM
இரமணன் திரு
(முன்னாள் பெல் கனடா, ரோஜேர்ஸ் ஊழியர்)

For Your Business We
- Install, Repair, Sell
- Meridian Phone Systems & System Phones
- Structured Voice & Data Cabling
- Install, Repair Home Phone Wiring
- TV Cable (RGB)
- Network Cable

உங்கள் அழகிய வீட்டில் பழுதுகள் ஏதும் ஏற்பட்டாமல் சுவர்களுக்கு உள்ளால் வயர் எடுத்து கொடுக்கப்படும்

416.203.0344



# CELL TEL MOBILITY

For all your cellphone and accessory needs...

## 11 th Anniversary Sale !!!

We sell new & used cellphones, Pagers and accessories for:

**ROGERS WIRELESS, FIDO, TELUS MOBILITY, BELL MOBILITY**

**Anniversary Sale !!!**
Geunine Leather Case
From **$1.99** Reg. $19.99
Coupon valid only between August 1st to August 31st.
One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.

**Anniversary Sale !!!**
Hands free
From **$1.99** Reg. $29.99
Coupon valid only between August 1st to August 31st.
One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.

**Anniversary Sale !!!**
Smart car charger
From **$1.99** Reg. $39.99
Coupon valid only between August 1st to August 31st.
One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.





**Call Toll free:- 1.877.312.5123** SHOP ONLINE @ www.celltelmobility.com

CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTER

NOKIA, MOTOROLA, SONY ERICSSON, SAMSUNG, LG HTC,BLACKBERRY,iPHONE,

***Display,Antenna Replacement and all other Repairs (Software & Hardware).***

| | | |
|---|---|---|
| 2637 Eglinton Ave. East,<br>Eglinton Ave/Midland Rd<br>416.266.6818 | 220 - 5990 16th Avenue<br>16th Avenue/ Markham Rd<br>905.201.4859 | 5C - 2950 Birchmount Rd<br>Birchmount / Finch Ave<br>416.495.7776 |

NetCom College
Where minds are challenged to a great future...
Registered and Approved as a Private Career College Under the Private Career Colleges Act.
• International Students Welcome
• EI Students Could receive Free Diploma / Certification If Qualified

• Microsoft Technology Courses
• Accounting
• Programming
• VoIP
• Cisco Education
• LINUX
• MS Office
• Wireless Technologies
• Dataware Technologies
• A+ / Network+ / Security +
Special Summer 2008 Computer Classes
Only 7 Students per Class
Register NOW
We are introducing...
Microsoft Exchange 2007
Microsoft SQL 2005
Microsoft windows server 2008
Ethical Hacker
authorized Exam centers for
PEARSON VUE AUTHORIZED TEST CENTER
Authorised PROMETRIC TESTING CENTRE
1200, Markham Rd, Suite # 525,
Scarborough, ON,
M1H 3C3, Canada
Tel: 416.438.3737
www.netcomcollege.com
info@netcomcollege.com

# எரியூட்டியுடனான HRV...

56ம் பக்கத் தொடர்ச்சி...

படுத்தப்பட்ட வளியினைத் தொடர்ச்சியாக வெளியேற்றி வெளியிலுள்ள வளியினை வடிகட்டி தொடர்ச்சியாக உள் வாங்குவதனால் உங்கள் வீடானது சுகாதாரமாகவும், சுத்தமாகவும் இருப்பதற்கு உதவுகின்றது. அத்துடன் இது உள்வாங்கும், வெளியேற்றும் வளிகளுக்கிடையே வெப்பத்தைப் பரிமாறிக் கொள்வதனால் உங்கள் வீட்டின் எரிவாயுக் கட்டணத்தை பெருமளவில் குறைக்கும். எம்மவர் பலபேர் சுத்தமான வளியை உள் வாங்கு வதற்காக யன்னல்களைத் திறந்து விடுவார்கள். இவ்வாறு உள்வாங்கப்படும் வளியானது உண்மையில் வடிகட்டப்படாத வளியாகும். மேலும் இச் செயன்முறையினால் உங்கள் வீட்டின் எரிவாயுக் கட்டணமும் கணிசமான அளவு அதிகரிக்கும்.

பல விதமான HRV-யானது இன்று சந்தையிலுள்ளது. தமிழில் உரை யாடக்கூடிய Heating and Air Condition திருத்த வேலை செய்பவர்களிடம் இதனைப்பற்றி அறிந்து கொள்ளலாம். முற்று முழுதாக வளியடைக்கப்பட்ட வீட்டினுள் (R-2000) அளவுக்கதிகமாக வளி உள்வாங்கப்படுவதும், வெளியேற்றப்படுவதும் கட்டுப் படுத்தப் படுகின்றது. இதனால் வெப்பம் இழக்கப்படுவதும், ஈரப்பதனால் வீட்டின் அமைப்புப் பாதிக்கப் படுவதும் குறைக்கப்படுகின்றது.

தொடர்ச்சியாக வீட்டினுள் உள்ள அசுத்த வளி சுத்தமான வளியினால் இடம் மாற்றப் படுவதனால் விட்டினுள்ள மாசுக்கள்(pollutants) அகற்றப்படுகின்றன. இங்கு குறிப்பிடப்படும் மாசுக்கள் பல்வேறு வழிகளில் வீட்டினுள் உருவாக்கப்படுகின்றது. இம் மாசுக்கள் எவ்வாறு உருவாகின்றது என்பதை நீங்கள் அறிந்து இம்மாசுக்கள் உருவாவதை இயன்றளவு தவிர்க்கலாம். எனவே வீட்டினுள் உருவாகும் மாசுக்களைப் பற்றி சில விபரங்களைக் கிழே தருகின்றேன்.

### மாசுக்கள்உருவாகும் முறை

மேலதிகமான ஈரப்பதன், பாசி, வீட்டின் உட் பகுதியில் துணி காயப்போடுதல், சமையல், துணி துவைத்தல், தாவரங்கள், விறகுகள் வீட்டின் உட்பகுதியில் சேமித்து வைத்தல் Urea-formaldehyde காப்பற், தளபாடங்கள், உடுப்புகள். மண், நிலக்கிழ்த்தண்ணீர், புகையிலைப் புகை, புகைத்தல்,

### இரசாயனத் தன்மை

சுத்திகரிக்கும் பொருட்கள், சாந்து (paint), வைரஸ், பக்ற்றீரியா, பேன்கள், மிருகங்கள், காபன் மொனொக்சைட், நைதரசன் ஒட்சைட், காபன் டையொட்சைட், மாசுத்துணிக்கைகள், எரி வாயுவைப் பயன்படுத்தும் உபகரணங்கள், உதாரணமாக எரி யூட்டி, வெப்பமாக்கிகள், அடுப்புகள், துணி உலர்த்தப் பயன்படும் உபகரணங்கள்,

HRV-யானது சுத்தமான காற்றை வீடு முழுவதும் விநியோகிக்கும். சரியான முறையில் பொருத்தப்பட்ட, ஒழுங்கான முறையில் பராமரிக்கப்படும் HRV யானது சுத்தமான காற்றை வீடு முழவதும் பரப்புவதோடு மாசு படுத்தப்பட்ட வளியையும், மேலதிகமான ஈரப்பதனையும் வெளியேற்றிவிடும். வெப்பப் படுத்தும் காலங்களில் HRV-யானது வெளியே செல்லும் வளியிலிருந்து வெப்பத்தை எடுத்து உள்வாங்கும் வளியை வெப்பப்படுத்தும். குளிரேற்றும் காலங்களில் இச்செயன் முறையை மறுதலையாகச் செய்யும்.

இன்றய காலங்களில் புதிய வீடுகள் நிர்மானிக்கப்படும் பொழுதும், பெரிய அளவிலான வீட்டுத்திருத்த வேலைகளின் போதும் வீட்டினுள் வளிக்கசிவுகள் ஏற்படாதவாறு செய்கின்றார்கள். அதாவது வீட்டின் சக்தி இழப்பை இயன்றளவு தடுக்கின்றார்கள். இப்படிப்பட்ட வீடுகளில் யன்னல்கள், கதவுகளினால் உள்வாங்கப்படும் வளியானது வீட்டினுள் சரியான வளியோட்டத்தை ஏற்படுத்தாது. அதாவது வீட்டின் ஒவ்வொவ்வொரு பகுதிக்கும் தேவையான சுத்தமான வளி கிடைக்கப்பெறாது. எனவே புதிய வீடு வேண்டுபவர்களாயின் உங்கள் வீட்டுக்கட்டுனர் களிடம் HRV-யினைப் பொருத்தித் தருமாறு கேட்கவும். மற்றும் பெரிய வீட்டுத்திருத்த வேலைகளின் போது, அதாவது வளி கசிவு ஏற்படாதவாறு செய்யும் பொழுது (புதிய யன்னல்கள், கதவுகள், காப்புறைகள்) HRV யினைப் பொருத்துவதைப் பற்றிச் சிந்திக்கலாம்.

### கவனத்தில் கொள்ளவேண்டியவை

எரிவாயுவைப் பயன்படுத்தும் உபகரணங்களினால் வெளியேற்றப்படும் மாசுபடுத்தப் பட்ட வளியை HRV யானது வெளியேற்றும் என நினைத்து இவ் உபகரணங்களினால் வெளியேற்றப்படும் மாசுபடுத்தப்பட்ட வளியை வெளியேற்றும் பகுதிகள் பழுதடைந்தால் அதனைத் திருத்தாமல் விட்டு விடாதீர்கள். உடனடியாக அதனைத் திருத்தி விடுங்கள். ஏனெனில் இவ் உபகரணங்களிருந்து மாசு படுத்தப்பட்ட வளியை வெளிப்பகுதிக்கு வெளியேற்றுவதற்கே இப்பகுதிகள் பயன்படுத்தப்படுகின்றது. வீட்டின் வெளிப்பகுதிக்கு மாசு படுத்தப்பட்ட வளியை வெளியேற்றும் பகுதிகள் இல்லாத எரிவாயுவைப் பயன் படுத்தும் உபகரணங்களை வீட்டினுள் பயன்படுத்தாதீர்கள்.

■ ■ ■

எலி பூச்சித் தொல்லையா...?
RUBAN PEST CONTROL

▸▸ வீடுகள்
▸▸ தொடர்மாடி வீடுகள்
▸▸ தொழிற்சாலைகள்
▸▸ வியாபார நிலையங்கள்
ஆகிய அனைத்து இடங்களிலும்
எலி, பூச்சித் தொல்லைகளை
அறவே நீக்க அழையுங்கள்!
KANTHAN
416•291•3997













# முதலாவது தென்கிழக்காசிய உள்ளரங்க அங்காடி (GTA SQUARE) மக்களிற்காக திறக்கப்பட்டுள்ளது

கடந்த ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி சனிக்கிழமை மதியம் சம்பிரதாயப்படி வடஅமெரிக்காவில் முதலாவது தென்கிழக்காசிய உள்ளரங்க சதுக்கம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதற்கு கனடிய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டெறிக் லீ மற்றும் தமிழ் கனடியரான ஒன்ராரியோ மார்க்கம் தொகுதி கவுன்சிலர் திரு. லோகன் கணபதி அவர்களும் சிறப்பு விருந்தினராக சமூகமளித்திருந்தார்கள். திரு. லோகன் தனது உரையில் "தமிழ் மக்களாகிய நாங்கள் பெரிய சூட்கேசுகளுடன் வரவில்லை ஆனால் பெரிய இலக்குகளுடனும், கனவுகளுடனும் வந்துள்ளோம். அதனை நிரூபித்தும் வருகிறோம்." என்று பெருமையாக தெரியப்படுத்தினார். இதனை அங்கு சமூகமளித்திருந்த பல்லின மக்களும் தமிழரின் பெருமையை மேலும் ஒருபடி உயர்த்திக் கொண்டனர். நாடாவை வெட்டி (Ribbon Cutting) நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.


அரவிந்தனின் Mega Tuners இன் இன்னிசை நிகழ்ச்சியும் நடன, இசை நிகழ்ச்சிகளும் மற்றும் அதிஸ்டலாப சீட்டிழுப்பும் நடைபெற்றன. ஆயிரக்கணக்கான மக்கள் காலை முதல் மாலைவரை வந்து GTA Square ஐ ரசித்தும் பொருட்ளை மலிந்த விலையில் வாங்கியும் சென்றார்கள்.

அதிஸ்டம் பார்க்கப்பட்டவர்களில் வெற்றிபெற்றோர்:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| S. Bala | $500.00 | Wilbur Luk | $250.00 | Siva Thiruvampalam | $100.00 | Arasaratnam K. | $100.00 |
| Alan Poon | $50.00 | Ganga Thavaputhiran | $50.00 | S. Baskaran | $50.00 | Laguharan Thambirajah | $50.00 |
| Ratna Thiru | $50.00 | M. V. Jeganathan | $20.00 | Rangini | $20.00 | Selvalingam | $20.00 |
| N. Lathakumari | $20.00 | S. Ghajaa | $20.00 | J. Jeevaharan | $20.00 | S. Sivayoganathan | $20.00 |
| Ricardo De Leon | $20.00 | Chitha S. | $20.00 | T. Sivayogapathy | $20.00 | Dominic Tse | $10.00 |
| George Paranthaman | $10.00 | Nobuo Iromoto | $10.00 | S. Thayalini | $10.00 | Vijay Seevaratnam $10.00 | |
| H. Sivalingam | $10.00 | P. Ragu | $10.00 | Anjana Chandrakumar | $10.00 | Rasu Thanabalasingam | $10.00 |
| Jayatharan Thiru | $10.00 | S. Rameskumar | Home Theater | Rujeck Cyril | Home Theater | Anjana Chandrakuma | Big Bike |
| J. Laksumi | Small Bike | Sofiya | Tea Pot | Thivishika | Tea Pot | Majury Kailasapillai | Tamil Star Radio |
| Gloria Ramprasad | Tamil Star Radio | Simran | Tamil Star Radio | Aly Kassan | Tamil Star Radio | Aby | Tamil Star Radio |
| Shankar | Tamil Star Radio | Aarthika | Tamil Star Radio | Ranjini Selvanayagam | Tamil Star Radio | Rajadurai | Tamil Star Radio |
| Laguharan Thambirajah | Tamil Star Radio | Renu Sadana | Tamil Star Radio | Naren Param | Tamil Star Radio | | |

Raphael Maharaja - கனேடியத் தமிழ் வழக்கறிஞரால் $500 பெறுமதியான பரிசு வழங்கப்பட்டது. KingEdward Developers ஆல் $1000 பெறுமதியான பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும் Real Estate Sales Centre, Unique Financial & Business Solutions நிறுவனங்களாலும் பல பரிசுகள் வழங்கப்பட்டன. மேலதிக தொடர்புகளுக்கு: 416.292.4400






# Magnificent India

**EXPERIENCE INDIA LIKE NEVER BEFORE WITH OUR AWESOME NEW TOURS.**

## Manasarover Yatra



Kathmandu – Kodari – Zangmu – Nyalam – Saga – horpa – Manasorover – Dharchen – Mt.Kailash – Dehraphuk – Zuthulphuk – Dolmala

**16 Days / 17 Nights**

## North Indian Experience

Delhi – Mandawa – Bikaner – Khimsar – Jaisalmer – Jodhpur – Deogarh – Ranakpur – Udaipur – Pushkar – Ranthambore – Bharatpur – Agra – Jhansi – Khajuraho – Khajuraho – Varanasi – Delhi



**21 Days / 20 Nights**

## Romantic Kerala

Munnar (Houseboat) - Alleppey - Kovalam



**6 Days / 5 Nights**

## Southern Heritage



Cochin (Houseboat) - Thekkady - Madurai - Tanjore - Rameshwaram - Kannayakumari - Kovalam

**12 Days / 11 Nights**

## Best of Kerala



Cochin – Munnar – Thekkady – Kumarakom (Houseboat) – Kovalam – Kanyakumari

**10 Days / 9 Nights**

## Exotic Kerala

Cochin – Munnar – Thekkady – Kumarakom (Houseboat) – Cochin



**21 Days / 20 Nights**

## Temples of South India

Chennai - Chidambaram - Kanchipuram - Kerala - Madurai - Palani - Rameshwaram - Thanjavur - Tiruchi - Tiruchendur - Tirupathi



**21 Days / 20 Nights**

## The Sacred Ganges



Delhi – Mathura – Agra – Allahabad – Varanasi – Delhi

**12 Days / 11 Nights**

For tour packages and more information contact us or vist our website.

# SERANDIB TRAVEL1

IATA TICO 50012891

**Toll Free: 1-888-207-0902**

**www.serandibtravel.com**

| Toronto: 416-750-0009 | Mississauga: 905-564-7564 | Montreal: 514-448-1389 | Calgary: 403-770-9647 |
|---|---|---|---|
| 2075 Lawrence Ave East<br>Suite 202 | 1332 Khalsa Drive (@ Dixie & Derry)<br>Unit 3 | 1410 Rue Guy<br>Unit 10 | Vancouver: 604-625-0495 |

BMK

# வீடு வாங்குதல்... எப்படி ஆரம்பிப்பது?



மங்கா அருணாசலம்
- வீடு விற்பனைப் பிரதிநிதி -
manga@thaiveedu.com

**- பகுதி 3 -**

## வீட்டுக் விலை மதிப்பீட்டு விண்ணப்ப அளவை நான் எவ்வாறு தீர்மானிப்பது?

உங்கள் வீட்டு முகவரின் ஆலோசனையைக் கேளுங்கள், ஆனால் முறையான ஒரு விலையை, உங்கள் மனசாட்சிக்கேற்ற வகையில் நிர்ணயிப்பது நல்லது. உங்கள் விலை மதிப்பீட்டின் அளவு பல காரணிகளையும் கொண்டே தீர்மானிக்கப் படல் வேண்டும். அதே பகுதியில் வேறு எந்த வீடுகள் விற்பனைக்கு உள்ளன? அந்த வீட்டின் உள், வெளி நிலைமைகள் என்ன? எவ்வளவு காலம் அந்த வீடுகள் விற்பனைக்குப் பரிசீலிக்கப் பட்டிருக்கின்றன? உங்கள் வீட்டுக் கணிப்பீட்டை நீங்கள் கொடுக்கும் நேரத்தில் உங்கள் வீடு எவ்வளவு தொகைக்கு விற்பனைக்குப் போகும் என்பதையும், உங்களால் எவ்வளவு கட்டுப்படியாகும் என்பதையும் இக்கால கட்டத்தில் உங்களால் ஓரளவு தீர்மானித்திருக்க முடியும். அத்துடன் இருபக்க விலைத் தீர்மானத்திற்கும் தயாராயிருங்கள். இந்த நிலை மிகவும் சாதாரணம். விற்பவரும், வாங்குபவரும் ஒரு விலையை பொதுவாக நிர்ணயிக்கும் வரையில் இவ்வகை விவாதங்கள் இருந்து கொண்டே இருக்கும்.

## முதலீட்டுத் தொகைப்பணம் என்பது என்ன? எவ்வளவு பணத்தை அதில் நான் போட வேண்டும்?

வங்கியிருப்பில் நீங்கள் வீட்டுக்காகக் போடும் பணம், நீங்கள் ஒரு வீடு வாங்குவதில் எவ்வளவு ஆர்வம் கொண்டுள்ளீர்கள் என்பதைக் காட்டும். அதுவே உங்கள் நம்பிக்கையைச் சம்பாதிக்கக் கூடியதாய் இருக்கும். உங்கள் வீட்டுவிலை நிர்ணயிப்பு ஏற்றுக் கொள்ளப் பட்டால், அந்தப் பணமே உங்கள் வீட்டின் முதற்தர வாங்கல் தொகையாகவோ அல்லது நிர்ணயப் பத்திரம் ஒப்பமிடும் தருவாயில் செலவழிக்கக் கூடிய (closing cost) தொகையாகவோ இருக்கும். உங்கள் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப் படாவிட்டால், போட்ட பணம் உங்களுக்குத் திரும்பக் கிடைக்கும்.

## வீட்டு உத்தரவாதம் என்பது என்ன? அதை கருத்தில் கொள்ள வேண்டுமா?

வீட்டு உத்தரவாதங்கள் ஒரு குறிப்பிட்ட காலவரையறை வரை (ஒரு வருடம், மற்றும் புது வீடுகளுக்கு 5 வருடங்கள்), வீட்டில் ஏதாவது சேதங்கள் வீட்டுப் பாவனைப் பொருட்களுக்கு அன்றி வேறு வீட்டு சம்பந்தமான உபகரணங்களுக்கு ஏற்பட்டாலோ, வீட்டுக் காப்புறுதி மூலம் பாதுகாக்கப்பட்டிருக்காவிடின், உதவும். இவை தற்போது மிகவும் பிரபல்யமாகி வருகின்றன, காரணம், ஒரு வீட்டை வாங்கியவுடனேயே அந்தப் பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்குகின்றன. வீட்டை வாங்கி கையில் பணமுடை இருக்கும் நிலையில் உள்ள பலருக்கு, அந்த நேரத்தில் இது ஒரு வரப்பிரசாதம்.

## ஈட்டுக் கடன் என்பது என்ன?

ஒரு வீட்டை வாங்கப் பயன்படும் கடன் தொகையே ஈட்டுக் கடன். இது வீட்டின் மேல் வாங்கப்பட்ட கடன். முழுதும் கட்டி முடிக்கப்படும் என்ற அடிப்படையிலேயே கடனெடுக்கப்படுகிறது. எல்லா ஈட்டுக் கடன் களிலும் இருவகைப் பிரிவுகள் உண்டு. ஒன்று முதல், மற்றது அதற்குரிய வட்டி.

> “ மாதாமாதம் குறிக்கப்பட்ட வட்டியின் அளவைவிடக் கூடுதலாகக் கட்டுவதாலும், அல்லது ஒரு பெரிய தொகையை வருட முடிவில் கட்டுவதாலும், அல்லது மாதத்தொகையை, கிழமைத்தொகை, இரு கிழமைகட்கு ஒருமுறை போன்று தவணைத் தொகைகளைக் கூட்டுவலாலும், காலக் கெடுவுக்கு முன்னரே கடன் தொகை கட்டி முடிக்கப்பட்டு விடும். ”

## கடனும், ஒரு சொத்தின் மதிப்பீடும் என்பது என்ன? இதில் எனது பங்கு எவ்வாறு தீர்மானிக்கப் படுகின்றது?

கடனும், தொகையும் என்ற விகிதாசாரம் நீங்கள் வாங்கப் போகும் வீட்டின் விலையைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றது. உதாரணத்திற்கு, உங்கள் கடனும்தொகையும் 95 சதவிகிதமாக இருந்தால், அத்துடன் வீட்டின் விலை 50,000 டாலர்களாக இருப்பின், நீங்கள் 47,500 டாலர்கள் வரை கடனாகப் பெற்று 2,500 டாலர்களை முதலீட்டுத் தொகையாகச் செலுத்தலாம்.

LTV ratioக்கள் ஒரு வீட்டில் ஒருவர் கொண்டுள்ள கடன் தொகையைக் காட்டுவதாயிருக்கும். கூடிய LTV இருந்தால், தமது இருப்பிலிருந்து குறைந்த தொகையை வீட்டுக்கு ஒருவர் முதலீடாகக் கொடுக்கக் கூடிய சலுகைககள் அளிக்கப்படும். ஈட்டுக்கடன் கொடுக்கப்படும் தொகை 75 அல்லது அதற்கு மேற்பட்ட விழுக்காடாக இருப்பின், அதற்கான காப்புறுதியையும் கடன் வாங்குபவர் ஒழுங்கு செய்திருக்க வேண்டும், ஏனெனில் அந்தச் சொத்து நட்டத்தில் விழுந்தால், இழப்பீட்டுத் தொகையை திருப்பி கடன் கொடுத்த வங்கிக்குச் செலுத்த ஒரு வழி இருக்க வேண்டுமல்லவா?

## எந்தவிதமான கடன்முறைகள் இருக்கின்றன? ஒவ்வொன்றினதும் பயன்பாடு என்ன?

Fixed rate mortgages: இதில் வாழ்க்கை பூராவும், ஒரே மாதிரியான தொகைக் கடனடைப்பையே கடன் ஒழியும்வரை செய்ய வேண்டியதிருக்கும். இதிலுள்ள நன்மைகளாவன: இன்னதுதான் அளவு என்ற கணக்கிருக்கும். கடன்தொகை மற்றும் அதன் வட்டியின் விகிதம் மாறாது.

Variable rate mortgages: கடன் கட்டும் வட்டித் தொகையின் அளவு ஒரு சமயம் கூடும், மறுசமயம் குறையும். அதிலும் சில வேளைகளில் அவர்களின் சட்டதிட்டங்களுக்கேற்ப சமயத்தில் கட்டும் முழுத்தொகையுமே வாங்கிய கடனை விடக் கூடுதலாக இருக்கலாம். முதலில் குறைந்த வட்டிக்குக் கடனைக் கொடுப்பார்கள். மாதக் கட்டணங்கள் குறைவாக இருக்கும். உயரிய கடன்தொகை கடன் வாங்குபவருக்குத் தரப்படும்.

## குறிக்கப் பட்ட காலத்திற்கு முன்னரே எனது ஈட்டுக் கடன் தொகையை நான் கட்டி முடிக்கலாமா?

ஆமாம். மாதாமாதம் குறிக்கப்பட்ட வட்டியின் அளவைவிடக் கூடுதலாகக் கட்டுவதாலும், அல்லது ஒரு பெரிய தொகையை வருட முடிவில் கட்டுவதாலும், அல்லது மாதத்தொகை, கிழமைத்தொகை, இரு கிழமைகட்கு ஒருமுறை போன்ற தவணைத் தொகைகளைக் கூடுதல் அளவு கட்டுதல் மூலம் காலக் கெடுவுக்கு முன்னரே அப்பணக் கடன் தொகை கட்டி முடிக்கப்பட்டு விடும். இது மொத்தத் தொகையையும் கட்டும் காலத்தை விரைவு படுத்தும். கூடுதல் தொகையை நீங்கள் அனுப்பும் தருவாயில், அதை அவர்கள் உங்கள் முதலுக்கு இணையாகக் கட்டும் தொகையில் சேர்க்குமாறு உறுதி செய்து கொள்ளுங்கள். பல கடனுதவி நிறுவனங்கள் மிகுதியாக உங்கள் கடனைக் கட்ட அனுமதிக்கும். உங்கள் கடனுதவி நிறுவனத்திடம் இதனைக் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள்.

## முதல் தடவை வீடு வாங்குபவர்களுக்கு ஏதேனும் சலுகைகள் உண்டா?

RRSP அளிப்பார்கள். Land transfer taxஇல் ஒரு பகுதி திருப்பிக் கிடைக்கும். 5விகித பணமுதலீட்டைப் போட்டு வீட்டை வாங்கலாம். தேர்ந்த ஒரு வீட்டு முகவரிடம் உங்கள் சந்தேகங்களைக் கேளுங்கள்.

## எவ்வளவு பெரிய தொகையை நான் முதலீட்டாக வீட்டுக்குச் செலுத்த வேண்டும்?

வீட்டை வாங்கும் விலையில் ஐந்துவீத முதலீட்டைச் செலுத்தினாலே போதும் என்ற நிலையில் பல கடனுதவி நிறுவனங்கள் இயங்குகின்றன. ஆனால் கூடுதலாகப் போட்டால், குறைந்த கடனை வாங்கலாம். வீட்டில் போடப்பட்ட பணமும் பின்னர் பெரிய அளவில் வெளியில் தேவைகட்கு எடுக்கப் போதியதாக இருக்கும். வீட்டு விலையில் 25வீதத்திற்கும் குறைவான முதலீட்டைப் போட்டால், அவற்றிற்கு கட்டாயம் காப்புறுதி ஒழுங்குகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் எவ்வளவு போட வேண்டும் என்பதையும் கொஞ்சம் நிதானமாக முடிவெடுங்கள். ஏனெனில் செலவுகள் அதனுடன் நின்றுவிடா. Closing costs, வீடு மாறும் செலவுகள், மற்றும் பழுது பார்த்து திருத்தல், மற்றும் வீட்டை அலங்கரித்தல் போன்ற அதீத வேலைகளுக்கும் போதிய பணம் கையிருப்பில் கொள்ளல் அவசியம்.

## ஒரு மாதத் தவணை ஈட்டுக் கடனில் என்ன இதர விடயங்கள் அடங்கியிருக்கும்?

இதில் மாதவட்டி, பின்னர் எடுத்த கடனில் ஒரு பகுதியும் கட்டப்படும். இதில் வீட்டு வரியும் அடங்கும்.

## ஈட்டுக் கடன் கட்டும்போது, எடுத்த கடன்தொகையில் தெரியக் கூடிய மாற்றங்கள் யாவன?

போட்ட முதலின் தொகை, எடுத்த கடன் தொகையின் அளவு, வட்டிவிகிதம், தொகையைக் கட்டும் காலத்தின் அளவு, மற்றும் காலஅளவின் திகதிகள் போன்றவற்றில் மாற்றங்கள் தெரியும்.

தொடரும்...



# இது உங்கள் வாழ்க்கையை நிரந்தரமாகவே பாதிக்கும்

**- செல்வி அதினி -**

If you have been convicted of a criminal offence, you have a criminal record. A criminal record is not removed automatically. To have your record removed, you must make an application under the Criminal Records Act of Canada for a pardon.

உங்களை அறியாமலோ, அறிந்தோ, அல்லது ஒரு தர்மசங்கடமான நிலையிலோ, உங்கள் விருப்பத்தை மீறியோ கனடாவில் நீங்கள் கிறிமினல் குற்றம் செய்திருக்கின்றீர்கள் என்றால், அது உங்கள் வாழ்நாள் முழுதும் உங்களைப் பாதிக்கும். அதற்குரிய தண்டனையை நீங்கள் அனுபவித்து முடித்து இருக்கலாம். ஆனால் அது முடிந்து இருபது, முப்பது வருடங்கள் கழிந்தால் மட்டுமல்ல, உங்கள் வாழ்க்கை காலம் முழுதும், மறுபடி மறுபடி அந்தக் குற்றத்திற்காக மீண்டும் மீண்டும் தண்டனையை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்.

“நான் ஒரு தடைவ சொன்னால் அது நூறு தடைவ சொன்னமாதிரி” என்பது போல “நீங்கள் ஒரு தடைவ செய்தால் அது நூறு தடைவ உங்களைப் பாதிக்கும்”.

பத்மநாதன்- அவருடைய வயது இப்போது நாற்பது. அவர் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் தெரியாமல் செய்த ஒரு குற்றம் கிரிமினல் குற்றமாக கருதப்பட்டது. அவர் மீது நீதிபதி இரக்கம் காட்டினார். பத்மநாதன் தன்னுடைய குற்றத்திற்காக் நீதிமன்றம் முடியும் வரை மட்டும் சிறையில் இருந்தார். உண்மையில் ஒரு ஆறு மணிநேரம் மட்டுமே சிறையில் இருந்து அவர் விடுதலையானார்.



அந்த சம்பவம் பத்மநாதன் வாழ்க்கையில் ஒரு பெரிய கறை. அந்த சம்பவத்தை விட அவருடைய வாழ்க்கையில் வேறு எந்தக் கறையும் இல்லை. இந்த சம்பவத்தை ஒரு கெட்ட கனவாக அவர் மறந்துவிட துடித்தார். அதற்கு அவருக்கு பல வருடங்கள் எடுத்தது.

பதினைந்து வருடங்களுக்குப் பின்னர், அதிக சம்பளத்துடன் புதிய ஒரு வேலை அவருக்குக் கிடைத்தது. எல்லாம் முடிந்து வேலை அவருக்குத்தான் என்று நிச்சயமான நிலையில் Security clearances தேவை என்று கேட்கப்பட்டது. எந்த வித வில்லங்கமும் இல்லாமல் Toronto Police Service (40 College Street, Toronto)ல் தனது Security clearancesக்கு விண்ணப்பித்தார். அதற்கு ஒரு சொற்ப தொகை பணம் அவர் செலுத்த வேண்டி இருந்தது.

இரண்டு வாரம் கழித்து பத்மநாதனின் Security clearances அவருக்கு தபால் மூலம் வந்தது. அதில் அவர் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் கிரிமினல் குற்றம் செய்துள்ளார் என்று இருந்தது.

அதிர்ந்து போய்விட்டார் பத்மநாதன். கண்ணீர்விட்டு அழுதார். புதினைந்து வருடங்களுக்கு முன்னர் செய்த குற்றத்திற்குத் தான் தண்டனை அனுபவித்து விட்டேனே? பிறகு இப்போது என்னுடைய வாழ்க்கையை ஏன் கெடுக்கின்றார்கள் என்று கதறினார்.

ஒன்றுமே ஆகப் போவதில்லை. முன்னர் குறிப்பிட்டது போல நீங்கள் ஒரு தடைவ செய்த கிரிமினல் குற்றம் உங்கள் வாழ் நாள் முழுதும் உங்களைத் தொடரும்.

உங்களுடைய வேலைவாய்ப்பை, Child

65ம் பக்கம் பார்க்க...

MANON MUSIC ACADEMY
வழங்கும்
இசை அரும்புகள் 2008
இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டிய மாபெரும் கலை நிகழ்ச்சி
இடம் : 10 SWELLS ( SWELLS / NELSON)
SCARBOROUGH
காலம் : OCTOBER 19, 2008
நேரம்: 4 pm
மேலதிக தொடர்புகளுக்கு : V.AJITH (647) 204 0251
www.manonmusic.com

J.R.B Universal Inc.
Almost All Services Available
- கடன் - அடமானக்கடன் - காப்புறுதி

- Loans
- Mortgages
- Insurance Claims
- Traffic Ticket
- Auto/Life Insurance
- Scholarship Plan (RESP)
- Real Estate Related
- Credit Counselling
- Accounting
- Tax Services



R.R. Rajkumar
B.Com (Hons) M.B.A
Dip. In Accy.
Bus; 416 • 752 • 7555 Fax: 416 • 752 • 7556
Cell: 416 • 937 • 9081
2390 Eglinton Ave. East, 206B, Scarborough, Ont. M1K 2P5

**www.PowerofSaleHome.com**

$292,900

some repairs needed

**Warden & Lawrence**

**Detached Home**

3 Bedroom
with complete Basement

Apex Creations • 416-297-0707

Realtor with Professionalism



**Suresh Sellathurai**
*Sales Representative*
**Dir. : 416.356.7330**

Century 21
AFFILIATE REALTY INC. BROKERAGE
Bus. : 416.290.1200 (24Hr.)
80 Corporate Drive,Unit #208, Toronto, ON. M1H 3G5

*Not intend to solicit buyers or sellers currently under contract with a broker.*



# Divine Home

*Ancient Indians designated an important part of the home as a sacred section where they retreat before each dawn to commune with the Supreme Being, the centre of the Spiritual Force is called Devatarchanam.*

*Love, Joy and prosperity come to a Hindu Family who worships in their homes through Poojas where the divine energies are invoked. The home shrine is also the focus point for private and group prayers.*

*The place should be meticulously kept like a temple through which whole household will be charged with Spiritual Vibration.*

OUR CRAFTSMEN CAN CUSTOM DESIGN AN ALTAR FOR YOUR POOJA ROOM AS REQUIRED

**NO PLYWOOD AND NO VARNISH**
**HEAT, OIL AND WATER RESISTANT**
**SPRAYED WITH HIGH QUALITY A.C. LAQUER**
**MORE THAN 100 MODELS ON DISPLAY**

THE PERFECT POOJA MANDIR FOR YOUR HOME

A HOME IS NOT COMPLETE WITHOUT A "DIVINE HOME"





Jaipur Gore Plaza
Units 9 & 10
8917 The Gore Road
Brampton, ON
Tel: 647 887 3997

747 Flea Market
Booths, 326,327,328
Tel: 416 999 3997
www.divinehome.org

1845 Lawrence Ave East
Scarbourough, ON. M1R 2Y3
Tel: 647 435 0105
divinehome@rogers.com

வக்தா.tv
vakthaa

தமிழீழ தேசியத்தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும்
தாயக நிகழ்வுகள், செய்திகள், கலைப்படைப்புகள்,
குறும்படங்கள், அரசியல்கண்ணோட்டம்,
என்பவற்றை இணையத்தில் பார்த்திட

www.vakthaa.tv

PENS
CLOCKS
CALENDERS
MEMOS
MEASURING TAPES
CELL PHONE STANDS
FRIDGE MAGNETS
B. CARD HOLDERS
CORPORATE GIFTS
SEASONAL GIFTS
LASER ENGRAVING
PAD PRINTING
AND MORE................

One Stop for
TROPHIES, AWARDS AND PROMOTIONAL PRODUCTS

2007ம் ஆண்டுக்கென தமிழ்க் கலை சார்ந்த
தொழில், வியாபார விருத்தி அன்பளிப்புப் பொருட்கள்
(PROMOTIONAL PRODUCTS)
கலை சார்ந்த நிறுவனங்களுக்கும் கலை நிகழ்வுகளுக்கும்
சிறப்பு விலைகளில் கிடைக்கிறது.

புதிய அறிமுகம்

On high, with your thoughts
உன்தன் எண்ணங்களோடு உயரத்தில்



PRO MAR
Awards & Promotions Ltd



www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

The Big choice
இல்லங்களை அழகுபடுத்த ஓர் பெரிய தெரிவு

மிகப் பெரியதும் மிக வித்தியாசமுமான வீட்டு, அலுவலக
சுவர்களை அலங்கரிக்கும் வர்ணக் கலைப் பொருட்கள்

சிறப்புத் தெரிவுகளாகவும், குறைந்த எண்ணிக்கையிலும்
இறக்குமதி செய்யப்பட்டிருப்பதால் உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள்
IN WHOLESALE PRICE FOR RETAIL
80 Nasdane Rd Unit C-59 416-898 4846

# இது உங்கள் வாழ்க்கையை...

62ம் பக்கத் தொடர்ச்சி...

custody, Adoption, Bonding, Landed status and citizenship in Canada, Foreign travel, Volunteer Opportunities என்று பலவகைப் பட்ட வகையில் உங்களை இது பாதிக்கும்.

இவ்வாறு நீங்கள் ஒரு தடைவ செய்த குற்றம் (பலதடவையாகவும் இருக்கலாம்), நூறு தடைவ உங்களை பாதிக்காமல் இருக்க சட்ட பூர்வமான ஒரு சேவை கனடா-வில் உள்ளது. அது தெரியாத காரணத் தால் தான் பத்மநாதன் போன்றவர்கள் மறுபடி மறுபடி பாதிக்கப்படுகின்றார்கள்.

நீங்கள் செய்த கிரிமினல் குற்றத்திற்காக கனடா அரசாங்கத்திடம் நீங்கள் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளலாம். உங்களது கோரிக் கை ஏற்றுக் கொள்ளப்பட்டு உங்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டால் எந்த ஒரு பொலிஸ் அறிக்கையிலும் நீங்கள் செய்த குற்றம் குறிப்பிடப்படமாட்டாது. அதனால் உங்களுடைய வேலை வாய்ப்பு, Child custody, Adoption, Bonding, Landed status and citizenship in Canada, Foreign travel, Volunteer Opportunities எதுவுமே பாதிக்கப் படாது.

இந்த வழிமுறை கனடாவில் "PARDON" என்று அழைக்கப்படுகின்றது. இது ஒரு சட்ட பூர்வமான வழிமுறை.

இது தொடர்பான விபரங்களை எவராவது அறியவேண்டும் என்றால் முதலில் http://www.npb-cnlc.gc.ca/padons/servic_e.htm என்ற இணையத் தளத்துக்கு செல்லுங்கள். அல்லது தொலைபேசி மூலம் விபரம் அறிய விரும்பினால் 1-800-874-2652 என்ற இலவச இலக்கத்தை அழையுங்கள்.

வயதுக்கு வரும் முன்னர் யாராவது கிரமினல் குற்றம் இழைத்திருந்தால் அது தானாகவே உரிய நேரத்தில் இல்லாமல் போய்விடும்.

வயதுக்கு வந்தவர்கள் மட்டுமே இந்த Pardon விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். அதற்கும் சில விதி-

> **"நீங்கள் ஒரு தடவை செய்த குற்றம் நூறு தடவை உங்களை பாதிக்காமல் இருக்க சட்ட பூர்வமான ஒரு சேவை கனடாவில் உள்ளது."**

களும், வழி முறைகளும் உள்ளன. அதை சரியான முறையில் பின்பற்றவேண்டும்.

### யார் இந்த Pardonக்காக விண்ணப்பிக்கலாம்?

ஒருவர் தனது கிரிமினல் குற்றத்திற்கான தண்டனையை குறைந்த பட்சம் மூன்று வருடங்களுக்கு முன்னர் அனுபவித்து முடித்திருக்க வேண்டும்.

அதாவது நீங்கள் நீதிமன்றத்தால் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டிருந்தால் அதை மூன்று வருடங்களுக்கு முன்னர் அனுபவித்து முடித்திருக்க வேண்டும்.

நீதிமன்றம் உங்களுக்கு ஏதாவது அபராதம் விதித்திருந்தால் அதை நீங்கள் மூன்று வருடங்களுக்கு முன்னர் கட்டி முடித்திருக்க வேண்டும். அல்லது ஏதாவது நன்நடத்தை-க்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தால் அதுவும் மூன்று வருடங்களுக்கு முன்னர் முடிந்திருக்க வேண்டும். (இவ்வாறு முடியா தவர்கள் அந்தக் காலம் முடிந்து மூன்று வருடங்கள் காத்திருக்க வேண்டும்.)

### Pardon Application Steps

Pardon Application விண்ணப்பத்தை அனுப்புவதற்கு உங்களுக்கு பல வழிகள் உள்ளன. உங்களது வழக்கறிஞரிடம் செல்லலாம். அல்லது இதற்காக செயல்படும் நிறுவனங் களிடம் செல்லாம். ஆல்லது நீங்களே சுயமாக இந்த விண்ணப்பத்தை அனுப்பி வைக்கலாம். சுயமாக அனுப்புவதால் நீங்கள் சில டொலர்களை சேமிக்கலாம். சுயமாக ஒருவர் எவ்வாறு விண்ணப்பத்தை அனுப்பி வைப்பது தொடர்பாகவே இந்தக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

ஆனால் பணம் எவ்வளவு போனாலும் பரவாயில்லை என்று கருதுபவர்கள் உடன் தங்களது வழக்கறிஞரை தொடர்பு கொள்ள லாம். அதே சமயம் தமது வழக்கறிஞருக்கு தான் முன்னர் செய்த கிரிமினல் குற்றம் தெரிந்து விடக்கூடாது என்று கருதுபவர்கள் இதற்கு என்று உள்ள ஏஜென்சிகளிடம் செல்லாம். இந்த ஏஜென்சிகளும் Pardon Application தொடர்பாக அனுபவம் உடையவர்களே.

இந்தக் கட்டுரையை படித்ததும் உணர்ச்சி வசப்பட்டு http://www.npb-cnlc.gc.ca/pardons/servic_e.htm என்ற இணையத்-தளத்துக்குச் சென்று அந்த விபரங்களை பார்ப்பீர்கள் என்பது தெரியும். ஆனால் அந்த இணையத்தளத்தில் உள்ள Pardon Application விண்ணப்பத்தை தயவு செய்து நிரப்பி விடாதீர்கள்.

ஏன் என்றால் அந்த விண்ணப்பத்தை நீங்கள் நிரப்பிய திகதியில் இருந்து ஒரு வருட காலத்தில் அந்த விண்ணப்பப் படிவம் காலாவதியாகி விடும். ஆனால் இந்த Pardonக்கு நீங்கள் முயற்சி செய்து அதற்கு முடிவு கிடைக்க ஒரு வருடத்திற்கும் மேலாகச் செல்லாம். எனவே நீங்கள் நிரப்பிய விண்ணப்பப் படிவம் காலாவதி-யாகிவிடும். அதன் பிறகு நீங்கள் மீண்டும் விண்ணப்பம் செய்ய வேண்டி வரும். இதனால் மீண்டும் ஒரு வருடம் காத்திருக்க வேண்டிவரும். எனவே கீழே கொடுக்கப்பட்-டுள்ள விடயத்தை கவனமாக கருத்தில் எடுத்து அதன் படி செய்யவும்.

எந்த வித வழக்கறிஞரினதோ, அல்லது தனியார் நிறுவனத்தினரது உதவி இல்லா மல், ஒருவர் தனது சொந்த முயற்சியில் எவ்வாறு Pardon Applicationக்கு விண்ணப்-பிப்பது, அதற்கு குறிய Steps என்ன என்று பார்ப்போம்.

### முதல் நடவடிக்கை

இந்த Pardon applicatrionக்கு விண்ணப் பிக்க நீங்கள் விரும்பினால் முதலில் நீங்கள் உங்கள் கைரே கையை எடுத்து

**Civil Fingerprint Screening Services**
**Royal Canadian Mounted Police**

72ம் பக்கம் பார்க்க...


Connectiong tutors & students in the GTA

BRILLIANT TUTOR @ YOUR HOME INC.

தமிழ் மாணவர்களின் நலன் கருதி அவர்களின் வீடுகளுக்கு சென்று
பாடங்களை ஒன்ராரியோ பாடத்திட்டத்திற்கு அமைய கற்பித்து வருகின்றோம்.

- SCIENCE
- CHEMISTRY
- PHYSICS
- BIOLOGY
- MATH
- CALCULUS
- ALGEBRA & GEOMETRY
- DATA MANAGEMENT
- ENGLISH
- FRENCH

EQAO Preparation



Over 100 Tutors

Over 1500 Students

Call Kuna Today
Tel: 416-291-4684, 905-507-8470, 647-295-5862, Fax: 416.264.6306
E-mail: info@brillianttutor.com

We will visit your home

JK to GRADE 8 $80^{00}/MONTH | 1 ON 1 OR GROUP | 9 to University 2nd Year $90^{00}/MONTH

79 Eastvale Drive, Markham, ON, L35 4R9

Markham, Scarborough, Mississauga, Toronto, Etobicoke, Brampton, North York, East York, Richmond Hill, Ajax, Malton, New Market, Vaughan

digi Media - 416-467-4952

# A1 TOP QUALITY FLORIST



உங்களின் மங்களகரமான வைபவங்களுக்கு


தேவையான பொருட்களுக்கும் நாடுங்கள்

**பிள்ளை 416-269-5522**

2871 Lawrence Ave. East, Scarborough. Ontario M1P 2S8

# A1 TOP QUALITY FLORIST

## Funeral Services




**Floral Arrangement for Funeral Needs**

**பிள்ளை 416-269-5522**

2871 Lawrence Ave. East, Scarborough. Ontario M1P 2S8

# செலவைக் குறைக்க சில வழிகள்



மஞ்சுளா ராஜலிங்கம்
manju@thaiveedu.com

## பெயர்ப்பட்டியல்
ஒரு பெயர்ப்பட்டியலுடன் நீங்கள் கடைக்குப் போகாவிட்டால், பணத்தை அனாவசியமாக வாரியிறைக்க நேரிடும். பட்டியலிடும் போது, வீட்டில் என்ன இல்லை என்பதை அதனதன் வழமையான இடத்தை அவதானித்து உறுதிப்படுத்தி, வாங்க வேண்டிய சாமான்களின் பட்டியலைத் தயாரிப்பது நல்லது.

## உணவுத் தீர்மானம்
எதை எதை எந்த நாள் சாப்பிடுவது என்பதை முதலிலேயே தீர்மானிக்க வேண்டும். அதன்படி, இரண்டு கிழமைகளுக்கொருமுறை, அவற்றைச் சமைக்கத் தேவையான பொருட்களை வாங்கச் செல்லலாம்.

## பசியென்றால் தவறான நேரம்
உங்களுக்குப் பசிக்கும் தறுவாயில் காய்கறி வாங்கும் வேலைக்குப் போகவேண்டாம். அந்நேரத்தில் போனால், கண்டதையும் வாங்கச் சொல்லும். செலவும் உங்களையறியாமலே ஏறிவிடும். ஆகவே உணவை அருந்திவிட்டு கடைக்குப் புறப்படுங்கள். பெயர்ப்பட்டியலுடனேயே உங்கள் செலவும் கட்டுப்படும்.

## செலவின் அளவு
எவ்வளவு செலவழிக்க வேண்டிவரும் என்று அண்ணளவாகத் திட்டமிட்டு அந்த வட்டத்துக்குள்ளேயே நின்று கொள்ளுங்கள். இது தெரியாவிட்டால், காசு எகிறிவிடும்.

## கணக்கிடல்
குறிப்பாக, பொருட்களைப் பார்த்து ஒரு கணக்கைப் போட்டுப் பாருங்கள். நீங்கள் உங்கள் செலவுத் திட்டத்தைத் தாண்டும் போல் உங்கள் வாங்கும்முறை இருந்தால், முக்கியமில்லாத, எந்தப் பொருளை அந்தத் தடவைக்கு மட்டும் தவிர்க்கலாம் என்று பாருங்கள். ஒரு பொருள் 1.85 டொலர் என்றால், சரி, அதை ஒரு 2 டொலர் என்று கணக்கிடுவதன் மூலம், மற்றைய சில பொருட்களையும் இதன்மூலம் கணக்கிட்டு, உங்கள் விலைப்பட்டியலுக்குள் ஒத்து வருகிறதா என்று குத்துமதிப்பாகக் கணக்கிட்டுக் கொள்ள முடியும்.

## எழுதும் சீட்டு
பட்டியலைப் போடக்கூடிய ஒரு சின்னப் புத்தகச் சீட்டை உங்கள் குளிர்சாதனப் பெட்டிக்கருகிலேயே வைத்துக் கொள்ளுங்கள். அந்நேரம், என்ன பொருள் முடிவடைகின்றதோ, அதை மனதில் தனியே பதிய வைத்துக் கொள்ளாமல், உடனடியாக அந்தத் துண்டில் எழுதப் பழகிக் கொள்ளுங்கள். முட்டை மட்டும் இல்லையே என்று, கடைக்கு ஓடும் தொல்லைகள் இல்லை.

## அலமாரித்தட்டுப் பொருட்கள்
அலமாரித் தட்டுக்களில் வழமையாக வைக்கும் பொருட்கள் என்ன என்பதைப் பட்டியலிட்டு, அந்தக் கதவுகளிலேயே உட்புறமாக ஒட்டிவிடுங்கள். இது எத்தனை, அது எத்தனை என்பதையும் அதன் பக்கத்திலேயே எழுதுங்கள். பின்னர் ஒன்றைப் பாவிக்க எடுக்கும்போது, அதில் மாற்றத்தை எழுதி விட்டால், முடியும் தறுவாயில் பட்டியலைப் போட இலகுவாக இருக்கும்.

## அதிரடி உணவுகள்
ஸ்பகேட்டி, மற்றும் மசாலா சேர்த்த அதிரடி உணவுகளை இலகுவாக எடுக்கக் கூடிய மாதிரி வைத்துவிட்டால், அவைகளை சில வேளைகளில், உடல் அயர்வாக இருக்கும் நாட்களில், சடுதியாகச் சமைத்து உண்ணக் கூடியதாக இருக்கும். அதிக சரக்குச் சாமான்களும் இதில் நாம் பயன்படுத்தத் தேவையில்லை.

## தொகையாக வாங்குதல்
இரண்டு மாதத்திற்குத் தேவையான சில பொருட்களை வாங்குவதற்கு உங்கள் பொருளாதாரம் இடம் கொடுத்தால், நிச்சயமாய் அவற்றை வாங்கிப் பின்னாள் தேவைக்குப் பதுக்கி வையுங்கள். பொருட்கள் காலாவதியாகும் தேதியைக் குறித்துக் கொள்ளுங்கள். பாவிக்காமலே, நிறைய வாங்கி வைத்துப் பின், பழுதடைந்து போவதால் எந்த ஆதாயமும் இல்லை.

> “துணிகளால் தயாரிக்கப்பட்ட பைகளை நீங்கள் பயன்படுத்தப் பழகிக் கொள்ளுங்கள். நீண்டகாலம் பாவிப்பதோடு சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கும் உங்களால் முடிந்ததைச் செய்த மனத்திருப்தி உங்களுக்கு இருக்கும்.”

## பதப்படுத்திய காய்கறி
புத்தம்புது காய்களுக்கு இணையேது? ஆனாலும், வீட்டில் அவசரத்திற்கு இவற்றை வாங்கி வைத்துப் பயன்படுத்தினால் தப்பில்லை. அதுவும் உறைகுளிர் சாதனப் பெட்டியில் வைப்பதால், இவ்வகைக் காய்கறிகள் கெட்டுப்போக அதிக வாய்ப்பில்லை.

## மாமிசக் குறைப்பு
உணவில் சேர்க்கும் மாமிசத்தின் அளவைக் குறைத்துக் கொண்டு, காய்கறிகளை அதிகமாகச் சேருங்கள். மாமிசம் ஓரளவு விலையென்பது போக, அதனால் உடலுக்கும் தற்போது கேடுகளே விளைகின்றன.

## உணவுப்பொட்டலம்
பதப்படுத்தப் பட்ட உணவுகளை சமயத்தில் வாங்கினாலும், அவை பணத்தைக் கொள்ளையடிக்கின்றன. வேலை மற்றும் பள்ளி செல்லும்போது கொண்டு செல்ல, அதே பொருட்களைப் பெரிய அளவில் வாங்கி, ஒவ்வொரு நாளும் ஒரு சிறு பையில் உங்களுக்குத் தேவையானதை கொண்டு செல்வதால், வெளியில் வாங்கிச் சாப்பிடும் செலவும் மிச்சம்.

## சமைத்துப் பதப்படுத்தல்
ஒரு ஞாயிற்றுக் கிழமையைத் தேர்ந்தெடுத்து, குளிர்சாதனப் பெட்டியில் ஒரு கிழமைக்கு வைக்கக் கூடிய பதார்த்தங்களை எல்லாம் ஒரேயடியாகத் தயாரித்து வைத்துவிட்டால், நேரம் மிச்சம். ஸ்பேகட்டி போன்றவை ஒரு கிழமைக்கு மேல் கூட பதனப்பெட்டியில் வைத்திருந்தால் கெட்டுப் போகாது.

## தீர்ந்து போகும் பொருட்கள்
Batteries, Toilet papers, light bulbs போன்றவை உடன் தீர்ந்து போகக் கூடியவை. விஷேட விலைக்கழிவு கொடுக்கும் போது, அல்லது தொகையாக இவற்றை வாங்கி வைத்துவிட்டால், விட்டது தொல்லை. கடைக்குப் போகும்முன்னர், இவைகள் வீட்டில் தீர்ந்து விட்டதா என்று முன் கூட்டியே உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## பாத்திரப் பாவனை
Crockpot என்று சொல்லப்படும் பாத்திரத்தில் காலையில் வேளைக்குப் போகும் முன்னரே, அரிசி, மற்றும் இதர காய்கறி, மாமிச வகைகளைப் போட்டுவிட்டுப் போனால், மாலையில் ஆறுதலாக சமைக்கப்பட்டிருக்கும். ஒரு மாறுதலுக்காகவும், சமையல் தொல்லை அல்லாத ஒரு நாள் இரவிலும் இந்த உணவைச் சுடச்சுடச் சாப்பிடலாம். மிகவும் சுவையாகவும் இருக்கும்.

## விஷேடவிலைச் சீட்டுக்கள்
இவைகள் ஒவ்வொரு நாளும் ஒரு கடையையாவது சார்ந்து வீடுகளுக்குப் போடப் படும். சிரமம் பார்க்காமல், இவைகளைக் கத்தரித்துப் பத்திரப் படுத்தி வைத்துக் கொண்டால், அவற்றின் வலிமை காலாவதியாகு முன்னரே, அவற்றை சம்பந்தப்பட்ட கடைகளில் கொடுத்து, பொருட்களை வாங்கி, பணத்தையும் மிச்சப் படுத்தலாம். கடை வாசல்களிலும் இவற்றைப் பெறலாம். இவை சராசரி பத்திலிருந்து இருபது வீதமான பணத்தை உங்களுக்கு மிச்சப் படுத்திக் கொடுக்கும். இவற்றை ஒரு உறையில் போட்டு தனியே பத்திரப் படுத்துங்கள்.

## ஸ்பெஷல் பொருட்கள்
இதில் கடைக்குக் கடை வேறு படும். ஆனால் விளம்பரப் படுத்தப் பட்டிருப்பது அரிது. இவற்றைக் கடைகளில் போய், பொருட் தட்டுக்களில் பட்டியலிடப் பட்டிருக்கின்றதா எனப் பாருங்கள். அதுவும், தேவை இருந்தால் மட்டுமே அந்தப் பொருளை வாங்குங்கள்.




## கடைத் தயாரிப்பு
ஒரு கடை தனக்கென தனியான ஒரு அக்மார்க்கை பொருட்களுக்கென வைத்திருக்கும். அவற்றையும் சிறிது முயற்சித்துப் பார்க்கலாம். நாம் சாதாரணமாக வாங்கும் பொருட்களின் தன்மைக்கும் அவற்றின் தன்மைக்கும் அதிக வித்தியாசம் இருக்காது, ஆனால் கட்டாயம் விலை குறைவாக இருக்கும்.

## நேரவிரயம்
ஓரிரண்டு பொருட்களுக்காக நேரம், மற்றும் பெற்றோலையும் அனாவசியமாக செலவு செய்யாதீர்கள். எப்பொழுதும் பெரிதாக ஒரு விலைப்பட்டியலைப் போட்டு, அதன்படி, கிழமையில் ஒருநாள் போல, கடைக்குப் போய் தேவையானவற்றை வாங்கி வாருங்கள். இருந்தும், தொட்டுத் தொட்டு அடிக்கடி கடைக்கு ஓட வேண்டியிருந்தால், சிந்தியுங்கள். உங்கள் பட்டியல் சரியாகத் திட்டமிடப் படவில்லையா? பட்டியலில் உள்ள சிலவற்றை மறந்து விட்டீர்களா? அடிக்கடி வெளியில் போய் வாங்கும் பொருட்களைத் தொகையாக வாங்கிப் பழகுங்கள்.

## சீரியல்
சீரியல் எனப்படும் காலை உணவு வகைகள் இனிப்பாய் இல்லாதிருப்பது நல்லது. பணம் கூட என்பது மட்டுமல்ல, கொடுத்த பணத்திற்கு சரியான ஊட்டம் கிடையாது. அதைவிட, இனிப்பில்லாத சீரியல் வகைகளை வாங்கி பழங்களை நீங்கள் அதில் சேர்த்துச் சாப்பிடலாம்.

## பணியாளர் மேல் ஒரு கண்
சிலவேளை கணக்குப் போடுபவர்கள் தப்பான கணக்கைப் போட்டுவிட்டால், உங்களுக்குத் தான் காசு விரயம். அவர்கள் வேலை மேல் ஒரு கண் வைத்துக் கொள்ளுங்கள்.

## மலிவுவிற்பனை
மலிவு விற்பனையில் பொருட்கள் போகும் போது, அவற்றை அதிகமாக வாங்கிச் சேமியுங்கள். பின்னாளில் அதே பொருள் பல காலத்திற்கு மலிவுவிற்பனை விலைக்கு வராது.

## பொருள் ஒப்பீடு
ஒரு பொருளே பல கடைகளில் என்னென்ன விலைகளில் போகிறது என்று பாருங்கள். அளவின் தன்மையைப் பொறுத்து, அவற்றைக் கணக்கிட்டு, அவை வழமையான விலையை விடக் குறைவானதாக இருக்கின்றதா என்று ஒப்பிட்டுப் பாருங்கள். நிச்சயம் ஒரு கண்கூடான வித்தியாசம் இருக்கத் தான் செய்யும்.

## சரியான நேரம்
கடையில் கூட்டம் அதிகமாக இல்லாத நேரமாகப் பார்த்து உங்கள் ஷொப்பிங்கை செய்யுங்கள். கடைபூட்ட முன்னர், ஒரு மணி முன்னதாகப் போகலாம். அல்லது மற்றவர்களுக்கு வேலை மும்முரமாகும், மத்தியான வேளைகளில் போகலாம். நீண்ட விடுமுறை நாட்களுக்கு முதல் நாட்கள், மாலை 5 மணிக்குப் பின் கடைக்குப் போதலை அறவே தவிர்க்கப் பாருங்கள்.

## புத்தம்புது வரவு
பழங்கள் மற்றும் காய்கறிகள் சில நாட்களிலேயே கெட்டுவிடக் கூடியவை. இவற்றை கடைகளில் எத்தனை நாட்களுக்கொரு முறை அகற்றி, புதிய வரவை அடுக்குகிறார்கள் என்பதைத் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். அந்த நாட்களிலும் மற்றும் அடுத்த ஒரு நாளும் போய் அவற்றை வாங்குவதால், புதிய பொருட்களைப்

68ம் பக்கம் பார்க்க...

# செலவைக் குறைக்க சில...

67ம் பக்கத் தொடர்ச்சி...

பழுதில்லாமல் கொள்வனவு செய்யலாம்.

### அனாவசியக் கொள்வனவு

மூலைமுடுக்குளில் உள்ள கடைகளுக்குப் போய், பொருட்கள் வாங்குவதைப் பழக்க மாகக் கொள்ள வேண்டாம். யானைவிலை, குதிரைவிலையாகத் தான் பொருட்கள் இருக்கும்.

### பல கடைத் தேர்வு

ஒரு கடைக்கு மட்டும் போகாமல், இன்னொரு கடைக்கும் போகலாம். ஒரு கடையில் காணப்படும் விலைகூடிய பொருள் இன்னொரு கடையில் மிக மலிவாகக் கிடைக்கலாம்.

### ஜங்க் உணவு

இவ்வாறு அழைக்கப்படும் உணவுப் பதார்த் தங்களை கொஞ்சமாக வாங்குங்கள் அல்லது வாங்குவதை அறவே தவிருங்கள். இவற்றில் எந்தச் சத்தும் இல்லை என்ப தோடு விலையும் கூட. இது மனிதனின் எடையையும் பெருக்கச் செய்து, ஆளையும் சீக்கிரமே கொன்றுவிடும். அதற்குப் பதிலாக, அதிகமான காய்கறிகள், பழவகைகள் இவற்றை வாங்கிச் சுவையுங்கள்.

### மறுபரிசீலனை

ஒரு மலிவுப்பொருள் கடையில் முடிந்து போய் விட்டால், அதை திரும்பவும் கொண்டு வந்து அந்த விலைக்கே ஓரிரு நாளில் விற்பார்களா என்பதைக் கேட்டறிந்து கொள்ளுங்கள்.

### படித்துப் பார்த்தல்

பதப்படுத்தப் பொருட்களில் வேண்டாத சமாச்சாரங்கள் என்னென்ன இருக்கின்றன என்று படித்துப் பாருங்கள். trans fat, hydrogenated oils, high amounts of sugar, saturated fat, lots of sodium, cholesterol. இவ்வாறு சொல்லப் பட்டிருக்கும் விடயங்களை அறவே தவிர்த்து விடுங்கள். அதற்குப் பதிலாக fiber, good fats, protein, vitamins, calcium போன்ற உபயோகமான, உடலுக்குத் தேவையான ஊட்டச் சத்துக்கள் இருப்பின் அவற்றை வாங்குங்கள்.

### சுத்தமான குளிர்சாதனப்பெட்டி

அடிக்கடி குளிர்சாதனப் பெட்டியைச் சுத்தப் படுத்தி, தேவையில்லாத, விரயமாகிப் போன பொருட்களைத் தூக்கி எறிந்துவிட்டு, புதுப் பொருட்களுக்கு இடம் ஒதுக்குங்கள்.

### பட்டியலுடனேயே நில்லுங்கள்

நீங்கள் தயாரித்த பெயர்ப்பட்டியலுடனேயே நில்லுங்கள். அதைமீறி, அனாவசியமான எதையும் வாங்காதீர்கள். இதுதானே, அது-தானே என்று வாங்கப்போய், அது கடைசியில் மேலதிகமாக 50, 100 டொலர்களுக்கு மேலேயும் செலவு வைத்துவிடும். பட்டியலில் இல்லாத எதையும் நான் வாங்கமாட்டேன் என்ற மனவுறுதியைக் கடைப்பிடியுங்கள்.

### கடைச்சீட்டுப் பணச்சேமிப்பு

கடைகளில் இருக்கும் இம்மாதிரி அட்டைகளுக்கு விண்ணப்பித்து அதனை அந்தந்தக் கடைகளில் பாவிப்பதன் மூலம், பல மடங்குப் பணத்தைச் சேமிக்கலாம்.

### விரைவுணவுக் கடைகள்

Fast food Restaurantகளில் வாங்கிச் சாப்பிடுவதை அறவே தவிருங்கள். எப்பொழுதும் வேலைக்குப் போகும்போது, வீட்டிலிருந்தே சாப்பாடு எடுத்துப் போவதுதான் உசிதமானது. அத்துடன் சத்தான ஆகாரமாகவும், மிகவும் சுத்தமானதாகவும் இருக்கக் கூடியவை.

### பதனப்படுத்தப்பட்ட உணவுகள்

இவற்றை கடைகளில் வாங்கிப் பாவிப்பதை அறவே தவிருங்கள். நீங்கள் சமைத்துச் சாப்பிடுவது போல் வருமா? அத்துடன் அதில் ஒரு சரியான சத்தும் இருக்கப் போவதில்லை.

### தண்ணீரே உகந்தது

iced tea, Tang, sodas, other types of drinks - இவற்றை அருந்துவதே அறவே தவிர்த்துத் தண்ணீரைக் குடித்தால், உடலுக்கும் கேடு இல்லை. மலிவாகவும் கிடைக்கும்.

### பொருள் ஒழுங்குப் பட்டியல்

ஒரு கடைக்கு அடிக்கடி போய், அந்தக் கடை உங்களுக்கு மிகவும் பழக்கமானதான இருந்தால், அங்கு எந்த வரிசையில் என்னென்ன பொருட்கள் கிடைக்கும் என்று உங்களுக்குத் தெரியும்தானே? அதன்படி, உங்கள் பொருட்பட்டியலைத் தயாரித்தால், பொருட்களை அங்குமிங்கும் ஓடியாடி, வந்த இடத்திற்கே மீண்டும் இன்னொரு பொருளிற்காக வராமல், ஒரே தரத்திலேயே எல்லாவற்றையும் இலகுவில் சேகரிக்கக் கூடியதாக இருக்கும். நேரமும் மிச்சம், இல்லையா?


### துணிப்பைகள்

துணிகளால் தயாரிக்கப்பட்ட பைகளை நீங்கள் பயன்படுத்தப் பழகிக் கொள்ளுங்கள். நீண்டகாலம் பாவிப்பதோடு சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கும் உங்களால் முடிந்ததைச் செய்த மனத்திருப்தி உங்களுக்கு இருக்கும். தவிர சில கடைகளில், பிளாஸ்டிக் பைகளுக்குக் கூட பணம் எடுப்பார்கள். இப்படி அதில் ஓரிரண்டு டொலரைச் செலவழிக்காமல், மிச்சப் படுத்தலாமே.


■ ■ ■

# இலையுதிரும் வண்ணங்கள்


இலையுதிர்காலத்தில் கனடாவில் மரங்களின் மீது இயற்கை வர்ணக்குளம்பை அள்ளி ஊற்றிவிடுகிறது. எங்கெங்கு காணினும் இயற்கையின் வண்ணமடா என்னும்வகையில் அழகு பூத்துக்கிடக்கும் காலம் அது. நகரங்களை விட்டு சற்று வெளியே போய் கிராமங்களின் வனப்பை ஊடறுத்துச் செல்லும் வீதிகளில் பயணித்திருக்கிறீர்களா? இல்லையெனில் நீங்கள் இலயுதிர்கால அழகை முழுமையாக அனுபவித்திருக்க முடியாது. வரும் Thanks Giving விடுமுறைக்கு குடும்பத்தினருடன் அல்லது நண்பர்களுடன் வாகனத்தில் ரொறன்ரோவுக்கு வெளியே பயணித்துப்பாருங்கள். இயற்கையின் ஓவியங்களை ரசிக்க ஒரு அற்புத வாய்ப்பைப் பெறுவீர்கள். ஒன்ராரியோ உல்லாசப்பணத்துறை எந்தெந்த வீதிகளால் பயணித்தால் நீங்கள் அதிக பட்சம் இந்த வனப்பை இரசிக்கலாம் என ஒரு கையேட்டையே வெளியிட்டுள்ளது. அதில் சில பாதைகளை மட்டும் இங்கு தருகிறோம். Thanks Giving காலப்பகுதியிலேயே இந்த அழகை அதிகம் இரசிக்க முடியும்.





ரொறன்ரோவின் கிழக்குப்புறமாகப் பயணிக்கும் போது இந்தப் பகுதிக்கு செல்லலாம்.





ரொறன்ரோவிலிருந்து வடமேற்குப் புறமாகவும் ஒரேஞ்ச்வில்லிலிருந்து கிழக்குப் பயணிக்கும் போது இந்தப் பகுதிக்கு செல்லலாம்.




ஹமில்டனுக்கு தென்கிழக்குப் புறமாக பயணித்தால் இந்தப்பகுதிக்குச் செல்லலாம்.

இதே போன்ற மேலும் 15 பாதைகளின் விபரங்கள் http://www.ontariotravel.net இல் உள்ளன.




நாயகரா நீர்வீழ்ச்சியின் மேற்குப்புறமாக பயணிக்கும் போது இந்தப் பகுதிக்கு செல்லலாம்.

# CTR தகவல் பலகை

## House For Sale

**Rough River / Sheppard**
4 bedroom updrage 2600 sq feet
Rasalingam: 905-509-7493, 416-388-1549

**Mccowan / Finch**
2 bedroom condo for sale
Thavam: 416-293-5176, 416-903-5176

## ROOMS / BASEMENT RENT

**Morningside / old finch**
2 Basements
Thurai : 647-282-7689, 647-200-4112

**Birchmount / St.clair**
2 bedroom basement for rent
2/3 people $650, Rani: 416-269-8264

**Eglinton / Kennedy**
Basement – 2 bedroom / தனிவழி
Kumar: 416-820-3116

**Brampton Airport/Queen**
2 bedroom வீட்டின் மேல் தளத்தில்
Mathy: 905-915-1678

**McCowan / Lawrence**
2 bedroom basement near all the facilities
தனிவழி, Selvy: 416-439-6987

**Morningside / Sheppard**
Basement
Anusha: 416-724-7874

**Morningside / Mclevin**
1 bedroom basement தனிவழி
Selvy: 416-287-1236

**McCowan / Lawrence**
2 bedroom basement near all the facilities
தனிவழி, Selvy: 416-439-6987

**Morningside / Sheppard**
Basement
Anusha: 416-724-7874

**Mccowan / Finch**
2 bedroom condo for sale
Thavam: 416-293-5176, 416-903-5176

**Morningside / Mclevin**
1 bedroom basement தனிவழி
Selvy: 416-287-1236

**Sc.Golf / Lawrence**
1 bedroom basement 647-284-8494

**Jane / Finch**
1 room for rent in a house
Helen: 416-745-0283

**Markham / ellesmere**
2 bedroom basement rent
416-430-0455

**Lawrence / mccowan**
1 bedroom for rent
(பெண்கள், முதியோர்)
Sutha: 416-901-7151

## Others

**Plants for sale**
கறிவேப்பிலை , பப்பாமரம்
647-405-9116, 905-201-9116

**Tutour**
Islington / Finch
Math, Science, English
Grade 1 – Grade 12
Leela: 647-343-4223

**Bunk bed**
1 Single bed
Rohini: 647-341-5564
416-720-8709

**Day care**
Thursday / Friday (Markham / Burok)
2.45 – 5.00 Day care
Ranjan: 647-801-5501

**Day care**
Painting, tables, hardwood
Tharan: 416-994-9612

**தையல் machine**
Tution – Morningside and Oldfinch
Grade SK to Grade 5 647-219-6841
தையல் machine (new)
647-302-6734

மூடப்பட்ட Restaurant பொருட்கள் விற்பனைக்குண்டு
Saroja: 416-286-4928

**Pizza Store**
Islington and Finch
Pizza Store needs delivery people
Karthik: 416-744-3025

**Pizza Store**
Pizza Hut 1 person needs
416-917-8336

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

**Pizza Store**
Danforth & Pharmacy பகுதியில் இயங்கிவரும் Pizza நிறுவனம் ஒன்றில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை
416.875.6869

## AUTO

**1997 Toyata Corolla**
160 KM Green ,
Rajan: 416-716-2975

**95 Honda Accord**
Auto, Mp3, A/C 220 Km, $2250
யோகராஜா: 416-451-6895

**2004 4 Runner Toyata**
60Km Jeep
Kumar: 416-707-0851, 905-471-9631

**Brimley /Lawrence**
2 B/R Basement,
Separate entrance (தனிவழி)
Near all facilities
Jeya
416 439 6987



# வீடு வாங்கி விற்பதற்கு எப்படியான Neighbourhoodஐத் தெரிவு செய்யலாம்.

அலன் சிவசம்பு
- வீடு விற்பனைப் பிரதிநிதி -
skbales@thaiveedu.com



வீடு வாங்கி விற்பது என்பது, வீட்டைச் சரியான விலைக்கு வாங்கிய பின்பு அதற்குத் தேவையான இடங்களில் திருத்தங்களைச் செய்வதால் அந்த வீட்டின் பெறுமதியை அதிகரிக்கச் செய்யலாம். சில வேளைகளில் வீட்டின் விலை அதிகரிப்பதாலும், வீடு வாங்கி விற்கும்போது அதன் பெறுமதியும் அதிகரிக்கலாம். அப்படியான நிலையில் நாம் profit எடுக்க எத்தனிப்பது ஒரு investor என்னும் நிலையில் இருந்து, வீடுகள் வாங்கிய பின்பு பெறுமதி கூடும் என எதிர்பார்த்து இருக்கும் Speculator என்னும் நிலைக்குத் தள்ளும் நிலை ஏற்படும். ஆகவே நாம் சரியான investorஆக வருவதற்கு ஆறு வீதமான Neighbourhood targeting criteriaஐத் தெரிந்து கொள்வது நல்லது.

முதலாவதாக Investment House ஆகத் தெரிந்து எடுக்கப்படும் இடம் உங்களது வீட்டிற்குக் கிட்டவாக இருப்பது நல்லது. காரணம், ஒரே Investment House உடன் வேலை செய்யும் போது regularஆகச் சென்று Investment வீட்டைப் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். அப்படி இல்லாது விட்டால் உங்களிடம் தேவையான நேரம் இருந்தால் தூர இடத்திற்குப் போய் வரக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

அடுத்ததாக விலை கூடிய வீட்டை Flip செய்யும்போது கூடிய லாபம் வருவதற்குச் சந்தர்ப்பங்கள் உண்டு. இருந்தாலும் விலை கூடிய வீட்டிற்கு கூடிய பணம் Investment செய்ய வேண்டி இருக்கும். அதே நேரத்தில், நீங்கள் திருத்தம் செய்து கொண்டு இருக்கும் வீட்டிற்கு taxes, insurance, interest payments அத்துடன் வீட்டை வைத்துப் பராமரிப்பதற்குத் தேவையான செலவையும் உள்ளடக்க வேண்டி இருக்கும். ஆகவே வீட்டை வாங்கி விற்பதோடு கூடிய காலம் வீட்டை வைத்திருக்காது, திருத்தி உடனே விற்பது, வீடு வாங்கி விற்கும் செலவைக் குறைத்துக் கொள்ளும்.



அத்துடன் Sales activity கூடிய இடமாக இருந்தால், அதாவது Sales activity கூடியதாக இருந்தால், வீடு குறைந்த காலத்தில் விற்பதற்கு சந்தர்ப்பங்களும் உண்டு. Selling price, என்ன வீடுகள் கூடுதலாக அந்த areaஇல் இலகுவாக விற்கப்படுகின்றது எனவும் பார்த்தல் நல்லது.

நான்காவதாக, வீட்டின் வயது கூடுதலாக இருந்தால் அதைத் திருத்தி எடுப்பதற்குக் கூடிய செலவாகும். அதே நேரத்தில் கூடிய வயதுடைய வீடு உள்ள இடத்தில், கூடுதலான Equity இருக்கும். அப்படியாயின் வீட்டு உரிமையாளர்கள் வீட்டைக் குறைத்துக் கொடுப்பதற்குத் தயங்க மாட்டார்கள். அதாவது கூடிய காலமாக இருந்தால் வீட்டின் கடனைக் குறைத்திருப்பதற்குச் சந்தர்ப்பங்கள் உண்டு.

ஐந்தாவதாக, வீடு அமைந்துள்ள இடமாகும். அதாவது அந்த இடத்தில் மக்கள் கூடுதலாக வசிப்பதற்கு விரும்பக் கூடிய இடமாக இருத்தல் வேண்டும்.

ஆறாவதாக, பாதுகாப்பு உள்ள neighbourhoodஆக இருத்தல் வேண்டும். பாதுகாப்பு இல்லாத இடத்தில் கூடுதலாக மக்கள் வீடு வாங்க விரும்ப மாட்டார்கள். ஆகவே அவ்விடத்தில் crime rate குறைவாக இருத்தல் investment இற்கு நல்லது.

ஆகவே ஒரு வீட்டைத் தெரிவு செய்யும் போது, reputation உள்ள இடமாகவும், வீட்டினை சுற்றி பகுதிகளை, நல்லாக வைத்துள்ள இடமாகவும், குறைந்த Crime rate உள்ள இடமாகவும், பாடசாலைகள், கடைகள், போக்குவரத்து, business centres அத்துடன் park இருக்கும் இடமாக இருப்பது வீடு விற்பனைக்கு உதவியாக இருக்கும். ஆகவே ஒரு வீட்டை வாங்கி அதைத் திருத்தி விற்கும் நோக்கமாக இருந்தால் பல விதமான நன்மைகள், தீமைகளைச் சரியாக ஆராய்ந்து, தேவையான வீட்டின் பகுதிக்கு செலவு செய்து குறுகிய காலத்தில் விற்பனைக்கு விடுவதால், நீங்கள் வாங்கிய வீட்டை, லாபத்திற்கு விற்பதற்கு உதவியாக இருக்கும்.

■ ■ ■

N.K.S
Drapery & Blinds Fabric LTD



திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

கேதா நடராஜா
416.321.6420

Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420, 905.944.0218
Fax: 416.321.2217
www.nksdrapery.ca


Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9

வீடு வாங்க விற்க




Sutton

Alen Sivasambu
Sales Representative



Please Call Alen :
905-822-5000
Fax: 905-822-5617

alen@sutton.com


கனடியத் தமிழ் கலைஞர்கள் சங்கம்
RR CREATION
பெருமையுடன் வழங்கும்
RR CREATIONS
திரு. திருமதி காசிநாதர் சுப்புலக்ஷ்மி அரங்கில்
கலைவேந்தன் கணபதி ரவீந்திரன்
நவரசத் தாரகை சூபி யோகதாசனின்
நாடகப் பெருவிழா
OCT 04 2008
DRAMA FESTIVAL
100 நபர்களுக்கு குலுக்கல் முறையில் அதிர்ஷ்ட பரிசாக TamilStar Radio வழங்கப்படும்
மேலும் முதல் வரும் 500 நபர்களுக்கு நாஜில் என்.எஸ். முகக்கிரீம் இலவசமாக வழங்கப்படும்.
முக்கிய அறிவுப்பு
KULA SELLATHURAI
Wealth Advisor
416-296-0055
ScotiaMcLeod
குலா செல்லத்துரையின் ஆதரவில் கணபதி ரவீந்திரனின்
DNA
RE/MAX
Cell: 647-836-6502
நிலானி-வாணியின் ஆதரவில் CTBC சிறுவர் மன்றம் சாந்தாக்காவின்
POWER OF VALUES
MEGA Financial Group
Vany Jeganmohan
STANDARD MORTGAGES INC.
Raj S
416.993.2638
ஸ்ராண்டர்ட் மோகேஜ் ராஜ் ஆதரவில் சாந்தி நாதனின்
உன்னையே நீ அறிவாய்
invis
Wimal Navaratnam
Mortgage Specialist
(416) 606-6264
விமல் நவரத்திணத்தின் ஆதரவில் விக்னேஸ்வரா கலைவாணி நாடக மன்றம் பெருமையுடன் வழங்கும்
பருவத்தே பயிர் செய்
TOYOTA
SHAN MANOJKUMAR
Pre-Owned Sales & Leasing Consultant
416-953-6485
சான் மனோஜ்குமாரின் ஆதரவில் கோதை அமுதனின்
நாடகம்
Uthayan Newspaper
Canada's No.1 Tamil Newspaper
(416) 752-1524
உதயன்
உதயன் பத்திரிகை ஆதரவில் கதிர் துரைசிங்கத்தின்
நாடும் நடப்பும்
WINSTON CHURCHHIL C.I
2239 Lawrence Ave. East
(Kennedy & Lawrence)
Scarborough, ON.
Saturday, October 4, 2008 at 5:30pm
மேலதிக விபரங்களுக்கு:
416-898-RAVI (7284)
416-670-6522

# இது உங்கள் வாழ்க்கை...

65ம் பக்கத் தொடர்ச்சி...

**P.O. Box 8885**
**Ottawa**
**ON K1G 3M8**
**(613) 9986362**
என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

இவ்வாறு உங்கள் கைரேகையை எடுக்க நீங்கள் செல்ல வேண்டிய இடம் பல உள்ளன. அவற்றில் ரொறன்டோவில் உள்ள சில இடங்களைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்லலாம்.

உங்களுக்கு அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்தில் தொடர்பு கொண்டு நீங்கள் Pardon applicationக்கு விண்ணப்பிக்க உள்ளதாக கூறினால் அவர்களும் இந்த இடங்களைப் பற்றி உங்களுக்குத் தெரிவிப்பார்கள்.

நீங்கள் செல்லக்கூடிய சில இடங்களின் விலாசங்கள் இதோ:
**15 Toronto Street**
**(King& Yonge)**
**Suite 302**
**Toronto, ON**
**M5C 2E3**
**Tel: 416-3639072**

**885 Progress Ave**
**(Markham & Progress)**
**Suite 217**
**Scarborough, ON**
**M1H 3G3**
**Tel: 416- 438 2052**

**6200 Dixie Road**
**(Dixie & Meyer side)**
**Suite 109**
**Mississauga, ON**
**L5T 1A 6**
**Tel: 905- 564 7210**

இந்த இடங்களுக்கு நீங்கள் சென்றால் அவர்கள் உங்களது கைரேகையை எடுத்து உங்கள் கையில் ஒப்படைப்பார்கள். அதற்காக நீங்கள் அவர்களுக்கு பணம் செலுத்த வேண்டும்

பின்னர் இந்த கைரேகையை நீங்கள்
**Civil Fingerprint Screening Services**
**Royal Canadian Mounted Police**
**P.O. Box 8885**
**Ottawa**
**ON K1G 3M8**
**(613) 9986362**
என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும். கைரேகை மட்டும் நீங்கள் அனுப்பி வைத்தால் போதாது. அத்தோடு நீங்கள் $ 25க்கு உரிய மணியோடர், அல்லது certified cheque அல்லது Bank draftஐ அனுப்பிவைக்க வேண்டும்.

## இரண்டாவது நடவடிக்கை

இரண்டாவது நடவடிக்கையை மேற்கொள்ள முன்னர் நீங்கள் Civil Fingerprint Screening Servicesஇன் பதிலை எதிர்பார்த்து இருக்க வேண்டும். அவர்களிடம் இருந்து பதில் வர ஆறு மாத காலம் ஆகலாம்.

எப்போது நீங்கள் Civil Fingerprint Screening Servicesஇன் பதிலை பெற்றுக் கொள்ளுகின்றீர்களோ அதன் பின்னரே இரண்டாவது நடவடிகையில் ஈடுபடலாம்.

உங்களுக்கு Civil Fingerprint Screening Servicesல் இருந்து கடிதம் வந்ததின் பின்னர் அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு Toronto Police Service (40 College Street, Toronto, ON)க்கு சென்று அடுத்த நடவடிக்கையில் ஈடு படவேண்டும்.

அவர்களிடம் நீங்கள் Pardon Applicationக்கு விண்ணப்பிப்பதற்காக வந்துள்ளதாக குறிப்பிட்டு Civil Fingerprint Screening Servicesல் இருந்து வந்த கடிதத்தையும், உங்களின் அடையாளத்திற்காக இரண்டு ஆதாரங்களையும் காட்டினால் (உதாரணம்: கடவுச் சீட்டு, ரைவர் லைசன்ஸ், சிட்டிசன் காட், அடையாள அட்டை இலக்கம்) அவர்கள் உங்கள் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்வார்கள். இந்த சேவைக்காக அவர்களுக்கும் நீங்கள் பணம் செலுத்த வேண்டும்.

அவர்களிடம் இருந்து பதில் வர உங்களுக்கு சுமார் இரண்டு மாத காலநேரம் ஏற்படலாம்.

## மூன்றாவது நடவடிக்கை

Toronto Police Service (40 College Street, Toronto, ON)ல் இருந்து பதில் வந்ததும் அந்த விபரங்கள் அடங்கிய கடிதத்தையும், நீங்கள் கனடாவில் வசிப்பதற்கான உரிய official and valid immigration documentationஐயும், அத்தோடு ஐம்பது டொலருக்கான காசோலை, அல்லது certified cheque, அல்லது Bank draftஐ Receiver General for Canada என்ற பெயரில் எடுத்து

**Clemency and Pardons Division**
**National Parole Board**
**410 Laurier Avenue West, 5th Floor**
**Ottawa**
**ON K1A 0R1**
என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

இந்த இடத்தில் இருந்து உங்களுக்கு பதில் வர சில மாதங்கள் ஆகலாம். அங்கிருந்து உங்களுக்கு மன்னிப்பு வழங்கி பதில் வந்தால் உங்களது கிரிமினல் தகவல்கள் எல்லாமே அழிக்கப்பட்டுவிடும்.

■ ■ ■

## வேலைவய்ப்பு

காப்புறுதிப் பிரிவில், டெலிமார்க்கட்டர்களாக (Telemarketer) வேலை செய்வதற்கு, பகுதிநேரமாகவோ அல்லது முழுநேரமாகவோ விண்ணப்பிக்கலாம்.

சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.
அழையுங்கள்.

தனா (416) 728-5772




S.P.IMPORTERS
Furniture
SP
அனைத்து தளபாடங்களும் மிக மிக மலிவு விலையில்
NO PAYMENT INTEREST for 1 YEAR
416-266-3077
கொள்வனவு விலையில்
மலிவு விற்பனை
Sealy
Posturepedic
Special Sealy
Mattress on SALE
ஒரே பிளாசாவில் 4 தனிப்பெரும் ஸ்தாபனங்கள்...
2861 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2S8
(Brimley & Lawrence சந்திப்பில்)


இயற்கை மூலிகையின் உதவியுடன் உங்கள் கேசத்தை பராமரியுங்கள்!
The ERVAMATIN™ HAIR LOTION
உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமயிர் வளரவும் மிக உன்னதமாக தொழில் புரிகிறது எவமாட்டின் மூலிகை ஒளடதம்! உலகெங்கும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு. இப்போது எவமாட்டின் சாம்பூவும் கிடைக்கிறது.
Ervamatin POWER
SHAMPOO
OPIBRA
Dreamron HENNA
Treated Natural Henna
இயற்கை மூலிகையிலான தலை முடி மை
இயற்கை மூலிகையான மருதாண்டி கொண்டு செய்யப்படும் இவ் மை உங்கள் தலை முடியையும் நன்கு பராமரிக்கிறது.
The Ervamatin Hair Lotion
Provides effective and fast therapy for hair loss
And its treatment ensures excellent therapeutic results.
Recommended as a treatment for
Hair loss, hair regeneration, dandruff, alopecia,
Thin hair, baldness, fragile and dry hair.
BBB
SABONA
Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)
Amazon Health Care


specialize in
• Storage
Free of charge for Loading & Unloading
• Cross Docking
• Pallets
Custom Pallets
New & Used Pallets
We also buy used Pallets
• Moving
Also Available
24 ft Truck Rentel With Driver $145
Call Kiruba
416-300-6458
GTA Special Rates!!!
For Straight Truck.
Dock to Dock
*Direct*
*Rush*
*Sameday*
*TailGate Orders*
11 years in Business
CONTACT: MURALI
416.569.4065
89 Thournmount Dr., Unit 11&12, Scarborough, ON M1B 5V4
Morningside/Sheppard - Next to Home Depot
1 min. from Hwy401
fax: 416.724.8417, e-mail: emk4u@hotmail.com
emk ENTERPRISES INC
LOGISTIC & TRANSPORTATION


# காபனீர் ஒட்சைட் நச்சுவாயு

வட அமெரிக்காவில், நாம் நமது தொன்னூறு சத வீதமான நேரத்தை வீட்டுக்குள்ளேயே கழிக்கின்றோம். அப்படி இருக்கின்ற போது, நாம் சுவாசிக்கின்ற, நமது வீட்டுக்குள் இருக்கின்ற காற்றின் தரத்தைப்பற்றி அறிந்திருக்கின்றோமா? அது சுத்தமான காற்றாகத்தான் இருக்கின்றதா?

வெளியில் உள்ள காற்றின் தரத்தைவிட வீட்டுக்குள் உள்ள காற்றுத்தான் தரம் மிகக் குறைந்தது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வீட்டுக்குள் உள்ள அசுத்தக் காற்றில் CO என்று குறிப்பிடப்படும் காபனோர் ஒட்சைட்டும் (carbon monoxide) இருக்கின்றது. வருடாந்தம் பல நூறுபேர் இந்த காபனோர் ஒட்சைட்டினை சுவாசித்து இறந்து போகின்றார்கள். ஆயிரக்கணக்கானவர் கடுமையாகப் பாதிக்கப்பட்டு மருத்துவ உதவியை நாடவேண்டி ஏற்படுகின்றது.

காபனோர் ஒட்சைட்டு ஒரு நச்சு வாயு. இதற்கு நிறம், மணம் கிடையாது. எனவே இந்த நச்சு வாயுவின் அளவு நமது இருப்பிடங்களில் அதிகரிக்குமாயின் அதை உணர்ந்து கொள்ள முடியாது. (இதை அறிவதற்காகவே வீடுகளில் காபனோர் ஒட்சைட் monitors வைக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றது).

சிறிய அளவு காபனோர் ஒட்சைட்டை ஒருவர் சுவாசித்தால் சுவாசிப்பதில் தடை ஏற்றடும். இலேசாக வயிற்றைப் புரட்டும், அத்தோடு தலையிடியும் ஏற்படும். இந்த அறிகுறிகள் காய்ச்சல், மற்றும் சில வருத்தங்களின் அறிகுறிகளாயும் இருப்பதால் காபனோர் ஒட்சைட்டை நாம் சுவாதித்துள்ளோம் என்று நினைப்பதில்லை. அதிக அளவு காபனோர் ஒட்சைட்டை சுவாசிப்பது மரணத்திற்கு இட்டுச்செல்லும்.



நாம் சுவாசிக்கும் போது எம்மை அறியாமலே உட்செல்கின்ற காபனோர் ஒட்சைட் குருதியைச் சென்றடைகின்றது. குருதியில் உள்ள ஒட்சிசனை அடித்துத் துரத்திவிட்டு, ஒட்சிசன் இருக்க வேண்டிய இடத்தில் தான் சண்டித்தனமாக உட்கார்ந்து விடுகின்றது.

> “குருதியைச் சென்றடைகின்ற காபனோர் ஒட்சைட், குருதியில் உள்ள ஒட்சிசனை அடித்துத் துரத்திவிட்டு, ஒட்சிசன் இருக்க வேண்டிய இடத்தில் தான் சண்டித்தனமாக உட்கார்ந்து விடுகின்றது..”

ஒரு நிமிட நேரத்தில் பெருந்தொகையான காபனோர் ஒட்சைட் நமது சுவாசப்பை வழியாக குருதியை அடைந்துவிடும். இதனால் மூளை உட்பட ஒட்சிசன் தேவைப்படுகின்ற அனைத்துக் கலங்களுக்குமான ஒட்சிசன் விநியோகம் உடனடியாக துண்டிக்கப்படுகின்றது.

குழந்தைகள், முதியவர்கள், சுவாசப்பை மற்றும் இதய நோய் உள்ளவர்கள் மிக விரைவாக காபனோர் ஒட்சைட்டினால் பாதிக்கப்படுவார்கள். இவர்களை எல்லாம் விட தாயின் வயிற்றில் உள்ள சிசு மிகக் கடுமையான பாதிப்புக்குள்ளாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காபனோர் ஒட்சைட்டினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு அவசரசிகிட்சைகளின் பின்னால் அதிஸ்டவசமாக ஒருவர் மீண்டு வந்தாலும், அவருக்கு சில உறுப்புகள் நிரந்தரமாக பாதிப்பு அடைந்துவிடலாம். இந்த முக்கியமான உறுப்புகள் ஒட்சிசன் அதிக அளவில் தேவைப்படுகின்ற இதயமும், மூளையுமே ஆகும். இதன் பின் வாழ்க்கை துயரம் நிறைந்ததாயே அமைந்து விடும் என்று சொல்லவும் வேண்டுமா?

## எவ்வாறு இந்த நச்சு வாயு வீட்டுக்குள் வந்து சேர்க்கின்றது

எரிக்கின்ற எல்லா இடங்களிலும் பக்க விளைபொருளாக காபனோர் ஒட்சைட் உருவாகின்றது. நீங்கள் குப்பையை எரித்தாலும் சரி விறகை எரித்தாலும் அல்லது சிகரட், ஒயில், GAS, மண்ணெண்ணெய் என்று எதை எரித்தாலும் இந்த காபனோர் ஒட்சைட் உருவாகின்றது.

எரிகின்ற போது ஒரு காபன் இரண்டு ஒட்சிசனுடன் இணைந்து $CO_2$ உருவாகின்றது. ஒரு சில காபன்களுக்கு ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்படும். இதனால் ஒரு காபன் ஒரு ஒட்சிசனுடன் இணைந்து CO என்ற இந்த காபனோர் ஒட்சைட் உருவாகின்றது.

வட அமெரிக்காவில் நமது வீட்டுக்குள்ளேயே இவ்வாறு ‘எரித்தல்’ வேலையை செய்கின்ற பல உபகரணங்களை நமது தேவைக்காக வைத்துள்ளோம். Furnaces, ranges, oven, water heaters, dryers, fireplaces என்று இவற்றைச் சொல்லிக் கொண்டே போகலாம். இவை எரிகின்ற போது இவற்றிற்குத் தேவையான ஒட்சிசன் போதுமான அளவு செல்லாமல், ஏதாவது ஒரு காரணத்தால் தடைப்பட்டால் அங்கு பிரமாண்டமான அளவு காபனோர் ஒட்சைட் உருவாகிவிடுகின்றது. இந்நிலைமை பல மரணங்களுக்கும், பாதிப்புகளுக்கும் காரணமாகின்றது.

ஒரு மில்லியனுக்கு, 50ppm என்ற அளவில் காபனோர் ஒட்சைட் காற்றில் இருந்தால் அது பாதுகாப்பான நிலையாகும். 200 ppm இருந்தால் அந்தக் காற்றை 2-3 மணி நேரம் சுவாசிப்பவருக்கு தலையிடி ஆரம்பமாகும். 400 ppm இருக்கின்றபோது இந்த தலையிடி 1-2 மணிநேரத்திலேயே ஆரம்பமாகிவிடும். 800ppm இருக்கின்றபோது 45 நிமிடத்தில் வாந்தி ஏற்படும். இரண்டு மணிநேரத்தில் மரணம் நிகழலாம்.

## காபனோர் ஒட்சைட்டினால் ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளார் என்றால் என்ன செய்யலாம்?

உடனடியாக அவரை அந்த இடத்தில் இருந்து அப்புறப்படுத்தி வெளிக்காற்று படும் இடத்திற்கு கொண்டு செல்லவேண்டும். அதே சமயம் எந்தவித தாமதமும் இன்றி அவசர இலக்கமான 911 இலக்கத்திற்கு தகவல் கொடுக்க வேண்டும்.

வீட்டில் காபனோர் ஒட்சைட்டைடால் அபாயம் ஏற்படாமல் இருக்கு சில முன் கூட்டிய நடவடிக்கைகளை எடுப்பதுதான் சரியான வழியாக இருக்கும்.

காபனோர் ஒட்சைட்டை உருவாக்கக் கூடிய உபகரணங்களான Furnaces, water heaters என்பனவற்றை நல்ல நிலைமையில் இருக்கக் கூடியதாக பழுதுபார்த்துக் கொள்ள வேண்டும். தகுதிஉடைய ஒருவரைக் கொண்டு (Qualified technician) வருடாந்தம் இவற்றை inspect செய்து கொள்வது மிக நல்லது. காபனோர் ஒட்சைட் monitor வீட்டின் எல்லாத் தளத்திலும் பொருத்த வேண்டும். இதனால் காபனோர் ஒட்சைட்டின் அளவு வீட்டினுள் அதிகரிக்கத் தொடங்கியதுமே மணி (alarms) அடித்து நம்மை எச்சரிக்கை செய்து விடும்.




பூட்டிய காராஜ் இனுள் காரை இயங்கு நிலையில் வைத்திருக்கக் கூடாது. காரில் இருந்து பெருமளவு காபனோர் ஒட்சைட் உருவாகும். அண்மையில் ஒரு தாயும், மகனும் தமது வீட்டில் இறந்து போய் கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மகன் தனது காரின் இயந்திரத்தின் இயக்கத்தை நிறுத்தாது, integral garageல் நிறுத்தியிருந்தார். இந்தக் காரில் இருந்து வந்த காபனோர் ஒட்சைட்டினாலேயே இவர்கள் இருவரும் இறந்து போயிருந்தனர்.

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*


RAVI INCOME TAX SERVICE

- LAST 14 YEARS IN TAX SERVICES
- PERSONAL INCOME TAX
- CORPORATE INCOME TAX
- SMALL BUSINESS TAX
- GST/PST AND PAYROLL REMITTANCE
- E.FILE SERVICES
- YEAR ROUND SERVICES

MORE INFO PLEASE CALL
RAVI PARAMU
416-262-4176

HOMELIFE HIGHER STANDARDS

Ravi Paramu
Sales Representative
416•262•4176
rparamu@hotmail.com
www.raviparamu.com
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6



## யோகம் தரும் ஆரோக்கிய ரகசியம்

# வக்கிராசனம்

**N.T. கருணாகரன்**
- யோகா ஆசிரியர் -
ntkaruna@thaiveedu.com



**ஆரோக்கிய ரகசியம் - 8**

வக்கிரம் என்றால் துன்பம் என பொருள் படும். அவ்வாறு துன்பத்தை வெற்றிகொள் வதற்கு வக்கிராசனம் எவ்வாறு உதவும் என்றும் அதன் செய்முறை பற்றியும் காண்போம்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பது சான்றோர் வாக்கு. நாம் எவ்வளவு தான் பொருட் செல்வத்தை அடைந்து இருந்தாலும் உடல், மனம், ஐம்புலன்கள் புலன் உணர்வுகள் போன்றவற்றில் ஏதேனும் கோளாறு இருப்பின் வாழ்வில் எதையும் முழுமையாக அனுபவிக்க முடியாமல் போய்விடும். ஒரு மனிதன் பொருளாதார நிலையில் உயர்வடைவதற்கு பகீரத பிரயத்தனம் செய்ய வேண்டி இருக்கிறது. அவ்வாறு நல்ல உணவு, உறக்கம், இன்றி கடின வேலை செய்து கொண்டிருக்கும் போதே உங்கள் எதிர்கால ஆரோக்கிய வாழ்விலும் அக்கறை செலுத்த வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையும், உரிமையும் ஆகும்.

புலம் பெயர் மண்ணில் கடின உழைப்பால் முன் உணர்வு அடைந்த பல தமிழ் உறவுகள் பலரை சந்தித்த பின் ஓர் உண்மை புரிந்தது. அவர்களில் 80% மானவர்கள் நோயாளர்களாக இருக்கிறார்கள். இது அவர்களது அறியாமையால் ஏற்பட்டது.

இவ்வாறு வாழ்க்கையில் தன்நிறைவு அடைந்து வாழ்வை அனுபவிக்கும் வேளையில் நோய் வராமல் எம்மை வாழும்வரை ஆரோக்கியமாக வாழவைப்பதற்காகவே எமது முன்னோர்கள் தந்த அற்புத கலை தான் யோகக் கலையாகும். இக்கலையை பயிலும் ஒவ்வொருவரும் வாழும் வரை ஆரோக்யமெனும் செல்வத்துடன் வாழமுடியும் என்பது வெளிப்படை.

இவ்வுரையில் உணவுடன் சம்பந்தம் உடைய வயிற்றை சரியான முறையில் பராமரிக்கக் கூடிய வக்கிராசனத்தை பார்ப்போம்.

### வக்கிராசனம் செய்முறை:

வரிப்பின் மீது கால்களை நீட்டி அமர்ந்திருக்கவும் படத்தில் காட்டியபடி இடதுகால் நீட்டியபடியே இருக்க வலது காலை மடித்து இடது காலின் இடதுபுறம் வைக்கவும். இடது கையால் வலது முழங்காலை நெஞ்சுடன் அணைத்தபடி இறுகப் பிடித்திருக்கவும். இவ் ஆசன நிலையில் சாதாரண மூச்சுடன் (உள்-வெளி) 20 வினாடி தொடக்கம் 1 நிமிடம் வரை இருக்கலாம்.

பின்னர் ஆசன நிலையில் இருந்து விடுபட்டு நிமிடம் ஓய்வு எடுத்தபின் மீண்டும் மறுபக்கமாக இதை செய்யவும்.

**குறிப்பு:** வக்கிராசனம் வயிற்றின் உட்கருவிகளான இரைப்பை, ஈரல், மண்ணீரல், களையம், குடல்கள் போன்றவற்றை நேரடியாக பராமரிப்பதால் வயிறு காலியாக இருக்கும் போது காலையில் இப்பயிற்சியை செய்வது நன்மை தரும்.

கற்பிணிகள் மற்றும் வயிற்றில் சத்திர சிகிச்சை செய்திருப்போர் யோக நிபுணரின் உதவியுடன் பயில்வது நல்லது.





### வக்கிராசனம் பயன்கள்

- அதிக தொந்தி குறையும்
- நீரிழிவு நோய்க்கு மிகச் சிறந்த எதிராளி
- முதுகு தண்டு வடம் பலம் பெறும்
- வயிற்றின் உட்கருவிகள் அனைத்தும் நீண்ட காலம் சிறப்பாக செய்யப்பட ஊக்குவிக்கும்.
- நேரற்ற கருப்பை, மாத விடாயக் குறைபாடுகள் போன்றவற்றிற்கு சிறந்த தீர்வாகும்.
- எல்லாவற்றிற்கும் மேலாக தவறான உணவுப் பழக்கமே நோய்களுக்கு பிரதான காரணங்களில் ஒன்றாக இருப்பதனால் அதாவது உணவுடன் நெருக்கமான தொடர்புடைய வயிற்றை வக்கிராசனம் சரியான முறையில் பராமரித்து வாழ்வு வக்கிரம் அடையாது பாதுகாக்கும்.

### கேள்வி - பதில்

உங்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற கேள்வியும் எனது பதிலும்

**எனது மகளுக்கு இப்பொழுது ஏழு வயதாகிறது. மகளுக்கு 2 வயதில் நாம் கனடாவிற்கு வந்தோம். குளிர் காலத்தில் கடினமான (வீசிங்) முட்டிழுப்பால் மிகவும் சிரமப்படுகின்றா. மருந்து கொடுத்தால் சில நாட்களுக்கு கொஞ்சம் குணம் தெரிகிறது. இதற்கு யோகாசனத்தில் நிரந்தரத் தீர்வு கிட்டுமா?**

ரோசினி Scarborough

சில குழந்தைகளுக்கு முட்டு வியாதி பெரும் பாடாய் படுத்துகிறது. இதனால் பெரியவர்கள் மிகவும் வேதனையடையவேண்டியும் இருக்கிறது.

ஆனால், உங்களைப் போன்ற பெற்றோர்களின் தேடலால் நிரந்தர குணம் தரக்கூடிய யோகக் கலையை கண்டுணர்ந்து பெறவைக்க முடியும்.

வளர்ச்சிபருவத்தை சிறியவர்கள் கொண்டிருப்பதால் யோகாசனங்களை பயின்று வர இதில் இருந்து பூரண சுகம் பெறலாம் என்பது உறுதி. மற்றும் முட்டு வியாதியால் பலம் இழந்திருக்கும் நுரை ஈரலையும், வேகஸ் நரம்புகளையும் பலம்பெற வைக்கும் மிக அருமையான ஆசனங்களாக புறங்காசனம், சலபாசனம், விபரித கரணி, மச்சாசனம், நாடிசுத்தி போன்றவற்றை பயின்று வருவதுடன் 'குளிர் வந்தால் 'முட்டு' வரும்'' எனும் எண்ணப் பதிவையும் மாற்றக்கூடியவகையில் பெற்றோராகிய நீங்கள் செயற்பட்டால் வெற்றி நிச்சயம்.

வாசகர்களே உங்கள் கேள்விகளையும் எமக்கு அனுப்புங்கள் **Fax: 416 849 0594**
**E-mail: thaiveedu@gmail.com**

■ ■ ■

EXPERT
BUILDING INSPECTIONS LTD
"Dedicated to Expert, Honest & Independent Inspections"
Tel: 905 940 0811 Fax 905 940 6108
Toll Free 1 866 373 3315
- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging
www.expertinspector.com
- Tough and Thorough Inspections by University of Toronto educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of ASHI and CAHPI-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week
ASHI MEMBER
CAHPI Ontario


சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...
Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com
COLDWELL BANKER




# RAVI YOGA CENTER
## இரவி யோகப்பயிற்சி நிலையம்

138 SHOTING ROAD, SCARBOROUGH, ON.

www.raviyogacenter.com Email: raviyogacenter@gmail.com









| கிழமை | காலை நேரவகுப்புகள் | மாலைநேர வகுப்புகள் |
|---|---|---|
| ஞாயிறு | 8.00am-9.30am Yoga | 5.30pm-6.45pm Yoga |
| திங்கள் | 9.30am-10.45am Yoga | 7.00pm-8.00pm Yoga |
| செவ்வாய் | 9.30am-10.45am Yoga | 7.00pm-8.30pm Yoga |
| புதன் | 9.30am-10.45am Yoga | 7.00pm-8.30pm Yoga |
| வியாழன் | 9.30am-10.45am Yoga | 7.00pm-8.30pm Special yoga |
| வெள்ளி | 6.30am-7.45am Yoga | 5.30am-6.45pm kids Yoga |
| சனி | 8.00am-9.30am Yoga | 7.00am-8.30pm Special Yoga |

**இவ் வகுப்புகளில் பங்கு பற்றுவோர் நிச்சயம் அடையக் கூடிய பயன்கள்**

- உடல் எடை, தொந்தி குறையும்.
- உடல், மனம் இலேசாகவும் சக்திபடையதாகவும் இருக்கும்.
- மாணவர்களுக்கு கிரகிக்கும் ஆற்றல் ஞாபசக்தி அதிகமாகி கல்வியில் அதிக முன்னேற்றம் காண்பர்.
- வாழும் வரை ஆரோக்கியமாக வாழ முடியும்.
- எதிர்மறை எண்ணங்கள் மறைந்து தன்னம்பிக்கை வலுப்பெறும்.
- 100% நோய் எதிர்ப்பு சக்தியை பெறுவர்.
- கட்டுக்கோப்பான உடலமைப்பை பெறுவதுடன்
- இயற்கையாக அழகும் அதிகரிக்கும்.

**பொது ஆரோக்கிய வாழ்விற்கான யோகாசனப் பயிற்சி வகுப்புகள் வாரத்தில் ஆறு நாட்கள் நடைபெறுகின்றன.இதில் 5 வயது முதல் ஆண்கள், பெண்கள் என அனைவரும் மிகமிக இலகுவாக பயின்று பயனடையலாம்.**

**பிரத்தியேகமான தனிப்பட்ட யோகாசன வகுப்புகள்**
**இதில் தனியாகவோ, சிறு குழுக்களாகவோ உங்களுக்கு வசதியான நேரங்களில் எமது பயிற்சி நிலயத்தில்_யோகா வகுப்புகள் ஏற்பாடு செய்து கொள்ளலாம்.**

**யோகா சிகிச்சை**
**பின்வரும் நோய்களுக்கான யோக சிகிச்சைக்கான யோகா வகுப்புகள் மேற்குறிப்பிட்டது போல் தனியாகவும் ஏற்பாடு செய்து கொள்ளலாம்.**

**புதிய வகுப்புகளில் பதிவு செய்வதற்கு**


# Call: 843-5251

## N.T.Karunakaran D.N.Y.S.

**(Diploma in Nturopathy & Yoga Science) India**

அறியவில்லையானால் அறிந்துகொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்

# தாயக மண்ணிலும் கை கொடுக்கும் இலவச மருத்துவ காப்புறுதி திட்டம்



சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -
sivapunch@thaiveedu.com

கனடாவில் மாகாண அரசுகளினால் மருத்துவ காப்புறுதி திட்டத்தில் குறிப்பாக நம்மவர்கள் பலர் வசிக்கும் ஒன்ராறியோ மாகாணத்தில் இலவசமாக வழங்கும் மருத்துவ காப்புறுதி திட்டத்தில் இருந்து (OHIP Coverage) எத்தனை இலவச மருத்துவ சலுகைகள்? எத்தனை இலவச மருத்துவ வசதிகள்?

குடும்ப வைத்தியரை சந்தித்து ஆலோசனை, வழிகாட்டல்கள் பெறும் போது அதற்குரிய செலவுகளுக்கு இக் காப்புறுதித் திட்டம் கைகொடுத்து உதவுகிறது.

பரிசோதனைக் கூடங்களின் செலவுகளுக்கு இக் காப்புறுதித் திட்டம் கை கொடுக்கின்றது.

கனடாவில் வைத்தியசாலைகளில் ஏற்படும் அவசர சிகிச்சைகள், பாரிய சத்திர சிகிச்சைகளுக்கு இக் காப்புறுதித் திட்டம் கை கொடுக்கின்றது. பாரிய சத்திர சிகிச்சைகளுக்கு ஏனைய நாடுகளில் வாழ்பவருக்கு ஏற்படுவது போல ஏனைய பணத்தில் கொடுக்க வேண்டிய நிலமை ஏற்பட்டால், எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்.

**அது மட்டுமா? இங்கு இம் மாகாண அரசின் இலவச மருத்துவ காப்புறுதித் திட்டத்தில் தகைமை உள்ள ஒருவர் தாயக மண் உட்பட உலகில் எங்கு போய் நிற்கும்போதும், ஏற்படும் அவசர சிகிச்சை செலவுகளுக்கும் இத்திட்டம் கனடாவில் இருந்து கை கொடுக்கும் என்பதனை அறிந்து கொண்டீர்களா?**

ஏற்கனவே தாயக மண்ணில் போய் நிற்கும் போது ஏற்பட்ட அவசர சிகிச்சை செலவுகளை திரும்பி வந்த பின்பு கனடாவில் மீள பெற்றுக் கொண்டீர்களா? அவ்வாறு பெற வேண்டுமாயின் எப்படி அணுக வேண்டும்?

### ஒன்ராறியோ மாகாண அரசின் இலவச மருத்துவ காப்புறுதி திட்டத்தினை (OHIP Coverage) அனுபவிக்க தகுதியானவர்கள்

கனடாவில் பிரஜையாக, அல்லது நிரந்தர குடிவரவு வதியுரிமையுள்ளவராக அல்லது அகதி நிலை கோரும் உரிமை பெற்றவராக இருத்தல் வேண்டும்.

ஒன்ராறியோ மாகாணத்தினுள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். அதாவது ஒரு வருட காலத்தினுள் 153 நாட்கள் இம் மாகாணத்தில் வசித்து இருத்தல் வேண்டும்.

ஏனைய நாடுகளில் இருந்து கனடாவுக்கு வந்து தொழில் செய்பவராக இருந்தால் குறைந்தது ஆறு மாத காலத்திற்கேனும் கனடிய குடிவரவு பிரிவில் தொழில் விசா பெற்று ஒன்ராறியோ மாகாணத்தில் தொழில் செய்பவராக இருத்தல் வேண்டும்.

தொடர்ச்சியாக கனடாவில் ஆறு மாத காலத்திற்கு ஆத்மீக பணிபுரியும் ஏனைய நாட்டு மத குருமார்கள்

ஒன்ராறியோ மாகாணத்திற்கு புதிதாக குடியேறியவர்கள் அல்லது ஏற்கனவே மாகாணத்தில் வசித்து இவ் இலவச காப்புறுதி சலுகையினை அனுபவித்தவர்கள் ஏனைய நாட்டிற்கு போய் ஏழு மாதத்திற்கு பின்பு மாகாணத்திற்கு திரும்பி வந்தால் மூன்று மாத கால மாகாண வசிப்பின் பின்னரே இம் மருத்துவ திட்டத்தினை அனுபவிக்க தகுதியானவர் ஆவார்.

கனடாவில் உள்ள ஏனைய மாகாணத்தில் இருந்து வந்து ஒன்ராறியோ மாகாணத்தில் குடியேறியவர்களாக இருந்தால் மூன்றாம் மாதத்தின் முதலாம் திகதியில் இருந்து இம் மருத்துவ திட்டத்தினை அனுபவிக்கலாம். அதுவரை காலமும் ஏற்கனவே குடியிருந்த மாகாணத்தின் மருத்துவ திட்டத்தில் உள்ள சலுகைகளை ஒன்ராறியோ மாகாணத்திலும் தொடரலாம்.

### தாயக மண்ணில் அல்லது ஏனைய நாடுகளில் போய் நிற்கும் காலங்களில் சிகிச்சைகளுக்காக செலவழித்த பணத்தினை ஒன்ராறியோ மருத்துவ காப்புறுதி திட்டத்திலிருந்து (OHIP) மீள் பெறுதல்

கனடாவில் நாம் வசிக்கும் ஒன்ராறியோ மாகாணத்தினை விட்டு எங்கள் தாயகத்திற்கோ அல்லது உலகில் எந்த நாட்டில் போய் நிற்கும்போதும் அங்கு எங்களுக்கு மருத்துவ சிகிச்சைகளின் போது ஏற்படுகின்ற செலவுகளை, மீண்டும் நாம் கனடாவுக்கு திரும்பி வந்து சேர்ந்ததும், மாகாண அரசின் எங்களுக்கு உள்ள இலவச மருத்துவ காப்புறுதி திட்டத்தில் இருந்து மீள பெறலாம்.

அது எப்படி? அதுவே இங்குள்ள கேள்வி? ஆனால் இப் பணத்தினை மீள பெறுதல் என்பது ஏராளமான நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டதாகும். அவை யாவன:

இன்னொரு நாட்டில் நிற்கும் போது அந் நாட்டில் நின்ற காலத்தில் கட்டாயம் சிகிச்சை செய்ய வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் உருவாகியிருத்தல் வேண்டும். அதாவது செய்யப்பட்ட சிகிச்சை என்பது மோசமானதாக அல்லது எதிர்பாராத நிலையில் உருவாகி (விபத்து காயங்களைக் குறிப்பிடலாம்). உடனடி சிகிச்சை தேவை என்ற நிலையில் ஏற்பட்ட செலவாக இருத்தல் வேண்டும்.

ஆனால் கனடாவினை விட்டு புறப்பட முன்னரே ஒரு நோய் அல்லது உடல் காயம் ஒன்று உருவாகியிருந்து, அது போய் நின்ற நாட்டில் தீவிரமான மோசமான நிலையில் பாதிப்புகளை உருவாக்கி மேற்கொண்ட சிகிச்சை செலவுகளையே மீள பெறலாம். மறுதலையாக சொல்ல போனால் இந்த மாதிரியாக கனடாவினை விட்டு புறப்பட முன்பு உருவான ஒரு நோய், அல்லது உடல் காயம் போய் நின்ற நாட்டில் கடுமையான பாதிப்பினை கொடுக்காத நிலையில் சிகிச்சை பெற்று இருந்தால் அச் செலவு பணத்தினை மீளப் பெற முடியாது.



உதாரணமாக இருதய நோய் (Heart Attack) ன்றுக்கு கனடாவில் சிகிச்சை பெற்று வரும் ஒருவர் அதே சிகிச்சையினை இன்னொரு நாட்டில் போய் நிற்கும்போது தொடர்ந்திருந்தால், அந்த செலவினை கனடாவில் மீள பெற முடியாது. ஆனால் இவருக்கு ஏற்கனவே இருந்து 'இருதய நோய்' என்பது மோசமாகி, 'குருதி சுற்றோட்ட பக்க வழி பாதை மாற்றும் சத்திர சிகிச்சை' (By pass surgery) செய்ய வேண்டிய மோசமான ஒரு நிலைமை ஏற்பட்டால் அதற்காக செலவழித்த தொகையினை மீள பெறலாம்.

பெற்ற சிகிச்சைகள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மனையில் அரச லைசென்ஸ் பெற்ற மருத்துவரிடம் சிகிச்சை பெற்று இருத்தல் வேண்டும். (நம் நாடுகளில் உள்ள நாட்டு வைத்தியர்களிடம் பெற்ற சிகிச்சை செலவுகளை இங்கு மீள பெற முடியாது)

செய்யப்பட்ட சிகிச்சைகள் என்பது ஒன்ராறியோ மாகாண மருத்துவ காப்புறுதி திட்டங்களில் அங்கீகரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். (அதாவது குழந்தைப் பேறுக்காக இந்தியாவில் போய் நின்று செய்யும் சிகிச்சைகள், முக சீரமைப்பு சிகிச்சைகள் போன்றவற்றிற்கு செய்யும் செலவுகள் மீள பெறமுடியாது. ஏனெனில் இச் சிகிச்சைகளுக்கான செலவுகள் ஒன்ராறியோ மாகாணத்திலும் அங்கு குறிக்கப்படாதவை ஆகும்).

நோயாளிக்கு ஏனைய நாடுகளில் ஏற்படும் அம்புலன்ஸ் செலவுகள், நோயாளியின் போக்குவரத்துக்குரிய செலவுகள், மருந்து செலவுகள் போன்றவற்றிற்காக உருவாகிய செலவுகளை இங்கு மீள பெற முடியாது.

கனடாவினை விட்டு ஏனைய நாட்டில் போய் நிற்கும் முதல் ஒரு வருடத்தில் வரும் முதல் 212 நாட்களுக்குள் உருவாகும் மருத்துவ செலவுகளை மட்டுமே மீள் பெறலாம். அதற்கு மேல் தொடர்ந்து நிற்கும் காலங்களில் உருவாகும் செலவுகள் இத்திட்டத்தில் இருந்து மீள பெற முடியாது.

கல்வி ஒன்றினை தொடர்வதற்காக, அல்லது தொழில் காரணமாக, அல்லது மத சம்பந்தமான வேலை காரணமாக நிற்க வேண்டி ஏற்பட்டால் மட்டும் சில விதி விலக்குகள் உண்டு.

**தகவல் தொடர் - 21**

(இவ்வாறு மேலதிகமாக அல்லது மாகாண அரசின் இலவச மருத்துவ காப்புறுதி திட்டத்தினுள் அடங்காத மேலதிக செலவுகள் ஏற்படும் என கருதினால் பிரயாணம் செய்யும் போதே பிரத்தியேகமான பிரயாணிகள் காப்புறுதி ஒப்பந்தம் செய்து கொண்டு போவது சிறந்தது).

அதிலும் ஒரு நாளுக்கு ஏற்பட்ட செலவகளில் ஆக கூடுதலாக $400 வரையே செலவுகளை கனடாவில் மீள் பெறலாம்.

"Out of Province / Country claim submission form" என ஆங்கிலத்தில் குறிப்பிடப் படும் விண்ணப்ப படிவத்தினை இங்குள்ள அரச காப்புறுதி மருத்துவ அலுவலகத்தில் இருந்து நேரடியாக பெற்றோ அல்லது மின் கணனி தகவல் மையத்தில் இருந்து பதிவு இறக்கம் செய்தோ பூரணமாக நிரப்பி அத்துடன் சேர்த்து சிகிச்சை விபர அறிக்கைகள், செலவழித்த பண ரசீதுகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

இவ் விண்ணப்ப படிவத்தில்

- நோயாளியின் பெயர் விபரம், விலாசம் மருத்துவ காப்புறுதி இலக்கம்
- ஒன்ராறியோ மாகாணத்தினை விட்டு புறப்பட்ட நாள், திரும்பி வந்த நாள்
- சிகிச்சை பெற்ற நாடு, செலுத்தப்பட்ட நாணயத்தின் பெயர், தொகை, கனடா நாணயத்தில் அதன் மாற்றீட்டு பெறுமதி
- சிகிச்சை தொடர்பான தெளிவான விபரங்கள், வைத்தியசாலையில் தங்கியிருந்தால் அது பற்றிய விபரங்கள்
- நோய், சிகிச்சை பற்றிய விபரங்கள், ஆதாரங்கள் வேறு மொழியில் இருந்தாலும் பிரச்சனையில்லை. $1000க்கு உட்பட்ட செலவு எனில் சாதாரணமாக எவரும் சிரமம் ஏதும் இல்லாது மொழி பெயர்த்து விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கலாம்.
- $1000க்கு மேற்பட்ட செலவாக இருந்தால் கனடாவின் லைசென்ஸ் மொழி பெயர்ப்பாளரின் உதவியுடன் மொழி பெயர்க்கப்பட்டு, அத்தாட்சிப்படுத்தப்பட்டு பத்திரங்கள் யாவும் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
- ஒன்ராறியோ மாகாணத்தினுள் ஒவ்வொரு மருத்துவ செலவுகளுக்கும், சிகிச்சைகளுக்கும் குறிப்பிடப்பட்ட ஒரு தொகை வரையே கொடுப்பனவு இருக்கும். அதன் அடிப்படையில், ஒரு நாளுக்கு $400க்கு மேற்படாத நிலைமையிலேயே செலவுகளை மீள் பெறலாம்.

### இங்கு தேவையான மிகவும் முக்கியமான ஆதாரம்

- திரும்பி வரும்போது, அங்கு பெற்ற அவசர சிகிச்சை பற்றிய அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நிறுவனங்களின் அறிக்கைகள்
- செலவழிக்கப்பட்ட தொகைகளை நிரூபிக்கும் ரசீதுகள்
- இங்குள்ள விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தால் போதும்
- செலவழித்த பணம் காசோலையாக வீடு வந்து சேரும்.
- www.health.gov.on.ca என்னும் மின் கணனி தகவல் மையத்தினுள் போய் மேலதிக தகவல்களை பெறலாம்.

■ ■ ■

காப்புறுதி சம்பந்தமான
தேவைகளுக்கும்
ஆலோசனைகளுக்கும்
சிவ.பஞ்சலிங்கம்
B. Com,
Licensed Insurance Broker
416.321.0999

# HONESTY & PROFESSIONAL EXPERIENCE TO SERVE YOUR REAL ESTATE NEEDS

## Residential and Commercial Buying / Selling & Leasing



# Raja V.S. Rajagopal

Sales Representative

**Dir : 416.727.8647**

Email : sinnarajagopal@hotmail.com

## மோட்கேஜ் வசதிகளும் செய்து தரப்படும்



9th Lane / 16th Ave, 4 BR, 3 WR



Morningside & Sheppard
3 Bed Rooms, 2 Washrooms,




Medowvale & Sheppard
3+1 Bed Rooms, 2 Wash Rooms



Duffren & Eglinton
$5,600 Rental Income Commercail Sale



Morningside & Nightstar
3+1 Bed Rooms, 4 Washrooms,



Warden & Finch
2 Bed Rooms, 1 Washrooms,




Finch & Markham
3 Bed Rooms, 2 Wash Rooms
Finished Basement



Midland & Lawrence
1+1 Bed Room, Low Maintenance



Middlefield & Finch
2+1 Bed Rooms, 1 Washrooms,



Victoria Pk & Eglinton
2 Bed Rooms, 2 Washrooms,

**Total Selling Commission As low as 3%***

(நேரடியாக தொடர்பு கொள்பவர்களுக்கு மாத்திரமே)

Apex 416-297-0707

HOMELIFE HIGHER STANDARDS

## HomeLife/Future Realty Inc.,

**Brokerage***

262 Markham Road, Scarborough, Ontario M1J 3C5

**Bus.: 416.264.0101 Fax : 416.261.1519**

*Independently Owned and Operated, REALTOR

MLS MULTIPLE LISTING SERVICE



☑ Legal Fee

☑ Home Inspection

Our gift to you on closing to use as you wish*

(நேரடியாக தொடர்பு கொள்பவர்களுக்கு மாத்திரமே)

* some conditions apply

# குழந்தைகளை அச்சுறுத்தும் அச்ச உணர்வு

சிவவதனி
பிரபாகரன்
vathani@thaiveedu.com



> “ இபூச்சிக்குப் பயம், பாம்புக்குப் பயம் என ஆரம்பித்து இருட்டுக்குப் பயம், மனிதர்க்கு பயம் என எல்லாவற்றையும் காட்டி பயமுறுத்தும் பெற்றோர் தம் பிள்ளைகளின் உளவியல் இதனால் பாதிப்புறுவதை உணர்வதில்லை. ”

குழந்தைகள் தெய்வத்திற்கு சமமானவர்கள். அவர்கள் வெற்றுத் தாள்களுக்குச் சமானமாகவே வையகத்தில் பிறக்கின்றனர். பின் உலகம்தான் சுவர்களை செதுக்குகின்றது. களிமண்ணைப் பிசைந்து வேண்டிய உருக்கொடுத்து பாத்திரமாக்குவது போல் நல்ல பாத்திரமாக அவர்களை வடிவமைக்கும் பெரும் பொறுப்பு பெற்றோருக்கு உள்ளது.

‘அஞ்சுவது அஞ்சாமை பேதமை’ என்றார் வள்ளுவர். அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சாது விடுவது ஆபத்தை வரவழைக்கும். ஆனால் சில சிறார்கள் எதற்கெடுத்தாலும் மிதமிஞ்சி அச்சப்படுவதைக் காணலாம். இது ஒரு மனோநிலைப் பாதிப்பின் விளைவாகும்.

‘சிக்மண்ட் பிராய்டு’ என்ற உளவியலாளர் அச்சம் பற்றிக் கூறுகையில் ஆழ்மனதில் பதிந்திருக்கும் விரும்பத்தகாத அல்லது முரண்பாடான எண்ணத்தின் வெளிப்பாடே பயமாக வெளிவருகின்றது என்கின்றார்.

மனதில் அச்சம் எழுகையில் உடலிலும் பலவிதமான இரசாயன மாற்றங்கள் நிகழ்கின்றன. நாக்கு வறள்தல், உடல் வியர்த்தல், கைகால் நடுங்குதல், இதயம் படபடத்து வேகமாக அடித்தல், தலை கிறுகிறுத்தல், பேச்சின்றி மூச்சடங்கிப் போதல் என பல தரப்பட்ட உடல் மாற்றங்கள் பயப்படும் பொழுது நிகழ்கின்றன.

அச்சவுணர்வு ஏதேனும் ஒன்றில் தோன்றுவதற்கு அது குறித்த பயமுறுத்தல் ஆரம்பமாகத் திகழ்கின்றது. பெரியோர் பிள்ளைகளைப் ‘பேய்’, ‘பூதம்’, ‘பிசாசு’, ‘பூச்சாண்டி’, ‘பிள்ளை பிடிகாரன்’ என எதையெதையோ சொல்லி குழந்தைகளைப் பயமுறுத்துகின்றார்கள். சில சமயங்களில் ‘கறுப்புப் பூனை’, ‘மீசைக்காரன்’ இப்படி கண்ட கண்டதன் மேலெல்லாம் பயத்தை உருவாக்குவார்கள். இன்னமும் சில அம்மாக்கள் தம் குழந்தைகளை ‘அப்பா வந்து அடிக்கப்போகிறார்’ என பயமுறுத்துவதையும் காண்கின்றோம்.

பூச்சிக்குப் பயம், பாம்புக்குப் பயம் என ஆரம்பித்து இருட்டுக்குப் பயம், மனிதர்க்கு பயம் என எல்லாவற்றையும் காட்டி பயமுறுத்தும் பெற்றோர் தம் பிள்ளைகளின் உளவியல் இதனால் பாதிப்புறுவதை உணர்வதில்லை.

மார்க்ஸ் என்ற அறிஞர் பயத்திற்கு இவ்வாறாக விளக்கம் தருகின்றார்.

‘இருக்கும் சூழ்நிலையை விடுத்து வேறுபட்ட சூழலை விபரீதமாக மிகைப்படுத்தி கற்பனை பண்ணிப் பார்க்கும் பயங்கரச் சிந்தை’

‘வார்த்தைகளால் விபரிக்க முடியாது போகும் பயங்கரம் பற்றிய சிந்தை’

‘கட்டுப்பாட்டை மீறி வெடிக்கும் பயம்’

‘உண்மையிலேயே பயப்படத்தக்க சூழ்நிலை’

இந்த நான்கு அடிப்படைக் காரணிகளின் தாக்கத்தால் தான் பயமானது வெளிப்படுகின்றது என்பது அறிஞர் மார்க்ஸின் கருத்தாகும்.

மில்லர் என்ற அறிஞர் இதனை மேலும் இலகுபடுத்தி பின்வருமாறு கூறுகின்றார். அதாவது அவர் ‘தன் உடலுக்கு ஏதாவது ஊறு ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தில் தான் பயமே ஏற்படுகின்றது’ என்கிறார்.

போரினாலும் இயற்கைச் சீற்றங்களாலும் பலியானவர்களை கண்முன்னே காண்கையிலே குழந்தைகளின் மனதில் பீதி ஏற்படுவது இயல்பேயாகும். இவ்வண்ணம் பயம் தோன்ற ஆயிரமாயிரம் காரணங்களை விஞ்ஞானம் கூறுகின்றது. ஆனால் தேவையற்ற பயத்தை விரட்டுவதற்கு கூறப்படும் மருத்துவ சிகிச்சை முறைகள் வலுவற்றவையாகவே தோன்றுகின்றன. குழந்தைகளுக்கு ஏற்படும் உளவியல் பாதிப்புகளிற்கு தகுந்த முறையில் நடைமுறை சிகிச்சை அளிக்க பெற்றோரை விட சிறந்தவர்கள் வேறு எவரும் இல்லை. குழந்தைகளுள் தோன்றும் விபரீத எண்ணங்களையும் பயத்தையும் விரட்டுவது பெற்றோர் கையிலேயே உள்ளது.

“புற உலகமே எம் அகத்தில் தோன்றும் பாதிப்புக்களுக்கு காரணம்” என்பது அறிஞர் ஜான் டபிள்யூ வாட்சன் என்ற மேதையின் கூற்று.

பயமானது அடிப்படையில் இரு காரணங்களால் நோயாக வெளிப்படுகின்றது.

- அறிவுசார் பாதிப்புக்களால் உருவாவது
- உடலியல் சம்பந்தமாக உருவாவது

சிறுவயது பாதிப்புக்களால் தோன்றுவது அறிவு சார்ந்த பயமாகும். அதிர்ச்சி தரும் எண்ணத் தொடர்கள் மூலம் வெளிப்படுகின்றவொன்றாக இத்தகைய பயம் உள்ளது.

உடலியல் சம்பந்தமாக தோன்றும் பயமானது உடலில் தோன்றும் இரசாயன மாற்றத்தின் வெளிப்பாடுகளாகும். மூளைக்கு அடியிலுள்ள Hypo – Thalamous என்ற சுரப்பியிலிருந்து அதிரினலின் எனப்படும் ஓமோன் சுரந்து அச்சத்தை உண்டு பண்ணுகின்றது. அத்துடன் அச்சத்தினால் ஏற்படும் உடல் இரசாயன மாற்றங்களையும் தோற்றுவிக்கின்றது. இதனை இச்சுரப்பினைக் குறைக்கச் செய்யும் மருந்தினால் கட்டுப்படுத்த முடியும்.

அறிவு, உடல் சார்ந்த அச்ச வெளிப்பாடுகளை விட குடும்பப் பிரச்சனைகளாலும் குறிப்பாக பெற்றோரின் நடவடிக்கைகளாலும் குழந்தைகளுள் பய உணர்வு தோன்றுகின்றது. இதனை புறச்சூழலினால் ஏற்படும் பாதிப்புக்களாக ஆராய முடியும்.

அனுதினமும் சண்டையிடும் பெற்றோரைப் பார்த்து அஞ்சுகின்றன குழந்தைகள். எல்லை மீறிய கோபத்தால் ஒருவரை ஒருவர் வார்த்தைகளால் கடித்துக் குதறும் பெற்றோரை பீதியுடன் பார்த்து மிரள்கின்றது குழந்தை. குடும்ப வன்முறையின் உச்சக் கட்டமாக உடல்ரீதியாக அடித்துத் துன்புறுத்தும் வன்முறைகளை காணும்போது உளம் சிதைவுக்குள்ளாகின்றது சின்னஞ்சிறிய உள்ளத்தில்.

தாம் பெற்ற சேயின் உளவியல் பாதிப்புக்களைக் கருத்தில் கொள்ளாமல் அச்சின்னஞ் சிறிய சேயின் முன்னால் சண்டையிடும் பெற்றோர்கள் அச் சேயைப் பெற்ற கடனைத் தட்டிக் கழிக்கின்றனர் என்றே கூற வேண்டும். பிள்ளைகளைப் பெறுவது சுலபம். ஆனால் பெற்ற சேயை நற்குடிமகனாக வளர்த்து ஆளாக்குவது பெற்றோரின் முக்கிய பொறுப்பாகும். இது கடினமான பயணம். எனினும் தலையாய கடனாகும்.

கணவன், மனைவி ஒருவரை ஒருவர் மதிக்கத் தவறுவாராயின் அவர்களின் சேயும் அவர்களை மதிக்காது வளர்கின்றது. அத்துடன் அடுத்தவரை மதிக்கும் பண்பினை இழந்து உருப்படாமல் போகின்றது.

சிலர் பிள்ளைகள் முன் விபரீதமான சம்பவங்களை செய்திகளை மிகச் சாதாரணமாக விபரித்துப் பேசுவர். இது தவறு. சிலர் பிள்ளைகள் முன் வன்முறையை காண்பிக்கும் சினிமாப் படங்கள், தொலைக் காட்சி நாடகங்களைப் பார்ப்பர். இதுவும் பெருந் தவறாகும்.

சின்னத்திரை தொடர்களுள் தம் நாளையும் பொழுதையும் வீணடிக்கும் தாய்மார் தம் சிறுவரின் எதிர்காலத்தையே இருளில் மூழ்க வைக்கின்றனர் எனலாம். இன்றைய தமிழ் சின்னத் திரை நாடகங்கள் பல வன்முறையையும் இழிவான சிந்தனைகளையும் போதிப்பதைக் காணலாம்.


குழந்தைகளுடன் தொலைக்காட்சி பார்க்கும் வேளைகளில் ஆக்கபூர்வமான மனதை மகிழ்விக்கும் அறிவியல் சார் நிகழ்ச்சிகளைப் பார்க்க வேண்டும்.

இதென்ன சின்னச் சின்ன விடயம் தானே எனும் பாராமுகமான சிறு சிறு செயல்களே குழந்தைகளில் பெரிய பெரிய பாதிப்புக்களை உருவாக்குகின்றன என்பதனை பெற்றோர் பலசமயங்களில் உணர்வதில்லை.

82ம் பக்கம் பார்க்க...

தமிழ் வகுப்பு

(McCowan & Dennison சந்திப்பிற்கருகில்)



இளமழலை முதல் தரம் 12 வரையான மாணவர்களுக்கு பல வருடகாலம் பட்டறிவுள்ள ஆசிரியையால் தமிழ் கற்பிக்கப்படுகின்றது.

- உங்கள் பிள்ளைகளும் தமிழில் பேசி, எழுதி, வாசித்து தேர்ச்சி பெற வேண்டுமா?
- பேச்சுப் போட்டிகள், சிறுவர் நாடகங்கள், பட்டிமன்றங்கள், சிறுவர் அபிநயப் பாடல்கள் போன்ற கலைநிகழ்ச்சிகளில் பங்குபற்றி தமது திறன்களை வெளிப்படுத்த வேண்டுமா?
- தொலைக்காட்சி, வானொலி சிறுவர் நிகழ்ச்சிகளில் பங்கேற்று தமது திறன்களை ஆளுமையுடன் வெளிக்கொண்டுவர வேண்டுமா?

அழையுங்கள்: 905-554-2496

“தமிழின் மேன்மை அதன் தொன்மையில் இல்லை அதன் தொடர்ச்சியில் உள்ளது.”

நாளைய எமது தமிழ்ச் சந்ததியினர் தமிழ் பேசும் நல்ல தமிழ்ப் பிள்ளைகளாக வளர்வது எமது கரங்களிலேயே உள்ளது.

# Just make a phone call

## A Bright Financial Future is waiting for you!

## NOW Hiring! Agents.

Free Class

- Best Compensation in the industry
- Step-by-step Personal Training
- Guartanteed Leads Provided

You can make **50 to 100** Thousands dollars

## Join hands with Canada's #1 RBC Life Broker (2006-2007)

A state-of-the-art web site, that will make you
• More Productive • More Efficient • More Money

ROYAL BROKERS
Tel: 416•315•8100

பல்வேறு நிறுவனங்களிடமிருந்து குறைந்த விலையில் உங்கள் காப்புறுதியை தெரிவு செய்துகொள்ள

**மருத்துவ பரிசோதனையற்ற ஆயுட் காப்புறுதி**

Insuring your life. Ensuring your trust.



Siva Kandiah
*Managing General Agent, RBC*
*416•992•1259*

Canada
Top Life Insurance
Sales Award Winner
2006-2007
RBC Insurance

**மிகக் குறைந்த கட்டணமாக $15ல் இருந்து!**

வயோதிபர்களுக்கு
அதிகுறைந்த விலையில் காப்புறுதி

**100% Cash Back**
**Mortgage Insurance**

சிறுவர்களுக்கான
சிறந்த RESP திட்டங்கள்

ROYAL BROKERS
Corporation

80 Nashdene Ave., Unit B26 Toronto ON. M1V 5E4
Tel: 416•298•4722 Fax: 416•298•4664

RBC Insurance
Managing General Agent
Canada Life

• Life Insurance/ Income Protection • Disability/ Critical Illness • Mortgage & Mortgage Insurance • Registered Education Saving Plans
• Travel Coverage • RRSP's, Annuities, RIF's GIS's • Tax Sheltered Savings & Investments

# குழந்தைகளை அச்சுறுத்தும்...

80ம் பக்கத் தொடர்ச்சி...

## குழந்தைகளுள் உருவாகும் பயங்களை எவ்வாறு போக்கலாம்?

குழந்தைகளுடன் மனம் விட்டுப் பேசி அவர் களின் மனதிலிருந்து பயத்தைப் போக்க வேண்டும். விசாரணைகளூடாகவும் விளக்கங்களூடாகவும் மனதை தெளிவுபடுத்த வேண்டும்.

சில தாய்மார் குழந்தைகளை தமது உடற் சூட்டிலேயே அணைத்து படுக்க வைப்பர். குழந்தைகள் இயன்றளவு தனியே படுப்பது அவர்களது தன்னம்பிக்கைக்கு நன்று.

தன் பிள்ளைகளோடு வகுப்பறை வரை சென்று, படிக்கும் போதும் அவர்களை பார்த்துக் கொண்டு இருக்கும் பெற்றோர் கள் எம்மில் பலர் உள்ளனர். இது தவறு. பெற்றோர்கள் பிள்ளைகளை சுய ஆளுமையுள்ளவர்களாக வளர்க்க வேண்டு மானால் சில சில இடங்களில் அவர்களை தத்தமது பொறுப்பேற்று தனித்து நடக்க விடுவது அவசியம்.

பெற்றோர் தொலைவில் இருந்து உன்னிப்பாக கண்காணிப்பது அவசியம். ஆனால் பெற்றோர் தம்மோடு உள்ளார்கள் என்ற பாதுகாப்பு உணர்விலிருந்து சில சில பொழுதுகளேனும் குழந்தைகள் தனித்து விடப்படுவது அவசியமாகும். அதற்காக பிள்ளைகளைக் கைவிடுவது எனப் பொருஎல்ல. ஒரு சில வேளைகளிலேனும் அவர்கள் பார்வையில் படாமல் அவர்களை கண்காணித்தல் வேண்டும்.

அன்புகூட அளவுக்கு மிஞ்சுகையில் நஞ்சாகின்றது என்பதை எம் பெற்றோர் பலர் மறந்து விடுகின்றனர். தண்ணீரில் தனித்து விடப்படும் மீன் குஞ்சு தான் நீந்தக் கற்றுக் கொள்கின்றது.

பிள்ளைகள் படித்து ஆளாகினால் மட்டும் போதாது. தம் காலில் தாம் நிற்கும் தைரியமுள்ளவர்களாக இருக்க வேண்டும். துணிவும் தன்னம்பிக்கையும் இருந்தால் அக் குழந்தை, வாழ்வில் எத்தகைய சோதனைகளையும் நின்று எதிர்த்து வென்று சாதனை படைக்கும்.

பயத்தைப் போக்கும் வழிகளுள் எதிர்மறையாகப் பேசி பயத்தைக் களைவது ஒரு வழி முறையாகும். படிப்படியாக பயத்திற்கு எதிராக செயற்படும் இம்முறையை Counter Condition method என்பர். பயமுள்ள சூழலுக்கு வர அஞ்சும் குழந்தையை படிப் படியாக மெதுவாகப் பேசிப் பேசியே அந்தச் சூழலுக்கு கூட்டி வந்து அதில் பயப்பட எதுவுமேயில்லை என புரிய வைக்கும் முறை இதுவாகும். இது ஒரு நடைமுறை சிகிச்சை யாகும்.

மேலைத்தேய நாடுகளில் உளவியல் மருத்துவ நிபுணர்கள் இத்தகைய சிகிச்சையின் போது நோயாளிகளுடன் இத்தகைய பயம் தரும் சூழலுக்கு நேரடியாகவே சென்று சிகிச்சை செய்வதனைக் காணலாம்.

சிறுவர்கள் பெரும்பாலும் ஒன்றிற்கு மேலான விடயங்களில் பயம் கொண்டிருப்பார்கள். எத்தகைய பயத்தையும் இளமையில் களைவது சுலபம். சிறுவர்களுள் உள்ள பயங்களைப் பட்டியலிட்டு அதன் அளவினடிப்படையில் அதிக பயமுள்ள விடயத்திலிருந்து குறைந்த பயம் கொண்ட விடயம் வரை வரிசைப்படுத்தி அவற்றை பயமான விடயங்களுக்கு மாற்றுக் கருத்துக்களை கூறி பயம் கொண்ட விடயங்களினை விருப்புள்ள விடயங்களாக மாற்றுவது ஒரு வகையான சிகிச்சை முறையாகும். இதனை 'ஹைரார்க்கி' என்பார்கள்.

'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்' என்பர். எத்தகைய மனப்பயத்தையும் மாற்றுக் கருத்தூடான பலமூட்டலூடாகப் போக்க முடியும். தொடர்ச்சியான முயற்சிகளினூடாக நிச்சயம் இதில் வெற்றி காணலாம். 'எறும்பூரக் கற்குழியும்' என்பதற்கிணைய முயற்சி கள் ஒருபோதுமே தோற்பதில்லை.

இங்ஙனம் அடிக்கடி பலப்படுத்தும் கருத்துக் களைச் சொல்லிச் சொல்லி பயத்தைப் போக்கும் முறையை 'ப்ராம்ப்ட்' முறை என்பர்.

எனக்கு தெரிந்த ஒரு மாணவிக்கு அவளது கணக்குப் பாட ஆசிரியர் ஒருமுறை மிகக் கடுமையாகப் பேசி வகுப்பை விட்டே வெளியேற்றிய காரணத்தால் கணிதப் பாடமே வெறுப்பாகிப் போனது. ஏனைய பாடங்க ளில் அதிக புள்ளி எடுக்கும் அவள் கணித பாடமென்றால் அஞ்சி நடுங்குவாள். மிகக் குறைந்த புள்ளிகள் எடுப்பதற்கும் அப்பால் கணிதத்தின் மீதே வெறுப்பு கொள்ளலானாள்.

அவளை நான் சந்தித்த போது அவள் பெற்றோர் என்னிடம் விடயத்தை விளக்கினர். நான் சில கணித விளையாட்டுக்களை அவளிற்கு செய்து காட்டினேன். சில வாய்ப் பாடுகளை கணப்பொழுதில் சொல்வதற்கான யுக்திகளையும் சொல்லிக் கொடுத்தேன். அவளின் பாட விதானம் சார்ந்த கணித யுக்திகளை இலகுபடுத்தி செய்து விளையாட்டு விளையாட்டாக செய்து காட்டிய போது அதனை தன் வகுப்பு நண்பிகளுக்கு செய்து காட்டும் ஆர்வம் அவளுள் எழுந்தது. கணிதம் கற்பதை தன் விளையாட்டாக்கிக் கொண்ட அவள் இப்பொழுது கணித பாடத்தில் பெருவிருப்புள்ள மாணவியாகவும் அதிக புள்ளி வாங்கும் மாணவியாகவும் திகழ்கின்றாள்.

இத்தகைய அச்சம் தரும் விடயத்தினை அதன் மீது விருப்பம் கொண்டு நாடும் விடயமாக மாற்றும் முறையினை 'Success in Approximation' என்பர்.

சில குழந்தைகள் யாரைக் கண்டாலும் பயப்படுவார்கள். தாயின் பின்னால் ஒளிந்து தாயைக் கட்டிப் பிடித்து அழுவார்கள். வீட்டுக்கு வரும் விருந்தினர்கள் இந்த விடயம் தெரியாமல் குழந்தைகளை ஆசை யோடு சட்டென்று தூக்கி விடுவார்கள். அவ் வளவு தான்! உலகமே பிரண்டது போல் அதிர்ச்சியினால் குழந்தை ஊரைக் கூட்டி அழும். தூக்கிக் கொஞ்சியவர்கள் என்ன நடந்தது ஏன் குழந்தை அழுகின்றது எனப் புரியாத அதிர்ச்சியில் தடுமாறுவார்கள்.

இத்தகைய பிள்ளைகளை ஒருபோதுமே திடுமென தூக்கக் கூடாது. தூரத்திலிருந்து சிரித்து விளையாட்டு காட்டி குழந்தையை இயல்பு நிலைக்கு கொண்டு வரும் வரை குழந்தைக்கு அருகிலேயே போகக் கூடாது. இத்தகைய குழந்தைகளுக்குள் இருக்கும் இறுக்கம் ஒருவகையான அச்சத்தின் வெளிப்பாடேயாகும். அந்த இறுக்கம் தளர்ந்து முறுவலித்துக் கொண்டு குழந்தை தானாகவே அருகில் வரும் வரை நாம் பொறுமையாக இருக்க வேண்டும்.

தாயோடு ஒட்டிக் கொண்டிருக்கும் குழந்தை களை படிப்படியாக தனித்துப் பழக்கி எடுப்பது அவசியம். தனிமையுற்று வாழும் புலம் பெயர் சூழலில் வேறு முகம் தெரியாமல் தாயே உலகமென வாழும் பல சிறார்கள் பாடசாலைக்குச் செல்லும் போது வெளி உலகில் தனித்து விடப்படவதாக எண்ணி அஞ்சி அழுது ஆர்ப்பாட்டம் செய்வதை காண்கின்றோம். இவற்றிற்கெல்லாம் காரணம் எம் வளர்ப்பு முறையேயாகும். குழந்தைகள் பாடசாலை செல்லு முன்பாகவே பல முகங்களைப் பார்ப்பதும் பலரோடு பழக வாய்ப்பளிப்பதும் அவசியமாகும். தமக்கென உற்றார் உறவினர் நண்பர்கள் இல்லாதோரும் இங்கே குழந்தைகளுக்கென உள்ள 'Early Years Centre', 'Babies Best Start' போன்ற வகுப்புகளுக்கு அழைத்துச் செல்வது அவசியமாகும்.

மாணவப்பருவத்தில் உள்ள பயச்சிந்தை குழந்தையின் கல்வியினைப் வெகுவாகப் பாதிக்கின்றது. இப் பருவமுள்ள பிள்ளையொன்றுக்கு அச்சம் தரும் விடயம் ஒன்றை அதன் பெற்றோர்களால் போக்க முடியாமல் போகலாம். ஆனால் அதன் வயதொத்த இன்னொரு பிள்ளையால் இதனை இலகு வாகச் செய்ய முடியும். பெற்றோர்கள் இந்த விடயத்தைக் கவனத்திலெடுத்து தமது குழந்தைகளின் சகாக்களின் உதவியோடு தமது குழந்தைகளின் பயப் பீதியினைப் இலகுவில் போக்கலாம். உதாரணமாக roller coaster இல் ஏற அச்சப்படும் பிள்ளை ஒன்றை அதன் வயதொத்த இன்னொரு பிள்ளை அதில் ஏறிச் சிரித்தபடி வெளிவரு வதைக் கண்ட பின் அந்தப் பயத்தைப் போக்கி அதனையும் ஏற நினைக்க வைக்க முடியும். அதே வேளை ஏறிக் காட்டச் சென்ற பிள்ளை எக் காரணத்தினாலாவது அதுவே பயந்து மிரண்டு அழுதால் அவ்வளவு தான். பின் ஏற்கனவே அச்சம் கொண்ட பிள்ளை பின் தன் வாழ்நாளில் ஒருபோதுமே அதில் ஏறுவதை நினைத்துப் பார்க்காது போய்விடும். அதன் பின் பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதை மாதிரியாகி விடும். எனவே இந் நடைமுறை சிகிச்சையில் அவதானம் மிகவும் அவசியமாகும்.

பயத்தைப் போக்க இன்னொரு வகையான சிரமமான உளவியல் நடைமுறைச் சிகிச்சை உள்ளது. இதனைக் 'கட்டாய பாடம்' என்பர்.

தாயகத்தில் தண்ணீரைக் கண்டால் பயப் படும் பிள்ளைகளை கட்டாயப்படுத்தித் தண்ணீருள் தள்ளி விடுவர். முதன்முறை ஒன்றை அறிய அச்சமுறும் குழந்தைக்கு அதில் பயமேதுமில்லை என தெரிந்து விட்டால் அதன் பின் பயம் தானாகவே தெளிந்து விடும் என்பதே இதன் அடிப்படை தத்துவமாகும்.

குழந்தையைக் கட்டாயப்படுத்திப் பயச் சூழலுள் இழுத்துச் செல்லும் இச் செயன்முறை சிகிச்சையானது சற்றே கடினமானது தான். குழந்தை தன் முழுப் பலத்தையும் திரட்டி வீறிட்டு கதறி அழும் காட்சியை பொதுவாக பெற்றோரால் பார்க்க முடியாது. ஆனால் அச்சத்தைப் போக்கும் சிகிச்சை முறை இது என்பதை உணர்ந்து மனதைக் கல்லாக்கி பயிற்றுவிக்க முனைய வேண்டும்.

உதாரணமாக இருட்டைக் கண்டால் பயப் படும் குழந்தையை கையைப் பிடித்துக் கட்டாயப்படுத்தி இருட்டுக்குள் அழைத்துச் சென்று அதில் அச்சப்பட எதுவுமில்லை என்பதை புரிய வைப்பது போன்றதாகும்.

பயம் போன்ற உளவியல் நோய்களுக்கு நடைமுறை சிகிச்சைகளே வெகுவாக பலனளிக்க வல்லவையாகின்றன. எனினும் இது போன்ற நடைமுறை சிகிச்சைகள் தவிர மருந்துகளூடாகவும் பயத்தை போக்குவர் வைத்தியர்கள். பக்க விளைவுகளற்ற ஹோமியோபதி போன்ற இயற்கை வைத்திய முறைகளூடாகவும் 'அதீத பயம்' எனும் இந்நோயை குணப்படுத்த முடியும் என்பதை காணமுடிகின்றது.

குழந்தைகள் வளரும் பொழுது மனத்துணிவும் தன்னம்பிக்கையும் உள்ளவர்களாக வளர்வது அவசியமாகும். அதற்கு இடையூறாக இருக்கும் தேவையற்ற மனோ பயங்களைக் களைந்து ஆரோக்கியமான உளப் பாங்கினராக அவர்களை வளரச் செய்வது பெற்றோர்களது கைகளில் உள்ளது. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பர். சிறுவயதிலேயே உளவியல் பாதிப்புக்களை களைந்தெறிந் தால் குழந்தைகள் ஆரோக்கியமாக வளர வாய்ப்பளிக்க முடியும்.

பயிர்கள் செழிப்பாக வளர்வதற்கு களை கள் களைந்தெறியப்பட வேண்டும். அதே போன்றே சிறுவர்கள் வளர்ச்சியில் அச்சம் என்ற களையை களைவதும் அவசியமானதாகும் அதிமுக்கியமானதுமாகும்.

■ ■ ■



# LIFE INSURANCE
## (Term, Whole Life, Universal, Non Medical)
## RESP (EDUCATION PLAN)



FREE QUOTE : www.lifeinsurancequote.ws

**416.908.6003**

RBC Insurance

IA INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

# Pakeer
## Pakeerathan Sahadevan
**Insurance Broker**

Apex creations - 416-297-0707

## ஓய்வு நேரத்திற்கு ஓர் இனிய துணை EASY CHAIR

**தாயகத்தில் கிடைத்த அதே வடிவத்தில் இப்போது இங்கும் கிடைக்கிறது**

முள்ளந் தண்டுகளின் இயல்பான வளைவுகளுக்கு ஏற்ப Easyயாய் அமர்ந்து கொள்ள

அதி விசேட சலுகை
ஜீலை 10ம் திகதி முதல்

# 25%*

கழிவு விலையில் கிடைக்கிறது

~~Reg: $120.00~~
Now: **$90.00**

*குறித்த காலப்பகுதிக்கு மட்டும்



digi

உறுதியான அமைப்பு
வண்ண வடிவம்
குறைந்த விலை
நிறைந்த ஆனந்தம்

**AVRA Inc.**
**416-854-1639**
E-mail:avrainc@gmail.com



# ஆயுட்காப்புறுதியும் சேமிப்புத் திட்டங்களும்

## Life Insurance & RESP

**ஆயுடகாப்புறுதி,
அடமானக் கடன் காப்புறுதி,
கொடிய நோய்களுக்கான
காப்புறுதி, சேமிப்புத்திட்டம்
அனைத்தும் ஒரே திட்டத்தில்
பெற்றுக் கொள்ள…**

- நிரந்தர ஆயுட்காப்புறுதி (சேமிப்புடன் கூடியது)
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி (2 மில்லியன் வரை)
- அடமானக் கடன் காப்புறுதி
- குழந்தைகளின் கல்விக்கான சேமிப்புத் திட்டம்
- வயோதிபர்களுக்கான காப்புறுதி (மருத்துவ பரிசோதனை அவசியமில்லை)

digi Media

RBC Insurance
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life
LILAND INSURANCE INC.



## சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407

# மில்லியன் டொலர் பெறுமதி மிக்க இலவச ஆலோசனை

# ஆயுட் காப்புறுதி எதற்காக அவசியம்



சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -
sritharan@thaiveedu.com

ஆயுட் காப்புறுதி திட்டமானது உங்கள் குடும்பத்தினரின் அல்லது அன்புக்குரியவர் களின் கனவுகளையும் எதிர்பார்ப்புகளையும் நீங்கள் இல்லாத சமயத்தில் பூர்த்தி செய்வ தற்கு மிகவும் சிறந்த ஒரு திட்டமாகும். நீங்கள் உங்கள் குடும்பத்திற்காக செய்வ-தை அளவிட முடியாது. ஆனால், நீங்கள் இல்லாத வேளையில் உங்கள் உழைப்பின் அல்லது எதிர்பார்ப்புகளின் ஒரு பகுதியை ஆவது பூர்த்தி செய்வதற்கு ஆயுட் காப்புறுதி உதவி புரியும்.

ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவரை இழக்க நேரிடும் போது அதனால் பொருளாதார ரீதியான பாதிப்பும் உண்டு.

## ஆயுட் காப்புறுதி யாருக்கு அவசியம்?

அதற்கு மிகவும் சுருக்கமான பதில் ஒவ்வொருவருக்கும் அவசியம் என்பதே. ஆனால், குறிப்பிட்ட சிலருக்கு ஆயுட் காப்புறுதி மிகவும் அவசியம்.

- ஒரு குடும்பத்தின் தலைவருக்கு ஆயுட் காப்புறுதி மிக மிக அவசியம் காரணம் அவரின் வருமானத்தில் அல்லது அவரின் உழைப்பில் குடும்பம் தங்கியிருந்தால் அவருக்கு எதிர்பாராத மரணம் ஏற்பட்டு-விட்டால் அவரின் பொருளாதார இழப்பை ஈடுசெய்வதற்கு ஆயுட் காப்புறுதி மிகவும் அவசியமாகின்றது.
- வீட்டுச் சொந்தக்காரர்கள் (Home Owners) உங்கள் குடும்பத்தின் தலைவருக்கு அல்லது குடும்பத்தலைவருக்கு எதிர்பா-ராத உயிரிழப்பு ஏற்பட்டால் ஏனைய குடும்ப அங்கத்தவர்கள் தொடர்ந்து அதே வீட்டில் வாழ்வதற்கு ஆயுட் காப்புறுதி அவசியமாகின்றது.
- அடுத்தவர் அல்லது அன்புக்குரியவர் களை அக்கறை செலுத்துபவர்கள் ஆயுட் காப்புறுதி பெற்றிருப்பதன் மூலம் உங்கள் பிள்ளைகள் அல்லது உங்கள் அன்புக்-குரியவர்களின் எதிர்காலத்தை வளப் படுத்துவதற்கு வழிவகுக்க முடியும்.
- ஒவ்வொருவரும் தங்களுக்கு பிடித்த பொது, தர்ம நிறுவனங்கள் அல்லது வைத்தியசாலைகள் அல்லது கோவில் கள் தேவாலயங்கள் போன்றவற்றிற்கும் ஆயுட் காப்புறுதி மூலம் உதவி செய்ய முடியும். மாதாந்தம் ஒரு சிறு தொகைப் பணத்தை ஆயுட் காப்புறுதியாக வைப்புச் செய்து அதனால் கிடைக்கும் ஆயுட் காப்புறுதிப் பணத்தை உங்களுக்குப் பிடித்த ஆலயம் அல்லது தேவாலயம் அல்லது ஒரு பொது நிறுவனத்திற்கு நன்கொடையாக கொடுக்க முடியும். சிலர் வேலை பார்க்கும் நிறுவனங்களில் வழங்கப்படும் (Group Insurance) மூலமாக ஆயுட் காப்புறுதி பெறமுடியும். ஆனால், அந்தத் திட்டம் நீங்கள் அந்த குறிப்பிட்ட வேலையில் இருந்து நீங்கியவுடன் அல்லது இழைப்பாறியவுடன் முடிவடைந்து-விடும். அதிகமாக 65 வயது வரை மட்டுமே வழங்கப்படும். பின்பு தொடர்வதானால் அதற்கான கட்டுப்பணம் அதிகரிக்கப்படும்.

ஆயுட் காப்புறுதித் திட்டம் ஏற்கனவே வைத்திருப்பவர்கள் அது சரியானதா அல்லது போதுமானதா என்பதை பரிசீலனை செய்வது அவசியம். ஆகக் குறைந்தது இரண்டு வருடங்களுக்கு ஒருமுறையாவது உங்கள் ஆயுட் காப்புறுதித் திட்டத்தை உங்கள் ஆயுட் காப்புறுதி முகவருடன் தொடர்பு கொண்டு சரிபார்ப்பது முக்கியமானது. காரணம் உங்கள் வாழ்க்கைத்தரத்தில் அல்லது குடும்பத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கலாம். அதற்கு ஏற்றவாறு ஆயுட் காப்புறுதித் திட்டம் மாற்றியமைக்கப் பட வேண்டும்.

உதாரணமாக உங்களுக்கு பிள்ளைகள் பிறந்திருந்தால் அவர்களின் பெயர் காப்புறு-தித் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். அல்லது ஒருவர் விவாகரத்து செய்து வேறு திருமணம் செய்ய நேரிட்டால் அதில் உள்ள பலன் பெறுபவரின் பெயர் மாற்றப்பட வேண்டும்.

உங்கள் வதிவிட விலாசம் மாற்றப்பட்டிருந்-தால் அந்த விபரங்கள் காப்புறுதி நிறுவனத்-திற்கு வழங்கப்பட வேண்டும். உங்கள் காப்புறுதித் திட்டம் சரியான நிலையில் உள்ளதா. மாதாந்தக் கட்டுப்பணம் சரியான அளவு போய்க்கொண்டு இருக்கின்றதா போன்ற விபரங்கள் கவனிக்கப்பட வேண்டி-யவை.

வாழ்வில் ஏற்படும் ஒவ்வொரு மாற்றத்தின் போதும் காப்புறுதித் திட்டம் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்.

உதாரணமாக.

- திருமணமாகும் போது
- குழந்தைகள் கிடைக்கும் போது
- குழந்தைகள் வளர்ந்து அவர்களின் சொந்தத்தில் வாழ ஆரம்பிக்கும்போது
- வீடு அல்லது வதிவிடம் வாங்கும் போது.
- சொந்தமாக கடன் பெற்றுக் கொள்ளும் போது
- வேலை மாற்றம் அல்லது வியாபாரம் ஆரம்பிக்கும் போது
- புகைத்தல் பழக்கத்தை கைவிடும் போது.

இப்படிப்பட்ட மாற்றங்கள் ஏற்படும் போது உங்கள் காப்புறுதித் திட்டத்தை மறுபரி-சீலனை செய்வது அவசியமாகும்.

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

***E-mail:thaiveedu@gmail.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***




வீடு வாங்க, விற்க அழையுங்கள்...

**Vasanthy Niranjan**
*Real Estate Broker*
**416-845-8272**

$250,000

**Birchmount & Ellesmere**
2 Bedroom , 2 Washroom
Luxurious Tridel Condo
Penthouse Suite,
Well Kept, 9-Foot Ceiling
24Hrs Security, Close to Park
Indoor Pool, Party Room

$288,000

**W.McCowan & S.16th**
Build Your Dream Home in this
Attractive and Established
Neibourhood in the City
of Markham.

$329,000

**Middlefield & Denison**
3+1 Bedroom , 3 Washroom

$339,000

**McCowan & Denison**
4+1 Bedroom, 3 Washroom
Enclosed Porch, Premium Deep Lot
Extra wide Driveway for 2 Cars
Child Safe Crescent,
Close to School, Ttc & Shops.

HOMELIFE
HIGHER STANDARDS

$343,800

**Warden & Steeles**
3+1 Bedroom, 3 Washroom
Bright&Spacious*
Updated Home Within Last 5 Yrs
With Newer Roof&Additional
2 Cars Interlk Parking Space
*No Side Walk
*Great Renovated & Updated
Home For Large Family

$349,000

**McCowan & Denison**
Gorgeous Home In Prime Markham Location.
Close To Schools, Plaza, Park
And Other Major Amenties.
Gleaming Hardwood In Living And Dining.
Fully Renovated Kitchen
With Updated Ceremics, Backsplash
And Extended Counter,Pantry,.

$359,900


**Middlefield & Denison**
4+2 Bedroom, 4 Washroom
Absolutely Well Maintained Detached
House, Recently Renovalid
Kitchen & Main Floor. Walk
To Schools Stainless Still Ice
Marker Fridge, Stove, Walker, Dryer,
Built-In Dishwasher

இது உங்கடை வீட்டிற்கு. என்னை அழையுங்கள்

**HomeLife Today Realty Inc.,**
**Brokerage***
31 Progress Ave. Suite 210
Toronto, ON M1P 4S6
*Independently Owned and Operated, REALTOR

**Vasanthy Niranjan**
*Real Estate Broker*
**416-845-8272**

# கொதிக்கும் எண்ணையில் யோர்ஜியா: மீண்டும் குளிர் யுத்தம்



மாமூலன்
maamulan@thaiveedu.com

மூன்றவாது உலக யுத்தம் என்ற சொல் புழக்கத்துக்கு வரத்தொடங்கியுள்ளது. அப்படியொரு யுத்தம் வந்தால் தற்போது ஓரணியில் நிற்பவை ஒருபக்கம் சீனாவும் ரசியாவும் ஈரானும் மறுபக்கம் ஐரோப்பிய வட்டகையும் அய்க்கிய அமெரிக்காவும். அதுவும் புஸ்ஸைப்போன்ற போர்வெறியரான ஓர் அதிபர் அமெரிக்காவில் மீண்டும் வந்தால் மூன்றாம் உலகப் போர் அல்லது ஓர் மறைமுக யுத்தம் தொடங்கிவிடும்.

தற்போது நடைபெற்று ஓர் எல்லையைத் தொட்டிருக்கும் யோர்ஜிய சிக்கலும் இந்த மறைமுக குளிர்யுத்தத்தின் ஓரங்கமாகவே பார்க்கப்படவேண்டும். யோர்ஜிய சிக்கல் ஏன் உருவாகியுள்ளது? எண்ணைதான். இனி வரும் நாட்களில் உலகின் எந்தச் சிக்கலும் எரிசக்தியை அடிப்படையாகக்கொண்டே பார்க்கப்படும். வெளிப்படையாகக் கதைக்கப் படாவிட்டாலும் அதுதான் காரணமாகவிருக்கும். ஈராக்கின் யுத்தத்துக்கு காரணமும் தற்போது நடைபெறும் ஆப்கானிஸ்தான் யுத்தத்துக்கு காரணமும் அதேதான்.

அதற்காக சிக்கல் உருவாக இந்த நாடு களில் எண்ணைதான் கிடைக்கவேண்டும் என்று யோசிக்கத் தேவையில்லை. எண்ணையைக் காவிச்செல்லும் குளாய்கள் செல்லும் பாதைக்கே தற்போது சண்டை. எண்ணை செல்லும் பாதை யார் கட்டுப்பாட்டில் வருகிறதோ அவர்கள் கையில் ஒரு பிடி இருக்கும்தானே! உண்மையில் முன்னாள் சோவியத் உலகம் முழுவதுக்கும் செல்லும் எண்ணைக்குளாய்களை தனக்குச் சொந்தமாக வைத்திருந்தது. பின்னர் ரசியாவாகவும் சில சிறிய நாடுகளாகவும் பிரிந்துவிட்டதில் கணிசமான அளவு எண்ணைகாவிச்செல்லும் குளாய்கள் உக்கிரேன், துருக்மேனிஸ்தான், அசர்பைசான், கசக்ஸ்தான், உஸ்பெஸ்கிஸ்தான் போன்ற நாடுகளிடம் சென்றுவிட்டன. அவற்றுடன் முக்கியமானது யோர்ஜியா!

யோர்ஜியாவுக்களால் பி.ரி.எஸ் (பைக்கு - த்பிலிஸ் - செய்கான் எண்ணைக் குளாய்) எனப்படும் முக்கியமான எண்ணைக் குளாய் செல்கிறது. தற்போது நடந்த சண்டையில் ரசியப் படைகள் கைப்பற்றும் நோக்குடன் வெகு வேகமாக முன்னேறி வந்த ஒரு நகரம் த்பிலிஸ். அதனூடாகவே எண்ணைய்க்குளாய்கள் செல்கின்றன. அதைவிட்டு விட்டு வேறு எந்தக் காரணமும் அங்கு இல்லை. வெறும் 69 700 சதுர கிலோமீற்றர் கொண்ட யோர்ஜியாவிலிருந்து (இலங்கை 65 600)இரண்டு சிறிய குடியரசுகள் ரசியா வின் ஆதரவில் தற்போது தோன்றியிருப்பதாகக் கருதலாம்.

இந்தச்சிக்கலையொட்டி பல உலக நடவடிக்கைகள் தொடங்கின. அதில் முதன்மையானது ஐரோப்பிய வட்டகையினர் ரசியா வுக்கு எதிராக முடிவெடுக்க ஒரு கூட்டம் போட்டதாகச் சொல்லப்பட்டது. உண்மையில் அது ரசியாவுக்கு எதிராகப் போடப்பட்டதா அல்லது ஆதரவாகப் போடப்பட்டதா என்றே சிந்திக்க இடமிருக்கிறது. அந்தக் கூட்டம் நடைபெற்று முடிந்துள்ள நிலையில் ரசியா வுக்கு எதிராக எவ்வித பெரிய முடிவுகளும் அறிவிக்கப்பட்வில்லை. அறிவிக்கப்படவும் முடியாது.

ரசியாவுக்கு எதிராக ஐரோப்பிய வட்டகை ஏதும் முடிவுகளை அறிவிக்குமாயின் ஐரோப்பா செயலிழந்து போகும் என்றே சொல்லலாம். இது ரசியாவின் ஏவுகணைகளால் ஏற்படும் பயத்தினால் அல்ல. ஐரோப்பா முழுமைக்கும் எண்ணையை வழங்கி வருவது ரசியாதான். ரசியாவின் எண்ணைக்குளாய்கள் ஐரோப்பாவை தனது இரு கைகளாலும் பற்றி நிற்கின்றன. மற்றொருவகையில் ரசியாவின் பிடிக்குள் ஐரோப்பா உள்ளது. இது ஒன்றும் மிகைப் படுத்தபட்ட கூற்று அல்ல. (தரப்பட்டிருக்கும் படத்தைப் பாருங்கள்)

இப்படியொரு சூழ்நிலை இருப்பதை ஐரோப்பிய வட்டகையும் அய்க்கிய அமெரிக்கா பிரித்தானியா போன்ற நாடுகளும் பாரத்துக் கொண்டு சும்மா இருக்கமுடியாதே! அதற் காகத்தான் எண்ணைக் குளாய்களில் இருந்து ரசியாவின் ஆதிக்கத்தை வெளியில் கொண்டுவருவதற்கு புதிதாகவும் பல எண்ணைக் குளாய் வழித்தடங்கள் போடத் திட்மிடப்பட்டு முதற்கட்ட வேலைகள் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன.

புதிதாகத் தொடங்கும் குளாய்கள் செல்லும் வழியிலுள்ள பின்வரும் நாடுகளைப் பாருங் கள். உலகளாவிய சிறிய போர்கள், சில அரசியல் நடவடிக்களின் காரணம் வெளிப் படும்: அவை ஆப்கானிஸ்தான், யோர்ஜியா, இந்தியா, பாக்கிஸ்தான், சீனா, ஈரான் மற்றும் இஸ்ரேல்.









இந்த இஸ்ரேல் செய்யும் வேலைகள் இந்தச் சிக்கல்களில் சொல்லி மாளாது. புதிதாகப் போடப்படும் குளாய்களில் மூன்று குளாய் கள் துருக்கியிலிருந்து இஸ்ரேலுக்கு வரவிருக்கின்றன. எண்ணையும் தண்ணீரும் சேர்ந்துதான் இஸ்ரேலுக்கு வரவிருக்கிறது. ஆம். எண்ணையைவிட அதிகத் தேவை யானது இஸ்ரேலைப் பொறுத்தவரை தண்ணீர்தான். பாலஸ்தீனத்தை விடாமல் பிடித்துக்கொண்டிருப்பதற்குத் தண்ணீர்தான் காரணம். காசா நிலத் தொடர் தண்ணீரால் நிறைந்தது. அதற்காகத்தான் இஸ்ரேலால் அது கைப்பற்றப்பட்டது.

இந்தப்பட்டியலில் யோர்ஜியா மீண்டும் இடம் பெறுவதைப் பாருங்கள். வடக்குத் தெற்காக ரசியாவிலிருந்து வரும் குளாய் கஸ்பியன் கடலிலிருந்து மேற்கு நோக்கி வருகையில் வரைபடப்படி நேர் கோடுகிழித்தால் யோர்ஜியாவுக்கு வராமலேயே ஆர்மீனியாவின் ஊடாகச் சென்றுவிடலாம் போலத் தோன்றும். எண்ணைக் குளாய்களும் தண்ணீர்க் குளாய்கள் போன்றனதானே? அவற்றை மலைகளில் ஏற்றி இறக்க முடியாது. அதனால்தான் காக்கேசிய வட்டகையில் உள்ள பள்ளத்தாக்கு மற்றும் நதிப்படுக்கைகளினூடாக எண்ணைக் குளாய்கள் செல்லுகின்றன. அதில் முதன்மையான பள்ளத்தாக்கு யோர்ஜியாவினுடையது.

தற்போது இந்த யோர்ஜியாவின் பிரிவுக ளாக ஆகியிருக்கும் தெற்கு ஒசெற்சியாவும் அப்காசியாவும் பாதி நிலத்தைப் பிடித்துக் கொள்கின்றன. அப்காசியாப்பகுதி கி.மு. 6 இலிருந்து கிபி 6 ஆவது நூற்றாண்டுவரை தனித்த குடியரசாகவே இருந்து வந்துள்ளது என்பது வரலாறு. தற்போதைய யோர்ஜியா உருவானது 11 ஆவது நூற்றாண்டில்தான். அதுவும் 13 ஆவது நூற்றாண்டிலிருந்து சிறிய சிறிய நாடுகளாகப் பிரிந்து பின்னர் சோவியத்தின் கீழ் வந்து தற்போது யோர்ஜியாவானது. இதைவிடவும் தெற்குப் பகுதியில் துருக்கியை அண்டியதாக அஜாரியா என்னும் நிலப்பகுதி கியூபெக் மாகாணம் போன்ற தனித்த அலகாக உள்ளது. இது திருமலை மாவட்டத்தைவிடச் சிறியதாகும்.

இங்கும் ரசியாவின் படைத்தளம் உள்ளது. இப்படைகளை மீளப்பெறுவதாக ரசியா அறிவித்த கெடு 2007 நொவம்பர். ஆனால் தற்போது அப்காசியா பகுதியின் நீட்சியாக ரசியா எடுத்துக் கொடுத்திருக்கும் பகுதி அஜாரியாவின் எல்லை வரைக்கும் ஏறக் குறைய வந்துவிட்டது. அஜாரியாவும் வறுமையான, சமூக நிலையின்மையற்ற அரசியல் தன்னாதிக்கத்தில் தொடர்ந்து வந்த குடியரசுதான். ஆனாலும் எண்ணை சுத்திகரிப்புடன் இது தொடர்புபட்டது. ரசியா அப்காசியாவுக்காக கைப்பற்றிக் கொடுத்த போட்டிஸ் என்ற துறைமுகம் அஜாரியாவின் எல்லையில் உள்ளதுதான். பாதித் தோடம் பழத்தை உரித்து வைத்த தோல்போன்றதாகவே இப்போது யோர்ஜியாவின் நிலப் பகுதி இருக்கிறது.

எவ்வளவுதான் எண்ணைக்குளாய்கள் சென்றாலும் வறுமையிலும் சமூக நிலையின்மையும் அரசியல் நிலையின்மையிலும் தொடர்ந்து வந்த யோர்ஜியா வல்லரசுகளின் விளையாட்டுக்கு மீண்டும் உள்ளாகி முன்னைப்போலச் சிதறியிருக்கிறது.

எங்கோ இருக்கும் அமெரிக்கா வேலை மெனக்கட்டு இந்தச் சிறிய யோர்ஜிய நாட்டுக்கு உதவிப் பொருட்களுடன் போய் கப்பலில் ஏன் காத்துநிற்கிறது? முன்னாள் சோவியத்தின் கடைசி வெளியுறவு அமைச்சர் எட்வர்ட செவர்நாட்சேதான் தற்கால யோர்ஜியாவின் அதிபராக இருந்தவர். ரோசாப்பூப்புரட்சி மூலம் (ரத்தமெதுவும் சிந்தாமல் அண்மைக்காலத்தில் நடந்த வல்லாட்சி மாற்றம்) பதவியிலிருந்து விலக்கப்படட்டவர். ஆனாலும் எதுவும் யோர்ஜியாவில் முன்னேறவில்லை. முந்தைய நூற்றாண்டுகளிலிருந்ததைவிடவும் யோர்ஜியாவின் நிலை எண்ணைக் குளாய்களால் மேலும் சிக்கலாகியிருக்கிறது.

மூன்றாமுலகப் போருக்கு யோர்ஜியா தொடக்கப் புள்ளியாக இருக்கப்போவதில்லைத்தான். ஆனாலும் இந்தப் பிணக்குகள் தரும் செய்தி உலகம் முன்னைப்போல் அமைதியாக இல்லை என்பதும்தான். ரசியாவின் முன்னாள் அதிபர் புட்டின் ஓர் பத்திரிகையாளின் கேள்விக்கு ‘மீண்டுமொரு குளிர்யுத்தம் வராது. ஏற்படின் எதிர்கொள்ளத் தயார்” என்றிருக்கிறார். ரசியாவும் சீனாவும் ஈரானும் சேர்ந்து மத்திய ஆசியக் கூட்டமைப்பு ஒன்றை கடந்த மாத்தில் நிறுவியுள்ளனர். அன்றைய நாளில் சீனக் கடலில் ரசியாவின் படைகளும் சீனப்படைகளும் போர் ஒத்திகையிலும் ஈடுபட்டன. அதைத்தொடர்ந்து சென்ற கிழமையிலிருந்து ஈரான் அனைத்து நாடுகளும் எண்ணைக் கொடுப்பனவுகளை டொலரில் செலுத்தக்கூடாது என்றும் அந்தந்த நாட்டின் பணங்களாகவே கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளது.


■ ■ ■

# வீடு வாங்கவும், விற்கவும்...

### Bathurst/Mulock


**$224,900**

3 Bedrooms, 2 Washrooms Tastefully Decorated & Maintained. Bright & Spacious Rooms. Money Spent In Renovation. New Ceramic In The Entrance & Kitchen

### Morningside/Sheppard


**$229,000**

4+1 Bedrooms, 3 Washrooms Freehold Townhouse On Child Safe Court, Spacious And Bright, Convenient Location Close To School And Hwy 401

### Manse/Lawrence



**$389,900**

4+2 Bedrooms, 3 Washrooms Great All Brick Family Home On A Quiet Cul-De-Sac In West Hill,Master Has 4Pc Ensuite With Walk-In Closet

### Brimorton/Orton Park



**$260,000**

3 Bedrooms, 2 Washrooms Beautiful Design For Split Level Home, Spacious Bedrooms, Seperate Family Room, Walk Out To A Two Teired Deck & Private 130 Ft Lot.

### Mccowan/16th



**$505,000**

4 Bedrooms, 3 Washrooms One And Half Years Old. Bright Well Kept Detached Home By Rosehaven Development In Markham. Demand Location, Quiet Street,Calm Neighbourhood

### Midland/Lawerence



**$129,900**

2 Bedrooms, 1 Washrooms Spacious, Bright, Clean, Well Kept Unit, And Well Maintained Building With Indoor Pool, Exercise Room, Party Room, Private Play Ground For Kids

### Islington/Finch


**$157,000**

3 Bedrooms, 2 Washrooms Unobstructed View, Conveniently Located Close To Ttc, 400, 407, School And Worship Places.

### Finch/Keele


**$259,900**

tunning 3 Bedroom Townhouse W/ Rooftop Terrace & Balconies. Brand New Paint & Carpet. One Of The Largest Townhomes In Development.

### 16th Ave/9th Line


**$539,900**

5 Bedrooms, 4 Washrooms Gorgeous & Immaculate Exeutive 5 Brs Hm Loaded W/Upgds, Approx.3000 Sqft, Over $80K Upgrades

### Middlefield/Denison


**$359,900**

4+4 Bedrooms, 2 Washrooms Absolutely Well Maintained Detached House, Recently Renovalid Kitchen & Main Floor. Walk To Schools

### Middlefield / Finch


**$179,900**

2 Bedrooms, 1 Washrooms Clean, Bright, Beautiful (0-5) Years Low Rise Condo, Close To Woodside Square Mall, Gta Square, Temple, Worship Places. 24 hrs TTC

### Kennedy/Kingston

PICTURE NOT AVAILABLE

**$169,900**

Best Priced Bungalow In The Area

Call for More Info



**RAJ Ariyanayagam Pathmarajah**
Real Estate Broker
Cell: 416-930-4663

**Kirew Kanagasabai**
Real Estate Broker
Cell: 416-903-4663



HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife Today Realty Inc., Brokerage***
Independently Owned And Operated

31 Progress Avenue, Suite 210
Toronto, ON M1P 4S6
Office: 416-298-3200

NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்
Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
CENTUM
Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770

DOOR TO DOOR
DISTRIBUTION THROUGH CANADA POST POSTES CANADA
One Solution for you
WE DESIGN • PRINT • DELIVERY
50,000
starting at $599
OUR DELIVERY GUARANTEED BY CANADA POST
Design and Printing in Full Colour.
Delivery to every house and apartment in a postal zone every month.
MORE DETAILS: 416.297.0707 / 647.290.0540

WIN
BUY AND SELL through Pat Pushpakanthan and enter to win Brand new Toyota FJ Cruiser
Quick Sale!!
commission solution*
2.5%
Also available
PAT
PUSHPAKANTHAN
Real Estate broker
416 490- 7653
Century 21
வீடு, வியாபாரம், காணி வாங்க விற்க அழையுங்கள்!
அனுபவம்! திறமை! நேர்மை!
YOUR SOLE AGENT







**இம்மாதப் புகைப்படக் கலைஞர்**
**மானசி நந்தகுமார்**

Markham, Bur Oak Secondary Schoolஇல் 9ம் வகுப்பு படித்துக்கொன்டிருக்கும் 13வயது நிரம்பிய மானசி திறமை மிக்க ஓர் ஓவியரும்கூட. பாடசாலையில் Valedictorian Award விருதை தனதாக்கிக்கொன்டிருக்கும் இவர் புகைப்படத்துறையிலும் ஆர்வம்காட்டி வருகின்றார்.

**உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

PROTECT YOURSELF AND YOUR LOVED ONES!
Insurance Ocean
Product we serve:
• Accident Death Insurance • Affordable Life Insurance • Critical Illness Insurance
• Disability Income Insurance • Mortgage Insurance • Permanent Life Insurance
• Pet Insurance • Term Life Insurance • Travel Insurance • No Medical Exam Insurance
We provide free training and prepare you for the certification
Now hiring at Ocean Mortgage Include: Marketing Specialist, Sales Reps.
Call today 416-321-2300
Get the best rate online @
www.insuranceocean.com
digi